


இதோ இப்பொழுது உதயம்
வையவன்


இதோ இப்பொழுது உதயம்
வையவன்

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : இதோ இப்போது உதயம் |
| ஆசிரியர் | : வையவன் |
| பொருள் | : நாவல் |
| உரிமை | : ஆசிரியருக்கே |
| நூலின் அளவு | : கிரவுன் 1 × 8 |
| அச்செழுத்து | : 10 புள்ளி |
| தாள் | : 16 கி.கி. சேஷசாயி |
| பக்கங்கள் | : 300 |
| கட்டுமானம் | : சாதா பைண்டு |
| ஒளியச்சு | : சிவம்ஸ், சென்னை-18 |
| பதிப்பு | : முதற் பதிப்பு: மார்ச், 2006 |
| பதிப்பாளர் | : யுகோதயா<br>வெள்ளக்குட்டை |
| அச்சாக்கம் | : கே.வி.எஸ். ஆஃப்செட் பிரிண்டர்ஸ்<br>சென்னை-14 (போன்: 2848 0166) |
| விலை | : ரூ.90.00 |

01041464
18400

## முன்னுரை

இந்த நாவலில் மூன்று தந்தைகள், மூன்று மக்கள் (2 ஆண்கள், 1 பெண்) அவர்களிடையே மூன்று முரண்பாடுகள்.

கோடிக்கணக்கான முரண்பாடுகள் கொண்ட இந்த மானிட சமுத்திரத்தில், இந்தச் சிற்றலைகள் எழுப்பும் உந்துவேகம் (momentum) அளவில் சிறியது.

எனினும் நோக்கங்களில் வலியது. நிஜத்திற்கும் நிழலுக்குமான போராட்டம் அது.

நிஜம் – அதன் நிழல்; இருபதாம் நூற்றாண்டு தொடங்கிய போது இவை இரண்டும் அவ்வளவு போராடியதில்லை.

இந்த நூற்றாண்டு முடியும் வேளையில் அவற்றின் போராட்டம் பெரிதாகி விட்டது.

ஒருவர் தற்போது, தான் இருப்பதைக் காட்டிலும் அதிக ஆற்றல் கொண்டவர் என்று பிறருக்கும் தனக்கும் நிரூபிக்கத் துடிக்கும் முனைப்பு –

முற்றிலும் புதிய, பெரிய சாதனை செய்ய விழையும் வேட்கை –

நிஜமாக உள்ளதை விட வேறு யாரோ ஆய்விடப் பறக்கும் அவா –

பெரும்பாலோர் உள்ளங்களில் நவீன வாழ்க்கையின் ராக்கெட் வேகம், இந்த உந்தல்களை உதிக்க வைத்து வருகிறது. குறிப்பாக இளைஞர்களிடம்.

இதற்கு சினிமா, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களின் உபயம் அதீதம்! அபாயகரமான அளவில்.

கலை, கவிதை இலக்கியம் என்ற எல்லா ஆத்ம வெளியீடுகளும், இன்று சினிமா என்ற சாயுஜ்ய பதவியை எட்டப் பயன்படும் சுருள் படிக்கட்டுகளாகி விட்டன.

எப்படியாவது சினிமாப் பிரவேசம், எந்த வழியிலாவது சினிமா அறிமுகம்!

இது பலரின் தாபம். பரிதாபம்!

இதைக் கூர்ந்து உணர தேர்ந்த நான் விமர்சகன் அல்ல. பார்வையாளன். சொல்லப்போனால் சாட்சி. சத்திய சாட்சி.

எல்லோருமே அப்படியாகி விட்டார்களா என்று என் கவலை அலசிய அனுபவங்களில் எதிர்ப்பட்டவள் ஓர் இளம் பெண்.

நடிகையாக மறுத்தவள், ஒப்புக்கு ? வீண் ஜம்பம் ? சந்தர்ப்பம் கிடைத்தால் நழுவிவிடும் சபலம்? எதுவுமில்லை. திடம். நிஜம். தெளிவு.

அந்த நேர்மை, அவளை இந்த நாவலின் கதாநாயகி ஆக்கியது.

இல்லாததை இருப்பதாகக் காட்டவோ, இருப்பதை பூதாகாரமாக்கிக் காட்டவோ முனையும் எல்லா முயற்சி களுக்கும் சமூக விளைவு, சுய விளைவு இரண்டும் உண்டு.

பொய்களின் மீதும், ஒப்பனைகளின் மீதும், மனித மோகத்தை காட்டுத்தீ போல் வளர்த்துவிடுவதே அது. தீ வளர்ந்தால்? புகைப் படலம் பிறகு சாம்பல் மேடு.

வருந்துகிறேன். ஓர் அவநம்பிக்கைவாதியாக (Pessimist) என் குரல் தொனிப்பதற்காக. மானுடம் மயங்குவதுண்டு ஆனால் மயக்கத்திலிருந்து விடுபடுவதே என்றென்றும் அதன் இயல்பு. மாறாத இயல்பு.

அதற்குச் சான்றுகள் தான் இந்த நாவலின் கதா நாயகன், அவனது பெற்றோர். ஒரு நண்பன் ! அந்த நண்பன் "அழிவே, நீ நியூட்ரான் குண்டுகளை உற்பத்தி செய்; நான் நெல்மணிகளை உற்பத்தி செய்கிறேன்" என்று சொன்னவன். செய்தவன். இவர்கள் கதையை எழுதுகையில் — எனது மொழி நடையில் ஒரு தனி வேகம் வந்ததை, இந்த நாவலை எழுதி முடித்து, பின் வாசித்தபோது உணர்ந்தேன். உங்கள் வாசக அனுபவம் எப்படியோ !


**133, சாயிநகர் 4—வது தெரு,**
**விருகம்பாக்கம்,**
**சென்னை— 600 092.**
**தொலைபேசி : 487 3183**

மிக்க அன்புடன்
**வையவன்**


# இதோ இப்பொழுது உதயம்...

"அக்கா"

"ம் ம் ம்"

"அக்கோவ்"

"கேக்குது.. சொல்லு"

"ஷூ இல்லாமே நான் ஸ்கூலுக்குப் போக மாட்டேன்."

"ப்ரேவோ"

"நெஜம்மா சொல்றேன்!"

"நானும் நெஜம்மாதான் பாராட்டறேன். உள்ளிருப்பு வேலை நிறுத்தமோ!"

"ஆமாம்"

"சரி.. ஒடனே கவனிக்க வேண்டியதுதான்.."

"......"

"என்ன ஷூ சார் ஒங்களுக்கு வேணும் ?"

இடையில் இட்லிப் பாத்திரத்தின் மூடியைத் திறந்து மூடும் ஒலி.

"அம்பாஸிடரா... கட் ஷூவா... கமாண்டரா... கான்வாஸ் ஷூவா.. ஒனக்கு எது வேணும்!"

வேறொரு குரல் குறுக்கிட்டது.

"திஷ்யா.. டிபன் ரெடியாம்மா"

"இட்லி வெந்துகிட்டிருக்குப்பா."

இடைவெளி விட்டுப் பின் ஒரு வயசான கரகரத்த குரல் கந்தர் சஷ்டிக் கவசம் சொல்ல ஆரம்பித்தது.

"காக்கக் காக்க கதிர்வேல் காக்க.."

"அக்கா, ஒனக்கு கேலியா இருக்கா?"

கடுகு பொரிந்தது. தாளிதம் மணந்தது.

"நீ ஒரு ஜோக் அடிக்கும்போது நான் அடிக்கக் கூடாதா?"

"ஷூ கேக்கறது ஒரு ஜோக்கா? நீ கூட போன வருஷம் வரிக்கும் ஒரு ஸ்டூடண்ட் தானே! எல்லாப் பெண் களும் ப்ளஸ்–டூ க்ளாஸ்லே வாட்ச் கட்டிக்கிட்டு வர்றாங் கன்னு நீ என்ன அடம் பிடிச்சே! இப்போ நான் கிரிக்கெட் ப்ராக்டிஸ் வேற பண்றேன்."

"நான் ஒரு சின்ன அட்வைஸ் தரட்டுமா?"

"ஷூ"

"மொதல்ல இதக் கேளு"

"சொல்லு"

"ஷூ இல்லாமே ஸ்கூலுக்குப் போக அவமானமா இருந்தா போகாதே.. நின்னுடு.. பொட்டலம் கட்டப் போ.. சுண்டல் வித்துப் பார்.. கிரிக்கெட் கத்துகிட்டு நீ டெஸ்ட் மாட்ச் விளையாடப் போறதில்லே! வேலைக்கு அலைய றப்ப பிச்சைக்காரன் நோட்டீஸ் நீட்டறா மாதிரி நீ ஸ்போர்ட் சர்ட்டிபிகேட்டைக் காட்டறதைவிட சுண்டல் விக்கறது மேல்."

"அக்கா.."

"இரு.. இரு.. நான் முடிக்கல்லே... நீ ஏன் ரிஸ்ட் வாட்ச் கட்டிக்கிட்டேண்ணுதான் கேட்கப்போறே..? நான் நர்ஸ் ட்ரெயினிங்கை மனசிலே வச்சிகிட்டுதான் அதை



வாங்கணும்னு அடம் பிடிச்சேன்! இப்ப எல்லாமே எவ்வளவு பெரிய மடத்தனம்னு தெரியுது!"

நடுவிலே ஓர் அபாய அறிவிப்பு கிறீச்சிட்டது. சீதா கத்தினாள்.

"அக்கா... இந்த ஆனந்து என் கலர் பாக்ஸை எடுத்துணு தரமாட்டேங்கறான்."

திஷ்யாவின் கவனம் ஆனந்துக்குத் திரும்பிற்று.

"ஆனந்து.. கீதா கலர் பாக்ஸ் அழுக்கு.. கோரம்.. உவ்வே.. ஒனக்கு வேண்டாம்டா கண்ணு.."

"நான் தரமாத்தேன்.. எனக்கு அளுக்குதான் ஒணும்.. உவ்வேதான் ஒணும்"

"அப்ப சரி.. அதை நீயே வச்சுக்க.. சீதா நான் ஒனக்கு பளபளாண்ணு கோல்டன் கலர்பாக்ஸ் வாங்கிக் குடுக் கறேன்.. என்ன?"

"எனுக்கு?"

"ஒனக்குதான் உவ்வே போதுமே"

"வாந்தாம்.. எனக்குத்தான் கோத்லன் கலர் பாக்ஸ்.. இது கோரம்.. ஆயி.."

"அம்மாடி... அக்கா, நீ ஜீனியஸ்"

"ஒன் சர்டிபிகேட் போதும். கொழந்தையே எதிரிலே வச்சுகிட்டு கலர் பாக்ஸை ஏன் காட்டறே..?"

"ஸாரிக்கா"

"அக்கா.."

"என்ன பிரேம்?" ஆயாசமாகப் பெருமூச்சு விட்டுக் கொண்டே கேட்டாள் திஷ்யா.

"நீ சுண்டல் விக்கச் சொல்றியே... விக்கறேன்... பண்ணித் தர்றியா?"

"ஓ.. எஸ்.."

"திஷ்யா.."

"வாங்கப்பா டிபன் ரெடி"

"இன்னிக்கு டி.எம்.ஓ. இன்ஸ்பெக்ஷன் ! வந்திருக்கிற ஆள் சிங்கரன். கம்பவுண்டர்னாலே எரிச்சலாம். ஸ்டாக் ரிஜிஸ்டரைக் குடை குடைண்ணு குடையறானாம். சாப்பாட்டுக்கு வர டயம் இருக்காது. வார்டு பாயை அனுப்பறேன். நீ கொடுத்து அனுப்பிச்சுடு"

"சரிப்பா.. நீங்க வாங்க"

திஷ்யாவுக்கு குரல் தாழ்ந்தது.

"டேய் பிரேம், ஒன் 'பிரச்னை' புரியுது. கீழ்ப் போர்ஷன் பெண்ணுக்கு நிச்சயதார்த்தம் நடக்கப் போற தாம். வாட்ச் ஒண்ணு வேணும்னாங்க. என் வாட்சைக் காட்டினேன்.. பிடிச்சுப் போச்சாம். ஒண்ணாந்தேதி பணம் தருவாங்க. அப்பறம் நீ ஷூ வாங்கலாம்... ரைட்டா?"

"ரைட்.. ரைட்.. டபிள் ரைட்..."

"அப்ப தட்ட எடுத்துட்டு வந்து நீயும் உட்காரு... ஸ்கூலுக்கு டயம் ஆகப்போறது"

**சி**வா வெகு நேரமாக வெங்காயம் அரிந்து கொண்டிருந்தான். பக்கத்துப் போர்ஷனில் நடந்த ஒலிச் சித்திரம் நின்று விட்டது. மாடிப்படி ஏறியதும் நேர்க் குத்தாகத் தெரியும் சமையல் அறையில் அவன் காதில் பக்கத் துப் போர்ஷன் சங்கதிகள் ஒட்டுக் கேட்காமல் தானாகக் காதில் வந்து விழுந்தன.

இந்த திஷ்யாவுக்குள் எத்தனை திஷ்யாக்கள்.

சண்டைக்காரி... சமாதான விரும்பி... சைக்கா லஜிஸ்ட்... ராஜதந்திரி..



இந்தப் பாராட்டை அவளிடமே வாய்விட்டுச் சொல்லத் தோன்றியது. சொன்னால்?

முந்தானையை விசுக்கென்று வரிந்து ஒரு சுற்றுச் சுற்றி விட்டுக்கொண்டு சூடு பறக்க திஷ்யா முறைத்து நிற்கும் ஒரு காட்சியை அவன் கற்பனை செய்தான்.

"இப்படித்தான் ஐஸ்வைக்க ஆரம்பிக்கறது. பூ சுத்தி விட்டு லவ்வுண்ணு வந்து அசடு வழிய வேண்டியது!"

வாணலியில் காய்ந்த எண்ணெயில் அவன் சிதறிய நீர்த்துளி ஆக்ரோஷமாய்ச் சீறிற்று. சிவா கடுகைத் தூவினான்.

"இது காதலா?"

அட கஷ்டகாலமே.. அந்தக் கேள்வியை நிஜமாகவே திஷ்யா கேட்டு விட்ட மாதிரி சிவா மிரண்டான்.

"டு ஐ லவ் ஹர் ?"

என்ன சனியன் இங்கிலீஷ் வேண்டியிருக்கிறது. நான் அவளைக் காதலிக்கிறேனா?

கடுகு கருகிவிட அரிந்த வெங்காயத்தை சிவா அதில் கொட்டினான்.

ரஷ்ய நாவலாசிரியர் டர்ஜனீவின் கதாநாயகன் மாதிரி தான் கொண்டிருப்பது காதல் தானா என்று அலசு கிற வியாதிக்குத் தான் ஆளாய் விட்டது அவனுக்கே விநோதமாக இருந்தது.

டாங்.. டாங்.. என்று கூடத்துக் கடிகாரம் மிலிட் டரிக் கண்டிப்போடு ஒன்பது அடித்தது.

பத்தரைக்கு இண்டர்வ்யூ. இன்னும் ஒன்றரை மணி நேரம் இருக்கிறது. பல்லவன் பிடித்து வேர்த்து விறு விறுத்து பல்லைக் காட்டத் தயாராக வேண்டும்.

இன்னும் 'சிக்கன்' தயாராகவில்லை. அவனுக்கு இருக்க நிழலும் உண்ணச் சோறும் ஒரு விலாசமும் தந்திருக்கும் தாமுவுக்கு இந்த 'சிக்கன்' பிடிக்க வேண்டும்!

காலையில் எழுந்ததும் அவன் எங்கே போனான்?

சிவாவின் மனசு ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு மீண்டும் காதலுக்கு வந்தது.

திருப்பத்தூரில் கல்லூரி வாழ்க்கையில்... மேல்நிலைப் பள்ளியில் படிக்கையில்... நூற்றுக்கணக்கான இளைஞர்களின் அசட்டுத் தனங்களும் துணிச்சல்களும் நினைவு வந்தன.

கான்வெண்ட் விடும்போது... சினிமா விடும் போது... ஆரம்பிக்கும்போது... கோவில் வாசலில்... எவ்வளவு அசட்டு ரூட்டைகள்... எத்தனை பரிதாப ரகங்கள்.

கடைசியில் அவர்களிடமிருந்து விலகி விலகி இப்போது நானும் அதற்கு ஆட்பட்டுவிட்டேனா?

தெரியவில்லை.

நான் வேலை தேடிக் கொண்டிருக்கிறேன். எனக்கு வேலை இல்லை.

வேலை இல்லாத ஒவ்வொருத்தனும் கொஞ்சம் காதல் பண்ணிக் கொண்டிருப்பான். வேலை கிடைத்ததும் எல்லாம் சரியாகிவிடும்.

வேலை என்ற எண்ணம்,ஒரு பந்தயக் குதிரை மாதிரி ஓடி வெற்றிக் கம்பத்தின் அருகே நின்றது.

சர்ட்டிபிகேட்டுகள் அரைக் கிலோ தேறும். அந்தப் போட்டியில் முதல்... இந்தப் போட்டியில் இரண்டாவது... அந்த கேம்ஸ்... இந்த ஸ்போர்ட்ஸ்...

சிவாவுக்கு அவற்றின் மீதிருந்த நம்பிக்கை பொய்த்து விட்டது. தாமுவின் சிநேகிதி பிரீதா ஒரு சிபாரிசுக் கடிதம்



வாங்கிக் கொடுத்திருந்தாள். அமைச்சரின் பி.ஏ.வுடைய ஆசை நாயகிக்கு பிரீதா தங்கள் பிரைவேட் நர்ஸிங் ஹோமில் பிரசவம் பார்த்திருந்தாள். கஷ்டமான கேஸாம். அவளது வாஞ்சையான சிகிச்சைக்குக் கிடைத்த சின்ன வெகுமதி அது.

அதை வாங்கிக் கொள்ள முதலில் அவனுக்குப் பிடிக்கவில்லை.

"இதானு லோகம்" என்று அவன் கையில் திணித்தாள் பிரீதா.

அதை வாங்கும்போது அவன் கை தயங்கியது.

வெற்றிவேல் நினைவு வந்தான்.

'மீசையுள்ள ஆண்பிள்ளைச் சிங்கங்களென்றால் என் கூட வெளியினில் வாருங்காணும்?' —என்று டெஸ்கின் மீது இரண்டு கைகளால் தாளம் தட்டிக்கொண்டு அவன் பாடும் பாட்டு நினைவு வந்தது.

வெற்றிவேல்... மன்னித்துக்கொள்... நீயும் நானும் மீசையுள்ள ஆண்பிள்ளைச் சிங்கங்கள்தான்...

இப்போது சிங்கங்களை மதிப்பவன் இல்லையடா... சிங்கங்கள் அசட்டு மிருகங்கள் என்று உதறிவிட்டு ஜனம் பறக்கிறது. சிங்கத்தைவிட சிங்க மேக்கப்தான் இப்போது கவர்ச்சி...

அரைத்த மசாலாவை எண்ணையில் வெந்து கொண்டிருந்த சிக்கனில் கலந்துகொண்டே உள்ளூர சிவா தொலைதூரத்தில் இருந்த வெற்றிவேலிடம் மன்னிப்புக் கோரினான்.

ராயப்பேட்டை ஹைரோடில் ஒரு மாவுமிஷின் கிறீச்சிடுகின்ற ஒலி காற்றில் மிதந்து வந்தது. அந்த ஓசை

மாவை அரைத்து முடித்துவிட்டு கைப்பிடிச் சக்கரத்தை சுழற்றிவிடும் அந்த ஓசை அவனுக்குப் பிடிக்கும்.

திருப்பத்தூர் முதலியார் ரைஸ் மில்லின் ஓசையில் ஒரு பாராயண ஒலி கேட்டும்.

அதை நாராயண நாமமாக நினைத்துக் கொண்டே தவிடு விடுவாள் அம்மா.

அவளைப் பார்க்கப் போகும் போதெல்லாம் கர்ண கடூரமாகக் கிறீச்சிடும் அந்த ஓசை பழகிப் பிடித்து விட்டது.

எதுவெல்லாம் மனிதனுக்குப் பிடித்து விடுகிறது!

பிடிப்பதற்குப் பழக்கம்தான் தேவையோ! இடைவிடாத பழக்கம். அப்புறம் லயிப்பு. இப்போது திஷ்யாவிடம் லயிக்கிற மாதிரி. தின்று தின்று தின்றதையே மீண்டும் தின்கிற வேட்கை மாதிரி... தாமுவுக்குப் பிடித்த சிக்கன் மாதிரி... தாமுவுக்குப் பிடித்த பிரீதா மாதிரி...

தாமுவுக்கு பிரீதா ஒருத்தி தானா? எத்தனையோ...? மீண்டும் மீண்டும் இந்தப் பெண்களிடம்... அவ்வப்போது ஒவ்வொருத்தியுடன் தாமு எதைத் தேடுகிறான்? என்ன கண்டு பிடிக்கிறான்?

'சிக்கன்' மணம் கும்மென்று வந்தது.

போன வாரம் தான் செய்தது 'டாப்' என்று தாமு பாராட்டிய ஞாபகம் வந்தது. இன்றைக்கு அப்படி இருக்குமா?

போன வாரத்தின் சுவை... அதற்கொரு மறுபதிப்பு... மீண்டும் ஒரு புதுப்பதிப்பு...

பழக்கம் என்ற பாதையில் மனிதனின் மனச் சக்கரம் முன்னும் பின்னும் பின்னும் முன்னும் விடுதலை இல்லாமல் ஓடி அதற்குச் சுகம் என்று அர்த்தம் கற்பித்துக் கொள்கிறதோ!



சுகம்—அது என்னவென்று இன்னும் முழுக்கப் பரிச்சயமாக வில்லை.

கெரஸின் தீர்ந்து வருவதால் ஸ்டவ்வில் ஒலி குறைந்தது. அடுத்த வாரம் காஸ் அடுப்பு வந்து விடுமென்று தாமு சொல்லிக் கொண்டிருந்தான்.

சுகம் என்பது கெரஸின் அடுப்பிலிருந்து காஸ் அடுப்பில் சமைக்கும் மாற்றமா?

சுகம் தெரியவில்லை. துக்கம் தெரிந்தது. பளு தெரிந்தது.

என்ன படித்து என்ன பட்டம் வாங்கி என்ன பயன் என்ற உழற்சியில் நெஞ்சை ஏதோ ஒரு பாறாங்கல் அழுத்திற்று.

ரைஸ்மில்லின் தவிட்டு நெடியிலிருந்து இம்மி இம்மியாக அம்மாவின் நுரையீரல்களுக்குள் இறங்கிக் கொண்டிருந்த வியாதியிலிருந்து அவளுக்கு ஒரு சிறை மீட்சிக்கு வழியில்லை.

ஒண்ட இடம் தந்து உணவளிக்கும் தாமுவுக்கு இன்னும் சோற்றுச் சுமையாயிருப்பதிலிருந்து விடுதலையில்லை.

"ஸார்...ஸார்"

வெளியே ஓர் அதிகாரக் குரல்.

அவன் எழுந்து வருவதற்குள் மீண்டும் ஓர் அவசரம்.

"வீட்லே யாரு?"

சிவா லுங்கியை இறக்கிவிட்டு வெளியே வந்தான் தந்திச் சேவகன் கேசவன்.

"ஹலோ நீங்களா சார்?...இங்கியா இருக்கீங்க?"

சிவா புன்னகையுடன் தலையசைத்தான்.

"போன மாசம் அனுப்பிச்சீங்களே கதை... அது வந்துடுச்சா சார்"

கதையைப் போஸ்ட் செய்யும்போது அவன் பார்த்தான்.

"இன்னும் வரலியே..."

"வந்தா எனக்கு பத்திரிகையைக் கொடுங்க சார்"

"வந்தாதானே... ஓ"

"டெலிகிராம் சார்."

"பேரு"

"ஜே. தாமோதரன்"

"அவர் வெளியே போயிருக்காரே"

"நீங்க ஸைன் பண்ணி வாங்கிக்குங்க"

சிவா கையெழுத்திட்டான்.

மதனபள்ளியிலிருந்து வந்த தந்தி. தாமுவின் அப்பா அடித்திருக்க வேண்டும்.

எப்போதோ பார்த்த அவர் போட்டோ மனசில் ஒரு 'ப்ளாஷ்' அடித்துவிட்டுப் போயிற்று.

இருபுறமும் ஒதுக்கிவிட்ட கிருஷ்ணதேவராயர் மீசை. கண்ணில் இன்னும் ஜமீன் மிடுக்கு. இறுகிய கீழுதட்டில் ராஜரீகம்.

ஜமீன் போய்விட்டது.

ஜமீன் வம்சக் கொடியில் பீட்டர்ஸ் ரோடில் ஆட்டோ ஒர்க்ஷாப் நடத்தும் மெக்கானிக் முளைத்தாயிற்று. இன்னும் மிடுக்கு போகவில்லை.

தர்மராஜ ரெட்டிகாரு உடம்பில் ஓடும் அதே ஜமீன் ரத்தம் தாமுவிடமும் ஓடுகிறது- அதே ராஜரீகம்.



நான் தான் என் ஹீரோ. இதே செய்திதான் அவனிடமும் ஓடுகிறது.

தாமு மதனபள்ளி மண்ணை உதறி எட்டு வருஷமாகப் போகிறது. நூற்றுப் பதினெட்டு ஏக்கர் நிலத்தை தந்தை சொன்ன ஒரு சொல்லுக்காக உதறிவிட்டு சென்னைக்கு வந்தவன் தாமு.

ராயப்பேட்டையில் மட்டுமல்ல, சென்னையில் பல பகுதிகளில் காரும் ஸ்கூட்டரும் வைத்திருப்பவர்கள் தாமுவுக்குப் புன்னகையுடன் கை உயர்த்துகிறார்கள்.

அவனது ஒர்க்ஷாப்பில் கார்களும் வேன்களும் கியூவிலே காத்திருக்கின்றன.

சிவா வந்த எட்டு மாதத்தில் எத்தனையோ மதனபள்ளிக்காரர்கள் தாமுவைத் தேடிவந்து போயினர். தர்மராஜ ரெட்டிகாரு வந்ததில்லை.

மகனின் பாதை சரியாயிருக்கும் என்ற எண்ணமா? அல்லது வெறும் மோட்டார் மெக்கானிக் என்ற இளக்காரமோ?

எவனானால் என்ன?

வெற்றிவேல் பாடுவது மாதிரி ஆண்பிள்ளைச் சிங்கம்.

மரியாதை அவனைத் தேடிவரும். பிரீதா மாதிரி... பல பெண்கள் மாதிரி.

பிரீதாவும் தாமுவும்—

ஒழுக்கத்தின் எந்த அளவு கோலை வைத்து அவர்கள் உறவை அளப்பது?

அவன் அங்கே ராத்தங்குகிறான்... அவர்கள் இருவரும் விஸ்கி குடிக்கிறார்கள்.

இப்படி ஒருத்தியல்ல பலர் உண்டு என்று தர்மராஜ ரெட்டிகாருவுக்குத் தெரியுமா?

இந்த தந்தி என்ன சொல்ல வந்திருக்கிறது?

## 2

படித்த தந்தியை மடித்து பைக்குள் போட்டுக் கொண்டான் தாமு. முகம் எந்த உணர்ச்சியும் காட்டாத வெற்றுக் காகிதம் மாதிரி இருந்தது.

என்ன விஷயம்?

சொல்லமாட்டானா என்று சிவா எதிர்பார்க்க வில்லை. சொல்ல வேண்டுவதானால் சொல்லுவான் என்று அவனுக்குத் தெரியும்.

"சிவா.. ஒனக்கு டயம் ஆகுதே!"

"நான் ரெடியாய்ட்டேன்."

"பீரோவில் பர்ஸ் இருக்கு..செலவுக்கு இருபது ரூபா எடுத்துக்கோ."

"எதுக்கு அவ்ளோ? அஞ்சு ரூபா போதும்."

இந்த எட்டு மாதத்தில் எத்தனை இண்டர்வியூ எத்தனை ஐந்து.. எத்தனை பத்து.

"சைதாப்பேட் போகணுமில்லே"

"ஆமா; அஞ்சு ரூபா போதும்."

தாமு நிதானமாக அவனைப் பார்த்தான். அவன் மனசைப் புரிந்து கொண்ட மாதிரி ஒரு புன்னகை செய்தான்.

"ஒரு அக்கவுண்ட் வேணும்னா வச்சிக்கோ.. வேலை கெடைச்சதும் நீ வாங்கினத்தையெல்லாம் திருப்பிக் கொடுக்க சௌகரியமா இருக்கும்.. ஆனா வழியிலே இப்ப கஷ்டப்படாதே!"

எதிராளி நாடித் துடிப்பை தாமு இரக்கமோ மென்மையோ பாராட்டாமல் இப்படி தொட்டுவிடுவான். முகத்திரையை விசுக்கென்று இழுத்துவிடுவான்.



"அதுக்கில்லே"

தாமுவே எழுந்துபோய் பர்ஸிலிருந்து ஒரு இருபது ரூபாய் நோட்டை உருவி சிவாவின் கையில் அழுத்தினான். "கீப் இட் ஐ ஸே." அன்பை, பரிவைக்கூட அதிகாரமாகத் தான் தாமுவுக்கு சொல்லத் தெரியும்.

சிவாவுக்கு மனம் தழுதழுத்தது.

"விஷ் யூ ஆல் த பெஸ்ட்."

"தாங்க்யூ... இன்னிக்கு மார்க்கெட்லே மீன் நல்லால்லே.. சிக்கன்தான் பண்ணினேன்"

"நீ?"

"ரசம் வச்சுகிட்டேன்"

தாமு ஒரு 'ஜோக்' கேட்ட மாதிரி சிரித்தான்.

"நோ சிக்கன்... நோ ஃபிஷ்... நோ மட்டன்... நோ டிரிங்ஸ்.. நோ விமன்.. நோ ஸ்மோகிங்.. எல்லாம் நோ.. நோ.. நோ... நீ என்ன மனுஷன் சிவா?"

"ஐ ஆம் நோபடி."

தாமுவின் முகம் சட்டென்று சுருங்கிற்று.

அதைச் சொல்லி இருக்க வேண்டாமோ! புளித்த மாவைப்போல் ஒரு விரக்தி பாத்திரத்தை விட்டு வழிந்து விடுகிறது.

எத்தனை பத்திரப்படுத்தினாலும்.

வெற்றிவேல்!

அவனுக்கு தன்னிரக்கம் பிடிக்காது. விரக்தி பிடிக்காது.

இரண்டு புருவங்களை உயர்த்திக் கொண்டு ஒரு வேலாயுதத்தை மனசில் பதிக்கிற பார்வை பார்ப்பான் இப்போது தாமு அப்படிப் பார்த்தான்.

புதிய பல்ப் மாற்றிய மாதிரி தாமுவின் முகத்தில் ஓர் ஒளி பளிச்சிட்டது.

"இட் ஷோஸ் யூ ஆர் ஸம்பதி— ஒனக்கு ஒரு வேலை கெடைக்கறதுதான் ரெமடி. கெடைச்சுடும்."

"ஐ'ம் ஸாரி"

"ஏன்?"

"ஐ வாஸ் பிட்டர். கசப்பா பேசிட்டேன்."

"கசப்பெல்லாம் இனிப்பாகும் காலம் ஒன்று வரும்."

"தாங்க்யூ"

சர்ட்டிபிகேட் ஃபைலை எடுத்துக் கொண்டு படியிறங்கப் போனவனை "சிவா" என்று கூப்பிட்டான்.

சிவா நின்றான்.

"நீ எனக்கு ஒரு சின்ன வேலை செய்யணும்."

"சொல்லுங்க."

"வர்ற வழியிலே மவுண்ட் ரோடிலே எறங்கு. பிரீதா, ஒரு குக்கர் கேட்டிருந்தா. முந்தா நாள் மாடலை எல்லாம் பார்த்து வச்சிட்டோம். நீ ஸ்பென்சர்லே எறங்கி கேஷ் கவுண்டர்லே தாமு கிட்டேருந்து வந்திருக்கேன்னு சொன்னியானா குக்கரைக் கொடுத்துடுவாங்க. வாங்கிட்டுப் போய் அவ கிட்டே சேர்த்துடணும். வுட் யூ மைண்ட் திஸ் ட்ரபிள்...?"

"நோ... நாட் அட் ஆல்"

"அங்கே வேற யாரையும் அனுப்ப நான் விரும்பலே."

தனது அந்தரங்கத்துக்கு நீதான் உகந்தவன் என்ற மரியாதையை தாமு தருவதை உணர்ந்தான்.

"நான் மதனபள்ளி போறேன். அப்பா சீரியஸ்னு டெலிகிராம் வந்திருக்கு. வர எவ்வளவு நாள் ஆகும்னு போய் எஸ்.டி.டி. பண்றேன். இதையும் அவகிட்டே சொல்லிடு."



தாமுவுக்குத்தான் இப்படி ஓர் அதிர்ச்சியை பக்குவத்தோடு ஏற்க முடியும். ரயில் தவறிவிட்டதைப் பற்றிச் சொல்வது மாதிரி அவ்வளவு சாதாரணமாகச் சொல்ல முடியும்?

இவன் கருங்கல் பாறையா... தண்ணீரில் மிதக்கும் தாமரையா...

சிவா பதறிப்போய் நிற்பதைப் பார்த்தான் தாமு.

"டேக் இட் ஈஸி... அவர் நல்லா ஆயிடுவார். ஐ டுக் இட் ஈஸி... மனுஷனாலே அப்படி எடுத்துக்கறதுதான் முடியும்."

சிவாவின் பார்வை தாழ்ந்தது.

"நீ பொறப்படு."

அவன் படியிறங்கினான்.

அரைவாசிப் படிகள் கடந்திருப்பான். அதற்குள் தலைகுனிந்து கொண்டே தண்ணீர்க் குடத்தோடு திஷ்யா படியேறி விட்டாள். நாலைந்து படிகள் கடந்திருந்தாள்.

படி குறுகலானது. மனிதனை விட இடம் முக்கியம் என்ற சென்னையின் சிக்கன சிரத்தையில் கட்டப்பட்டது. இடுப்பில் குடத்தோடு வரும் ஒருத்தியும் கையில் ஃபைலோடு வரும் ஒருவனும் ஒரே நேரத்தில் கடக்க முடியாது.

அவள் ஐந்தாவது படி ஏறின பின்பு அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

குளித்து ஈரத்தலையைக் கொண்டை போட்டிருந்தாள். பவுடரும் மெல்லிய மையும் ஒரு சின்ன நேர் கோடு

மாதிரி திலகமும் அவள் முகத்தின் செம்மையில் ஒரு சௌந்தர்யம் கூட்டியிருந்தன.

சிவானைப் பார்த்ததும் அவள் உதட்டில் குறும்புப் புன்னகை பளிச்சிட்டது.

"என்ன காலம்பற வேட்டைக்கு கௌம்பியாச்சா?"

"சகுனம்தான் சரியில்லே"

"அப்ப திரும்பிப் போயிட்டு அப்பறமா வர்றது"

"வந்த சகுனம் வந்தாச்சு. திரும்பிப் போனா தப்பிச்சுக்க முடியுமா?"

"குடம் போறதுக்கு எடம் வேணுமே"

மீண்டும் படியேறிச் செல்ல சிவாவுக்கு விருப்பமில்லை.

"நான் ஒதுங்கி ஒட்டி நின்னுக்கறேன்"

குடத்துத் தண்ணீர் சர்ட்டிபிகேட்டில் சிந்திவிடப் போகிறது என எதிர்ப்புறமாக ஒதுங்கினான்.

ஒரு கணம். அந்தக் கன்னமும் விழியும் அவன் சமீபத்திற்கு வந்தன. அவளது இடையும் உடம்பும் அவனை லேசாகத் தொட்டு உரசிற்று.

என்ன ஒதுங்கியும் திஷ்யாவின் இடது தோள் அவன் மார்பில் இடித்து விட்டது.

இவ்வளவு நெருக்கம் இதற்கு முன்பும் ஒரு முறை கிட்டியிருக்கிறது. அது தற்செயல்.

படிக்கட்டின் கீழே அவள் கையிலிருந்து எம்பிக் குதித்த ஆனந்தைத் தூக்க அவள் குனிய அவனும் குனிந்தான். இருவர் தலையும் முட்டிக் கொண்டன.

ஒரு பெண்ணுடலுடன் நேர்ந்த முதலாவது சந்திப்பு அது. இரண்டாவது சந்திப்பிலும் இப்படி ஒரு மோதல் தானா? படியேறிய திஷ்யா நின்றாள்.



இடித்து விட்டோம் என்று நாக்கைக் கடித்துக் கொண்டே அவள் திரும்பிப் பார்த்தாள்.

அந்தப் பெரிய கண்களில் மிதந்த மருட்சியும் வெட்கமும் அவன் மனசை எங்கோ கொத்தின. அவள் வாசனையும் அந்தப் பௌடர் வாசனையும் ஒரு வலை மாதிரி தன்னைச் சுற்றிக் கவிந்ததை சிவா உணர்ந்தான்.

ஒரு தித்திப்பு உள்ளில் ஊறிச் சிலிர்த்தது.

சிவா தன்னைச் சுய நிலைக்குக் கொண்டு வந்தான். கசப்பான சிரிப்பு ஒன்று அவனுள் கரைந்து மடிந்தது.

தனக்கு என்று ஒரு வேலை உண்டோ இல்லையோ, விலாசம் உண்டோ இல்லையோ, மனுஷ புத்தி என்ன கூத்தாடுகிறது?

எந்த முரண்பாடான சூழ்நிலையிலும் துளித்துளியாய் சிதறியிருக்கும் தேனுக்கு என்ன ஆவல் காட்டுகிறது!

சிவா அந்த மயக்கத்திலிருந்து தன்னைக் கத்திரித்துக் கொண்டு படியிறங்கி, தெருவைக் கடந்து சாலைக்கு வந்தான்.

வெளியே காலை, ஒன்பதரை மணிச் சென்னை ஜன்னி வேகத்தில் பதறிற்று. ஆபிஸ்—காலேஜ்—ஸ்கூல்.

பஸ் ஸ்டாப்பின் ஓரம், பிரசவ வார்டுகளுக்கு எதிரே ஒரு கூட்டம் கையைப் பிசைந்து நிற்பது மாதிரி கால் மாற்றிக்கால் மாற்றி ஜனம் நின்றது.

நிஜமாகவே ஒரு கர்ப்பிணியும் அங்கே நின்றாள். சிவா தன் உவமையின் பொல்லாங்கை ரசித்தான்.

பிரசவம்! ஒவ்வொரு பஸ்ஸும் ஒரு பிரசவ வேதனை தானா? அவன் பெட்டிக் கடை ஓரமாக நின்றான்.

கொலை, கொள்ளை, குண்டு வீச்சு, சட்டசபையில் செருப்பு வீச்சு, ரயில் கவிழ்ந்தது என்று வீர சுதந்திரம்

நமக்கு வழங்கியிருந்த அனறாட மாமூல் சுபமங்களங்கள் பெட்டிக் கடைக்கு வெளியே தொங்கிய விளம்பரங்களில் பிரசவமாகியிருந்தன.

ஒரு வாரப் பத்திரிகையின் விளம்பரத் தாள், மனஅலை பாய்ந்து சட்டென்று நின்றது.

"எதிரொலியே நீ எங்கே?"

சிவா எழுதிய சிறப்புச் சிறு கதை.

கொட்டை எழுத்துக்களில் தெரிந்த அந்த தலைப்பு எங்கோ கேள்விப்பட்ட மாதிரி யாருடையதோ மாதிரி பளீரென்று மண்டையில் அறைந்தது. தன் கதை என்பதைக் கீழே இருந்த பெயர் சுட்டிக் காட்டிற்று.

ஆம்.. அது அவன் எழுதியனுப்பியிருந்த கதை. தபால் பெட்டிற்குள் போடும்போது அது அங்கிருந்தே நேராக ஒரு குப்பைக்கூடையில் போய் விழும் என்று நினைத்துக் கொண்டு போட்டது.

சரியாக ஒரு நிமிஷம். அவன் வெடித்துச் சிதறி வானில் வண்ண வண்ணமான வெளிச்சத் துணுக்குகளாகச் சிந்திய உணர்வு.

ஒரு சூன்ய மூலையிலிருந்து உதைத்து எறியப்பட்டு வேகமாய்ச் சுழன்று ஒரு வெளியில் வந்து விழுந்த இம்சையான சுகப் பிரசவம்.

பிறந்தோம். தின்று குடித்து வளர்ந்தோம். பொங்கிச் சலித்து மடிந்தோம் என்ற விதியிலிருந்து உந்தி எங்கோ ஒரு விதானத்திற்கு தள்ளிவிட்ட திக்பிரமை ஏற்பட்டது.

அவன் பரவசமுற்றான்.

கிளர்ச்சியுற்றான்.

கூடவே சோகமுற்றான். ஏன் இந்த சோகம்? புரியவில்லை.



அப்புறம்தான் சிவா மூச்சு விட்டான். ஜிவ்வென்று ரத்தம் தலைக்குப் பாய்ந்தது. இதயம் நூறு குதிரை வேகத்தில் துடிப்பது மாதிரி நினைத்தான்.

சட்டைப் பையிலிருந்த இருபது ரூபாய் நோட்டை நீட்டிக் கொண்டு கடைக்காரன் முன் நின்றுவிட்டான்.

"என்ன சார் வேணும்?"

"ஒரு நந்தவனம்" என்று வாய்வரை வந்துவிட்ட வார்த்தைகளை அவன் சட்டென்று விழுங்கினான்.

இது தாமுவின் பணம். அவனுடைய சுய மரியாதையை மெச்சுகின்ற தாமுவின் பணம். அவன் வாய்க்கு வந்த வார்த்தைகள் மாறின.

"சில்லறை இருக்கா...?"

"இம்மாங் காத்தாலே சில்லறை கேட்டா எப்பிடி?"

சிவாவின் கண்கள் கயிற்றில் கிளிப் மாட்டித் தொங்கிய அந்த வார நந்தவனத்தைப் பார்த்தன.

"சரி... கொண்டா சார்"

கடைக்காரன் கல்லாவுக்குள் ரப்பர் 'பேண்டு' போட்டுக் கட்டி வைத்திருந்த ரூபாய் நோட்டுக்களை எண்ணினான்.

கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தாமுவிடம் வெளிப்பட்ட விரக்தி இப்போது வெகுதூரம் உலவித் திரும்பிய எதிரொலி போல் கேட்டது.

"ஐ ஆம் நோபடி!"

"தட் ஷோஸ் யூ ஆர் ஸம்படி'

ரூபாய் நோட்டுக்களை வாங்கி எண்ணுவதற்கு முன் பஸ் வந்து விட்டது.

சிவா பாய்ந்து பஸ்ஸில் ஏறினான். அவன் எங்கே நின்றான். எப்படி இடம் படித்தான்...டிக்கெட் வாங்கினான்... எதுவும் அவன் மனசில் பதியவில்லை.

பஸ்ஸின் நெருக்கடியில் அவன் பாதிக்கப்படவில்லை. அம்மாவை நினைத்தான். வெற்றிவேலை நினைத்தான். அப்புறம் அப்பா ஞாபகம் வந்தது. நான் எழுத்தாளனாகி விட்டேன் என்றால் அவர் என்ன நினைப்பார்?

அவர் ஞாபகம் வந்து எத்தனை நாள் ஆகிறது?

சென்னைக்கு வந்தபின் எட்டு மாதங்களிலும் ஒரு முறை கூட அவனுக்கு அவரை நினைக்கிற வாய்ப்பு ஏற்படவில்லை.

இப்போது அவரைச் சந்திக்க வேண்டும் போலிருந்தது.

கண்டக்டர் விசில் ஊதியதும் தான் இறங்க வேண்டிய ஸ்டாப் வந்து விட்டது என்று விழிப்புற்றான்.

# 3

"அகத்து வரூ"

க்வார்ட்டர்ஸின் கதவுக்கு மாட்டியிருந்த பச்சை ஸ்கிரீனை'த் தள்ளிக் கொண்டு வெளிப்பட்டாள் பிரீதா. கதவுக்கு வெளியே வாசற்படியருகில் சிவா நின்றான். கையில் குக்கர் வைத்த அட்டைப் பெட்டி.

"எந்தா குக்கரோ?" என்றாள். அவள் புன்னகையில் ஒரு பசுமைக் குளிர்ச்சி இருந்தது.

வெளியே வாட்டிய வெய்யிலில் அவளைப் பார்ப்பதே குளிர்ச்சியாக இருந்தது.



ட்யூட்டி முடித்துக் குளித்திருந்தாள். தலை ஈரம் ஆறும் முன் போட்ட மலையாளக் கொண்டை. பூசினாற் போன்று பருத்த அவளது செம்மஞ்சள் மேனிக்கு இந்த பச்சை நைலக்ஸ் மட்டுமல்ல எந்த உடையும் பொருத்தம் தான்.

விளக்கு வைத்த மாதிரி ஒரு பார்வை. அந்த குறுஞ்சிரிப்பில் கண்களின் சுடர் தெறித்தது.

சிவா காம்பவுண்ட் கேட்டைத் திறந்து கொண்டு படியேறினான். நடுவே ஓடிய காங்க்ரீட் பாதையின் இரு பக்கமும் தண்ணீருக்குத் தவிக்கும் சின்னத் தோட்டம்.

"இண்டர்வ்யூ கழிஞ்ஞோ?" என்று அவன் கையிலிருந்த குக்கர் பெட்டியை வாங்கிக் கொண்டே கேட்டாள்.

பிரீதாவிடமிருந்து ஒரு பெர்ஃப்யூம் வாசனை வந்தது.

"இவ்விட இரீ" என்று ஒரு பிரம்பு நாற்காலியைக் காட்டி ஆதுரமாகப் புன்னகைத்தாள்.

பிரீதாவின் புன்னகையிலும் சிரிப்பிலும் கண்கள் ஒளிவிட்டன. இவளுக்கும் பாவங்களுக்கும் என்ன சம்பந்தம் என்று அவள் முகத்தின் நேர்மை கேட்டது.

எவ்வளவு சுருக்கமாக இவள் தன் பிரியத்தை வெளியிடுகிறாள்!

"இதா வருந்து" என்று பிரீதா மீண்டும் உள்ளே போனாள்.

பக்கத்திலிருந்த டீப்பாயில் ஒரு மலையாள தினசரி மடிந்து கிடந்தது. புழுக்கத்திற்கு விசிறிக் கொள்ள எடுத்தான். கீழே நந்தவனம். அந்த வாரத்து இதழ். பிரீதா தமிழ் கற்று வருகிறாள் என்று நினைவு வந்தது.

எந்த இடத்தில் அவனது கதை பார்க்கக் கிடைக்கிறது!

பத்திரிகையை எடுக்கும் போது கை லேசாக நடுங்கிற்று. அட்டைப்பட ஓவியத்தைப் பார்க்கும் போது அவனுக்கு மறுபடியும் அம்மா நினைவு வந்தது. கண்கள் ஊற்றெடுத்தன—பார்வை மறையுமளவு.

'மனமே இன்பத்திலும் துன்பத்திலும் சமமாயிரு.' தாமுவின் முதல் கதை பிரசுரமாயிருந்தால் அவன் இவ்வளவு கிளர்ச்சியுறுவானா? வெற்றிவேல்?

'லகானை' இழுத்த மாதிரி அவனுக்குள் ஒரு தன்வசம் கிட்டியது.

'டபிள் ஸ்ப்ரெட்'டாக அட்டையின் முன்னும் பின்னும் ஏழு வண்ணத்தில் பரவியிருந்த ஓவியம்.

பிரித்தான். அவனது கண்ணீரும் கண் விழிப்பும் உதிரமும் பெருமூச்சும் சிதறியிருந்த வரிகள்; பொடிப் பொடியான ஒவ்வோர் எழுத்தும் அவனது வெற்றியைச் சிற்றுளியால் கொத்திய ஒவ்வொரு கொத்து போன்று சிரித்தன.

பிரீதா ஒரு கண்ணாடித் தம்ளரோடு திரும்பி வந்தாள். லெமன் ஜூஸ்.

"கழிக்கூ"

பிரீதா நீட்டியதை வாங்கிக் கொண்டான். 'பிரிஜ்'ஜிலிருந்து வந்ததால் டம்ளர் சில்லென்றிருந்தது.

"இண்டர்வ்யூ எந்தாயி?"

ஒரு விழுங்கு குளிர்ச்சியில் வெய்யில் பரவசம் எல்லாமே மட்டுப்பட்டன.

"மாமூல்"

"மாமூலென்னு பரஞ்ஞால்?"

"ஜஸ்ட் ஃபார் நேம் ஸேக். ஆளை ஏற்கெனவே தீர்மானிச்சாச்சு. பத்தாயிரம் ரூபாய்."



"ஆ லெட்டரினெ கொடுத்தோ?"

அது மாதிரி நூறு கடிதங்கள் கொடுக்கப் பட்டிருக்கும். பெரிய துண்டும் பையுமாக பருத்த மனிதர்கள் நாலைந்து பேர் இண்டர்வியூ ஹாலுக்கு வெளியே திரிந்தார்கள்.

"அதுக்கு அவசியமே ஏற்படலே"

அவன் அவளிடம் உண்மையை மறைக்க விரும்பவில்லை. பிரீதாவின் முகத்தில் வருத்தம் ஏடு கட்டியது.

'இவளிடம் சொல்லலாமா?'

தனக்கு ஒரு வேலை கிடைக்கவேண்டுமென்று நிஜமாய் விரும்பும் இவளுக்கு இது தெரியவேண்டுமே!

சிவா பத்திரிகையை அந்தப் பக்கத்தின் நடுவில் கை வைத்து அவள் முன்பு நீட்டினான்.

"எந்தாணு?" அவள் வாங்கி எழுத்துக் கூட்டினாள்..

"ஏதிரெலியே நீ எங்கே?"

சிவா சிரித்து விட்டான்.

"தெற்றாணோ?" தப்பு செய்த குழந்தை மாதிரி அவள் ரசமாக விழித்தாள்.

"எதிரொலியே நீ எங்கே?"

அவன் திருத்திப் படித்தான். அவன் விரல் கீழே எழுதியிருந்த பெயரைச் சுட்டிக் காட்டியது.

"சிவா.." அவள் விழிகள் ஒரு கணம் நிலை குத்தின. இமைகள் படபடத்துக்கொண்டே அவன் மீது மொய்த்தன.

"ஹாய்.. நிண்டேதோ?"

"ஆம்" அவன் அடக்கப் புன்முறுவலுடன் தலையாட்டினான்.

புது வியப்புடன் பார்த்தாள். பக்கங்களைப் புரட்டினாள் படங்களைப் பார்த்தாள். கவர் ஸ்டோரி என்று எழுதியிருந்ததை எழுத்துக் கூட்டிப் படித்தாள்.

அட்டைப் படத்தைத் திருப்பிப் பார்த்தாள்.

மீண்டும் அவன் மீது ஒரு பார்வை. அதில் ஒரு புது மரியாதை பிறந்திருந்தது.

இனி அவளுக்குத் தான் பழைய சிவா இல்லை.

வேலை தேடுகின்ற, தங்க நிழல் தந்தவர்களுக்குச் சமைத்துச் சேவகம் புரியும், பரிவிற்குரிய பழைய சிவா இல்லை.

"கங்ராஜூலேஷன்ஸ்... க்ளாட். ஐ'ம் வெரி க்ளாட். எனிக்கு எத்ர சந்தோஷமென்னு பரயாம்பாடில்ல"

அவளது கரிய இமைகளில் பருத்துச் சிவந்த உதடுகளில் துளும்பிய களிப்பிலே ஒரு தூய்மை இருந்தது. அது ஒரு கன்று மரமாகிக் கனி குலுங்கக் கண்ட மகிழ்ச்சி.

சிவாவுக்குச் சிலிர்த்தது.

இவள் பார்வைக்கு தான் ஒரு வேலைக்காரன். தன் வெற்றியில் இவள் என்னமாய் பூரிக்கிறாள் !

அந்தத் தூய்மையான களிப்பும் உற்சாகமும் கண்ணுக்குத் தெரியாத ட்யூப் இணைப்புக்களில் சொட்டுச் சொட்டாய் தனக்குள் நிரம்புவதை உணர்ந்தான் சிவா.

"இங்ஙன நீ வல்யவனாயி"

நீ பெரிய மனிதனாய் விட்டாய் என்று அவனது உலகம் ஒரு சங்கீத மலையாளத்தில் முதன் முறையாக அவனுக்கே எடுத்துக் கூறியது.

"ஞான் இன்னு நினக்கு ஸ்வீட் தரும்"

சிவா தடுக்குமுன் பிரீதா பச்சைத் திரையின் உள்ளே மறைந்து விட்டாள்.



வெய்யிலில் பசி நடையாய் நடந்த கால் வலி எல்லாம் மறந்து விட்டது.

ஸ்க்ரீனுக்கு மாட்டியிருந்த உலோக வளையங்கள் நகர்ந்து விலகியதால் ரீங்கரித்தன. திரையை ஒதுக்கிவிட்டு பிரீதா வந்தாள்.

"அகத்துவரு"

அவன் இதுவரை அந்த வீட்டினுள் நுழைந்ததில்லை. தயங்கினான்.

"கம் ஆன்.. டோன்ட் பி ஷை!"

லெமன் ஜூஸ் தீர்ந்த காலி டம்ளருடன் அவன் எழுந்தான்.

"தரூ" அதை அவள் வாங்கிக் கொண்டாள்.

நுழைந்தவுடனே ஒரு குளுமை. இள நீல டிஸ்டெம்பர் அடித்த சுவர்கள். மொசைக் தரை; லாமினேட் ஒட்டிய மேஜை நாற்காலிகள்.

எதிரில் சுவற்றில் ஒரு சிறிய கண்ணாடிப் பெட்டியில் குருவாயூரப்பனின் பளிங்குச் சிலை. அதற்கு வெளியே ஊதுவத்தி ஸ்டாண்டில் சந்தன ஊதுவர்த்தி மென்மையாகப் புகைந்தது.

ரூமை ஒட்டி சிறு நடை; வலப்புறம் படுக்கையறையில் நீல நைலான் கொசுவலை கட்டிலுக்கு மேலே தூக்கி விடப்பட்டிருந்தது.

உள்ளே நீண்ட நடைவழி. சமையலறையும் பாத்ரூமும் டைனிங் ஹாலும் உள்ளே இருக்க வேண்டும்.

சிவாவை மேஜையருகே உட்கார வைத்துவிட்டு அவள் நேரே உள்ளே போனாள். இரண்டு கைகளிலும் இரு பீங்கான் 'ஸாஸர்'களை ஏந்தித் திரும்பினாள்.

புது வியப்புடன் பார்த்தாள். பக்கங்களைப் புரட்டினாள் படங்களைப் பார்த்தாள். கவர் ஸ்டோரி என்று எழுதியிருந்ததை எழுத்துக் கூட்டிப் படித்தாள்.

அட்டைப் படத்தைத் திருப்பிப் பார்த்தாள்.

மீண்டும் அவன் மீது ஒரு பார்வை. அதில் ஒரு புது மரியாதை பிறந்திருந்தது.

இனி அவளுக்குத் தான் பழைய சிவா இல்லை.

வேலை தேடுகின்ற, தங்க நிழல் தந்தவர்களுக்குச் சமைத்துச் சேவகம் புரியும், பரிவிற்குரிய பழைய சிவா இல்லை.

"கங்ராஜூலேஷன்ஸ்... க்ளாட். ஐ'ம் வெரி க்ளாட். எனிக்கு எத்ர சந்தோஷமென்னு பரயாம்பாடில்ல"

அவளது கரிய இமைகளில் பருத்துச் சிவந்த உதடுகளில் துளும்பிய களிப்பிலே ஒரு தூய்மை இருந்தது. அது ஒரு கன்று மரமாகிக் கனி குலுங்கக் கண்ட மகிழ்ச்சி.

சிவாவுக்குச் சிலிர்த்தது.

இவள் பார்வைக்கு தான் ஒரு வேலைக்காரன். தன் வெற்றியில் இவள் என்னமாய் பூரிக்கிறாள் !

அந்தத் தூய்மையான களிப்பும் உற்சாகமும் கண்ணுக்குத் தெரியாத ட்யூப் இணைப்புக்களில் சொட்டுச் சொட்டாய் தனக்குள் நிரம்புவதை உணர்ந்தான் சிவா.

"இங்ஙன நீ வல்யவனாயி"

நீ பெரிய மனிதனாய் விட்டாய் என்று அவனது உலகம் ஒரு சங்கீத மலையாளத்தில் முதன் முறையாக அவனுக்கே எடுத்துக் கூறியது.

"ஞான் இன்னு நினக்கு ஸ்வீட் தரும்"

சிவா தடுக்குமுன் பிரீதா பச்சைத் திரையின் உள்ளே மறைந்து விட்டாள்.



வெய்யிலில் பசி நடையாய் நடந்த கால் வலி எல்லாம் மறந்து விட்டது.

ஸ்க்ரீனுக்கு மாட்டியிருந்த உலோக வளையங்கள் நகர்ந்து விலகியதால் ரீங்கரித்தன. திரையை ஒதுக்கிவிட்டு பிரீதா வந்தாள்.

"அகத்துவரூ"

அவன் இதுவரை அந்த வீட்டினுள் நுழைந்ததில்லை. தயங்கினான்.

"கம் ஆன்... டோன்ட் பி ஷை!"

லெமன் ஜூஸ் தீர்ந்த காலி டம்ளருடன் அவன் எழுந்தான்.

"தரூ" அதை அவள் வாங்கிக் கொண்டாள்.

நுழைந்தவுடனே ஒரு குளுமை. இள நீல டிஸ்டெம்பர் அடித்த சுவர்கள். மொசைக் தரை; லாமினேட் ஒட்டிய மேஜை நாற்காலிகள்.

எதிரில் சுவற்றில் ஒரு சிறிய கண்ணாடிப் பெட்டியில் குருவாயூரப்பனின் பளிங்குச் சிலை. அதற்கு வெளியே ஊதுவத்தி ஸ்டாண்டில் சந்தன ஊதுவர்த்தி மென்மையாகப் புகைந்தது.

ரூமை ஒட்டி சிறு நடை; வலப்புறம் படுக்கையறையில் நீல நைலான் கொசுவலை கட்டிலுக்கு மேலே தூக்கி விடப்பட்டிருந்தது.

உள்ளே நீண்ட நடைவழி. சமையலறையும் பாத்ரூமும் டைனிங் ஹாலும் உள்ளே இருக்க வேண்டும்.

சிவாவை மேஜையருகே உட்கார வைத்துவிட்டு அவள் நேரே உள்ளே போனாள். இரண்டு கைகளிலும் இரு பீங்கான் 'ஸாஸர்'களை ஏந்தித் திரும்பினாள்.

மேஜையின் மீது வைத்தாள். ரஸகுல்லாவும், வறுத்த முந்திரியும்.

"நீங்க ?"

"நீயாணு 'கஸ்ட்'. சதா க்ருத்தாய கஸ்ட்"

அவன் ஸ்வீட்டை விண்டு வாயில் போட்டதும் வயிறு பசித்தது.

அவள் அவனுக்கு எதிரில் நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு மேஜை மீது ஊன்றிய இரு கரங்களாலும் மோவாயைத் தாங்கிக் கொண்டு அவனை உற்றுப் பார்த்தாள்.

அவனுக்குச் கூச்சமாக இருந்தது.

'உச்சய்க்கு எந்தெங்கிலும் கழிச்சோ?"

மத்தியானம் ஒன்றும் சாப்பிடவில்லை. அந்த தகவல் இவளுக்கு எதற்கு?

"கழிச்சு" அவன் மலையாளம் பேசினான்.

"எந்து கழிச்சு?"

"சோறு"

"நுண"

"இல்லை. மெய்தான்."

பிரீதா நம்பினாள். மலையாளத்தில் விடுவிடென்று பேசிக் கொண்டு போனாள். அவள் கண்களில் இளமை நினைவுகள் தலையெடுக்கும் மெல்லிய துயர் படர்ந்தது.

"சிவா, எனக்கு ஓர் இளம்பருவத் தோழன் இருந்தான். செருதுருத்தியில். செருதுருத்தி கேள்விப்பட்டிருக்கிறாயா? ஷோரனூர் ஜங்ஷனுக்குப் பக்கத்தில்..."

"மகாகவி வள்ளத்தோல் பிறந்த ஊர்..."

"அதேதான். கேரள கலாமண்டலி பிரசித்தி ஆச்சே"



"கேள்விப்பட்டிருக்கிறேன்."

"அங்கே கதகளி பயில்வதற்காக கொடுங்கல்லூரிலிருந்து அவன் வந்திருந்தான். செக்கச்செவேலென்று ஒரு பெண் மாதிரி.. உன் சாயலில் இருப்பான்."

"என் சாயல் என்பது எது? பெண் மாதிரியா... சிவப்பா?" சிவா சிரித்துக்கொண்டே கேட்டான்.

"உன் முகம்.. உன் நடை... உன் உயரம்"

"அப்போது அவனுக்கு பதின்மூன்று வயது. கவிதை எழுதுவான். பாடுவான்"

"பெண் குரலா?"

"இல்லை... கம்பீரமான ஆண் குரல். உச்ச ஸ்தாயிக்குப் போனால் மனசை அடிமை கொள்ளும் பௌருஷம், முகத்துக்கும் இயல்புக்கும் பொருந்தாத கம்பீரமான குரல்."

அவனை இவள் காதலித்திருப்பாளோ!

பிரீதாவே சொன்னாள்.

"என்னை அவன் காதலித்தான். நானும்..."

சிவா வாய்க்குக் கொண்டு போன ஸ்பூனை நிறுத்தினான்.

"இட்ஸ் எ காஃப் லவ்... கன்றுக்குட்டிக் காதல். கற்பூரம் எரியற மாதிரி, காட்டுக் குயில் பாடற மாதிரி... மாசு மறு வில்லாத களிப்பு... எனக்கும் பதின்மூன்று வயது"

அவன் என்னவானான்? ஏமனுக்கோ துபாய்க்கோ தினாரோ ரியாலோ சம்பாதிக்கப் போய் விட்டானா...

பிரீதாவே தொடர்ந்தாள்.

"ஒரு நாள் என் கண்ணெதிரில்... நான் பார்த்துக் கொண்டு நிற்கும்போதே அந்த பிரபாகர் செருதுருத்தியில்

ஓடும் பாரதப்புழா நதியில் வெள்ளப் பெருக்கில் அடித்துச் செல்லப்பட்டான்.. நாலாவது மைலில் அவன் பிரேதம் மறு நாள் கண்டு பிடிக்கப்பட்டது"

சமையலறையில் ஒரு டப்பா உருண்டது. பூனையோ! பிரீதா அசையவில்லை.

"சிவா... அதுதான் என் வாழ்வில் நான் சந்தித்த முதலாவது மரணம்!"

வெண்டிலேட்டர் மீது வெய்யில் தாளாமல் வந்து உட்கார்ந்த இரண்டு சிட்டுக் குருவிகள் கீச்சிட்டன.

"உன்னைப் பார்க்கும் போது பிரபாகர் ஞாபகம் வருகிறது. உன் மாதிரியே, அவனும் கம்பீரமாக நிமிர்ந்து நிற்பான். ராஜவம்சம், அவன் முழுப் பெயர் ஆனப்பாலம் பிரபாகர வர்மா"

இதை ஏன் சொல்கிறாள்? இன்று.. இந்த வேளையில்..

"மாத்ருபூமியில் அவன் எழுதிய முதல் கவிதை பிரசுரமாகியிருந்தது.. ஆனால்.."

"ஆனால் என்ன?"

"அது அவன் மறைந்த பத்தாம் நாள்தான் அந்தப் பத்திரிகையில் பிரசுரமாயிற்று"

சிவா அவள் கண்களில் நீர் துளிர்த்ததைப் பார்த்து தலை கவிழ்ந்தான்.

"அப்புறம் மரணம் அடுத்தடுத்து வந்து முகம் காட்டி விட்டுப் போயிற்று. அம்மா.. தம்பி.. அக்கா.. ஒவ்வொருவ ராய் சட்டுச் சட்டென்று மறைந்து போனார்கள்... ஐம் ஸாரி..." அவள் முகத்தைத் துடைத்துக் கொண்டே புன்முறுவல் செய்தாள்.

"ஏன்?"



"என்னவோ பேசிக்கிட்டே போய் உன்னை வருத்தப் படுத்திட்டேன். ஒரு சந்தோஷத்தை நாம் கொண்டாட வேண்டிய சந்தர்ப்பத்திலே இதைச் சொல்லறேன்.."

"இட்ஸ் ஆல் ரைட்"

"தாமுவுக்குத் தெரியுமோ?.."

"இல்லே"

"ரொம்ப சந்தோஷப்படுவார்"

"ஆமாம்"

"சாப்பிடு"

"மதனபள்ளியிலிருந்து தந்தி வந்தது. ஊருக்குப் போயிருக்கார். அப்பா ஸீரியஸாம்.."

"அறியாம், போன் செய்து"

அவன் முந்திப்பருப்பைத் தின்று முடித்துக் கையலம்ப எழுந்தான். அறை மூலையிலிருந்த வாஷ் பேஸினைக் காட்டினாள் பிரீதா.

பேஸின் அருகே சின்ன நாப்கின் தொங்கியது. கழுவியதும் கை துடைத்து கொண்டான்.

"வீடு ரொம்பத் துப்புரவா இருக்கு. பர்ஃபெக்ட்லி க்ளீன்."

அவள் நாணத்தோடு சிரித்தாள்.

"தாங்க்யூ"

நாற்காலியில் அவன் வந்து உட்கார்ந்தான்.

"சிவா.. இனி வேலை தேடவேண்டாம். எழுதணும். அற்புதமாய்.. உன்னதமாய் எழுதணும்"

அவன் அவளை வரம் வழங்கும் தேவதையைப் பார்ப்பது போல் நோக்கினான்.

"ஜீவிதம் அநித்தியமாணு. ஒவ்வொரு நிமிஷமும் அநித்தியமாணு."

அழகும் ஆரோக்கியமும் இளமையும் பொலிந்து நின்ற அவளிடமிருந்து இந்த வாக்கு வருவது அதிசயமாக இருந்தது.

அவன் பிரீதாவையே உற்றுப் பார்த்தான். அவள் மலையாளத்தில் சொல்லிக் கொண்டே போனாள்.

"ஆனால் இந்த வாழ்க்கையின் மீது நீ நேசம் வைத்தால் அது நிலைத்து நிற்கும். அதற்கு அர்த்தமுண்டு. இந்த ஜனங்கள் மீது நீ அன்பு வைத்தால் நீ காவியங்களைப் படைக்கலாம்..."

சிவாவின் கண்களுக்குள் ஊடுருவியது போன்று அவள் பேசினாள்.

"ஆனா அந்த அன்பு பரிசுத்தமா இருக்கணும். லவ் ஃபர் லவ் ஸேக்"

சிவாவுக்கு இன்னும் சற்று நேரம் அங்கே உட்கார்ந்திருக்க வேண்டும் போல் தோன்றிற்று. ஆனால் அதிக நேரம் இருந்து விட்டோம் என்று நினைத்தான். உடனே விடை பெற்றுக் கொண்டான்.

## 4

**சி**வா வீட்டுக்குத் திரும்பிய போது தெரு முனையிலேயே திஷ்யா கதையைப் படித்திருப்பாள் என்று நினைத்தான்.

அவளைப் பார்க்க வேண்டும் என்று மனசு துடித்தது. படி ஏறி வரும்போதே அவர்கள் வீட்டில் கூச்சலும் கும்மாளமும் கேட்டன.



எதிர்ப்பட்ட சீதாவிடம் விசாரித்தான்.

"பெங்களூர் அத்தை வந்திருக்காங்க"

அவனுக்குத் தபாலில் 'நந்தவனம்' வந்திருந்தது.

இரண்டு நாட்கள் தன் மகிழ்ச்சியின் எதிரொலியை திஷ்யாவிடம் கண்டு அனுபவிக்க அவன் தவித்துப் போனான்.

அதற்கு நேரம் வாய்க்கவில்லை. குழந்தைகளும் பெரியவர்களுமாக பெங்களூர் அத்தையையே சுற்றினார்கள். திஷ்யாவோடு தனித்துப் பேச வசதிப் படவில்லை.

அந்த பெங்களூர் அத்தையிடம் அவனை திஷ்யா அறிமுகம் செய்த போது எழுத்தாளர் என்று கூடச் சொன்னாள். அவன் கதை வந்த 'நந்நவனம்' இதழை அத்தையிடம் காட்டினாள்.

எனினும் அந்த மகிழ்ச்சி அதன் முதல் கிளர்ச்சி எல்லாம் சூபர் எக்ஸ்பிரஸில் கடந்து செல்லப்பட்ட சின்ன ஸ்டேஷன் மாதிரி புறக்கணிக்கப்பட்டு விட்டது.

அந்த இரண்டு நாட்களிலும் அவனுக்குத் தான் மாப்பிள்ளையோ தலைவரோ ஆன ஒரு சுயதிருப்தி. அம்மாவுக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டான்.

தாமு இல்லாததால் சமையலில் விமரிசை செய்து கொள்ளத் தோன்றவில்லை. மீண்டும் ஒரு முறை பிரீதாவைப் பார்க்கலாமா என்று யோசித்தான். பஸ் ஏறி எலியட்ஸ் ரோடில் அந்த ஸ்டாப்பிங்கில் இறங்கினான்.

திடீரென்று மனசு மாறி மைலாப்பூர் பீச்சுக்கு அங்கிருந்து நடந்தான். லைட் ஹவுஸின் மீது ஏறினான். கட்டு மரமும் கயிற்றுச் சுருணையையும் காவல் காத்த கரையோரத் தனிமையில் பொங்கி வந்த அலைகளில் தன் குதூகலத்தைக் கரைத்தான்.

நிலா உதித்தது.

வெளிர் நீலக் கடல் கறுத்தது.

அப்புறம் பாதரசம் கொட்டிய மாதிரி கடற் பரப்பு பளபளத்தது.

ஆங்காங்கே வெள்ளைக் குதிரைகள் நுரைத்துக் கொண்டு உதறிச் சிலுப்பி மேலெழுந்தன.

அந்த அலைகளில் பிரீதாவின் வாக்கு கேட்டது.

"எப்படி வாழ்ந்தாலும் அது நிலையற்றது தான்"

சிவா அலை முழக்கத்தை உற்றுக் கவனித்தான்.

ஒரு வழக்கை ஆர்ப்பரித்துக் கொண்டே அலைகள் அவனிடம் சொல்ல வந்தன.

அவன் உற்றுக் கேட்டான்.

ஜனனம். மரணம். உதயம். அஸ்தமனம். எழுச்சி. வீழ்ச்சி; முடிவற்றது. முடிவற்றது.

பெரிய அலை ஒன்று சீறிக் கொண்டு வந்து அவன் பாதம் வரைவந்து நனைக்காமல் பின் வாங்கிற்று.

அவன் பார்வை தொட்ட நடுக்கடல் விளிம்பில் லட்ச தீபம் ஏற்றிய மாதிரி ஒளிப் பாலம் மிதந்தது.

அங்கே நிர்ச்சலனம்.

கண்ணுக்குத் தெரியவில்லை. போனவர்கள் சொல்லக் கேட்டு மனசு கற்பித்தது.

உற்று அலைகள் பேசுவதை சிவா கேட்டான். நடுக்கடல்.

எங்கும் அமைதி இருக்க முடியாது. அங்கேயும் அமைதி போல் தென்படும் ஓர் இயக்கம்தான் இருக்குமோ?



இயங்கு, இயங்கு எழுந்து வீழ்ந்து உதித்து அஸ்தமித்து, பிறந்து மரித்து இயங்கிக் கொண்டே இரு. கரை கடக்க முயன்று கொண்டே இரு.

சிவா யோசித்தான். கரை... எது கரை? எங்கே கரை?

எட்டு மணிக்கு வீடு திரும்பியபோது சிவா பத முற்றிருந்தான்.

வெளியே ஒரு கார் நின்றிருந்தது. டோயோடா.

வாசலில் தெருப்பக்கத்துப் போர்ஷன்காரர் அறைக் குள்ளிருந்து வெளியே வந்தார்.

"ஒங்களைத் தேடிட்டு யாரோ வந்திருக்காங்க"

"யார்?"

"ஒரு யங்மேன். மேலே இருக்கார்"

சிவா அவசரமாகப் படியேறினான்.

நேர் எதிரே கூடத்தில் எரிந்த விளக்கொளியில் நாற்காலியில் உட்கார்ந்திருக்கும், வெற்றிவேல் தெரிந்தான். அவன் கையில் 'நந்தவனம்.'

உயரமாக நிமிர்ந்த முதுகோடு வெற்றிவேல் உட்கார்ந்திருப்பது வினோதமாயிருந்தது.

ஒரு குங்ஃபூ சாம்பியன் மாதிரி...சேச்சே...ஒரு புத்தபிட்சு மாதிரி. ஊஹூம்... ஒரு யோகி மாதிரி... கரெக்ட்...

உட்கார்ந்திருக்கிற வெற்றிவேலுக்குத் தலைப்பாகை கட்டி விட்டால் அவன் அசப்பில் விவேகானந்தர் மாதிரி இருப்பான்.

காலடி ஓசை கேட்டு அவன் நிமிர்ந்தான்.

மின் சக்தி பாயும் கண்கள்.

"எங்கே போயிருந்தே?"

"எப்போ வந்தே?"

"ஒரு மணி நேரம் ஆச்சு"

ஒருவரை ஒருவர் புன்னகையோடு பார்த்துக் கொண்டார்கள்.

வெற்றிவேல் உட்கார்ந்து கொண்டே கை நீட்டினான். சிவாவின் கரம் அதைச் சந்தித்தது. ஒரு குலுக்குக் குலுக்கியதுமே உடம்பில் உரம் ஏறிற்று. தான் பாதி பிரிந்து மீண்டும் வந்து இணைந்த பலம்.

"எதற்கு?" என்று கேட்டான் சிவா.

"இதற்கு" என்று தன் கையிலிருந்த 'நந்தவனத்'தை உயர்த்திக் காட்டினான் வெற்றிவேல்.

"என்னை ரொம்ப காக்க வச்சுட்டே!" என்று கையை விடுவித்துக் கொண்டே குற்றம் சாட்டினான்.

"நீ வருவேண்ணு தெரியுமா என்ன?"

"இதைச் சொல்லலே. உங்கிட்டே இருந்து தபாலை எதிர் பார்த்தேன்!"

"எந்த விலாசத்துக்கு எழுதட்டும்? நீ தான் ஆறு மாசத்துக்கு ஒரு தரம் ஊருக்குப் போறியே!"

அவன் கிண்டலாக சிவாவைப் பார்த்தான்.

"அது பாதி உண்மைதான் இல்லியா?"

அவனிடம் இவனும் இவனிடம் அவனும் உண்மையை ஒளிக்க முடியாது.

உதட்டை மூடிக்கொண்டு சிவா மெதுவாகத் தலையை அசைத்தான்.

"நீ எங்கே போய்ட்டே சிவா.. இவர் வந்து ரொம்ப நேரமா வெய்ட் பண்ணிகிட்டிருக்காரே" என்று கையில் இரண்டு ஷர்பத் டம்ளருடன் வந்தாள் திஷ்யா.

"பீச்சுக்குப் போயிருந்தேன்."



டம்ளரைக் கொடுத்து விட்டு உள்ளே போனவள் வெற்றிவேல் மறைகிற மாதிரி சுவர் ஓரம் போய் நின்று கையை அசைத்து அவனைக் கூப்பிட்டாள் திஷ்யா.

அவன் டம்ளருடன் அவளருகில் போனான்.

"சப்பாத்தி பண்ணிகிட்டிருக்கேன். ரெண்டு பேரும் இங்கேயே சாப்பிடுங்க"

"இரு.. கேட்டுச் சொல்றேன்"

சிவா வெற்றிவேலிடம் வந்தான்.

"சாப்பிடுவோமா?"

ஷர்பத்தைக் குனிந்து ஒரு முறை பார்த்து விட்டு ஒரே மூச்சில் குடித்து விட்டு டம்ளரை கைப்பிடிச் சுவரின் மீது வைத்தான் வெற்றிவேல்.

"நோ.. நாம டெங்கனிக்கோட்டா போறோம்."

"எப்ப.."

"இப்போ.."

"இப்பவேவா?.."

"ஏன்.. எதாவது வேலையிருக்கா?"

"இல்லே.." அவன் இழுத்தான்.

"ஸால்வ் தி ப்ராப்ளம்" என்று திஷ்யாவிற்குக் கேட்காத மாதிரி அவள் நிற்கிற திசைக்குத் தலையைத் திருப்பிக் காட்டினான் வெற்றிவேல்.

தன் ஷர்பத்தைக் குடித்து விட்டு சிவா திஷ்யாவிடம் போனான்.

"ஸாரி...திஷ்யா... நாங்க அவசரமா டெங்கனிக் கோட்டா போறோம்.."

"எப்ப வருவே?" அவள் கண்களில் ஒரு புதிய உணர்வைக் கண்டான் சிவா.

ஏக்கம்!

அந்நியமானது, அவளுக்கு, அவனிடம் அவளுக்கு.

"தெரியலியே.. இரு கேட்டு.." இழுத்தான்

அவன் நாக்கைக் கடித்தான்.

வெற்றிவேலைக் கேட்டு அவளிடம் திரும்பி வருகிற நாளைச் சொல்ல நினைத்த தன் அசட்டுத்தனத்தை எண்ணி அவன் கண்ணை மூடிச் சிரித்தான்.

அந்தச் சிறிய கணத்தில் அவர்கள் இருவருக்குமிடையே இருந்த மானசீக இடைவெளி சட்டென்று குறைந்ததை அவன் உணர்ந்தான்.

வெளியே வெற்றிவேல் காத்திருக்கிறான். சிவா வந்தான்.

"சரி...கிளம்பு... நான் ஏதாவது டிரஸ் எடுத்துக் கணுமா?"

"வேண்டாம்..."

"எத்தனை நாள் அங்கே இருப்போம்?"

"ரெண்டு நாள். நாளை மறுநாள் ஒன்னைக் கொண்டு வந்து இங்கே விட்டுடறேன்"

திஷ்யாவுக்குக் கேட்டிருக்கும். கேட்க வேண்டும் என்று உரக்கச் சொன்னானோ?

வெற்றிவேல் எழுந்தான்.

"ஒரு லுங்கியாவது எடுத்துக்கறேனே.."

"லுங்கி.. பனியன், வேஷ்டி சட்டை எல்லாம் காரிலே ரெடியா இருக்கு. கௌம்பு"

மறு வார்த்தை பேசாமல் காத்திருந்த திஷ்யாவுக்கு சிறிதாகத் தலையசைத்து விட்டு வெற்றிவேலின் பின்னால் படியிறங்கினான் சிவா.



காரில் உட்கார்ந்து கதவைச் சாத்தும் போது அது மூடும் ஓசை கூட மெல்லத்தான் வந்தது. சொன்ன சொல்லைக் கேட்கிற மாதிரி கார் ஸ்டார்ட் செய்ததும் புறப்பட்டது.

பின்னால் பார்த்து விட்டு ரிவர்ஸ் எடுத்தான் வெற்றிவேல்.

சந்து திரும்பி சாலை வந்ததும் பேச்சை ஆரம்பித்தான்.

"என்னடா?"

"சொல்லுடா"

"தேசியப் பொழுதுபோக்கில் ஈடுபட்டிருக்கியா?"

வெற்றிவேல் குத்தலாகக் கேட்டான்.

"எதைச் சொல்றே.. வேலை தேடறதையா?"

"இல்லே. 'லவ்' பண்றதை"

"ஓ... அந்தப் பொண்ணை வச்சு சொல்றியா? டோண்ட் பி ஜெலஸ், அது சும்மா பரிச்சயம்"

"ஒரு நண்பனை காதலி முதலில் பங்கு போடறா. அப்புறம் முழுசா கபளீகரம் பண்ணிடறா.."

"எனக்கு இன்னும் அனுபவமில்லே"

"நம்பறேன். உன் நந்தவனம் கதை.." என்று வெற்றிவேல் இடது கைப் பெருவிரலை உயர்த்திக் காட்டினான்.

சிவாவுக்கு மார்பு விம்மிற்று.

"ஆனா எனக்கு வருத்தமா இருந்தது"

"ஏன்.."

"ஹீரோயிஸம் இல்லாத ஹீரோ. இன்னிக்கு ஓடிட்டிருக்கிற லட்சியம் இல்லாத வாழ்க்கை மாதிரி.."

வெற்றிவேல் ஒரு சைக்கிள்காரருக்கு ஹார்ன் செய்தான்.

"எதிர்மறையா அணுகியிருக்கேன். ஹீரோயிஸம்—நீ சொல்றியே அந்த லட்சியம், அது குற்றுயிரா இருக்குண்ணு காட்டியிருக்கேன்."

"எதிர்மறை எதிர்மறையைத் தான் தோற்றுவிக்கும்."

"இங்கே எதுவும் எதையும் தோற்றுவிக்காது. ஓயாமே குடுமிபிடிச் சண்டை நடக்கும். ஒரு விஷயம் கிடைச்சா கொஞ்ச காலம் வெறும் பேச்சுப் பேசுவாங்க. அப்புறம் சென்ஷேனலா வேற ஏதாவது கெடைக்குமானா அதை விட்டு நகந்துடுவாங்க."

"ஊருக்குப் போயிருந்தேன். நண்பர்களைப் பாத்தேன் எல்லாரும் ஒன் கதைண்ணு தெரிஞ்சுகிட்டாங்க."

"என்ன சொன்னாங்க? ' சிவா ஆவலோடு கேட்டான்.

"டர்ஜனீவ் மாதிரி இல்லேண்ணா ஒருத்தன். டால்ஸ்டாய் மாதிரி இல்லேண்ணா இன்னொருத்தன். புதுமைப் பித்தன் 'பவர்' இல்லேண்ணான் வேற ஒருத்தன்."

"நீ என்ன சொன்னே?"

"நன்றி சொன்னேன். அத மாதிரி இது மாதிரிண்ணு சொன்னா அவமானப்படுத்தற முயற்சி. இது பரவால்லே. நீ ஒன் மாதிரி எழுதியிருக்கேண்ணு மறைமுகமான சர்ட்பிகேட்."

சிவாவுக்கு வருத்தமாக இருந்தது.

"ஸோ...தே டோன்ட் லைக் இட்!"

"யூ டோன்ட் பாதர்... ஒனக்குப் புடிச்சிருக்கு இல்லே, எழுது."

"என் அம்மாவைப் பார்த்தியா?"

"உன் அப்பாவைப் பார்த்தேன்."



சிவா நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"எங்கே?"

"டெங்கனிகோட்டா பக்கத்திலே. அண்செட்டி என்கிற சின்ன ஊரிலே. ஒரு சிவன் கோயில்லே. நேத்து வரிக்கும் அங்கே தான் இருந்தார்... அவருக்கு என்னை அடையாளம் தெரியலே...நான் புரிஞ்சு கிட்டேன். ஒடனே ஒனக்குத் தெரிவிக்கணும்னு... நோ ஒன்னைக் கூட்டிட்டுப் போயி காட்டணும்னு தோணிச்சு."

"தாங்க் யூ..." என்று அவன் தோளைத் தொட்டான் சிவா. அவனுக்கு உடம்பு சிலிர்த்தது.

"எப்படி இருக்கார்?"

"பெரிய ரிஷி மாதிரி தாடி வச்சிருக்கார். தலை நரைச்சு தாடி நரைச்சுப் போயிருக்கு... மீதி எல்லாம் நேரிலே பார்."

வெற்றிவேல் ஒரு பெரிய அசைவ ஹோட்டல் எதிரே காரை அதற்காக அனுமதித்திருந்த இடத்தில் நிறுத்தினான்.

அது அசைவம் என்று தெரிந்தும் வெற்றிவேலுக்காக சிவா ஆட்சேபிக்கவில்லை.

"கார் வாங்கினயா வெற்றி?"

"இல்லே... ஒரு பந்தயத்திலே ஜெயிச்சேன்."

'பந்தயமா?"

"ஆமா..." அவன் கதவை மூடிப் பூட்டிக்கொண்டே சொன்னான்.

"அண்செட்டியிலிருந்து பெங்களூர் போற ரோட்டிலே என் மோட்டார் பைக்லே இந்தக் காரை ஓவர்டேக் பண்ண முடியாதுண்ணு ஒரு கோடீஸ்வரன்

சொன்னான்.. இந்தக் காரே பந்தயம்னு கட்டினான். தட் வாஸ் எ சாலஞ்ச்..ஜெயிச்சுட்டேன்."

"காரை எப்படி வாங்கிக்கிட்டே? இது ஒன்னாலே முடியாதே!"

வெற்றிவேல் கம்பீரமாகப் புன்முறுவல் செய்தான்.

"யூ ஆர் கரெக்ட்... இதை எவன் எடுத்துக்கப் போறான்? ஆனா அந்தக் கோடீஸ்வரனுக்கு இது ரொம்ப அற்ப விஷயம்.. அவன் ஒரு அமெரிக்கன். டெட்ராயிட்லே மோட்டார் கம்பெனி மானேஜிங் டைரக்டராம். கேம் ஈஸ் எ கேம்னு சொன்னான்."

இருவரும் சாலையைக் கடந்து கொண்டே பேசிச் சென்றனர்.

"போட்டி, யந்திரத்துக்கும் மனுஷனுக்கும் தான், பரிசுக்காக இல்லேண்ணு சொன்னேன். யூ... ப்ரீக்னு சொன்னான். ஆல் ரைட்... இதை நான் ஜெயிச்சேண்ணு ஓர் அடையாளத்துக்காக மெட்ராஸுக்கு எடுத்துட்டுப் போறேன், ஒரே ஒரு ட்ரிப் மட்டும். அப்புறம் திருப்பி எடுத்துக்கோண்ணு சொல்லிக் கொண்டு வந்திருக்கேன்..."

அவர்கள் ஹோட்டலிற்குள் நுழைந்து கையலம்பினர்.

வெயிட்டர் வந்ததும் வெற்றிவேல் ஆர்டர் சொன்னான்.

"ரெண்டு தந்தூரி சிக்கன்..."

வெற்றிவேலை சிவா இடைமறித்தான்.

"ஒரு தந்தூரி சிக்கன். ஒரு ப்ரெட் பட்டர் ஜாம்."

"மறந்துட்டேண்டா சிவா... நீ இருக்கறப்ப இந்த கசாப்புக் கடைக்கு வந்திருக்க வேண்டாம்."



"இட்ஸ் ஆல் ரைட்... நீ எழாதே உட்கார்"

வெயிட்டர் ஆர்டர் எழுதிக்கொண்டு போனான்.

இருவரும் காத்திருக்கும் வேளையில் வெற்றிவேல் ஒரு கேள்வி போட்டான்.

"வேலை கெடைச்சிருச்சா?"

"கெடைச்சிருந்தா சொல்லியிருப்பேன்."

## 5

**ஹோ**ட்டலை விட்டு வெளியேறி காரை நிறுத்தியிருந்த இடத்திற்கு வந்தனர்.

வெற்றிவேல் கார்ச் சாவியை சிவாவிடம் நீட்டிய வாறே கேட்டான்.

"காரை ஓட்டிப்பாக்கறியா?"

"ஏன்?"

"ஒரு டோயோடா எப்படி இருக்குண்ணு ஓட்டி அனுப்வி. நீயும் நானும் ஒரு ஓட்டை பியட்லே டிரைவிங் கத்துகிட்டோம். இப்ப இது எப்படிண்ணு அனுபவி"

சிவா சிரித்தான்.

"எல்லாக் காரும் ஒரு கார் தானே, இது அது மாதிரி ஒரு எக்ஸ்பீரியன்ஸ். லெட் இட் பி. எனக்கு வேண்டாம். ஒரு மூன்றாம் நபரின் வாகனம்"

சாவியை வெற்றிவேல் அவன் கையில் திணித்தான்.

"மஹாபுருஷரே... அட் எ ஸ்ட்ரெச் ஓட்டிட்டு வந்ததிலே என் காலும் கையும் வலிக்கிறது. தாங்கள் ஓட்டி வருவீர்களாக"

"அதை மொதல்லே சொல்லி இருக்கலாமேடா"

வண்டி சீறிக்கொண்டு சிக்னல் வழங்கிய சுதந்திரத்தில் பறந்தது.

"மெட்ராஸிலே என்ன செய்யறே சிவா?"

"சமையல் செய்யறேன். வேலை தேடறேன். கதை எழுதறேன்"

"சமையல்?"

"ஆமா... நீ வந்தியே அந்த ராயப்பேட்டா வீட்டிலே சமையல் வேலை செய்யறேன்!"

"யார்" என்று கூவினான் வெற்றிவேல். அவனுக்கு அதிர்ச்சி தாளவில்லை. "யாருக்கு?"

"ஒரு மாஜி ஜமீந்தார் பிள்ளையான மோட்டார் மெக்கானிக்குக்கு"

"ஓ... நம்ம மாதிரி அவனும் ஒரு ஃப்ரீக்கோ?"

"ஃப்ரீக் இல்லே, ஒரு கனவான், ஃப்யூடல் மிச்ச சொச்சம்."

"அப்ப உனக்கு ஒரு ஹீரோ கெடைச்சாச்சு?"

ஒரு 'பல்லவன்' பஸ்ஸுக்கு முந்திச் செல்ல வழி விட்டான் சிவா.

"நமது ஹீரோ 1948 ஜனவரி 30—ல் சுட்டுக் கொல்லப் பட்டார் வெற்றிவேல். நாம பொறக்கறதுக்கு முன்னாடியே இட் வாஸ் ஓவர். நாம ஹீரோவைத் தேடிக்கிட்டிருக்கோம் இன்னும்... இன்னும்"

வெற்றிவேல் அதற்கு இசைவு தெரிவிப்பது போல் வாய்க்குள் சிரித்தான்.

"எப்படி இந்த வேலை கெடைச்சுது?"



"ஜஸ்ட் ஒரு வேலை கேட்க அங்கே அந்த ஆட்டோ ஒர்க்ஷாப்புக்குப் போனேன். இங்கே எந்த வேலையும் காலியில்லே. எங்க வீட்டிலே என் சமையல்காரன் ஓடிட்டான். அந்த வேலை காலியாயிருக்குன்னு அவர் கிண்டலா சொன்னார்."

"வயசானவரோ"

"இல்லே...நம்மை விட மூணு நாலு வயது அதிகம். ஆனா அந்த மரியாதைக்கு உரியவர்"

"மேலே சொல்லு"

"என் சமையலைப் பார்த்துட்டு அப்பாயிண்ட் மெண்ட் குடுங்கண்ணேன். ஐம் ஸாரி; நீ ஒரு கிராஜுவேட்னார். சமையல்லே வித்தியாசம் இருக்காதுண்ணு சொன்னேன். ஹி லைக்ட் தட் ரிப்ளை. டெங்கனிக் கோட்டா எங்கே இருக்கு?"

"ஹோசூர் போய் கட் பண்ணணும்?"

"பெங்களூர் ரூட்..."

"ஆமாம்... நீ உங்க முதலாளி கிட்டே லீவ் சொல்லிட்டு வர்லியே..."

"வெற்றி... அவர் முதலாளி இல்லே. நண்பராயிட்டார். தாமு ஊரிலே இல்லே. வந்தாலும்... அட்டே அவங்க அப்பா ஸீரியஸ்ணு போயிருக்கார். நான் ஏதாவது நடந்துட்டா மதனபள்ளி போகணும்... அண்செட்டியிலே எஸ்.டி.டி. பண்ண முடியுமா?"

"ஓ... எஸ்"

நகர எல்லையைக் கடக்கும் வரை வெற்றிவேல் பேசவில்லை.

சிவாவுக்கும் காரைத் தொட்டு நெடுநாட்களானதால் நெடுஞ்சாலைப் போக்குவரத்து அவனது கவனத்தை அதிகம் கோரியது.

இடையிடையே அவனுடைய தந்தை கைலாசம் கவனத்தில் வந்து வந்து போனார்.

என்ன விசித்திரமான பயணம் இது!

பத்து வருஷத்துக்கு முன் வீட்டை விட்டு வெளியேறிய தந்தையை, எங்கோ முகம் தெரியாத சிற்றூரில் ஒரு மகன் சந்திக்க அவன் நண்பன் ஏற்பாடு செய்திருக்கும் பயணம்.

இரண்டு நாட்களுக்கு முன் அவரைச் சந்திக்கும் வேட்கை வந்ததை நினைத்தான்.

இவ்வளவு சீக்கிரம் அது இப்படி நிறைவேறி விடுமா? இன்னும் அவனுக்கு நம்பிக்கை வரவில்லை.

தன் தந்தையைத் தான் சந்திக்க வேண்டும் என்று வெற்றிவேலுக்கு ஏன் தோன்றியது?

எதிரில் வந்த லாரி ஒன்றிற்கு டிம்..டிப் என்று ஹெட் லைட்டில் சிக்னல் காட்டிக் கொண்டே யோசித்தான் சிவா.

அப்பாவுக்கு விசாலமான முதுகு. திண்ணையில் உட்கார்ந்து அடிக்கடி முதுகு தேய்க்கச் சொல்வார்.

அவர் வலது தோள் பட்டையில் புளியங்கொட்டை அளவு உருண்டு திரண்ட ஒரு கறுப்பு மச்சம் உண்டு.

முதுகு தேய்க்கும் போதெல்லாம் செவேலென்று விரிந்த அந்த முதுகில் கண் முளைத்த மாதிரி நிற்கும் அந்த மச்சத்தை சிவா தடவிப்பார்ப்பான்.

"டேய், டேய்..கூச்சமாய் இருக்குடா" என்று அவர் நெளிவார். சிவா கிளுகிளுவென்று சிரிப்பான்.

அவனுக்கு எட்டு வயதான போதிருந்து அவனைச் சைக்கிளில் பின்னால் உட்கார வைத்துக் கொண்டு வெங்களாபுரம் சுடுகாடு தாண்டி ஒரு பம்ப் ஷெட்டுக்குக் குளிக்கக் கூப்பிட்டுச் செல்வார்.



"பச்சத் தண்ணி ஊத்தி ஊத்தி புள்ளைக்கு ஜன்னி வரவக்கப் போறீங்க" என்று அடிக்கடி ஆட்சேபிப்பாள் அம்மா.

'தாட்சாயணி.. சுடு தண்ணி ஊத்தி வளத்தா பையன் சீக்காளியாய் போயிடுவான்!"

சனிக்கிழமையில் ஒரு புட்டியில் நல்லெண்ணெய் ஒரு டப்பாவில் சீயக்காப்பொடி.

தலைக்கு எண்ணெய் தேய்த்து விட்டு கண்ணுக்கு விட்டுக் கொண்டால் ஒரு கதை. அழாமல் சீயக்காய் தேய்த்துக் கொண்டால் ஒரு கதை. சைக்கிளில் வரும் போது ஒரு கதை.. எத்தனை கதைகள்!

சிவாவுக்கு பளிச்சென்று கூரைச் சந்திலிருந்து ஒரு வெளிச்சக் கற்றை வீட்டில் விழுந்த போது அதை ஒரு கண்ணாடிச் சில்லில் பிரதிபலிக்கச் செய்து வீடு முழுதும் அவற்றில் அதை அவன் ஓடிப்பிடிக்க வைத்த நிகழ்ச்சி ஞாபகம் வந்தது.

அப்பா எதற்காக வீட்டை விட்டுப் போனீர்கள்?

எல்லாரும் சொல்வது போல் ஒரு ஜடாமுடிச் சாமியாரா உங்களை அழைத்துச் சென்று விட்டார்?

சிவா தனக்குள் கேட்டுக் கொண்டான். அவரைக் கேட்கப்போகிற கேள்வி அது தான்.

அதைக் கேட்க முடியுமா?

திடீரென்று மௌனம் கலைந்து சிவா வெற்றிவேலைப் பார்த்து "என்ன சைலன்ஸ் ஆயிட்டே?" என்றான்.

"யாரு?"

"ஓ... நாந்தாண்ணு சொல்றியா"

"ரெண்டு பேரும் தான். ரொம்ப நாள் கழிச்சு பிரிஞ்ச சேர்ந்தா மௌனம் ரொம்ப நெருக்கமா இருக்கு"

"அப்பா கிட்டே நீ பேசினயா?"

"உம்ம்..."

"என்ன சொன்னார்... அம்மாவைப்பத்தி, என்னைப் பத்தி ஏதாவது விசாரிச்சாரா?"

"அமிஞ்சிகரை தாண்டியிருப்பமா?"

"ஓ..."

"வண்டியை ஓரமா நிறுத்து. எனக்கு ஒண்ணுக்குப் போகணும்."

வண்டியை ஓரமாய் நிறுத்தினான் சிவா.

டாஷ் போர்டிலிருந்து ஒரு சிகரெட் பாக்கெட்டை யும் தீப்பெட்டியையும் எடுத்துக் கொண்டு சாலையோரம் ஒரு மூலைக்குப் போனான் வெற்றிவேல்.

தீக்குச்சி வெளிச்சம் சிகரெட்டை வாயில் பொருத்திய அவன் முகத்தில் செஞ்சுடராக விழுந்தது. அவன் சிறு நீர் கழித்து விட்டுத் திரும்பி வந்தான்.

சிகரெட் புகை மணந்தது.

"இப்ப நான் ஏன் வேலை வெட்டியை எல்லாம் விட்டு விட்டு உன்னைத் தேடி வந்தேன் தெரியுமா?" என்று கூறி விட்டு சிகரெட் சாம்பலைச் சொடுக்கினான்.

"வேலை வெட்டியா... அப்படி ஒண்ணு உனக்கு இருக்கா?"

சிகரெட்டை ஆழ்ந்து உறிஞ்சி நிமிர்ந்த வெற்றிவேல் முகத்தில் எதிரில் வந்த காரின் ஹெட்லைட் வெளிச்சம் விழுந்தது. சிவாவின் குத்தலை அவன் ரசித்துச் சிரிப்பது தெரிந்தது.



"சிவா... நாம தேடுவதை... ஐ மீன் நான் தேடுவதை உனது தகப்பனார் அடைஞ்சுட்டார்னு நெனைக்கிறேன்..."

வெற்றிவேலின் குரலில் ஓர் உண்மை ஒலித்தது. சிவா தெளிவாகப் புரிந்து கொள்ள விரும்பினான்.

"ஒவ்வொரு வயசிலேயும் நாம ஒவ்வொண்ணைத் தேடினோம்... நீ எதைச் சொல்றே?"

சிகரெட்டைக் கீழே போட்டு மிதித்தான் வெற்றிவேல்.

"நம் மீது... நம் மனசின் மீது ஒரு வெற்றி"

"மனசு உள்ள வரை... அதன் மீது வெற்றி இல்லையடா வெற்றி"

"அவர் அதைச் சாதிச்சிருக்கார்னு நெனக்கிறேன்."

"வெற்றிவேல்... நீ ஞானிகளைப் பற்றி பேசறே... எனக்கு ஞானம் வேண்டாம். ஒரு வேலை வேண்டும்... எங்கம்மாவின் ஓயாத உழைப்பிலிருந்து ஒரு விடுதலை வேண்டும்... அவளை அந்த நிலைக்கு ஆளாக்கிய மனிதனிடம் சில கேள்விகள் கேட்க வேண்டும்"

"எந்தக் கேள்வியை வேணும்னாலும் கேளு. ஆனா அவரை வேலை கேட்காதே..."

சிவா மௌனமாயிருந்தான்.

"வேலை...வேலை...நீ எதுக்குடா படிச்சே? ஏண்டா கிராஜுவேட் ஆனே... உன் தன்னம்பிக்கையை இழந்துட்டு எவனோ கொடுக்கப் போற ஒரு ஃபில்தி வேலைக்கு சலாம் போடவா?"

"உன் கோபத்தைப் பார்த்து ரொம்ப நாளாச்சு"

"இதுவும் கோபமில்லே..."

"பொறப்படலாமா... நாம ரொம்ப தூரம் போகணும்"

"சரி"

காரில் அமர்ந்தனர். வண்டி சிறிது தூரம் ஓடியபின் சிவா கேட்டான்.

"அப்பா என்ன சொன்னார்?"

"நீ மொதல்லே கேட்டதை மறந்துட்டேண்ணு நெனச்சுட்டியா... இவ்வளவு நேரம் நான் சொன்னதெல்லாம் அதற்குப் பதில்தான்"

சிவா மௌனமானான்.

"நான் ரிஷிகேஷிலிருந்து வர்றேன். அவர் ஒங்க அப்பா கைலாச கவுண்டர் இல்லே. பாபா ஓம்கார்நாத். அவரோடே தான் ஆறு நாளா தங்கியிருந்தேன்... அந்த அமெரிக்கன், அவர், நான், மூணு பேரும் அண்செட்டி வந்தோம்"

சிவாவுக்கு முதன் முறையாக வெற்றிவேலுக்கு எங்கோ மறை கழன்று விட்டது என்ற சந்தேகம் வந்தது. அட்வென்சர்... அட்வென்சர் என்று தேடித் திரிகிறவனிடத்தில் எங்கேயாவது ஒரு வழுக்கலில் அது நேர்ந்து விடுவது சாத்தியம் என்று நினைத்தான்.

"ஸோ...எங்க அப்பா நாட்டிலுள்ள பாபாக்களில் இன்னொரு பாபாவாய்ட்டார்னு சொல்லு"

வெற்றிவேல் பெருமூச்சு விட்டான்.

"அண்ட்... நீ அவருடைய சிஷ்யன் ஆய்ட்டே"

"தப்பு... அவர் குருவென்று தன்னைச் சொல்லிக் கொள்ளவில்லை. சிஷ்யன் என்று எவனையும் ஏற்கவில்லை"



"ஆனா அவர்தான் ஒனக்கு ஒன் மீது வெற்றியைக் கண்டுபிடிக்கச் சொல்லிக் கொடுத்தார்-இல்லியா?

"அவர் சுட்டிக்காட்டினார். நான் கண்டுபிடிச்சேன்"

'உன் மீது நீ எப்போதும் வெற்றி பெற்றுத்தான் வருகிறாய். திடீரென்று எதுவும் நேர்ந்துவிட வில்லை. நேராது' என்று வெற்றிவேலுக்குச் சொல்ல நினைத்தான்.

சொல்ல வில்லை.

வெற்றிவேல் நேரடி அனுபவத்தை நம்புகிறவன். ஒரு வேளை அவன் அனுபவித்திருக்கலாம்.

"வேற பெர்ஸனலா எதுவும் கேக்கலியா நீ?"

தனக்குள் லயித்துச் சிரிப்பவன் போன்று வெற்றிவேல் வாய்க்குள் நகைத்தான்.

"அவர் கிட்டே பெர்ஸனல்...இம்பெர்ஸனல் எதுவும் தோணாது. அவர் மொழியே நெடிய மௌனம். ஒரு நாளைக்கு அவர் ரொம்ப அதிகமாப் பேசினா பத்து வார்த்தைகள் தான் பேசுவார்"

"பேசாதவரிடம் நீ ஏண்டா என்னைக் கூட்டிட்டுப் போறே?"

"மகனே, உன் தந்தையை சந்தி"

"நீ சொல்கிறவர் என் தந்தை மாதிரி இல்லை. ஏதோ மகான் மாதிரி இருக்கு...மகனுக்கு தந்தை தான் வேண்டும். மகான் வேண்டாம்"

"அதை நீ சந்தித்தபிறகு சொல்."

சிவா ஆக்ஸிலரேட்டரை மிதித்தான், வெகுதூரம் போக வேண்டும்.

# 6

அவர்கள் ஹோசூர் போய்ச் சேர்ந்தபோது இரவு மணி இரண்டு. அங்கிருந்து டெங்கனிக்கோட்டா ஒரு மணி நேரம். அதிலிருந்து அஞ்செட்டி ஒரு மணி.

ஹோசூரில் சாலை ஓரமாக வண்டியை நிறுத்தச் சொன்னான் வெற்றிவேல்.

"எதுக்கு?"

"இனிமே நீ ஓட்டவேண்டாம். ஒனக்கு வழி தெரியாது. நான் ஓட்டறேன்."

"நேத்தெல்லாம் நீ ஓட்டி வந்திருக்கே. களைப்பா இருக்கும். ரெண்டு மணி நேரம் காரிலேயே ரெஸ்ட் எடுப்போம்"

வெற்றிவேல் ஒப்புக்கொண்டான். முன் ஸீட்டில் சிவா படுத்தான். வெற்றிவேல் பின் ஸீட்டு.

வெற்றிவேல் சிவாவை எழுப்பியபோது மணி நாலே கால்.

அஞ்செட்டியை அடைந்தபோது பொழுது நன்கு விடிந்து விட்டது.

"இங்கிருந்து ஒன்றரை மைல். தேவனஹள்ளி என்று ஒரு கிராமம்" என்று வண்டியை அங்கே நிறுத்தாமல் ஓட்டிக் கொண்டே சொன்னான் வெற்றிவேல்.

வெற்றிவேல் வண்டியை நிறுத்திய இடம் ஆடுகளும் எருமைகளும் மேய்ந்து கொண்டிருந்த ஒரு குக்கிராமம், இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் வந்து விட்டது போன்ற உணர்வை அனுபவித்தான் சிவா.

தாழ்ந்து குறுகிய குடிசைகள். புராதனமான ஓட்டு வீடுகள். ஆண்கள் கம்பளி போர்த்தியிருந்தார்கள். அல்லது



பெட்ஷீட் போர்த்தியிருந்தார்கள். பெண்கள்தான் நடமாடினார்கள். முகங்களில் களங்கமற்ற கிராமீயக் களை.

வெற்றிவேலின் பின்னால் நடந்தான் சிவா.

ஓர் ஆறு ஓடிக்கொண்டிருந்தது. இடுப்பளவு தண்ணீர் என்பது ஆற்றைக் கடந்து வருபவர்களைப் பார்த்தால் புரிந்தது.

"இது என்ன ஆறு?"

"சின்னாறு"

தண்ணீர் பளிங்குபோல் தெளிந்திருந்தது.

"குளிக்கலாம் போல இருக்கா"

சிவாவை வெற்றிவேல் கேட்டான்.

"அப்பாவைப் பார்த்துட்டு குளிப்போம்."

ஆற்றின் இக்கரையில் ஓர் ஆலமரம். அக்கரையில் ஒரு சின்ன சிவன் கோயில்.

ஆலமரம் பிரம்மாண்டமாயிருந்தது, மழைக்கும் நிழலுக்கும் அந்த கிராமமே ஒதுங்கலாம் போல்.

தூரத்திலேயே மூன்று பேர் அதன் கீழே உட்கார்ந்திருப்பது தெரிந்தது. செம்பட்டை முடியும் வெளுத்த தோலுமாக ஒரு அமெரிக்கன் – முப்பத்தைந்து வயது மதிக்கலாம். இடப்புறம் கீழ்ப்பாய்ச்சிய வேஷ்டியும் கை வைத்த மல் பனியனும் அதன் மீது ஒரு சால்வையுமாக அறுபது வயது தோன்றும் ஒரு கிராம பெருந்தனக்காரர்.

நடுவில் கைலாச கவுண்டர் சப்பணமிட்டு உட்கார்ந்திருந்தார். நரைத்த தாடி மார்பில் பாதியை மறைத்தது. தோளில் இருபுறமும் நரைத்த சிகை வந்து புரண்டது. மேலே ஆடையில்லை.

இடுப்பில் சாயம் போன ஒரு காவி வேட்டி. அது தான் ஆடை.

"வொட்ரீ வெல்... யூவ் கம் அகின்" என்ற யாங்கி உச்சரிப்பு இருவரையும் வரவேற்றது.

சிவா முதலில் அவனைப் பார்த்தான்.

பழுப்புக் கண்களில் அமெரிக்கப் பரபரப்பு. ஆறடி நீளத்துக்கு தோளிலும் கையிலும் கட்டுக் கட்டாக கட்டாக தசை தெரிய, வேட்டி உடுத்து நின்றான் அவன்.

சிவா தன் தந்தையைப் பார்த்தான்.

பெரிய நெற்றியில் நரைத்த அடர்ந்த புருவங்களில் அபூர்வமான அமைதி நிலவியதை அவன் கவனித்தான்.

பாபா ஓம்கார்நாத் அவனை நிமிர்ந்து பார்த்தார்.

"மீட் மை பிரண்ட் சிவா—"

வெற்றிவேல் ஏதோ மேற்கொண்டு சொல்லப் போனான். சிவா அவனைத் தடுத்தான்.

அவரது கண்கள் சிவாவைச் சந்தித்தன. அவை தெளிந் திருந்தன. குளிர்ந்த பார்வை. எதையும் கோராத, எதையும் விசாரியாத, எங்கும் பந்தப்படாத ஏதோ ஒரு விடுதலையை அந்தப் பார்வையில் சந்தித்தான்.

தொடர்ந்து அவர் புன்முறுவல் செய்தார். ஒரு குழந்தையின் புன்முறுவல். மனசில் காரணமற்ற களிப்பை யும் நிறைவையும் ஏற்படுத்திய புன்முறுவல்.

உங்கள் மனைவி திருப்பத்தூரில் முதலியார் ரைஸ் மில்லில் தவிடு விட்டுக் கொண்டிருக்கிறார் கைலாச கவுண்டரே! உங்கள் மகனாகிய நான் பி.எஸ்ஸி., படித்து விட்டு வேலை தேடிக் கொண்டு ஒரு மெக்கானிக்குக்கு சமைத்துப் போட்டுக் கொண்டிருக்கிறேன்.



எப்படிப் படித்தேன் தெரியுமா?

பேப்பர் போட்டேன். டிம்பர் பாக்டரியில் கணக்கு எழுதினேன். ஒவ்வொரு டெர்ம் பீஸ் கட்டவும் ஏதோ கண்டம் வந்தது போல் திண்டாடினேன்.

வெற்றிவேல் அவர் பக்கத்தில் கை கட்டி நின்றான்.

சிவாவின் மனசிற்குள் கோபங்களும் குறைகளும் அவரோடு மானசீகமாக ஒரு சம்வாதம் தொடங்கின.

அவர் புன்முறுவல் செய்து கொண்டே இருந்தார்.

அது அவன் தந்தை மாதிரியே இல்லை.

நெற்றி மூக்கு வாய் மார்பு எல்லா உறுப்புகளும் கைலாச கவுண்டர்தான்.

அந்தப் புன்னகை... அந்தப் பார்வை... அவை கைலாச கவுண்டர் இல்லை.

"என்னை அடையாளம் தெரியுதா?" என்று சிவா கேட்டான்.

"வோட்ஸ் ஹி ஆஸ்கின்?" அந்த அமெரிக்கன் கேட்டான். வெற்றிவேல் மொழி பெயர்த்தான்.

பாபா ஓம்கார்நாத் இமைகளை ஒரு முறை மூடித் திறந்தார். வெற்றிவேலைத் திரும்பிப் பார்த்தார். பின்பு அந்த அமெரிக்கனை... அடுத்து அந்த பெருந்தனக் காரரை... மீண்டும் சிவாவை. அவருக்குள் எந்த பேதமும் இருப்ப தாகத் தெரியவில்லை.

அலைகடலும் ஓய்ந்த ஒரு நிமிஷத்தில் சாந்தி நிறைந் திருக்கும் ஒரு வேளையில் சந்திரோதயம் ஆனது மாதிரி சிவா ஓர் அகமகிழ்வை அனுபவித்தான்.

எந்தக் கேள்விக்கும் இங்கே அர்த்தமில்லை என்று அவனுக்கே உறைத்தது.

ஆதங்கங்களும் பந்தமும் இவர் முன்னால் அசட்டுத் தனம் என்று தோன்றியது.

"நீங்கள் கைலாச கவுண்டர் தானே?"

அவர் புன்னகை செய்தார். இப்போது அதில் ஒரு சிறிது வேடிக்கை கலந்திருந்தது.

"இவர்கள் ஓம்கார்நாத் என்று கூப்பிடுகிறார்கள்."

குரலில் அதைக் கூர்ந்து கேட்க வேண்டும் என்ற குறு குறுப்பை ஏற்படுத்தும் வசீகரமான இனிமை இருந்தது.

அந்த அமெரிக்கன் புரியாமல் விழித்தான்.

"தெ கால் இட் ஓம்கார்நாத்" என்று அவனுக்காக ஸ்பஷ்டமான ஆங்கிலத்தில் சொன்னார் அவர், சொல்லி விட்டு அவர் மெதுவாய் இதழ் மலர்ந்து சிரித்தார்.

பற்கள் ஆரோக்கியமாயிருந்தன.

என்னை என்பதற்குப் பதில் ஆங்கிலத்தில் அவர் இதனை என்று சொல்வதை சிவா கவனித்தான். இவர் எப்போது இவ்வளவு தெளிவான ஆங்கிலம் கற்றார்?

இது கைலாச கவுண்டர் அல்ல. அடையாளம் மறைந்து, பேதங்கள் மரித்து, போராட்டங்கள் மாண்டு போன ஆத்மா.

அவர் இரண்டு கைகளையும் விரித்துவிட்டு சாந்த மாக அவனைப் பார்த்தார்.

எனக்கு ஆட்சேபமில்லை.

எனக்குத் தெரியாது.

நான் அதுவல்ல.

அவரவர் விருப்பம்.

அந்த கைவிரித்த சைகையில் இப்படி சிவாவுக்கு நாலு அர்த்தங்கள் தெரிந்தன.



சிவாவுக்கு அந்த மரத்தடியில் உட்கார வேண்டும் போலிருந்தது.

அவன் சட்டென்று எவர் நிற்பதையும் பொருட் படுத்தாது உட்கார்ந்து விட்டான்.

மற்ற மூவரும் அனிச்சை செயல் மாதிரி உட்கார்ந் தனர்.

அப்போது ஆலமரத்திலிருந்து நாலைந்து பழுத்த இலைகள் அவருக்கு முன்பாக உதிர்ந்தன. அவர் அதை உற்றுப் பார்த்தார். பின்பு மரத்தை நிமிர்ந்து நோக்கினார்.

உதிர்ந்த இலைகளில் ஒன்றை எடுத்து மெதுவாக நீவினார். பின்பு சிவாவைப் பார்த்தார். அதன் காம்பை வருடிவிட்டு பொருள் பொதிந்த பார்வையோடு அவனை நோக்கினார்.

"நான் மெட்ராஸிலே இருக்கேன்—வேலை கெடைக் கலே" சிவாவுக்குத் தன்னை மீறிக்கொண்டு அதைச் சொல்ல தோன்றிற்று.

"இவன் எழுத்தாளனாகியிருக்கிறான்" என்று குறுக் கிட்டான் வெற்றிவேல்.

அவர் பார்வை நிர்ச்சிந்தையாக இருவரையும் கவனித்தது. அதை அவர் கேட்டமாதிரியும் தெரிந்தது. கேட்காத மாதிரியும் தோன்றிற்று. உதடும் கண்களும் ஒரே விதமாய் மலர்ந்து தோன்றின.

சிவாவுக்கு திடீரென்று மார்பு விம்பியது. ஒரு தந்தையை இழந்துவிட்ட சோகம் தோன்றியது.

"நீங்க ஏன் இப்படி ஆனீங்க?" அவன் வாய்விட்டுக் கேட்டான்.

பாபா அவனை நிமிர்ந்து பார்த்தார். அவர்கள் அனைவர் முகத்தையும் நோக்கினார். திரும்பி ஆற்றைக் காட்டினார்.

"நதி ஓடுகிறது" என்று ஒரு வாக்கியம் சொன்னார் பாபா. எல்லோரும் முகம் மலர்ந்தனர்.

அது ஓடும்; பிறகு கடலை அடையும்.

எங்கோ பிறந்தது இங்கே ஓடுகிறது.

எல்லோரும் ஓடுவோம். ஒன்றைவிட்டு மற்றொன் றிற்கு ஓடுவோம்.

நான் ஓடிக்கொண்டிருக்கிறேன். நீயும் ஓடிவிடுவாய். சிவாக்கு அந்த ஒரு சின்ன வாக்கியத்தில், என்னென்னவோ புரிந்தது.

மீண்டும் அவனுள் இவர் என் தந்தை என்ற உத்வேகம் உதைத்து எழுந்தது. மனசில் வந்து கூடிய சாந்தியை நிறைவை ஒரு கல்விட்டுக் கலைத்துக் கொண்டு அவன் கேட்டான்.

"நதிதான் ஓடும். நதி ஓடவேண்டும். மனிதன் அல்ல" என்றான்.

அமெரிக்கனுக்கு சிவா ஏதோ வாக்குவாதம் செய் கிறான் என்று புரிந்தது. அவன் ஆவலுடன் பாபாவைப் பார்த்தான்.

அவர் பாதிக்கப்படவில்லை. விழிகளில் கருணை நிலவியது.

"நீங்கள் சொல்லாமல் ஓடி வந்து விட்டீர்கள்."

சட்டென்று அவன் சினமுற்றிருக்கிறான் என்று தவறாக நினைத்த பெருந்தனக்காரர் அவன் கையைப் பிடித்தார். அவ்விதம் அவனைப் பிடிக்க வேண்டாம் என்று பாபா சைகை செய்தார்.

அங்கே ஓர் அசந்தர்ப்பமான மௌனம் நிலவியது பாபாவின் முகத்தில் பரம சாந்தம். சிவா தொடர்ந்தான்.



"தப்பியோடுவது ஞானம் அல்ல."

அவனைப் புன்னகையோடு பார்த்துவிட்டு பாபா, உதிர்த்த இலைகளில் ஒன்றை மீண்டும் எடுத்தார்.

"இலை பழுத்தால் உதிர்ந்து விடும்" என்றார்.

"உங்கள் மனைவியை.. உங்கள் பிள்ளையை விட்டு விட்டு ஓடி வந்து விட்டீர்கள்."

"கேட்டு வந்த விடுதலை" பாபா சொன்னார்.

"யாரிடம்?" சிவா விடவில்லை.

"பெற வேண்டியவரிடம்."

அப்படி ஒன்று நடந்ததா? தன் தாய் இவர் துறவி யாவதற்கு விடுதலை வழங்கினாளா? சிவா நிசப்தமானான்.

அதுவரை அவன் அதைக் குறித்து அம்மாவிடம் விசாரிக்க முனைந்த போதெல்லாம் அவள் அதைத் தவிர்த்துத் தவிர்த்து வந்ததை நினைத்தான்.

இப்படி ஒன்று நடக்க முடியுமா?

தன் கணவன் துறவியாவதற்கு மனமார ஒரு மனைவி அனுமதி வழங்க முடியுமா?

அவனால் ஒன்றும் பேச முடியவில்லை.

அப்படி ஒரு விடுதலை வாங்கி வருமளவு இந்த மனிதர் என்ன கல் நெஞ்சர் என்று அவர் மீது அவனுக்கு ஒரு வெறுப்பு தோன்றியது.

ஆனால் வெறுப்பது விரும்புவது இந்த எல்லைக் கோட்டை அவர் கடந்து விட்டவர். கனிந்து நின்ற அந்த தோற்றமே அவனுக்கு உணர்த்தியது.

இவரிடம் தனக்குள்ள எல்லா வழக்குகளும் ரத்தாகி விட்டன. ஓடும் நீர்போல, உதிர்ந்த இலைபோல இவர் தனக்குப் புறம்பானவர்.

ஒரு மகன் பார்ப்பதைப் போல அவன் பரபாவைப் பார்த்தான்.

இந்த உருவம் தன் தந்தை!

எனினும் இதற்கும் தனக்கும் இங்குள்ள மூவருக்கும் என்ன சொந்தமோ அந்த சொந்தம் தான் மிஞ்சியிருப்பது.

அவனால் முதலில் அதை ஏற்க முடியவில்லை. 'இதைத் தேடி, இதைக் கண்டுபிடிக்கவா நூற்றுக் கணக்கான கிலோ மீட்டர் பயணம் செய்து நான் இங்கு வந்தேன்?'

பாபா அவனையே குறுகுறுவென்று சற்று நேரம் பார்த்தார்.

அந்த அமெரிக்கனுக்கு சட்டென்று எல்லாம் விளங்கி விட்டது.

"மிஸ்டர் கங்கப்பா... வொட்ரீ வேல்... லெட்ஸ் ஹாவ் எ மூவ்..."

அவரைத் தான் தனியாகச் சந்திக்க அவன் வசதி செய்து தருகிறான் என்பதை சிவா உணர்ந்தான்.

"தேர் ஈஸ் நதிங் பெர்ஸனல் பிட்வீன் மீ அண்ட் ஹிம்."

தனக்கும் தன் தந்தைக்கும் மத்தியில் நெருக்கமாக ஒன்றுமில்லை என்று அவன் கூறியதை கங்கப்பாவும் அந்த அமெரிக்கனும் கூர்ந்து கவனித்தனர்.

"வோட்ஸ் ஹி?" என்று சிவாவின் தொழிலைப்பற்றி அந்த அமெரிக்கன் கேட்டான்.

வெற்றிவேல் பதிலளித்தான்.

"எ ரைட்டர்."

பாபா மீண்டும் சிவாவைப் பார்த்தார்.



"கேன் யூ கம் டு த ஸ்டேட்ஸ்... வித் மீ?"

சிவா தன்னை அமெரிக்காவிற்கு அழைத்த அவனை ஏறிட்டு நோக்கினான்.

"நோ... ஐ காண்ட்... தாங்யூ" என்று பளிச்சென்று தன் மறுப்பைத் தெரிவித்தான்.

தன் தந்தையின் மீது அந்த அமெரிக்கன் வைத்துள்ள மதிப்பு தனக்கு ஒரு வாழ்வு அளிக்க முயற்சிப்பதை அவன் சுயமரியாதை எதிர்த்தது.

தன்னை மீறி அது வெளிப்பட்டுவிட்டது. அவன் அதற்கு ஒரு சாட்சியாகத் தன் தந்தையே இருக்க நேர்ந்து விட்டதைக் குறித்து அவன் மகிழ்ந்தான்.

அவனைப் பரிவுடன் பார்த்தார் பாபா.

"விடுதலை பெறுக" என்றார்.

அவனுக்குச் சொல்ல வேண்டியது யாவும் அதில் அடங்கிவிட்டது என்பதுபோல் அவர்

முகத்தில் ஒரு நிறைவு.

இனி அங்கிருப்பதில் அர்த்தமில்லை என்று சிவா உணர்ந்தான். சென்னையும் தாமுவும் உடனே புறப்படு என்று கூப்பிட்டனர்.

திரும்பி வரும்போது வெற்றிவேல் கூட வந்தான்.

அவர்கள் ஆற்றில் இறங்கிக் குளித்தனர். வெற்றிவேல் வைத்திருந்த துண்டில் தலை துவட்டிக் கொண்டே கரையேறினான் சிவா.

"என்னடா நீ பேசலே?" என்றான் வெற்றிவேல்.

"நோ கமெண்ட்ஸ். எங்க அப்பா ஒரு நாள் ஓடிப் போனார். இன்னைக்கு நான் அவரை இழந்து விட்டேன் தட்ஸ் ஆல்"

"அதைத் தவிர?"

"வாழ்க்கை நிற்கிறது. தன்னந் தனியாக எதிர்த்துப் போராடு என்று கேட்டுக் கொண்டு"

"நல்லது."

அண்செட்டியில் ஒரு டீக்கடை ஹோட்டலில் இட்லி வடை சாப்பிட்டு விட்டு வெற்றிவேலிடம் விடை பெற்றான் சிவா.

அவன் சட்டைப் பையில் ரூபாய் நோட்டுக்களை வைத்து மடித்த கவரைச் செருகினான் வெற்றிவேல்.

"இந்த 'ட்ரிப்' ஒனக்கு நல்லா இருந்திருக்காது... ஐ'ம் ஸாரி சிவா."

"நோ... இல்லே வெற்றிவேல். இது எனக்குப் பலம் தந்திருக்கு."

"எப்படி?"

"நான் தனி...தன்னந் தனி. ஐ ஹாவ் டு மீட் லைஃப்."

பஸ் ஹாரன் கேட்டது. சிவாவின் கையைப் பிடித்துக் குலுக்கினான் வெற்றிவேல்.

"ஆல் த பெஸ்ட்"

# 7

அவ்வளவு சீக்கிரம் சிவா திரும்பி விடுவான் என்று தெரு வாசலில் நின்று கொண்டிருந்த திஷ்யா எதிர்ப் பார்க்கவில்லை.

"என்ன இவ்வளவு சீக்கிரம்?"

தன் மனசில் திடீரென்று வந்து கவிந்திருந்த தனிமைக்கு அவளைப் பார்ப்பது உற்சாகமளித்தது.



"விடுதலை கெடைச்சுடுச்சு" என்றான் கிண்டலாக.

"அப்ப ஜெயில்லேருந்து தான் வர்றீங்களா ஐயா?" என்றாள் திஷ்யா.

ஆம். பாசம் என்ற சிறையிலிருந்து. அதை இவள் ஏன் தெரிந்து கொள்ள வேண்டும்? சிவா மாற்றிச் சொன்னான்.

"நண்பன் கிட்டேயிருந்து விடுதலை. ஒனக்கு அத்தை கிட்டேயிருந்து கெடைச்சுடுச்சா?"

உனக்கு என்ன வாய்க் கொழுப்பு என்பது போல் திஷ்யா அவனைப் பார்த்து நாக்கைக் கடித்தாள். இது ஒரு படி முன்னேற்றம் என்று சிவாவுக்குத் தோன்றியது.

"அத்தை சாயங்கால வண்டியிலே ஊருக்குப் போறாங்க. நீங்க வந்து டிக்கெட் வாங்கிக் கொடுங்க. பிரேம் வியாசர்பாடிக்குப் போயிருக்கான். வேற ஆள் தொணையில்லே..."

"நானா—" சிவா சற்று தயங்கினான். பிறகு ஒப்புக் கொண்டான்.

அறைக்குப் போன போது தாமுவிடமிருந்து வந்த கார்டு கிடந்தது.

'அப்பா தேறிவருகிறார். விரைவில் வருகிறேன்' என்று இரண்டு வரிகள் மட்டும் எழுதியிருந்தான்.

சிவா குளித்து விட்டு சிறிது நேரம் படுத்தான்.

பிறகு எழுந்து உட்கார்ந்து மற்றொரு சிறுகதை எழுதத் தொடங்கினான். வெளியே எங்கும் போகவில்லை.

மாலை ஐந்து மணி ஆனபோது சீதா வந்து "ஸ்டேஷனுக்குப் போக ஒங்களை அக்கா ரெடியாகச் சொன்னா" என்று தகவல் கொடுத்தாள்.

அத்தையை ரயிலேற்றி அனுப்பிவிட்டுத் திரும்பும் போது சென்ட்ரலின் நடுவே போட்டிருந்த ஆசன

வரிசைகளைப் பார்த்தபோது சிவாவுக்கு ஒரு யோசனை தோன்றியது.

"கொஞ்ச நேரம் இங்கே உட்கார்ந்துட்டுப் போவோமா?"

"ஆஹா... எப்படிப்பட்ட இடம் கெடைச்சிருக்கு ஒனக்கு"

"ஃபேன் ஓடறது. நாலஞ்சு ஸீட் காலியா இருக்கு..."

"அங்கே பசங்கள்ளாம் தனியா இருக்குமே..." என்று அரை மனசோடு சொல்லியவாறே திஷ்யா சம்மதித்தாள்.

சிவா அவள் பக்கத்தில் உட்கார்ந்தான்.

உட்கார்ந்தவுடனே அவள் கேட்ட முதல் கேள்வி.

"நீ எதுக்குக் கதை எழுதறே?"

சிவாவுக்கு அவளுக்கு ஒரு 'கூல் டிரிங்' வாங்கிக் கொடுக்கும் நினைப்பு எழுந்தது.

"நாம்ப ஒரு கூல் டிரிங் சாப்பிடலாமா?"

"மொதல்லே என் கேள்வி!"

"கொஞ்சம் கூலாச் சொல்லலாமே"

"காசு வச்சிருக்கியா?" என்று விஷமத்தனமாகக் கேட்டாள்.

"நீ வாங்கிக் கொடுப்பேண்ணு ஒங்கிட்டே கேக்கறதா நெனப்போ?"

"சீ.. சும்மா வேடிக்கைக்குக் கேட்டேன்"

"அப்ப வா போவோம்" என்று எழ முயன்றான் சிவா.

"எழுந்து போனா எடம் போயிடும்"



"ஒண்ணு செய்யறேன்... நான் போயி ரெண்டு கூல்டிரிங் வாங்கிட்டு வர்றேன். நீ எடத்தைப் பார்த்துக்க" என்று சிவா சம்மதம் கேட்டான்.

"ஐயைய... நான் தனியா ஒக்காந்திருக்க முடியாது... நான் போய் வரட்டா?" என்று கேட்டாள் திஷ்யா.

"நீ போய் எனக்காக வாங்கிட்டு வந்தா எனக்கு ஷாஜெஹன்ஷா மாதிரி ஒரு ஃபீலிங் வரும்"

"எனக்கு மட்டும் ஒரு ஷா ஜெஹன்ஸி மாதிரி வராதா"

"ஷா ஜெஹன்ஷாவுக்கு பெண் பால் ஜஹானரா"

"தாங்க்யூ பண்டிட்... ரெண்டு பேருமே போக வேண்டாம். வீட்டுக்குக் கௌம்பறப்ப குடிச்சுப்போம். நான் கேட்ட கேள்வி?"

"சென்ட்ரல் ஸ்டேஷன் நடுவிலே ஹோன்னு இரைச்சலுக்கு மத்தியிலே கேக்கற கேள்வியா இது? சரி நீ ஏன் அதைப் படிச்சே?"

"எல்லாரும் ஒன் கதையைப் படிச்சிட்டு அழுதாங்க... ஏன் அழுணும்ணு வாங்கிப் படிச்சேன். எனக்கு சிரிப்பு வந்தது?".

"எதுக்கு சிரிச்சே?..." என்று அவளைக் கூர்ந்து பார்த்தான் சிவா.

"வாழ்க்கையிலே எத்தனையோ கஷ்டம் இருக்கு. அதிலே என்னமோ ஒன்னைப் பிடிச்சு ஓஹோன்னு பிரமாதப்படுத்திட்டே... ஸோ வாட்?"

அவள் சொல்வது முழுக்க நிஜமில்லை என்று சிவாவுக்குப் பட்டது. நான் ஒன்றும் உன் ரசிகை இல்லை என்று காட்டிக் கொள்கிற மாதிரி அவள் முயற்சிக்கிறாள். அவன் அதை ரசித்தான்.

எழுத்தாளனின் ரசிகையாக இருப்பதை விட சிவா வுக்கு வேறு என்னவோவாக இருப்பதில் ஒரு சமத்துவம் தேடுகிறாள் என்று புரிந்தது.

"திஷ்யா, ஒரு விஷயம் தெரியுமா?"

"சொல்லு" தன் விரல்களுக்கு வைத்திருந்த மருதாணி நன்கு பற்றியிருக்கிறதா என்று கைகளை திருப்பிப் பார்த்துக் கொண்டே விவாதிக்கத் தயாரானாள்.

"அந்தக் கதை வெளிவந்தப்புறம் சிலபேர் எங்கிட்டே தங்களோட சொந்தக் கதையைச் சொல்லி அங்கலாய்க் கிறாங்க... இதோ இப்ப ரயிலேத்தி அனுப்பினோமே ஓங்க அத்தை... அவங்க என் கிட்டே ரெண்டு கதை... சொந்தக் கஷ்டங்கள்தான்... சொல்லிட்டாங்க"

"நீ அதைக் கதையா எழுதித் தீர்த்து வச்சுடுவி யாக்கும்?"

சவுக்கைச் சொடுக்குவது மாதிரி இவளிடம் ஒரு குத்தல். சிவா அவள் கண்களைப் பார்த்தான். மிக மெல்லி சாக மை தீட்டியிருந்தாள். குத்தல் விடும்போதெல்லாம் அந்த முகத்தில் தோன்றிய ஒரு தனி சோபை நெஞ்சை அள்ளுவதாயிருந்தது.

"கஷ்டங்களைத் தீர்த்துக்கறதை விடவும் அதை நாலு பேரு தெரிஞ்சுக்கிட்டா மேல்னு பெரும்பாலோர் நெனைக் கிறாங்க!"

"ஏன் அப்படி?"

"கேக்கவும் சொல்லவும் பிரச்னை இருக்கறதாலே ! மனுஷாள் அப்ப தான் உயிர் வாழறதா நெனைக்கிறாங்க. வாழ்க்கை யின் வெகுமானமே அந்தப் பரிவுதான்."

"அதுக்குதான் நீ எழுதறியா கதை?"

"எஸ் அண்ட் நோ"



"இது ஒரு பதிலா?"

"திஷ்யா...ஒன் கேள்விக்கு ஒரு பதில்...ஒற்றைப் பதில் தர முடியாது"

"சமுதாய சீர்திருத்தம்...புரட்சி...லட்சியம்?"

"அதையெல்லாம் நான் சொல்லிக்கிட்டே எழுத ஆரம்பிச்சா... கதை வராது. பெருக்கல் வாய்பாடுதான் வரும்... எனக்கு ஒரு கதை எழுதினா ஒரு பிரார்த்தனையை முடிச்ச திருப்தி... ஒரு நிறைவு... ஒரு விடுதலை... அதான் பொருத்தம்..."

"என்ன சொன்னே...பிரார்த்தனையா?"

"ஆமா" என்றான் சிவா.

"நீ என்ன ரிஷியா?"

ஈட்டுக்கும் முதுகுக்கும் இடையே கூந்தல் உறுத்திய தால் திஷ்யா அதை எடுத்து முன்னே விட்டாள். மார்பின் மீது கன்னங்கரேலென்று விழுந்த அந்த கூந்தல் அவளை 'ஸெக்ஸி' யாக்கிற்று.

அந்த உதடுகளின் சிவப்பிற்கு அந்த கூந்தல் கருமை காட்டிய மாறுபாட்டில் தான் வசமிழப்பதை சிவா உணர்ந்தான்.

தான் ரிஷியல்ல. அது அப்போது நன்கு உறைத்தது.

"ரிஷி மட்டும்தான் பிரார்த்திக்கணுமா?"

"ஏன்... கிழவர்கள்... கிழவிகள்... கையாலாகாதவங்க... கனவு காணும் குழந்தைகள்..." திஷ்யா அடுக்கிக் கொண்டே போனாள்.

"ஸ்டாப்... உன் லிஸ்ட்லே எழுத்தாளனையும் சேத்துக்க... அவனும் பிரார்த்திக்கிறான். பரிவிற்காக... மனித உணர்வுகள் செத்துப் போயிடாம இருக்க. அன்புக்காக"

அவனுக்குக் கோபம் வருவிக்கும் முயற்சியில் தான் தோற்றதை ஒப்புக்கொள்ள அவனைப் பார்த்தாள்.

அவன் விழிகளில் ஒரு இரக்கம் அவளுக்குப் புலப்பட்டது. சுற்றிலும் உட்கார்ந்திருந்தவர்கள் தங்களைக் கவனிக்கிறதைப் பார்த்தாள்.

உதட்டைச் சுளித்து இமைகளைத் தாழ்த்தினாள்... அவனுக்கு அவளுடைய கவர்ச்சி அதிகரித்தது.

கீழே பார்த்துக்கொண்டே கூப்பிட்டாள்.

"சிவா"

"ம் ம்"

"அசடு வழிய ஆரம்பிச்சாச்சா?"

அவன் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"இது சென்ட்ரல் ஸ்டேஷன்... இதெல்லாம் கதையிலேயே வச்சுக்க... என்ன?"

"என் கதையிலே இதெல்லாம் வச்சுக்கறதில்லே"

"குட்... அப்பதான் கதை ஆரோக்கியமா இருக்கும்."

"சொல்லுங்க விமர்சகரே"

"ரெண்டு விஷயம் ஒங்கூடப் பேசணும்னு தான் அத்தையை வழியனுப்ப ஒன்னைத் தொணைக்குக் கூப்பிட்டேன்."

"அப்ப டிக்கட் வாங்கித் தர்றதுக்காக அழைச்சுட்டு வரலியா?"

"அட... அட... க்யூவிலே நிண்ணு அடிதடி பண்ணி சூர பராக்கிரமத்தோடே எப்படி டிக்கெட் வாங்கினே பாரு... இதுக்கு நீ இல்லாமே எங்கே முடியப் போறதுண்ணு ஒன்னைக் கூட்டிகிட்டு வந்தேன் இல்லே?..."



"எந்நன்றிகொன்றார்க்கும்..." என்று ஒரு குறளை ஆரம்பித்தான் சிவா.

"சொல்லட்டுமா...இல்லே கௌம்பலாமா?"

"சொல்ல விரும்பினா சொல்லு"

"இதுதான் வரணும்னு எதிர்பார்த்தேன்"

"எது?"

"கோபம்"

"வரலே—வராது...உன்கிட்டே வரவே வராது"

"சிவசிவா... ஒன்னைச் சொல்லலே; அசல் சிவனைச் சொல்றேன். நேத்து சாயந்திரம் டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட்டுக்குப் போயிட்டு வர்றப்ப ஒருத்தன் கார்லேருந்து என்னை மொறைச்சுப் பார்த்தான்."

திவ்யா சொன்னதும் குறுக்கிட்டான் சிவா.

"வழக்கப்படிண்ணு சொல்லு—"

"இல்லே... இது அப்படி இல்லே... நாலஞ்சு நாளா ஒரு மோட்டார் பைக் வாலா தெனம் நான் இன்ஸ்டிடியூட்டுக்குப் போற போதெல்லாம் அந்த நேரத்துக்கு நான் வருவேண்ணு காத்திருக்கிற மாதிரி பழியா கெடப்பான். இன்னிக்கு அவனும் அந்த காரிலே ஒக்காந்திருந்தான்."

"நீ பயந்துட்டியா?"

"நோ... நான் என்ன தப்புப் பண்ணினேன், பயப்பட? முழுக்கக் கேளு"

அவள் 'சீரியஸாக'ச் சொல்ல ஆரம்பித்தாள்.

"காரை நான் இன்னிக்கு 'பாஸ்' பண்றப்ப 'மிஸ்'னு அவன் என்னைக் கூப்பிட்டான். மோட்டார் சைக்கிள் காரன் கார் டிரைவரைப் பார்த்து இவர் யார் தெரியுமேண்ணு கேட்டான். 'ஐ டோண்ட் பாதர்'னு

சொன்னேன். அந்த 'கட்'டை வாங்கிக்கிட்ட மாதிரியே காட்டிக்காமே வளவளத்தான். இவர்தான் பிரபல டைரக்டர் தினேஷ்குமார்.

"இவருடைய புதுப்படத்திலே நடிக்க ஒரு ஹீரோயின் தேவை. ஓங்களுக்குச் சௌகரியப் படுமாண்ணான். எனக்கு மகா கோபம் வந்தது."

"என்ன பண்ணே?" என்று சிவா ஆவலோடு கேட்டான்.

"நோ... டெஃபனிட்லி நோண்ணு சொல்லிட்டு வந்துவிட்டேன்."

"தட்ஸ் குட்... அவ்வளவுதானே!"

"இல்லே... அதுக்கு மேலே போய்ட்டாங்க அவங்க. இன்ஸ்டிடியூட்டுக்குப் போய் என் அட்ரஸைக் கேட்டிருக்காங்க. அங்கே இருக்கற சினிமா சபலம் ஒண்ணு ரெண்டு சொல்லியிருக்கு. நேரா ஹாஸ்பிடலுக்குப் போயி அப்பாவைப் பார்த்திருக்காங்க."

"ஓ"

"எடுத்த எடுப்பிலே எழுபத்தஞ்சாயிரம் தர்றோம்ணு ஆரம்பிச்சாங்களாம்."

"அப்பா என்ன சொன்னார்?"

"வாரா வாரம் லாட்டரி டிக்கெட் வாங்கிட்டு கிண்டி ரேஸுக்குப் போறவர் என்ன சொல்லியிருக்கப் போறார்? அதுக்கென்ன ஆகட்டும்னு தலையை ஆட்டிட்டு வந்திருக்கிறாரு!"

"ஒன்னை வந்து கேட்டாரா?"

"கேட்டாராவது... ராத்திரி சாப்பிடவேயில்லே... முடியவே முடியாதுண்ணு அடிச்சு சொல்லிட்டதிலே அவருக்கு ஏகக் கோபம்."



சிவா ஒன்றும் பேசாமல் அவளையே பார்த்தான்.

"என்ன பாக்கறே?"

"நீ எதை மறுத்துக்கிட்டிருக்கேண்ணு ஒனக்குத் தெரியுமா?" சிவா அவளைப் பரீட்சை செய்வதுபோலக் கேட்டான்.

"நான்சென்ஸ்... அந்த அதிர்ஷ்டம் எப்படிப் பட்டதுண்ணுதான் தெருத் தெருவா துணி இல்லாமே தொங்கற வால்போஸ்டர்கள்ளே தெரியுதே..."

"அப்புறம் இது என்ன?"

சிவா கண்ணிமைகளை மூடிக்கொண்டு பதில் தந்தான்.

"இதான் டெம்ப்டெஷன்... பைபிள் பாஷையிலே சொன்னா சைத்தானின் தூண்டுதல்."

"எப்படி?"

"இன்னிக்கு லட்சோப லட்சம் பேருக்கு சினிமா நடிகையாயிடணும்... லட்சம் லட்சமா சம்பாதிக்கணும்னு வெறி இருக்கறப்ப அதை நீ வேணாங்கறியே"

"நான் டெம்ப்ட் ஆகலே."

"ஒங்க அப்பா"

"அவருக்கு சைபர் சைபரா எண்களைச் சொன்னாலே டெம்ப்ட் ஆயிடுவார்."

"அவர் நிர்ப்பந்திச்சா நீ என்ன பண்ணுவே?"

"அவர் ரொம்ப ஓவரா வற்புறுத்தினா ஓடிடுவேன்."

"எங்கே?"

அவள் நிசப்தமானாள்.

அவன் காத்திருந்தான்.

"ஐ'ம் ஸாரி சிவா...நான் ஓடமாட்டேன்...எங்க குடும்பத்திலே ஒருத்தர் ஓடினது போதும்."

யாரு— என்று வாய் வரை வந்த கேள்விக்கு அவன் 'ஸீல்' வைத்தான்.

திஷ்யாவின் அம்மா ஓடிப்போன சங்கதி அந்த வீட்டில் அவன் கால் வைத்த முதல் வாரத்திலேயே தெரிவிக்கப்பட்டு விட்டது.

ஒரு சூதாடியோடு வாழ முடியாமல் போராடிப் பார்த்து நாலு குழந்தைகளையும் விட்டு விட்டு ஒரு வைர வியாபாரியோடு அவள் ஓடிப் போனாளாம்.

"நான் ஓடமாட்டேன்."

சென்ட்ரலில் என்ஜின்கள் முழங்கின. ட்ராலிகள் காது பிளக்க உருண்டு வந்தன.

ஓடுவோர் நடப்போர் யந்திரம் மனிதர் என்று அந்த மாபெரும் கூரையின் கீழ் ஒலிகளின் சங்கமம் கடல் மாதிரி கேட்டது. சப்தக் கடல்.

"ஐ வில் ரெஸிஸ்ட்... ரெஸிஸ்ட் இட்."

"நான் அப்பாகிட்டே பேசிப் பார்க்கறேன்."

அவள் மறுப்பு தெரிவிக்கவில்லை.

"ரெண்டு விஷயம்னு சொன்னியே... இன்னொரு விஷயம்?"

"எங்கே ஒங்க பாஸ்"

"பாஸா... யாரது"

"தாமு"

"மதனபள்ளி போயிருக்கார்...ஏன் என்ன விஷயம்?"



"எப்ப வருவார்?"

"தெரியாது"

"வந்தா ஒண்ணு சொல்லி வை" அவள் முகம் சட்டென்று சிவந்தது.

"என்னது?"

"அவரை ஜாக்ரதையா இருக்கச் சொல்லு... எல்லாப் பொண்ணுங்களும் மலையாளத்து நர்ஸ் மாதிரின்னு நெனைக்க வேண்டாம்னு சொல்லு."

"என்ன... என்னது திஷ்யா?"

"இதை மட்டும் நீ சொல்லு. மத்ததை நேரம் வர்றப்போ சொல்றேன்"

சிவாவுக்குத் திறக்கக்கூடாத ஜன்னல் ஒன்றைத் திறந்துவிட்ட மாதிரி ஒரு திகைப்பு.

"திஷ்யா"

பெண்ணாகவும் அழகாகவும் பிறந்துவிட்ட விபத்துக்கு வருந்துவது மாதிரி அவள் ஒரு 'சிலுவைச்' சிரிப்பு சிரித்தாள்.

அதில் பலவீனம் இல்லை. போராட முடியும் என்ற வைராக்கியம் தெரிந்தது.

"இப்ப சொல்லு... நீ கதை எழுதி எழுதி என்ன சாதிக்கப்போறே?"

"கண்ணீரின் உப்பு விளையும் கருவூலத்தைத் தரிசனம் பண்ணுவேன். பிரார்த்திப்பேன்"

"நீ கவிதை கூட எழுதலாம்!"

"கூல் டிரிங்ஸ் சாப்பிடலாம் எழுந்திரு."

அவர்கள் எழுந்தனர்.

# 8

மதனபள்ளியிலிருந்து தாமு திரும்பி வருவதற்குள் சிவாவுக்கு இரண்டு கடிதங்கள் வந்திருந்தன.

ஒன்று நந்தவனம் ஆசிரியரிடமிருந்து இருநூற்றி ஐம்பது ரூபாய்க்கு ஒரு செக். அவனது கதையைப் பாராட்டி உற்சாகமூட்டும் சில வரிகள்.

இரண்டாவது அம்மாவிடமிருந்து சில எழுத்துப் பிழைகளுக்கு மத்தியில் அவன் வாழ்வில் எதிர்ப்பட்ட முதல் வெளிச்சத்திற்கு அவள் பூரிப்பு பாற்கடலாகப் பொங்கியிருந்தது. அவன் எழுதியிருந்த கடிதத்துக்குப் பதில்.

தபால்காரர் வந்துபோன பின்புதான் தாமு வந்தான். நேரே ஒர்க்ஷாப்புக்குப் போய்விட்டு வருகிறான் என்று மோட்டார் சைக்கிள் ஒலி அறிவித்தது.

மாடிப் படியில் அவனது மிடுக்கான ஷூ ஓசை கேட்டது. சிவா எதிர் கொள்ளச் சென்றான்.

பிரயாணக் களைப்பு தெரியாமல் அவன் குளித்து புத்துணர்ச்சியோடு காணப்பட்டான்.

பிரீதா வீட்டிலிருந்து வருகிறான் என்ற புரிந்து கொண்டான் சிவா.

அவனைப் பார்த்ததும் கச்சிதமாக ஒரு புன்னகை செய்தான் தாமு. பிரீதா சொல்லி விட்டாள். அவன் பார்வையில் சிவா உணர்ந்தான்.

"கங்க்ராட்ஸ்"

"தாங்க்யூ"

சிவா செக்கையும் கடிதத்தையும் நீட்டினான்.



செக்கின் தொகையைப் பார்த்து விட்டு "நாட் பேட்" என்று சிலாகித்துவிட்டு கடிதத்தைப் படித்தான்.

எட்டு வருஷங்களில் தெலுங்கை மறந்து விடுமளவு அவன் தமிழில் ஊறியிருந்தான்.

"நவ் யூ ஆர் ஸம்படி!"

"பிகாஸ்...பிகாஸ் ஆப் யூ"

"நீ மிகைப்படுத்தறே!"

"இந்த நிழல்.. இந்த பாதுகாப்பு இல்லாமே என்னால் இதை எழுதியிருக்க முடியாது."

"ஓ—இட்ஸ் ஜஸ்ட் எக்ஸ்டர்னல்."

அவன் 'ஷூ'வை அவிழ்ப்பதற்காக மாடியின் கைபிடிச்சுவரின் மீது காலை உயர்த்தி வைத்தவாறே செக்கையும் கடிதத்தையும் திரும்ப நீட்டினான்.

"வேண்டாம்" என்றான் சிவா.

"ஏன்?"

"இது உங்களுடையது"

தாமு ஒரு வினாடி அவனை ஆராய்வது போல் பார்த்தான்.

"ஒனக்கு பாங்கிங் புரொஸீஜர் தெரியுமா?"

சிவாவுக்கு விளங்கவில்லை. தாமு குறும்பாகப் புன்னகை செய்தான்.

"பின்னாலே 'ஸைன்' பண்ணிக்கொடு."

சிவா பேனாவை எடுத்துவர உள்ளே போனான். தாமு ஃபேன் ஸ்விட்சைத் தட்டிவிட்டு சோஃபாவில் உட்கார்ந்தான். டீப்பாயின் மேல் அவனுக்கு வந்திருந்த

கடிதங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொன்றாய் அவன் பார்வையிடும்போது இவன் வெறும் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவன் என்று நம்ப முடியவில்லை.

செக்கின் பின்னால் கையெழுத்துப் போட்டு எடுத்து வந்த சிவா ஓரமாக நின்றான்.

"அப்பா எப்படி இருக்கார்?"

"பாரலைஸிஸ் ஸ்ட்ரோக். கட்டில்லே படுத்துட்டார். இடது பக்கம் பூரா ஆக்ஷன் இல்லே."

யாரோ மூன்றாம் நபருக்கு நேர்ந்ததைப் பற்றி சொல்வது போல் தாமு சொன்னான்.

"ஆஸ்பிடல்லே சேத்துரலாமே."

"அவருக்கு ஹாஸ்பிடலைசேஷன் பிடிக்காது. லைஃப் ஆர் டெத். எதுவாயிருந்தாலும் தன் கூரையின் கீழ்ணு அவருக்கு ஒரு பிரின்சிபிள்."

"ட்ரீட்மெண்ட்?"

"டாக்டர்கள் வீட்டுக்கு வந்துகிட்டிருக்காங்க."

சிவாவுக்கு அந்தத் தகவலில் ஜமீன் மிடுக்கு தெரியவில்லை. ஒரு பீஷ்ம வைராக்கியம் தென்பட்டது.

சிவா கையெழுத்திட்ட செக்கை நீட்டினான்.

அதை வாங்கித் தன் பாக்கெட்டில் மடித்து வைத்துக் கொண்டான் தாமு. யோசனையோடு சிவாவைப் பார்த்தான்.

"இனிமே நாயனாவாலே நெலத்தைக் கவனிக்க முடியாது சிவா! அங்கே நிறைய ரயத்துக்கள் டிரபிள். இப்ப அவருக்கு ஒடம்பும் சரியில்லே!"

இது எதற்காக பீடிகை?

சிவா காத்திருந்தான்.



"அம்மா என்னை திரும்பி வந்துடச் சொல்லி அழுதாங்க. நாயனா ஒண்ணும் பேசலே. முளிச்சுப் பார்த்தாரு."

அந்த தகப்பன் மகன் உறவு சிக்கல் சிவாவுக்கு சுவாரஸ்யமாயிருந்தது.

"போடா வெளிலேண்ணு சொன்னவரு வாடாண்ணு கூப்பிடட்டும்ணு நான் பதில் சொல்லலே. அவருக்கு வாய்விட்டுக் கூப்பிட முகமில்லே. பக்கத்திலே அம்மா ஸ்ரீராமஜெயம் எழுதி வச்ச நோட்டு கிடந்தது. அதை எடுக்கச் சொன்னார். அதிலே 'ரா' என்ற எழுத்தை மட்டும் தொட்டுத் தொட்டுக் காட்டினார். ரான்னா தெலுங்கிலே வான்னு அர்த்தம்."

சிவாவின் முதுகுத் தண்டில் தவளை துள்ளியமாதிரி இருந்தது.

"இனிமே மதராஸ் இல்லே. மதனபள்ளி தான்."

அது எத்தனை நியாயம் என்று உணரும் போதே 'டர்-டர்' என்று ஒரு ஷட்டர் கதவு தனக்கும் தாமுவுக்கும் மத்தியில் வந்து விழுந்ததாக நினைத்தான் சிவா.

இந்த ராயப்பேட்டை வாசம், திஷ்யா, பிரீதா, சமையல், சாப்பாடு எல்லாம் நறுக்கென்று அங்கங்கே முற்றுப் புள்ளிகள் குத்திக்கொண்டு நின்றன.

தாமு டீப்பாய் மேலிருந்த சிகரெட் கேஸை எடுத்துப் பிரித்தான். பற்ற வைத்த பின்பும் எரியும் தீக்குச்சியின் நீல ஜ்வாலை நோக்கி ஏதோ யோசித்தான்.

"உக்காரு சிவா"

"இட்ஸ் ஆல் ரைட்"

"நோ. ப்ளீஸ் பீ ஸீடட்."

சிவா உட்கார்ந்தான்.

'யு டோன்ட் நோ மெட்ராஸ். ரைட்டராயிட்டா மட்டும் போதாது. கிதாப் வேணும். பந்தா வேணும்."

சிவா கேட்டுக் கொண்டான்.

"இங்கே சரக்கே வேணாம்; முறுக்கு போதும். ஏன் அதான் ஒணும்!"

"வில் இட் ஹெல்ப் மை ரைட்டிங்?"

"வாட் அன் இன்னொஸன்ட் க்வெஸ்டின்? ஒண்ணு சொல்றேன் சிவா...வேலை தேடறதை விட்டுடு."

"ஏன்?"

"தட் வில் மேக் யூ ஸிக்."

"என்ன பண்ணட்டும்?"

"எழுது... எழுது... இந்த சமூகத்தினுடைய வயித்திலே ஒதைக்கறா மாதிரி எழுது."

தாமு அதைச் சொன்னபோது அவன் குரலில் தொனித்த வீர்யம் சிவாவின் தந்துகிகளில் பாய்ந்தது.

தாமு சட்டைப் பையிலிருந்த செக்கைத் தொட்டுக் காட்டி விட்டு, "பட் டோண்ட் பிலீவ். இது மாதிரி ஒனக்கு நெறய வரும்னு நம்பிடாதே! எட்டு வருஷத்திலே எத்தனையோ ஆர்ட்டிஸ்ட்... எத்தனையோ ரைட்டர்ஸ்... எவ்வளவோ பார்த்துட்டேன்.

இதை நம்பிட்டே, இதுக்குப் பின்னாடியே நாய் மாதிரி நீ அலையணும். ஒண் டே அர் த அதர்— இந்த ரீடர்ஸூம் மாகஸின்ஸூம் கூலா ஒன்னைக் கை கழுவிடுவாங்க."

"வேலை தேட வேண்டாம்னு சொல்றீங்களா?"

"ஆமா— நான் மதனபள்ளிக்கு போறேன். நீ மெட்ராசுலே இரு. ஒர்க்ஷாப்பை மேனேஜ் பண்ணு."



"எனக்கு ஒர்க் ஷாப்பைப் பத்தி ஒண்ணுமே தெரியாதே!"

"மதனபள்ளியிலிருந்து வர்றப்ப எனக்குக் கூட ஒண்ணும் தெரியாது!"

பதில் பளிச்சென்று மண்டையில் அறைந்தது.

ஆனால் நீங்கள் தாமு. நான் சிவா என்று அவன் நினைத்தான். சொல்லவில்லை.

"கத்துக்கோ. இது ஒன் தொழில்னு நெனச்சா ஒனக்கு ஒரு மாசம் போதும். 'நாம்ப குமாஸ்தா' தான்னு நெனச்சா எட்டு வருஷம் கூடப் போதாது."

இவன் மனிதனா இல்லை மின்சார ட்ரான்ஸ் மிட்டரா?

"மதனபள்ளியிலே வாரத்திலே மாசத்துலே எப்ப வாச்சும் மூச்சு திணறும்போது அப்படி காத்து வாங்க நான் மெட்ராஸ் வருவேன். அப்ப எனக்கு இந்த 'ஆஸ்ரமம்' வேணும்."

தாமு ஆள் காட்டி விரலை வளைத்து அந்த வீட்டுத் தரையைக் கொத்துகிற மாதிரி சைகை செய்து காட்டினான்.

"நான் யோசிக்கணும்."

புகையை இழுத்து ஊதிவிட்டு தாமு சிரித்தான்.

"ஐ லைக் தட் ஆன்ஸர். யோசி, நல்லா தெளிவா யோசி. என்ன கேக்கணும்னாலும் ப்ளெய்னா கேளு. ஒனக்கு ஒரு வாரம் 'டைம்' தர்றேன்"

தாமு எழுந்தான். சிகரெட்டை ட்ரேயில் வைத்து நசுக்கினான்.

"அந்த ஸ்விட்சை 'ஆஃப்' பண்ணு" என்று ஃபேனைச் சுட்டிக் காட்டிவிட்டு, ட்ரஸ்ஸிங் டேபிள் முன்னால் போய் பௌடர் கொட்டிக் கொண்டான்.

"நீ போய் டிரஸ் பண்ணு.. நீ என்னோட வர்றே?" என்று உத்தரவு போல் சொல்லிவிட்டுப் பவுடர் போடத் தொடங்கினான்.

எதற்கு என்று புரியாவிட்டாலும் சிவா போய் டிரஸ் பண்ணத் தொடங்கினான்.

இருவரும் கிளம்பி வெளியே வரும் போது வாசலில் யாருடனோ பேசிக் கொண்டிருந்த திஷ்யா, அவர்களை நிமிர்ந்து பார்த்தாள்.

தாமுவின் கூலிங் கிளாஸ் அணிந்த கண்களில் ஓடிய ஏதோ ஒரு விஷமச் சிரிப்பு, உதட்டோரம் சிதறி வழிந்ததை சிவா கவனித்தான்.

அவனுள் எங்கோ கரித்தது. உதடுகளை நெளித்துக் கொண்டு திஷ்யா விசுக்கென்று மோவாயை நொடித்துத் திரும்பினாள். அந்த வேகத்தில் அவளது கூந்தல் தாவி அவள் மார்பின் மீது விழுந்தது.

தாமு மோட்டார் சைக்கிளை ஸ்டார்ட் செய்தான். அது ஜப்பான் மேக். அதன் ஓட்டத்திலேயே பில்லியனில் போகிறவனும் டிரைவரும் கத்தாமல் பேசிக் கொள்ளலாம்.

மோட்டார் சைக்கிளை செலுத்திக் கொண்டே தாமு ஒரு கேள்வி கேட்டான்.

"டு யூ லைக் தட் கேர்ள்?"

"யாரு.. திஷ்யாவா?"

"எஸ்"

அதற்கு சிவாவிடம் சலனமில்லை.

"ஓ ஸாரி சிவா! நீதான் ரிஷியாச்சே.."

அவனது மோட்டார் சைக்கிள் போஸ்டர் தின்னும் சிந்திப் பசுவின் ஆயுசை நீடிக்க முயன்றது. ப்ரேக் அடிக்காமல் வளைத்து அந்த பசு, அதன் பரம்பரை, அதை வளர்ப்பவன், பிறப்பின் மர்மம் ஆகிய எதைப் பற்றியும் விமர்சிக்காமல் தாமு தன் விஷயத்தில் மூழ்கியிருந்தான்.



"ஷி ஈஸ் லவ்லி.."

சிவா தொண்டையை விழுங்கினான்.

"லைஃபோ... லல்வோ... சிவா அட்டாக் இட். ஃபர்ஸ்ட் யூ அட்டாக் இட். யோசிச்சே.. தயங்கினே.. தென் நீ ஒரு 'யூஸ் லெஸ்—போயட்'டாததான் இருக்கணும்"

மோட்டார் சைக்கிள் அரசுடைமையாக்கப்பட்ட அந்த பாங்கின் ஓரமாக வந்து நின்றது.

"எறங்கு!"

கைது செய்யப்பட்டுப் பின் தொடர்கிறவன் போன்று சிவா பின்னால் போனான்.

மானேஜரின் அறையில் தாமு நுழைந்ததும் அவர் எழுந்து வரவேற்றார்.

சிவாவை அவன் அறிமுகப்படுத்தினான்.

"திஸ் ஈஸ் மிஸ்டர் சிவா. எபட்டிங் ரைட்டர்"

"க்ளாட் டு மீட் யூ" மானேஜர் கை குலுக்கினார்.

"இவர் பேரிலே ஒரு அக்கவுண்ட் 'ஓபன்' பண்ணனும்" என்று செக்கை நீட்டிக் காட்டினான் தாமு.

"ஓ எஸ்"

சிவா மீண்டும் ஒரு முறை தாமுவின் பெருந்தன்மை முன்னர் தான் குறுகி நிற்பதை உணர்ந்தான்.

## 9

**தா**மு அது வரை சிவாவை ஒர்க்ஷாப்பிற்கு வரும்படி சொன்னதில்லை.

அன்று காலை "சிவா, ஒர்க்ஷாப்புக்குப் போவோமா?" என்று கேட்டான்.

அவன் 'சரி' என்று குளித்துத் தயாரானான்.

"எந்த வகையிலும் இது கம்பெல்ஷன் இல்லே. ஜஸ்ட் வந்து பாரு. அண்டர்ஸ்டாண்ட் தி நேச்சர் ஆஃப் தி ஜாப். எழுத்தாளனுக்கு இதெல்லாம் உபயோகப்படும்னு நெனச்சுட்டு வா!"

மீண்டும் இரவு வீடு திரும்பும் வரை சிவா அவனோடு இருந்தான். தாமு சிவாவை சமைக்க விடவில்லை. இருவரும் ஹோட்டலில் சாப்பிட்டனர். அல்லது பிரீதா வீட்டிற்குச் சென்றனர்.

ஒரு நாள் சிவா தான் சமைப்பதாக வற்புறுத்தினான்.

"எ ரைட்டர் ஷுட் நாட் குக் ஃபார் மீ" என்று அடித்துச் சொல்லி விட்டான் தாமு.

சுத்தியல் ஓசை. வெல்டிங்கின் மக்னீஷிய வெளிச்சம், பெய்ண்டின் மணம்... கிரீஸும் பெட்ரோலும் இரும்பும் குலவும் வாசனை.

கார்கள், வாகன்கள், டிராக்டர்கள், ஸ்கூட்டர்கள், தொழிலாளிகள், வேலை தெரிந்தவனின் செருக்கு, அப்பிரண்டிஸ்ஸின் அடக்கம், வாடிக்கையாளர்களின் பிக்கல் பிடுங்கல்கள்.

சிவாவின் உலகம் ஒரு வெறுமையிலிருந்து எந்திரங்களும் மனிதர்களும் ஒருவருக்கொருவர் சவால் விடும் புதிய சந்தடிக்கு விஸ்தரித்தது.

ஒவ்வொரு உலகமும் சுவையானவை தான். அவற்றின் பிரச்னைகளும் ரசமானவை தான்.

எனினும் தனது உலையில் தான் தகித்துக் கனன்று குழம்பாகி, அக்னி தனது வார்ப்பில் பரவிக் குளிர்ந்து



தன்மயமாய் நிற்கும் அந்த எழுத்தின் அனுபவத்திற்கு நேரம் எங்கே?

'எப்ப சார் ரெடியாகும்... என் காருக்கு எப்ப டெலிவரி கொடுப்பீங்க? ஸ்பேர் பார்ட்ஸ் சிந்தாரிப் பேட்டை பூரா சுத்தினேன், கெடைக்கலே. ஆக்ஸிலேட்டர், க்ராங்க் ஷாஃப்ட், கியர் பாக்ஸ்' அலைமோதலும் அவசரமும் யந்திர உறுப்புக்களும் அவனது நேரத்தை, பசித்த மலைப்பாம்புகள் போன்று கவ்வி விழுங்கக் காத்திருந்ததை, சிவா கவனித்தான்.

அன்றைய மாலை அவ்வளவு பரபரப்பில்லாத வேளை. கடைசியாக எக்ஸிபிஷன் காண்ட்ராக்டர் ஒருவர் வான் ஒன்றை ரெடி செய்து முடித்து விட்டுத் தொழிலாளிகள் சோப்புப் போட்டு கை கழுவி விட்டுக் கிளம்பினர்.

ஒர்க்ஷாப்பில் உள்ள பாத்ரூமில் தாமு குளிக்கப் போனான்.

அதற்குள் காண்ட்ராக்டர் அனுப்பியதாக வான் டிரைவர் வந்து டெலிவரி கேட்டான்.

"குளிக்கப் போயிருக்காரு... ஒக்காருங்க" என்று மேஜை மீதிருந்த போர்ட்டபிள் டைப்ரைட்டரில் ஒரு கடிதத்தை டைப் செய்யத் தொடங்கினான் சிவா.

உள்ளேயிருந்து தாமு கேட்டான்.

"யார் சிவா!"

"எக்ஸிபிஷன் காண்ட்ராக்டரோட வான் டிரைவர்"

"மடாடரா"

அவ்வளவு நீளமான அடையாளம் வேண்டியதில்லை என்று மறைமுகமாகச் சொல்லிக் கொடுக்கிறான்.

"ஆமா"

"மேலே பில் இருக்கு! கேஷ் கொண்டு வந்திருக் காராமா?"

"கேஷ் கொண்டாந்தீங்களாய்யா?" சிவா அஞ்சல் செய்தான்.

"வண்டி ரெடியாண்ணு பாக்க வந்தேன்"

"வண்டி ரெடி பில் இதோ."

"சார், எனக்கு ரொம்ப அர்ஜண்டா வேணும். நீங்க வண்டியோட வாங்க. ட்ரைலர் பாத்த மாதிரியும் இருக்கும். காண்ட்ராக்டர் கிட்டேயிருந்து பில் கிளியர் பண்ணி அனுப்பிடறேன்" என்ற டிரைவர் சிவாவைப் பார்த்து கெஞ்சினான்.

உள்ளே குளிக்கும் ஓசை நின்றது.

"யாரூஉஉ... சதா?"

டிரைவர் சதா சுவாதீனமாக பாத்ரூமுக்குள் நுழைந்து ப்ளஷ்டோருக்கு மேலே தெரிந்த தாமுவின் தலையைப் பார்த்து, "குட் மார்னிங் ஸார்!" என்றான்.

"குளிக்கக்கூட விடமாட்டியா சதா?"

"இன்னா பண்ட்டம்? எனக்கு அர்ஜெண்ட். கம்பெனி கம்பெனியா ஃபோன் போட்டுட்டு எங்கியும் வண்டி ஆப்டலே. நம்ப வண்டிய வுட்டுட்டு கை ஒடஞ்சி நிக்கறமாதிரி சிச்சுவேஷன்"

"இன்னாப்பா அவ்ளோ அவுசரம்?"

தாமுவினால் டிரைவர் பாஷையில் கூட பேச முடியும்.

"நாளைக்கி மினிஸ்டர் வர்றாரு. கட்டவுட் ஆர்டர் கொடுத்ததெல்லாம் அட்விடேஸ்மெண்ட் கம்பெனியிலே தயாராயி ரெண்டு நா ஆவப்போவுது. எடுத்தாரத்துக்கு தோதா வண்டி கெடைக்கில."

"சரி, பில்லை வாங்கிட்டுப் போய் கேஷ் எடுத்தா ! அப்பால வண்டிய டெலிவரி எடுத்துட்டுப் போ."

"தொரை...தொரை, நாளக்கி பத்து மணிக்கி மினிஸ்டர் வர்றாரு... பேனரு கட்டவுட் எல்லாம் கட்டி ஸீரியல் பல்ப் எல்லாம் ஜோடிக்கணும். இப்பவே மணி ஏழாவப் போவுது. நான் இனிமே போயி எலக்டிரீஷனைத் தடவணும்!"

"சிவா... ஒரு போன் போட்டு காண்ட்ராக்டர்கிட்டே வண்டி வந்ததுமே பணம் கெடைக்குமாண்ணு கன்ஃபர்மேஷன் கேளு!"

"ஓ... அத்தைச் செய்யுங்க!"

"நம்பர் என்னாப்பா ?"

"டி என் எய்ட் ஒன்டு டு ட்ரிபிள் த்ரீ..." என்று அவன் சொல்லத் தொடங்கினான்.

அடுத்த நிமிஷத்தில் காண்ட்ராக்டர் உத்திரவாதம் கொடுத்தார்.

"என்ன சிவா?" என்று சோப் போட்டுக்கொண்டே தகவல் கேட்டான் தாமு.

"வரச் சொல்றாரு. கேஷ் ரெடியாம்."

"பில் அமவுண்ட் சொன்னியா?"

"சொல்லிட்டேன்."

"சரி, நீ கூட போயி கேஷ் வாங்கிட்டு வா, ஐ'ல் வெய்ட் ஹியர். வர்றப்போ ஆட்டோவிலே வந்துடு. வி ஹாவ் அன் எங்கேஜ்மெண்ட்."

மொட்டாரில் ஏறிக் கதவை அடித்துச் சாத்தினான் சிவா.

என் தேவை.. என் தேவை என்று குளிக்க விடாமல், தூங்க விடாமல், சாப்பிட விடாமல், உதிரத்தை உறிஞ்சத்துடிக்கும் உலகம் அது. கவிதையை ஸ்கூட்டரின் கியர் பாக்ஸிலும் சிறுகதையை அம்பாஸிடரின் ஸ்பார்க் ப்ளக்கிலும் எதிர்பார்க்கும் உலகம்.

அவனுக்கு வேறோர் உலகம் ஞாபகம் வந்தது.

அங்கே ரைஸ்மில் ஓடியது. நெல்லின் உமியையும் தவிட்டையும் அசுர நாவால் அரைத்து அரைத்து தள்ளிய வாறே கரண்ட் கோட்டா தீரும் வரை இரவும் பகலும் பாராது அது ஓடியது.

அங்கே அம்மா அரிசி புடைத்துக் கொண்டிருந்தாள்.. அதன் இயக்கத்திற்குள் இணைந்து இரவையும் பகலையும் அழித்து..

கிறீச்சென்று பிரைக்கைப் பிடித்து ஓரமாக நிறுத்தினான் டிரைவர்.

"இங்கே சுக்குத் தண்ணி நல்லாருக்கும். ஒரு க்ளாஸ் போட்டுக்கலாம். வர்றீங்களா சார்!"

அத்தனை அவசரத்திலும் டிரைவருக்கு சுக்கு நீர் மீது ஒரு கண்.

"வாண்டாம், நீ போய்ட்டு சீக்கிரமா வா"

"தோ"

அவன் திரும்பி வந்து, காண்ட்ராக்டரிடம் போய் பில் பணத்தை வாங்கிக் கொண்டு ரசீதில் கையெழுத் திட்டான் சிவா.

வெளியே வரும்போது "போக ஒரு ஆட்டோ" என்ற சிந்தனைதான் இருந்தது.



வருகிற அவசரத்தில் யாரையோ இடித்து விட்டான், பாம்பே ஷோ சூதாட்ட ஸ்டால் அருகில்.

"ஏம்பா... கண்ணு கிண்ணு?" என்று சீற்றம் கிளம்பவும் திரும்பினான். கம்பவுண்டர் புண்ணியகோடி. திஷ்யாவின் அப்பா.

அவர் பார்வை மீண்டும் ஸ்டால் மீது தாவியது. குறிபார்த்து எறிந்தால் பணத்தை ஐந்து மடங்காகத் தரும் இடம்.

சென்ட்ரல் ஸ்டேஷனில் திஷ்யா சொன்னவை அவிழ்ந்து கொட்டிய ஆடியோ டேப் மாதிரி சுருள் சுருளாய் அவனைச் சுற்றிக் கொண்டது.

தாமு கொஞ்சநேரம் காத்திருக்கட்டும்.

"எங்க சார்.. இப்படி?"

"அட... சிவா எங்கே இப்படி?"

கூட ஏதோ ஒரு சில்க் ஜிப்பா. தங்க பிரேம் மூக்குக் கண்ணாடி, பன்னீர்ப் புகையிலை. நாற்பது வயசில் ஏதோ எழுபது வயது மேடு பள்ளங்களை முகத்தில் சுமந்த கிழட்டுத் தோற்றம்!

"இவரைத் தெரியுமா?"

அவன் விழித்தான்.

"இவர் பத்மனாபா பிலிம்ஸ் ஸ்டோரி டிபார்ட் மெண்ட்லே சீனியர் ரைட்டர். அந்தக் காலத்திலே பத்திரிகைகள்ளே ஓஹோன்னு வெளுத்து வாங்கியிருக்கார். பெரிய ரைட்டர். காளிசரணன்னு கேள்விப்பட்டிருப்பே.. சார். இவரு எங்க வீட்டிலே பக்கத்துப் போஷன்லே குடியிருக்கார். போன வாரம் நந்தவனம் பார்த்தீங்களா... அட்டைப் படச் சிறப்புக் கதை. எதிரொலியே நீ எங்கே. இவர் எழுதியது தான்!"

"அப்படியா.. ஒண்டர்ஃபுல்.. ஒண்டர்ஃபுல்.."

"அதென்ன சுதையா சார் அது? மார்வெல். கொண்ணுட்டீங்க!" மாமூல் சினிமாக்காரர்கள் மாதிரி அவர் பாலிஷாகப் புகழ்ந்தார். ஹாவென்று உச்சிக்கு தூக்கிப்போய் உருட்டித் தள்ளுகிற மாதிரி.

சிவா இறுகிய உருக்கு மாதிரி நின்றான்.

காளிசரண். பத்து வருஷத்துக்கு முன் தமிழில் அது என்ன பேர்! தமிழ்ச் சிந்தனையிலும் உணர்விலும் சிம்ம கர்ஜனை போன்று எத்தனை கம்பீரத்தை அது தோற்றுவித்தது!

பன்னீர்ப் புகையிலையும் வெள்ளி வெற்றிலைச் சம்புடமுமாய் நிற்கும் இந்த மனிதனா அந்த காளிசரண்!

அன்று விடிந்த பொழுதையும், அந்த பயணத்தையும் சிவா கசப்பாகச் சபித்தான்.

"பத்மநாபா ஃபிலிம்ஸ்லே இவர்தான் ஆல் இன் ஆல். டிஸைடிங் ஃபேக்டர்னு வச்சுக்கயேன் சிவா!"

சிவா பத்து வருஷத்துக்கு முந்திய காளிசரணுக்கு வணக்கம் செய்தான்.

"நம்ம டாட்டரை எப்படியாவது சினிஃபீல்டிலே நொழைச்சுடணும். தினேஷ்குமார் அபிப்பிராயப் படறார். சார் தான் 'கைட்' பண்றார்"—புண்ணியகோடி.

"காளிசரண், நீர் பத்து வருஷத்துக்கு முந்தி செத்திருக்கலாம்."

அவன் முகமாற்றத்தில் காளிசரணனுக்கு சரேலென்று எல்லாம் உறைத்து விட்டது.

"தம்பி... ஒங்களுக்கு இன்ட்ரஸ்ட் இருக்குமானா ஒங்க ஷார்ட் ஸ்டோரியை ஃபில்முக்கு ட்ரை பண்றேன். அது அற்புதமான சப்ஜெக்ட்."



"ஸாரி."

காளிசரணனை பத்து வருஷத்துக்கு முன் கொண்டு போய் வைக்க ஒரு நிமிஷம் முயன்றான்.

"ஏன்..ஓய்?"

"எனக்கு சினி ஃபீல்ட் வேணாம். தாங்க் யூ ஃபார் யுவர் இண்ட்ரஸ்ட்."

காளிசரணன் வெற்றிலைச் சம்புடத்தைத் திறந்து வழக்கத்தை விட கொஞ்சம் அதிகப் புகையிலையாக அள்ளினார்.

"எங்க திஷ்யா பேசற மாதிரியே பேசறியேப்பா! வாட் ஹாப்பண்ட் டு தீஸ் யங் பீப்பிள்..?"

சார் ஒங்க கிட்ட ஒரு நிமிஷம்!

புண்ணியகோடி திடுக்கிட்டார்.

"எங்கிட்டேயா?"

"நீங்க வேணும்ணா பேசிட்டு வாங்களேன். நான் வெய்ட் பண்றேன்" காளிசரன் அனுமதி வழங்கினார்.

"இப்பவே பேசணுமா சிவா?"

"சரி. வீட்டிலேதான் பேசுவோம். வீட்டுக்கு எத்தனை மணிக்கு வருவீங்க?"

"அ..அங்.. ஒரு நைன் தர்ட்டி ஆவுமில்லே சார்.."

என்று காளிசரணனைக் கலந்தாலோசித்தார் புண்ணியகோடி.

"ஓ...ஆய்டும்...டெஃபனிட்டா ஒன்பதரைக்கு வீட்டுக்கு வந்துடுவார். கொழந்தை கிட்டே சொல்லுங்கோ"

பல்லைக் கடித்துக் கொண்டு சிவா வெளியே வந்தான். எதிரே தெரிந்த ஆட்டோவை நிறுத்தினான்.

காளிசரண்.. எது உங்களை சர்க்கஸ் சிங்கமாக்கியது? வாழ்க்கையா.. வயிற்றுப் பிழைப்பா.. வயிறு.. வயிறு.. அது மனிதனை... அவன் இதயத்தை... மூளையை... ஆத்மாவை இப்படி ஜீரணித்து விட முடியுமா?

ஆட்டோ ஒர்க்ஷாப்பை அடையும்போது சிவா ஒரு தீர்மானத்துக்கு வந்திருந்தான்.

புண்ணியகோடி ஒன்பதரைக்கு வரவில்லை. அவுட்டோர் ஷூட்டிங் பார்க்க நாலு நாள் பெங்களூர், ஊட்டி என்று போய்விட்டார்.

## 10

நந்தவனத்தில் வெளிவந்த அட்டைப்படச் சிறப்புச் சிறுகதைக்கு வாசகர் கடிதம் ஏராளமாக வந்திருந்தது.

அந்தப் பத்திரிகை அலுவலகம் வந்திருந்த கடிதங்களை ஒரு கட்டாகக் கட்டி அவனது முகவரிக்கு அனுப்பியிருந்தது.

ஓஹோ வென்று புகழ்ந்து வந்திருந்த கடிதங்கள் அவனைப் பயமுறுத்தின.

நாலைந்து கடிதங்கள் நாசூக்காகக் குறை கூறியிருந்தன. ஆசிரியர் முயற்சித்தால் மேல் நாட்டு எழுத்தாளர் தரத்துக்கு உயரலாம் என்று ஒரு கடிதம் ஆரூடம் கூறியது.

மீண்டும் மீண்டும் அந்தக் கடிதங்களைப் படித்தான் சிவா.

புகழ் ஒரு போதை என்பது பளிச்சென்று உறைத்தது. தன்னையறியாது கர்வம் தனக்குள் முளைவிடுவதை சிவா கவனித்தான்.



எது எழுத்தாளனுக்கு மட்டுமின்றி, மனிதனுக்குக் கூட அத்தியாவசியமோ அந்த மென்மையான உணர்வுகளின் மீது பிறரது பாராட்டுக்கள் ஒரு பட்டுப் போர்வை போர்த்தின. ஒரு தங்கச் சிம்மாசனத்தில் தனிப்பீடமிட்டு ஒதுக்கின.

முதல் கதை வெளிவந்த நாலைந்து வாரத்திற்குள் அவன் எழுதி எழுதித் திரும்பி வந்திருந்த பழைய கதைகளை வெவ்வேறு பத்திரிகைகளுக்கு அனுப்பி வைத்தான்.

நான்கே மாதத்திற்குள் அவன் கதைகள் எட்டு பிரசுரமாகி விட்டன.

ஒவ்வொன்றும் வெற்றி முரசுகொட்டிக் கொண்டு வெளி வந்தன. வரவேற்கப்பட்டன. போதாததற்கு மூன்று பத்திரிகைகளில் அவன் புகைப்படம் வேறு பிரசுரிக்கப் பட்டு விட்டது.

தெருவில் போகும்போது அவனை சுட்டிக்காட்டி இன்னார் என்று யாராரோ பேசிக் கொண்டார்கள்.

புகழ் முதலில் கூச்சப்படுத்தியது; பிறகு கர்வ மூட்டியது.

அப்புறம் அதில் ஒரு சுகம் தென்பட, அடிக்கடி அந்த சுகத்திற்கு மனம் ஏங்கலாயிற்று.

சட்டென்று ஒருநாள் சிவா உறக்கத்திலிருந்து விழிப்பது போல் உதறிக் கொண்டு சுய உணர்வு பெற்றான்.

'விடுதலை பெறுக'

அண்செட்டியில் வெற்றிவேல் முன்னிலையில் கேட்ட அந்த வாசகம் பளீரென்று மனசில் சுடர் வெளிச்சமாகப் பரவிற்று.

பாபா ஓம்கார்நாத்தின் மகன் நான். என் அம்மா திருப்பத்தூரில் முதலியார் ரைஸ் மில்லில் தவிடு விட்டுக் கொண்டிருக்கிறாள்.

புகழே நீ ஒரு புழுதி மாதிரி என் மீது படிந்து என்னை நாசமாக்கி விடாதே; விலகி நில்'

என்று மனசிற்குள் அவன் ஒரு கட்டளை இட்டான்.

இந்த 'ஸ்பாட் லைட்' ஜாஜ்வல்யத்திலிருந்து ஓடிப் போய் உண்மையின் எளிமையை தரிசிக்க வேண்டும் போலிருந்தது.

அவன் நேராக அம்மாவைப் பார்க்கத் திருப்பத்தூர் போனான்–பாங்கிலிருந்து எல்லாப் பணத்தையும் அவளுக்குக் கொடுக்க எடுத்துக் கொண்டு.

ஒற்றை அறையுள்ள அந்த சின்ன வாடகை வீட்டில் கிழிந்த பாயில் அழுக்கான தலையணையில் படுத்துக் கொண்டு, நெல் மிஷினிலிருந்து அம்மா வரும்வரை காத்திருந்த போது புகழின் மயக்கம் சுத்தமாய்க் கலைந்து விட்டது.

இன்னும் நான் பழைய சிவாதான்.

அப்பாடா.. இது எத்தனை ஆறுதலாக இருக்கிறது!

வரும்போதே "எப்படா வந்தே?" என்று கேட்டுக் கொண்டே நுழைந்தாள் தாட்சாயணி.

உடல் மெலிந்து, முகமெல்லாம் தவிடு படிந்திருக்க சாயம்போன சேலையில் அவளைக் காண நெஞ்சு நைந்தது. கண்ணிலும் உதட்டிலும் பாசம் பூரித்தது.

"அரை மணி நேரம் ஆச்சும்மா"

"ஏண்டா எளைச்சுப்போயிருக்கே"

அவன் சிரித்தான்.



"என்னடா சிரிக்கறே?"

"எந்த அம்மாவுக்கும் தன் பிள்ளை எளைச்சிருக்கற மாதிரியே தான் தோணுமா?"

"அம்மாங்கள்ளாம் அசடுண்ணு சொல்றியா.."

"நீ எப்பிடிம்மா இருக்கே?"

அவன் அவள் கேள்விக்கு பதிலளிக்காது மடக்கினான்.

"எனக்கு என்ன..நான் நல்லாத்தான் இருக்கேன்"

"தான் எளைச்சிருக்கப்ப மகன் எளைச்சிருக்கறதை கண்டுபிடிக்க வேற யாராலே முடியும்?"

"அசடுண்ணு சொல்றே அப்ப.."

"நீ அசடானா நான் கசடாயிருப்பேம்மா."

"போதும் நிறுத்துடா" என்று அவன் மேலே புகழ்ந்து விட இடம் தராது, முகம் கை கால் கழுவி வர வெளியே புழக்கடைக்குப் போனாள். திரும்பியபோது சிவா–

"ஒரு மாசத்துக்கு முன்னாடி நான் பாபா ஓம்கார் நாத்தை சந்திச்சேன்" என்று கூறினான்.

அம்மா முகத்தைத் துடைத்துக் கொண்டு நெற்றியில் குங்குமம் வைக்கப்போனாள்.

"யாரது.. பெரிய மகானா?"

"பெரிய மகான் தான். எல்லோரும் பேசிக்கிட்டாங்க. எனக்கு அப்படித் தோணலே."

அவள் நெற்றியில் குங்குமம் வைத்துக் கொண்டு திரும்பினாள்.

"ஏன்?"

"நான் சாமியாராய் போகிறேன்னு தன் மனைவி கிட்டே விடுதலை வாங்கிட்டுப் போனவர் ஒரு மகானா..

அவருக்கு விடுதலை கொடுத்தாளே அந்த அம்மா ஒரு மகானா?"

அம்மாவின் முகம் அதிர்ச்சியடையும் என்று சிவா எதிர்பார்த்தான். மாறாக ஓர் அமைதி வந்தது.

"அவரைப் பாத்தியா?"

"பாத்தேன்."

"பேசினியா..."

"சூடு குடுக்கறாப்பிலே! ஓடி வந்தவர் மகானாகிட முடியாதுண்ணு சொன்னேன்."

"அதை அப்புறமா பேசலாம்... நீ கொஞ்சம் சாப்பிடறியா... காலைலே வடிச்ச சோறு தான் இருக்கு. புளிக்கொழம்பு."

"எனக்குப் பசிக்கலேம்மா... நீ சாப்பிடு."

தந்தையைப் பற்றி அம்மா ஆர்வமாக விசாரிப்பாள் என்று எண்ணியதற்கு ஏமாற்றமாயிருந்தது.

"நல்லா சொன்னியே... ஒனக்கு புளிக்கொழம்பு புடிக்காது இல்லே. இரு வேற சோறு வடிச்சு ஒரு பருப்புக் கொழம்பு வக்கிறேன்"

தான் சாப்பிடாமல் அவள் சாப்பிட மாட்டாள் என்று உணர்ந்தான்.

"அடுப்பை மட்டும் பத்த வச்சுக் கொடுத்துட்டு இப்படிவாம்மா... அந்தப் பழைய சாதத்தையே நான் தக்காளியும் வெங்காயமும் அரிஞ்சு போட்டு மசாலா சாதம் பண்ணிடறேன்" என்று எழுந்தான்.

"எனக்கு என்ன வேலையாம்...? நீ உக்காருடா" அம்மா அடுப்பு பற்ற வைக்கும் வேலையில் இறங்கினாள்.



"நான் யாருக்கோ தான் சமைச்சுப் போட்டிருக்கேன். ஒனக்கு ஏம்மா போடக் கூடாது? இன்னிக்கு நாந்தான் சமைப்பேன்" என்று சிவா பிடிவாதமாகச் சொன்னான்.

"சரி, உன் இஷ்டம்! தக்காளியும் வெங்காயமும் இருக்கு; அரிஞ்சு தர்றேன்" என்று தாட்சாயணி அரிவாள் மணையை எடுத்தாள்.

அடுப்பு பற்றிக் கொண்டது. வாணலி காயட்டும் என்று அதைத் தூக்கி அடுப்பின் மீது வைத்தான்.

அம்மா தக்காளி அரியலானாள்.

"நீ லெட்டரிலே எழுதவே இல்லையே"

அப்பாவைப் பார்த்ததைப் பற்றிச் சொல்கிறாள் என்று சட்டென்று இயைவு படுத்திக் கொண்டான் சிவா.

"இது எழுதற விஷயம் இல்லேம்மா... சொல்ல வேண்டியது... கேட்க வேண்டியது?"

"எப்படியிருக்கிறார்?..."

"வெள்ளை வெளேர்ணு மார் வரைக்கும் தாடி... தலை சுத்தமா நரைச்சிருக்கு. சாந்தியா... சௌக்கியமா இருக் கிறார். அவருக்கென்ன... கோடீஸ்வர சிஷ்யர்கள்! அமெரிக்காக்காரன்... கர்நாடகத்துக்காரன்... இப்படி."

அவள் சிறிதும் பாதிக்கப்படாமல் தன் வேலையில் மூழ்கியிருந்தாள். ஒரு முறை அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவன் மனசை ஊடுருவி அவன் குத்தலுக்கும் கிண்டலுக்கும் முற்றுப்புள்ளி வைப்பது போன்ற பார்வை அது.

"நீ என்ன கேட்டே... அவர் என்ன சொன்னார்?"

"நீங்க ஏன் ஓடினீங்கன்னேன்... நதி ஓடுகிறதுன்னு சொன்னாரு. தப்பி ஓடறது ஞானமில்லேன்னேன்... இலை பழுத்தால் உதிரும்னார். நான் விடலே. சொல்லாமே ஓடி வந்தீங்களேன்னு குத்திக் காட்டினேன். விடுதலை

பெற்றதுன்னாரு. யாரிடம்னு கேட்டேன். பெற வேண்டியவரிடம்னு சொன்னாரு."

அவள் மௌனமாகக் கேட்டுக் கொண்டாள். அந்த வார்த்தைகளை எண்ணிப்பார்க்கிறவள் மாதிரி சற்று நேரம் கண்ணிமைகளை மூடினாள்.

வாணலி காய்ந்துவிட சிவா எண்ணெய் ஊற்றினான். தாளித்து விட்டு அரிந்த தக்காளி வெங்காயத்தைக் கொட்டினான்.

"அப்புறம் என்ன சொன்னாரு?"

"விடுதலை பெறுகன்னாரு."

மசாலா சாதத்தைக் கிளறி விட்டுக் கொண்டே அம்மா மௌனமாக உட்கார்ந்திருப்பதைத் திரும்பித் திரும்பிப் பார்த்தான் சிவா.

அவள் தியானிக்கிறாளா?

யோசிக்கிறாளா...

வருந்துகிறாளா...

பழங்கணக்கைப் புரட்டுகிறாளா... ஒன்றும் புரியவில்லை.

அவன் தன்னையே பார்ப்பதை ஒரு குறுகுறுப்பினால் உணர்ந்து தாட்சாயணி சிவாவைத் திரும்பிப் பார்த்தாள்.

"என்னடா பாக்கறே?"

"நீ அப்பாவுக்குஅனுமதி கொடுத்தியாம்மா?"

தாட்சாயணி அவன் கண்களைப் பார்த்தவாறே பதில் சொன்னாள்.

"ஆமாம்."



"ஏம்மா... ஒன்னாலே எப்பிடிம்மா அப்படி ஒரு அனுமதி கொடுக்க முடிஞ்சது?"

தாட்சாயணி அவனுக்கு நேர் மேலே மாட்டியிருந்த கிருஷ்ணன் படத்தை நிமிர்ந்து பார்த்தாள். ஒரு பெருமூச்சு விட்டாள்.

"சிவா அவர் மகான் தான்! தாலி கட்டி மறுமூச்சு விருந்துக்கு வந்தப்பவே அவர் என்னன்னு கண்டு பிடிச்சுட்டேன். பதிமூணு வருஷம் என்னோட அவர் பொழச்ச பொழப்பு இருக்கே... உங்ககிட்டே காட்டின பாசம் இருக்கே... எல்லாம் நெல்லுக்கு மேலே உமி மாதிரி."

சிவா, முதன் முறையாக தன் தந்தையைப் பற்றி தாய் பேசுவதைக் கேட்டான்.

"இப்படிப் பொறப்பட்டுப் போறவர் ஏம்மா கல்யாணம் பண்ணிகிட்டார்!"

"அவரா பண்ணிகிட்டாரு? பையன் அடிக்கடி தியானம் பண்ணிகிட்டு உட்கார்ந்திருக்கானேன்னு என் மாமியாரும் மாமனாரும் பண்ணிவச்சாங்க."

அவர் ஏன் குழந்தை பெற்றுக் கொண்டார் என்ற கேள்வி அவன் தொண்டை வரை வந்தது. ஆனால் கேட்கவில்லை.

"எனக்குத் தெரிஞ்சு அவரா விரும்பி எந்தக் காரியமும் செய்யல்லே"

கேட்க முடியாத கேள்விக்குச் சொல்ல முடியாத பதிலை அம்மா சொல்லிவிட்டாள்.

சிவா திரும்பி மசாலா சாதத்தை அடுப்பிலிருந்து இறக்கினான்.

"என்னிக்கோ ஒருநாள் அவரு பொறப்பட்டுப் போயிடுவாருன்னு மட்டும் எனக்குத் தெரியும். அதை ஒவ்வொரு நாளும் நான் எதிர்பார்த்துட்டே இருந்தேன்."

சிவா அதைக் கற்பனை செய்து பார்த்தான்.

ஒவ்வொரு நாளும்...

இன்று தானா... இல்லை நாளையா... இன்றில்லை. அம்மாடா... அது இன்றில்லை.

ஒருவேளை நாளையாக இருக்குமோ?

இப்படியே பதின்மூன்று வருடங்கள். அவனுக்கு முதுகு சிலிர்த்தது.

"அவர் எப்படிப் போவாருன்னு நான் நெனச்சு நெனச்சு பாத்திருக்கேன். அதுக்கெல்லாம் வித்தியாசமா என்னையே அவர் அனுமதி கேட்பார்னு மட்டும் எதிர் பார்க்கலே. கேட்டார்."

"நீ பேசாம போய் வாங்கன்னு சொல்லிட்டியா?"

"இல்லே... எனக்கு பதில் சொல்லுங்க. நான் எப்படி ஜீவிக்கறதுன்னு கேட்டேன். அவர் இதோ இந்த கிருஷ்ணன் படத்தைக் காட்டினார். பட்டுன்னு எனக்கு ஒரு தைரியம் வந்தது. போற வழிக்கு பாறாங்கல்லா நான் இருக்க வேண்டாமேன்னு தோணிச்சு. தடுத்து நிறுத்தி யிருக்க முடியுமா?"

தாட்சாயணி சிவாவுக்காக ஒரு தட்டை எடுத்து வைத்தாள். 'அம்மாவோடு ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டு எத்தனை நாளாயிற்று?'

சிவா இன்னொரு தட்டை எடுத்து அவள் முன்னால் வைத்தான்.

"நீ மொதல்லே சாப்பிடுடா"



"ரெண்டு பேருமே சாப்பிடலாம்மா"

அவள் வாணலியிலிருந்த சாதத்தை ஒரு போகணியில் கொட்டி முதலில் அவனுக்குப் பரிமாறிக் கொண்டே சொன்னாள்.

"அழுது ஆர்ப்பாட்டம் பண்ணி அணைகட்டி நிறுத்தியிருக்கலாம். எத்தனை நாளைக்கு அது முடிஞ் சிருக்கப் போவுது?"

அவள் தனக்குப் பரிமாறிக் கொள்ளாததை சிவா கவனித்தான். அன்னக்குத்தியை எடுத்து சாதத்தை அள்ளி அவள் தட்டில் போட்டான்.

**கா**லையில் அவள் மிஷினுக்குப் போவதற்காக வெகு சீக்கிரம் விழித்து அவனுக்காகச் சமைக்கத் தொடங்கி யிருந்தாள். சிவாவின் தூக்கம் கலைந்து விடக்கூடாதே என்பதற்காக ஓசைப்படாமல் காரியங்களைச் செய்வது அரைத் தூக்கத்தில் அவனுக்குத் தெரிந்தது.

அவன் எழுந்து உட்கார்ந்தான்.

"ஏம்மா, இவ்ளோ காலையிலே?"

"மிஷினுக்குப் போகணுண்டா"

"இனிமே நீ மிஷினுக்குப் போக வேணாம்"

"எதை நம்பி என் கைத்தொழிலை விட்டுடச் சொல்றே?"

"நான் எழுதறேம்மா... அதுலே காசு கெடைக்குது"

"எழுத்து நிரந்தரமில்லேப்பா. ஒனக்கு பர்மனெண்டா ஒரு வேலை கெடைக்கட்டும். நான் விட்டுடறேன்"

சிவாவிற்கு தாமு சொன்னது நினைவு வந்தது. எழுத்தை நம்பிவிடாதே!

"அம்மா, உன்னை ஒண்ணு கேக்கணும்னே இங்கே வந்தேன்?"

"என்னடா அது?"

"ஒரு மோட்டார் ஒர்க்ஷாப்.. நான் இருக்கிறேனே.. அந்த வீட்டுக்காரருடையது. அந்த ஒர்க்ஷாப் மானேஜரா இருக்கச் சொல்லி கூப்பிடறாரு."

"ஏன்.. அவருக்கு என்ன?"

"அவர் மதனபள்ளிக்குப் போயிடறாராம்."

"அப்ப ஒர்க்ஷாப் அங்கே எதுக்கு?"

அதற்கு சிவாவால் தெளிவான பதிலைச் சொல்ல முடியவில்லை.

அதற்கு என்ன பதில் சொல்வது என்று யோசிக்கும் போதுதான் சிவாவுக்கு தாமுவின் விருப்பத்திற்கு இசைவாக இயங்க வேண்டிய கருவியாகத் தன்னை அவன் பயன்படுத்துகிறானோ என்று தோன்றியது.

"நல்லா வளந்துட்ட தொழிலை ஏன் விடணும்ணு நெனக்கிறார்!"

"..."

"அப்ப அவருக்குக் கட்டுப்பட்டுதான் நீ இருக்கணும். உன்னாலே அப்படி இருக்க முடியாதே"

'உனக்காக எதற்கும் கட்டுப்பட்டு நான் இருப்பேன்' என்று நினைத்தான் சிவா.

அவன் மௌனமாக இருப்பதைக் கண்டு தாட்சாயணி தொடர்ந்தாள்.

"எதையும் யோசிச்சுச் செய்."

காலையிலிருந்து மாலை வரை யந்திரம் அரைத்துக் கொட்டும் அரிசியில் தவிடு புடைக்கும் அம்மா.. யந்திரத்துக்கும் ஒரு முதலாளிக்கும் கட்டுப்பட்டிருக்கும் அம்மா.. தான் ஒருவரிடம் கட்டுப்படுவதை விரும்பாத அதிசயத்தை சிந்தித்துக் கொண்டே சிவா எழுந்து பாயைச் சுருட்டினான்.



"எந்தத் தொழில் செஞ்சாலும், எங்கே உத்தியோகம் பண்ணினாலும் யாருக்காவது கட்டுப்பட்டு தானேம்மா ஆகணும்!"

அரிசி கழுவிக் கொண்டே அம்மா பதிலளித்தாள்.

"அது மெய்தான்! நீயா விரும்பி மனசார ஏத்துகிட்டா நீ எதுக்கும் கட்டுப்பட்டதா ஆகாது. வேற நிர்ப்பந்தத்துக்காக எதையாவது ஏத்துகிட்டா அது என்னிக்குமே ஒரு சுமைதான்."

அண்செட்டியில் சின்னாற்றங்கரையின் ஓரத்தில் ஆலமரத்தடியில் கேட்ட அந்த வாசகம் இரண்டாவது முறையாக மீண்டும் நினைவு வந்தது.

'விடுதலை பெறுக.'

அவன் குளித்து விட்டு வெற்றிவேலைப் பார்த்து வரக் கிளம்பினான்.

# 11

வெற்றிவேலின் சொந்த ஊர் சிங்காரப்பேட்டை திருப்பத்தூரிலிருந்து செங்கம் செல்லும் சாலையில் குறுக்கிடும் சிற்றூர். முப்பது கிலோ மீட்டருக்கு பஸ்ஸில் போக வேண்டும்.

மிகவும் வசதியான குடும்பத்திலிருந்து வந்தவன் வெற்றிவேல். சுற்றுப் பக்கத்தில் நல்ல பள்ளிக்கூடம்

இல்லை என்பதற்காகத் திருப்பத்தூரில் அவனுக்கென்று ஒரு வீட்டையே வாங்கினவர் வெற்றிவேலின் தந்தை பழனிச்சாமி. ஒரு சமையல்காரன் சமைத்துப்போட வெற்றிவேல் திருப்பத்தூரில் தங்கிப் படித்தான்.

வெற்றிவேலும் சிவாவும் பள்ளித் தோழர்கள். பின்பு கல்லூரித் தோழர்கள். பல முறை அவர்கள் வீட்டிற்குச் சிவா சென்றிருக்கிறான். வெற்றிவேலின் தந்தை பழனிச்சாமி முதலியாருக்கு சிவாவை மிகவும் பிடிக்கும். ஏழ்மை இருந்தாலும் எவரிடமிருந்தும் உதவியை ஏற்றுக் கொள்ளாத அவன் சுயமரியாதை அவரை மிகவும் கவர்ந்தது.

ஒரு மணி நேரம் பஸ்ஸில் பயணம் செய்து சிங்காரப் பேட்டையில் இறங்கினான். அங்கிருந்து ஊத்தங்கரைக்கு ஒரு தனிச் சாலை பிரிகிறது.

இரண்டு சாலையும் இணையும் சந்திப்பில் ஒரு சிறு ஹோட்டல் உண்டு. ஒரு ஹோட்டல்காரர் அங்கே நெடு நாட்களாக கடை நடத்தி வந்தார். அவருக்கு இவர்கள் இருவர் பற்றியும், இவர்கள் நட்பைக் குறித்தும் தெரியும்.

இறங்கியதும் சிவா நேராக அவரிடம் போனான்.

"வாங்க..வாங்க சிவா! பெரிய எழுத்தாளர் ஆயிட்டீங்கண்ணு கேள்விப்பட்டேன்..." என்று கல்லாவிலிருந்து எழுந்து கை கூப்பியபடியே அவர் வரவேற்றார்.

தெரிந்த மனிதர்களிடம் கிடைக்கும் புதிய மரியாதை சிவாவுக்குச் சங்கடமாக இருந்தது.

"வணக்கம்!" என்று கை கூப்பினான்.

"டேய் கந்தசாமி, சிவா வந்திருக்காரு... கவனி" என்று குரல் கொடுத்தார் அவர்.



"இருக்கட்டுங்க, அப்புறமா வர்றேன். வெற்றிவேல் ஊரில் இருக்கானா?"

"இருக்காரு.. வீட்டிலே இருக்க மாட்டாரு! புளியம் பட்டி காட்டு ரோட்லே மலையோரமா புதுசா நெலம் வாங்கியிருக்காரு. ஒரு மாசமா ஆளே கண்ணுலே தெம் படறதே அபூர்வம். நெலத்தை சீர்திருத்திகிட்டிருக்காரு."

இது புதிய செய்தி.

வெற்றிவேலைப் பற்றி இப்படி புதிது புதிதாய்ச் செய்திகள் கேட்டுக் கேட்டுப் பழகியிருந்தாலும் சிவாவுக்கு இது வியப்பாக இருந்தது.

"ஏன் சார், அவரைப் பார்க்கணுமா?"

"பாக்காமே பின்னே?"

"சைக்கிள் எடுத்துணு தான் போவணும். நாலு கிலோ மீட்டருக்கு மேலே ஆவுமே."

"அப்படியா.."

"அயர் சைக்கிள் எடுத்தாரச் சொல்லட்டுமா?"

"சொல்லுங்களேன்."

வெளியே நின்ற ஒரு மூட்டை தூக்கும் தொழிலாளியை எதிர்ச்சாரியில் ஒரு வாடகை சைக்கிள் எடுத்து வரச் செய்தார் ஹோட்டல்காரர்.

சைக்கிளில் நடுநடுவே வழி விசாரித்துக் கொண்டு கிட்டத்தட்ட மலையடிவாரத்திற்கு சிவா போனபோது நிலத்தருகில் ஒரு சிதை எரிந்து கொண்டிருந்தது.

சுற்றிலும் மேலே ஆடையில்லாத முப்பது நாற்பது கிராமவாசிகள் நின்றனர். வெய்யிலில் அவர்களின் கறுத்த உடம்பு வியர்வையில் மின்னியது.

சற்றுத் தொலைவில் ஒரு மரத்தடியில் பெண்கள் நாலைந்து பேர் நின்றிருந்தனர். அவர்களுள் ஒருத்தி முழங்

காலில் தலை புதைந்து பெருங்குரலில் அழுது கொண்டிருந் தான். அவன் அருகே காக்கி டிராயரும் டீ ஷர்ட்டும் அணிந்து வெற்றிவேல் நின்றான்.

அவளைச் சமாதானப் படுத்துகிறான் என்று சிவா வுக்கு காடும் மலையும் கானாறும் சூழ்ந்த அந்தப் பிரதேசத் தில் முகமறியாத ஒருவரின் தகனக்கிரியையின் போது வெற்றிவேலைச் சந்திக்கப் போய் சேர்ந்தது வினோத மாயிருந்தது.

கையை உயர்த்தி தன் வருகையை வெற்றிவேலுக்கு அறிவிக்க விரும்பிய சிவா தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

அதற்குள் வெற்றிவேல் அவனைப் பார்த்துத் தலையசைத்தான்.

அவனை நோக்கி நடந்து செல்வதற்குள் சமாதானப் படுத்திக் கொண்டிருந்தவளை விட்டு விட்டு வெற்றிவேல் அவனை எதிர் கொண்டான்.

எரியும் சிதை சுற்றி நின்றிருந்த பெண்கள் கூட்டத்துக்கு நடுவில் அவர்கள் சந்தித்தனர்.

"எப்போ வந்தே?" என்று கேட்டான் வெற்றிவேல். அவன் கண்கள் கலங்கி யிருந்தன.

"இப்போ தான்" என்று அவன் கலங்கிய முகத்தை உற்றுப் பார்க்காமல் தவிர்த்தபடியே சிவா பதிலளித்தான்.

"யார் செத்துட்டது?"

"எங்க நிலத்திலே ரொம்ப நாளா வேலை செஞ்சுக் கிட்டிருந்த கூலியாள். பீம ராஜுண்ணு பேரு. கெணத் துக்கு வெடி வச்சுட்டு வர்றதுக்குள்ளே ஒரு பெரிய கல் வெடிச்சு வந்து தலையிலே தாக்கி உயிர் போயிட்டது"

"வயசானவனோ"



"இல்லே.. நாப்பது வயது இருக்கும். கல்யாணமே இல்லாமே முதலியார் நெலத்திலேயே மண்டையைப் போட்டுடறேண்ணு சொல்லிக்கிட்டிருந்தான். நாங்கள் ளாம் வற்புறுத்தி போன வருஷம் தான் அவனுக்குக் கல்யாணம் பண்ணிவச்சோம். அதோ அழுதுகிட்டிருக்கே அதான் அவன் மனைவி"

சிவா அவளை ஒரு முறை திரும்பிப் பார்த்தான்.

"ஒரு விதத்திலே அந்த பீமராஜு எனக்கு ஒரு குரு"

வெற்றிவேலின் தொண்டை கம்மி விட்டது.

சிவா அவனைப் பார்த்தான். வெற்றிவேலின் கண்களிலிருந்து இரு கண்ணீர்க்கோடுகள் வழிந்திருந்தன.

"ஹி டாட் மீ தி இம்பார்டன்ஸ் ஆஃப் லேபர். உழைப்பு முக்கியம்னு அவன் போதிச்சான். வாய்ப் பேச்சிலே இல்லே. உண்மையா வாழ்ந்து"

வெற்றிவேல் டிராயர் பாக்கெட்டில் கை விட்டுத் துழாவினான். தேடியது அவனிடம் இல்லை. சிவா தன் கர்ச்சீப்பை அவனிடம் நீட்டினான். முகத்தைத் துடைத்துக் கொண்டு வெற்றிவேல் மேலே பேசினான்.

மரணம் அங்கே ஒரு விநோதமான அமைதியின் கூடாரத்தை நிறுவியிருந்தது. சடசடத்து எரியும் அந்தச் சிதை விறகின் ஒலிகள் மனிதர்கள் ஆரவாரத்திற்கும் பெரு மூச்சிற்கும் வைக்கும் இறுதி முத்தாய்ப்பு போல் சப்தித்தன. வெற்றிவேல் தொடர்ந்தான்.

"ஒரு நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பு விதியின்படி அவன் சுரண்டப் பட்டவன். அவன் பத்து வயதுப் பையனா இங்கே வந்தான். உழைப்பை அர்ப்பணம் பண்ணியே எங்க வீட்டிலே ஒரு நபர் ஆயிட்டான்.

"போன வருஷம் கல்யாணம் ஆனப்போ அவன் பெண்டாட்டியும் இந்த வீட்டு நபர் ஆனா. அவன் உழைப்புக்கு எந்த கூலியும் இல்லே. அவன் கேட்டது மில்லே.

அவனை நாங்க கேக்க வச்சதுமில்லே. நீ அவனைப் பாத்திருப்பே. அடையாளம் மறந்திருக்கும். அவன் எப்பவும் நெலத்திலேயே இருப்பான்"

இடது பக்க பாக்கெட்டில் கையை விட்டு வெற்றி வேல் ஒரு சிகரெட் பெட்டியையும் தீப்பெட்டியையும் எடுத்தான். ஒரு சிகரெட்டைப் பற்றவைத்து இழுத்தான். ஆழ்ந்த பெரு மூச்சுடன் தொடர்ந்தான்.

"ஹி டாட் மீ தி இம்பார்டன்ஸ் ஆஃப் லேபர்" அவன் மீண்டும் ஒரு முறை சொன்னான்.

"இந்த காட்டு நிலத்தை நாங்க தான் வாங்கணும்னு அவன் பிடிவாதம் பண்ணி வாங்க வச்சான். இதோ அங்கே புல்டேஸர் போயிருக்கு பாரு... இந்தப் பட்டை யெல்லாம் டிராக்டர் உழவு தெரியுதா? இருபத்தி மூணு ஏக்கர்."

கிழக்கும் மேற்குமாக வெற்றிவேல் ஆள் காட்டி விரலால் சுட்டிக் காட்டினான்.

"இதையெல்லாம் நான் தான் 'க்ளியர்' பண்ணினேன். அவன் தான் குரு."

வெற்றிவேல் சிதையில் எரிந்தவனைச் சுட்டிக் காட்டினான்.

மீண்டும் அவன் கண்களிலிருந்து கண்ணீர் பெருக் கெடுத்தது. சிவாவின் கைக் குட்டையில் அதைத் துடைத் துக் கொண்டே வெற்றிவேல் தொடர்ந்தான்.



"முட்டாள் தனமான அட்வெஞ்சரிஸத்திலிருந்து ஒங்க அப்பா... ஐ'ம் ஸாரி... பாபா ஓம்கார்நாத் என்னைக் காப்பாற்றினார். இதோ இவன் உழைண்ணு மௌனமா எடுத்துச் சொன்னான்."

சிதையைச் சுற்றியிருந்த கூட்டம் மெதுவாகக் கலைந் ததையும், மரத்தடியில் நின்ற பெண்கள் அழுது புலம்பிய வளைத் தேற்றி கைத்தாங்கலாக அழைத்துச் சென்றதையும் மௌனமாய்க் கவனித்தான்.

சிதைக்குக் காவலாய் இருவர் மட்டும் நின்றனர்.

"சிவா... இவன் அதிகமாப் பேசினதில்லே. எப்ப வாவது பேசுவான். எங்கிட்டே ரொம்பப் பிரியம். மரியாதை. ரொம்பப் படிச்சிருக்கேன் பாரு, அதனாலே" என்று தன்னைத் தானே வருத்தத்தோடு கிண்டல் செய்வது போல் ஒரு கசந்த சிரிப்புடன் வெற்றிவேல் சொன்னான்.

சிவா அவனுக்கு ஆறுதல் தருவது போன்று அவனது வலது கரத்தைப் பற்றிக் குலுக்கினான்.

"ஒரு நாள் என்ன சொன்னான் தெரியுமா? வாங்கற மூச்சு, குடிக்கிற தண்ணி. துண்ற சோத்துக்கு வஞ்சனை யில்லாமே ஒழைச்சுடணும் தம்பி. மீதியெல்லாம் மண்ணுலே கலந்து மண்ணாப் போவும்னான்."

சிவாவுக்கு சிலிர்த்தது.

"அவன் என்ன சொன்னாண்ணு புரியறதா? ஆடம் பரமா படிச்சவர்கள் பாஷையிலே சொன்னா பூமியிலே நீ ஆக்கிரமித்திருக்கிற ஸ்பேஸுக்கு தகுதியுள்ளவனா யிருண்ணு சொன்னான்."

வெற்றிவேல் சிகரெட்டை உறிஞ்சினான்.

"அது என் கண்ணைத் தெறந்தது. அதைச் சொன்ன வன் முப்பது வருஷத்துக்கு முன்னாடி, நான் பொறக்கற துக்கு முன்னாடி எங்க குடும்பத்துக்கு வந்தவன்.

"எந்த பிரதிபலனும் எதிர்பாராமே எந்த சபலத்துக்கும் ஆளாகாமே எந்த உரிமையும் கோராமே அவன் உழைச்சு உழைச்சு அதோ எரிஞ்சு கிட்டிருக்கான்."

சிவாவின் மனசுக்குள் ஒரு விம்மல் மடிந்தது.

"என் குடும்பம் அவனுக்கு கடன்பட்டிருக்கு. நானும் கடன்பட்டிருக்கேன். சிவா... ஒண்ணு இப்ப எனக்கு வெளங்கலேடா!"

"என்னது?"

"இந்த வாழ்க்கைக்கு என்னடா அர்த்தம்?"

சிவா நேற்று அம்மாவின் வாயிலிருந்து வந்த சொற்களை நினைவு கூர்ந்தான்.

வாய் பேசவில்லை.

"சொல் சிவா!"

வெற்றிவேலைப் பார்த்துவிட்டு மெதுவாகச் சொன்னான்.

"நாம கற்பிச்சுக்கறது தான்"

"பாபா ஓம்கார்நாத் விடுதலை பெறுகண்ணு சொன்னாரே நினைவிருக்கா?"

"இருக்கு"

"எதிலிருந்து விடுதலை? கற்பித்துக் கொண்ட அர்த்தத்திலிருந்தா? கற்பித்துக் கொள்வதிலிருந்தா...?"

அவன் சிகரெட்டை வீசி எறிந்தான்.

ஒரு பொருத்தமான சொல் தேறித் திரண்டு முத்துப் போல் நெஞ்சில் உருண்டது.

சிவா அதை வெளியிடாது வெற்றிவேல் பேசட்டும் என்று காத்து நின்றான்.



"எல்லாக் கற்பனைகளும் சிதையில் சாம்பலாகின்றன. எல்லா அர்த்தங்களும் இங்கே முக்கியமில்லாமே போகின்றன" என்று வெற்றிவேல் முனகினான்.

"அர்த்தங்கள் சாகிறதில்லே. மனுஷன் தான் செத்துப்போறான்."

சிவா சொன்ன அந்த வார்த்தைகளை அது அவன் வாயிலிருந்து வந்ததா என்று வியப்பது போல் நிமிர்ந்து பார்த்தான். பின்பு அவன் கையைப் பற்றித் தன்னுடன் பிணைத்துக் கொண்டான்.

"அப்போ விடுதலை எதிலிருந்து?"

"மன உளைச்சலிலிருந்து"

சிறிது நேரம் அங்கே நின்றிருந்துவிட்டுப் பின்னர் சிவாவை அழைத்துக் கொண்டு வெற்றிவேல் அருகாமையில் ஓடிய கானாற்றுக்கு அழைத்துச் சென்றான்.

ஆற்றில் தண்ணீர் தெளித்து ஓடிக் கொண்டிருந்தது. வெற்றிவேல் ஆடைகளை அவிழ்த்து வைத்ததைக் கண்டு சிவாவும் தன் உடைகளைக் கழற்றினான்.

வெற்றிவேலுடன் முகமறியாத அந்த பீமராஜுவுக்காக மூன்று முழுக்குப் போட்டான் சிவா.

"சூரையங் காட்டிடை கொண்டு போய்ச் சுட்டிட்டு நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தார்களே" என்று நெஞ்சை அடைக்கும் துக்கம் தொண்டையில் தழுதழுக்கச் சொன்னான் வெற்றிவேல்.

அந்த சிங்காரப்பேட்டைப் பயணம் சிவாவை என்னமோ செய்தது. அன்று மாலை பஸ் ஏறி மீண்டும் திருப்பத்தூர் வந்த பின்பு எரியும் சிதை ஒன்றின் எதிரில் வெற்றிவேலோடு நின்றதும் பேசியதும் மனசில் அடிக்கடி வந்து போயின.

அந்தப் பயணத்தில் அவர்கள் முற்றிலும் தொடர் பற்ற வேறு எதையோ பேசினார்கள். வேறு எவனோ ஒருவனின் உழைத்து மாண்ட நினைவில் கரைந்தார்கள்.

அம்மாவிடம் விடைபெற்று மறுநாள் சிவா சென்னைக்குப் புறப்பட்டான்.

## 12

சிவா சென்னைக்கு வந்த அன்றிரவும் புண்ணிய கோடியைப் பார்க்க முடியவில்லை. கேட்டதற்கு ஊரி லிருந்து வரவில்லை என்று பிரேம் சொன்னான்.

மறுநாள் இரவு மொட்டை மாடிக்குப் போனான்.

பெரிய பாய் விரித்திருந்தது.

கம்பவுண்டர் புண்ணியகோடி சுவரின் மீது தலையை முட்டுக் கொடுத்துச் சரிந்து உட்கார்ந்த மாதிரி படுத் திருந்தார்.

சிவாவைப் பார்த்ததும் "வா சிவா" என்றார்.

அவன் பக்கத்தில் போய் உட்கார்ந்தான்.

"என்ன பேசணும்னே?"

"திஷ்யா சினிமாவிலே சேர மாட்டேங்கற விஷயம்" என்று மொட்டையாக ஆரம்பித்தான்.

அவர் மடமட வென்று ஆரம்பித்தார்.

"நான் பதினெட்டாயிரத்துக்கு லாட்டரிச் சீட்டு வாங்கியிருக்கேன். பதினைந்தாயிரம் ரூபாய் வரைக்கும் ரேஸிலே விட்டிருக்கேன்... ஓடிப் பிடிச்சுப் பார்த்தேன்... அதிருஷ்டம் எனக்கு வாலாட்டிட்டுது."

அவர் குடித்திருந்தார். குப்பென்று நாற்றம் வந்தது.



இப்போது பேசியிருக்க வேண்டாமோ!

ஒருவேளை இப்போது இல்லையென்றால் எப்போது பேசவும் சந்தர்ப்பம் கிடைக்காமல் போகலாம்.

"அதனாலே?"

"இப்ப அதிருஷ்டம் என் வீட்டுக் கதவை வந்து இடி இடிண்ணு இடிக்குது. என் பொண்ணே திறக்க மாட்டேங் கறா"

அவர் அங்கலாய்த்து முடிக்கட்டும் என்று காத்திருந் தான்.

"சினிமா சிலருக்குப் பிடிக்கும். சிலருக்குப் பிடிக்கா துண்ணு வேதாந்தம் பேசிப் பிரயோசனமில்லே. ஒரு ஸ்டாருக்கு என்ன ராஜ உபசாரம் நடக்குது தெரியுமா? அவுட்டோர் ஷூட்டிங்குக்குப் போய்ப் பார்த்தனே... ஆப்பிள் ஜூசென்ன...அவளுக்கு சும்மா தலைவலிண்ணு சிணுங்கினா எத்தனை டாக்டர்...என்ன கவனிப்பு..."

அவன் அவருக்காக பரிதாபப் பட்டான்.

"அந்த லாவண்யா இருக்காளே... அவ எப்படிப் பட்ட கார் வச்சிருக்கா தெரியுமா...இம்போர்ட்டட் கார். ஏர் கண்டிஷன் பண்ணியிருக்கு."

"அதெல்லாம் உங்க டாட்டருக்கு பிடிக்கலியே; சினிமாவே வேணாங்குதே!"

"சும்மா ஒரு பேச்சு வெளியிலே வுட்டண்ணா இந்தத் தெருவே பூந்து டைரக்டர் வூட்டை சுத்திக்கும். அப்படிப் பட்ட லக்கு நம்பளைத் தேடி வறாது...இஸ்டமில்லேண்ணா யாருக்கு நஷ்டம்?"

"சார்" என்று இதமாக அழைத்தான் சிவா.

"ஒரு தகப்பன் ஸ்தானத்திலிருந்து யோசிங்க. பொண்ணுக்கு இந்த மாதிரி வாழ்க்கை பிடிக்கலேண்ணா அதுக்காக நீங்க பெருமைப்படணும்!"

அவர் சிவுக்கென்று எழுந்து உட்கார்ந்தார். குடிவெறி எல்லாம் பறந்துபோன மாதிரி ஒரு கோபம் வந்து விட்டது. தெளிவாகப் பேசத் தொடங்கினார்.

"அட இன்னாப்பா தகப்பன் ஸ்தானம்? பைசா... பைசா இருக்கா ஒங்கிட்டே—அது இருந்துட்டா போதும்—அதான் ஸ்தானம். அது இல்லேண்ணா ஒரு ஸ்தானமும் இல்லே. எல்லாம் அத்துவானம். ஒங்கிட்டே சொல்றதிலே எனக்கு அவமானமில்லே. நாலு புள்ளைங்கள வுட்டுட்டு ஓடிப் பூட்டாளே எம் பெண்டாட்டி...அவ ஏன் ஓடினா தெரியுமா?"

சிவாவுக்கு வெறுங் காலில் தார் இளகும் வெயிலில் நிற்பது மாதிரி தகித்தது.

"பைசா இல்லைய்யா எங்கிட்டே., பைசா இல்லே. தரித்திரன்கிட்டே அப்சரஸ் மாதிரி பெண்டாட்டி கெடைச்சா என்ன பண்ணுவா? அவளுக்கு ஊர்லே இருக்கிற பொடவை எல்லாம் கட்டணும். கடைல விக்கற நகையெல்லாம் மாட்டிக்கணும். அவளுக்காக ஒரு லக்... ஒரு ஜாக்பாட் அடிக்காதாண்ணு தான் மொதல்லே நான் ரேஸுக்கும் போனேன்..."

புண்ணியகோடி பேச்சை நிறுத்தி ஓர் ஏப்பம் விட்டார். அடுத்த மாடிக்கு அது கேட்டிருக்கும்.

"அவன் பெரிய வைர வியாபாரி. நாலு புள்ளை பெத்ததுக்கு அப்புறம் நிகுநிகுண்ணு கட்டு விடாம நிண்ணா சும்மா விடுவானா?"



சிவாவுக்கு அவர் போதை தெளிகிற மாதிரி பளாரென்று ஓர் அறை விட்டால் என்னவென்று ஆத்திரம் வந்தது. ஆனால் இது அறையில் தெளிகிற போதையல்ல. தனது அவலத்தைத் தான் தாளமாட்டாமல் மதி அழிந்து போன போதை.

"இதான் தாய் ஸ்தானம். அப்புறம் நீ எனக்கு தகப்பன் ஸ்தானத்தைப் போதிக்க வந்துட்டே! ஒரு வகையிலே அவ உத்தமி. பத்தினி வேஷம் போட்டுக்கிட்டே படி தாண்டல. பேசாம இறங்கிப் போயிட்டா"

சிவா கசப்பு தாங்காமல் கத்திரித்தான்.

"ஒருத்தி நடிக்கப் போனா அந்தக் குடும்பம் என்ன சார் ஆவும்?"

"மெள்ள மெள்ள குடும்பம் பூரா சினி ஃபீல்டிலே நொழைஞ்சிடலாம். அப்புறம் எனக்குக்கூட அப்பா ரோல், மாமா ரோல்ணு ஒரு சான்ஸ் கெடைக்கும். ஏன், நான் நடிக்கக் கூடாதா?"

சிவாவுக்கு அந்த நிமிஷத்தையே நம்ப முடியவில்லை.

இது என்ன சீரழிவுடா சாமி!...

"காலம் பூரா மருந்தைக் கலந்து கலந்து குடுத்துக்கினு இந்த கசமாலம் புடிச்ச ஜனங்ககிட்டே மாரடிச்சுகினு ஒரு பிசாத்து சம்பளம் வாங்கினு நான் சாவணுமா?"

"சார் ஒங்க மகளுக்கு கல்யாணம் கார்த்திகைன்னு நடக்க வேண்டாமா? நடிகையை எவன் கல்யாணம் பண்ணிப்பான்? பண்ணிக்கிட்டு எப்படி அவ பொழைப்பா?"

"எவனாவது ஒரு நடிகனோ, டைரக்டரோ தயாரா இருப்பான். பைசா இல்லே? சும்மாவா... அட அப்படி கல்யாணம் பண்ணிக்காம போனாத்தான் போவட்டுமே.

குடும்பத்திலே ஒர்த்தி அப்படிப் பூட்டா இன்னா குடி முழுகிடும்? மத்ததுங்க சௌகரியமா இருக்கும் இல்லே."

இது அடிமுதல் நுனிவரை விஷம் பாய்ந்து நாசமான கேஸ் என்று சிவாவுக்கு தெளிவாயிற்று. அதிரடி வைத்தியம் உதவுமோ? அவன் முயற்சித்தான்.

"நீங்க சினிமாவுக்குப் போகச் சொல்லி அவளைக் 'கம்பல்' பண்ணிங்கன்னா திவ்யா தற்கொலை பண்ணிக் கிட்டாக்கூட ஆச்சரியப்படறதுக்கில்லே சார்!"

"தற்கொலை..." ஒரு கணம் மிரண்டார் புண்ணிய கோடி.

பிறகு பைத்தியம் மாதிரி சிரிக்கத் தொடங்கினார்.

"தற்கொலை... இன்னா ஜோக் அடிக்கறப்பா?"

மீண்டும் அவருக்குச் சிரிப்புத் தாளவில்லை.

"தற்கொலை... ஓ... பண்ணிக்கட்டுமே! உடனே நான் மெரண்டு பூடுவேன்னு நெனக்கிறாளோ... த பாரு சிவா... நான் லைஃப்லே பார்க்கவேண்டிய அளவு கசப்பையும் கஷ்டத்தையும் பாத்தாச்சு. பொண்டாட்டி என்னை வுட்டுட்டு ஓடிப் பூட்டாய்யா... கட்டின பொண்டாட்டி... அப்புறமா எது போனா இன்னா..."

குடிவெறியில் சிரித்த கம்பவுண்டர் இப்போது குரல் பாய்ச்சி ஓ வென்று அழத் தொடங்கினார்.

சிவாவுக்கு இரக்கம் வரவில்லை. கோபம் வந்தது. தன் கண்ணைத் தானே மூடிக்கொண்டு பார்வை தெரிய வில்லை என்று அழுகிற அந்தக் குருட்டுத்தனத்தைக் கண்டு அருவறுப்பு எழுந்தது. இந்த மொட்டை மாடியில் இப்படி ஒரு 'சீன்' வேண்டுமா என்று அவனுக்கே ஓர் அசிங்கம் தோன்றியது.



"சார்... இது மொட்டை மாடி... அக்கம் பக்கம் ஆள் உண்டு... ப்ளீஸ்... ஸ்டாப் தி சீன்" என்று இங்கிலீஷில் சுரீரென்று சொன்னான்.

அவன் குரலில் வெளியான உஷ்ணத்திற்குப் பயந்து அவர் மேல் துண்டை எடுத்து வாயில் புதைத்து விம்மினார்.

காலை நாலு மணிக்கு சிவா விழித்துக் கொண்டான். தபாலாபீஸிலிருந்து தாமுவுக்கு ஒரு பி.பி. கால் எனத் தகவல் வந்தது. தாமு எட்வர்ட் எலியட்ஸ் ரோடில் பிரீதா வீட்டில் தங்கிவிட்டிருந்தான்.

அரைமணி நேரம் காத்திருக்கச் சொல்லிவிட்டு போலீஸ் ஸ்டேஷன் ஓரமாகத் தூங்கிக்கொண்டிருந்த ஆட்டோ டிரைவர் ஒருவரை எழுப்பினான்.

எலியட்ஸ் ரோடுக்குப் பறந்து, கதவைத்தட்டி எழுப்பி, தாமுவை அழைத்து வருப்போது பிரீதாவும் உடன் வருவதாகச் சொன்னாள்.

"வேண்டாம். ஒருக்கால் நானே மதனபள்ளி புறப்பட வேண்டியதாய் இருந்தாலும் இருக்கலாம்! சிவா கிட்டே சொல்லி அனுப்பறேன். தேவைப்பட்டால் டிரங்க்கால் பண்றேன்."

ராயப்பேட்டை போஸ்டாபீஸில் தாமு பி.பி. கால் பேசும் போது மணி நாலரை.

போனை வைத்துவிட்டு வெளியே வரும்போது தாமு முகம் ஆடாத தராசு போல் நிதானமாயிருந்தது. அவன் மனசில் பளு ஏறும்போதுதான் அந்த முகத்தோற்றம் காணப்படும்.

"என்ன?"

"நாயனா ஸீரியஸ்... மணியை எண்ணிக்கிட்டு இருக் காங்க. நா மதனபள்ளி பொறப்படறேன்."

"நானும் கூட வரலாமா?"

"நாட் நெசஸரி."

இருவரிடையிலும் வெளியிட முடியாத துக்கம் மௌனங்களின் அரணில் வீற்றிருந்தது.

தாமு தன் வலக்கையை நீட்டினான்.

"ஸோ..."

இது எதற்கு? அறியாமலேயே சிவாவின் கை நீட்டிய கரத்தை சந்தித்தது.

"நீ தீர்மானிச்சிட்டியா?"

"ஒர்க்ஷாப் விஷயம்."

"எஸ்."

தாமு அவன் கையைக் குலுக்கினான்.

"ஆட்டோ வெளியிலேதானே இருக்கு?"

"ஆமா"

"வா...அப்படியே போயி சீனியர் மெக்கானிக் செங்குட்டுவன் கிட்டே சொல்லிட்டுப் போயிடறேன். காலையிலே போய் ஒர்க்ஷாப்பைத் தொற. வேலையெல்லாம் ஒர்க்கர்ஸ் வந்து கவனிச்சுக்குவாங்க. ஒனக்கு ஒண்ணும் தெரியாது. ஐ நோ இட். நீ சேர்லே ஒக்காரு. பில் எழுது. ரிப்ளை த லெட்டர்ஸ்... எல்லாத்தையும் அவங்க சொல்லித் தருவாங்க. மேஜையிலே பர்ஸ்ட் டிராயர்லே ஒரு பச்சை ஃபைல் இருக்கும். அதைப் படிச்சா போதும் டீடெய்ல்ஸ் எழுதி வச்சிருக்கேன்."

"சரி."

"புறப்படு போவோம்."

# 13

**சி**வா ஒர்க்ஷாப்பின் சாவியைக் கையில் எடுத்தான். இது எனக்குரிய பளுதானா? இப்படி ஒரு ஒர்க்ஷாப்பை நான் ஏற்று நடத்த முடியுமா?

திருப்பத்தூரில் அம்மா சொன்னது நினைவு வந்தது.

நீ தானா ஏத்துக்கறது கட்டுப்பாடு ஆகாது.

எதற்கும் அம்மாவைக் கேட்டுக் கொண்டு வந்திருக்கலாமோ?

எங்காவது சேவகம் செய்து மாதச் சம்பளம் வாங்குவதில் எல்லா படித்த இளைஞர்களுக்கும் வருகின்ற பாதுகாப்பு தான் தனக்கும் வேண்டுமா?

எதையும் யோசிக்க நேரமில்லை.

சமுத்திரத்தில் குதித்தாகி விட்டது. நீந்த வேண்டும். அல்லது மூழ்க வேண்டும்.

அவன் செருப்பை மாட்டிக்கொண்டு வெளியே வந்தான்.

வெளியே திஷ்யா தென்படமாட்டாளா என்று ஓர் ஏக்கம்.

வழக்கப்படி அவனைக் கிண்டல் செய்து குத்தி விட்டால் கூடப் போதுமானது. அவன் படி மீது ஐந்து நிமிஷம் நின்றான். அவள் எதிர்ப்படவில்லை. உள்ளே சமையலறையிலோ பாத்ரூமிலோ மும்முரமாக இருந்தாள் போலும்.

சிவா படியிறங்கி தெருவில் காலை வைத்தான். எங்காவது ஒரு நபர், கொஞ்சம் ஊக்கம் தர, உந்திவிட, ஒரு மனம். இந்தப் பரந்த பூமியில் அவனுக்கும் ஒரு புளியீர்ப்பு

மையம் வாய்த்திருக்கிறது என்று அங்கீகரித்து உந்திவிட ஓர் உள்ளம்.

அவனுக்கு உடனே பிரீதாவின் நினைவு வந்தது. எதிரில் வந்த ஆட்டோவை நிறுத்தக் கையாட்ட உயர்த்தினான்.

நோ. நான் ஒர்க்ஷாப் சொந்தக்காரன் அல்ல. மானேஜர். நான் முதலாளியுமில்லை. கூட்டாளியுமில்லை. வெறும் தொழிலாளி. கூட்டு அந்தஸ்து இல்லாத சாமான்யமான தொழிலாளி.

"இன்னா சார்....." டிரைவர் அருகில் வந்தான்.

"அதோ அந்த ப்ரெண்டை கூப்பிட்டேம்பா."

அவனது முறைப்பை அலட்சியம் செய்து பஸ் பிடிக்க ஓடினான்.

வீட்டினுள் நுழையும்போது பிரீதா கண்ணாடி எதிரில் நின்று கூந்தலில் தென்பட்ட ஒரு நரையை அகற்றுவதில் ஈடுபட்டிருந்தாள்.

கண்ணாடியில் அவன் பிம்பம் தெரிந்ததும் "வரூ" என்று கூறிக்கொண்டே நரைமுடியை வெடுக்கென்று அகற்றினாள்.

காலை அவள் முகத்தில் குதூகலமாகக் குளித்துப் பவுடர் பூ விரித்திருந்தது.

"எந்திணு பி. பி. கால்?"

"ஃபாதர் சீரியஸ். தாமு மதனபள்ளி போய்ட்டாரு"

அவன் கையிலிருந்த சாவிக்கொத்தைப் பார்த்து அவள் முகம் பரிசுத்தமான மகிழ்ச்சியில் மலர்ந்தது.

"தாக்கோல் நிண்டே கையிலாயி" என்று பால் நுரை பொங்குவது மாதிரி சிரித்தாள் பிரீதா.



"பிரச்னை" என்று அதைத் தூக்கி உலுக்கிச் சப்தமெழுப்பினான்.

பிரீதாவின் கண்கள் அவன் மீது படிந்தன.

"இரிக்கு"

அவன் சோபாவில் உட்கார்ந்தான்.

"வாட்ஸ் தி ப்ராப்ளம்?"

"நான் ரைட்டரா... மெக்கானிக்கா?"

"யூ ஆர் எ மேன்"

பல் தெரியாமல் அவள் உதடுகளில் ஒரு புன்னகை மலர்ந்தது.

அந்த உதடுகளின் சதைப் பற்றில் அவற்றின் ரோஜாச் செம்மையில் அங்கு ஊறித் தளும்பிய ஜீவ சக்தியில் ஏதோ அற்புதம் இருந்தது.

அந்த உதடுகளைச் சொற்கள் கடந்து வெளிவரும் போது அவற்றிற்கு ஒலி மட்டுமில்லை, ஒளியும் சேர்ந்தன.

சிரித்துக்கொண்டே ஏதோ கதை சொன்னவாறு ஸ்பிரிட் தடவி வலிக்காமல் ஊசி குத்துவது மாதிரி பிரீதா மெதுவாகச் சொன்னாள்.

முறுக்கு ஏற்றுவது போலவோ செதுக்குவது போலவோ இடித்து உரைப்பது போலவோ அன்றி லகுவாகச் சொன்னாள்.

"மனுஷ்யன்"

பிரியமாகச் சிரித்து மீண்டும் ஒருமுறை நினைவூட்டினாள்.

"மனுஷ்யன் ரைட்டராகும். மெக்கானிக்காகும். ரைட்டிங் மெக்கானிக் ஆகும். பக்ஷே?"

அவள் மீண்டும் வரம் தரும் தேவதை மாதிரி சிரித்தாள்.

"பசேஷ?" என்று சிவாவும் தன்னையறியாது மலையாளத்திற்கு வந்தான்.

"அங்ஙன மலையாளம் பரயூ. பசேஷ நீ ஒரு மெக்கானிகல் ரைட்டர் ஆகான், உத்தேசிக்கருத... மனசிலாயோ"

மெக்கானிகல் ரைட்டர். என்ன அழகான 'காய்னேஜ்'. அவனுக்கு காளிசரண் கவனம் வந்தது.

"சிவாவினு பேடியோ?"

"பயமில்லை. இது எனக்கு ஒரு டைவர்ஷன் பாய்ண்ட். அதனால் ஒரு தயக்கம்."

"ஐ அண்டர் ஸ்டாண்ட். சிவாவினு ஏதாணு இஷ்டம். காப்பியோ, சாயயோ?" சமைலறையை நோக்கித் திரும்பினாள்.

"இப்போ வேண்டியது கான்ஃபிடன்ஸ்."

"யூ ஹாவ் இட்" அவள் முகம் வளைத்து அவனைப் பார்த்து புன்னகை வழங்கினாள். "பட் யூ டோண்ட் நோ இட்"

ஐந்து நிமிஷத்தில் டீ கோப்பையுடன் திரும்பி வந்தாள். மலையாளத்தில் மளமளவென்று சொல்லிக் கொண்டே நீட்டினாள்.

"நான் போன வருஷம்தான் தாமுவை சந்தித்தேன். அவரை எனக்கு ஏன் பிடிச்சது தெரியுமா?"

தாமுவைப்பற்றி இப்படி ஒரு வெளிப்படையான பேச்சை சிவா அவளிடம் எதிர்பார்க்கவில்லை.



"ஹி ஈஸ் எ மேன். ரத்தம் சதை என்ற புற அளவீடுகளுக்கு சிக்காம மனிதன் என்று ஒரு காம்பீர்ய அந்தஸ்து உண்டே. அது தாமுவிடம் உண்டு. ஆனா அவருக்கும் தளர்ச்சி உண்டு. சுகவீனம் உண்டு."

அவன் டீயை மெதுவாக உறிஞ்சியவாறே அவள் வார்த்தைகளைப் பருகினான்.

"ஒவ்வொருத்தருக்கும் ஒரு பலவீனமான நேரமுண்டு. அது இயற்கை. மனிதன் ஜெயிப்பான். ஜெயிக்கிறான்."

அவன் கோப்பையை டீப்பாய் மீது வைத்தான்.

"தாமு என்னிடம் அனேகமா எதையும் ஒளிக்கறதில்லே. ஹி ஈஸ் வீக் இன் ஸெக்ஸ். பெண்கள்தான் அவருடைய ஒரே பலவீனம். அவருடைய எல்லாப் பிரச்னைகளும் பெண்களாலேதான்."

சிவா நிசப்தமாய்விட்டான். அவன் அதையெல்லாம் எதிர்பார்க்கவில்லை.

"சிவாவினு என்டே ஃபிராங்க்னெஸ் இஷ்டப் படுன்னில்லா அல்லே?"

"ஐ காண்ட் கமெண்ட். ஸிம்ப்ளி ஐ அம் அனேபில் டு கமெண்ட்."

அவனது வெள்ளை உள்ளம் அவளுக்கு வெகுவாகப் பிடித்தது போல் பிரீதா சிரித்தாள்.

"ஆனா உனக்கு இது தெரியணும் சிவா?"

"இன்னிக்கு நீ ஒரு புதிய தொழிலுக்கு மானேஜரா மாஸ்டராகப் போறே. யு ஷுட் நோ திங்ஸ்."

"ஒய் ஷுட் ஐ?"

"ஸின்ஸ் யு ஆர் சிவா."

"நான் எப்பவும் சிவாவாத்தான் இருப்பேன்."

அவள் தலையசைத்து அது முடியாது என்பதுபோல் புன்னகை செய்தாள்.

"முடியாது சிவா - இந்தத் தொழில் அப்படிப்பட்டது. நெறய பணம் வரும். யூ ஆர் எஜூகேடட். கர்ள் ப்ரண்ட்ஸ் வருவாங்க. அப்படித்தான் தாமு லாஸ்ட் ஹிம் செல்ஃப். கல்யாணம் பண்ணிக்கிட்டிருந்தா தாமுவுக்குக் கூட ஒரு செக் வந்திருக்கும். ஆனா..." என்று பிரீதா நிறுத்தினாள்.

பேச்சின் போக்கு மாறி அந்தரங்கத்தில் நுழைந்த மாதிரி சிவாவுக்கு மூச்சு முட்டிற்று. தாமுவைப் பற்றிப் பேச வேண்டாமே.

ப்ரீதா மேலே பேசினாள்.

"தாமுவுக்கு வந்திருக்க வேண்டிய மனைவி திஷ்யா மாதிரி டாமினேடிங்கா ஆக்டிவ்வா இருந்திருக்கணும்."

தாமுவும் திஷ்யாவும்.

அவன் வியப்போடு அவளை நிமிர்ந்து பார்த்தான்.

அவன் வியப்பை அவள் புரிந்து கொண்டாள்.

"எஸ், தாமுவுக்கு அவளைப் பிடிக்கும்."

அவன் கண்ணிலிருந்த கேள்விக் குறி மேலும் அவளைப் பேசத் தூண்டியது.

"கல்யாணம் பண்ணிக்கிற அளவு பிடிக்கும். அது நடந்தாலும் ஆச்சரியப்படறதுக்கு இல்லே"

சிவாவின் மனசிற்குள் இடி முழக்கம் கேட்டது. வெளிச்சமில்லாத மூலைகளில் ஒரு மின்னல் விளையாடிற்று. சென்னையில் அந்த வீடு தனக்கு ஆசிரமம் என்று சொன்னானே தாமு! இதுதான் அதற்கு அர்த்தமா?

"ஒய் கான்ட் யூ?" என்று தன்னை மீறிக் கேட்டான்.

அவள் சிரித்தாள். கசப்பு அதில் சிதறிற்று.



"வி ஆர் ப்ரெண்ட்ஸ். கல்யாணம் பண்ணிக்க வேண்டிய அளவு டிவோஷன் ரெண்டு பேருகிட்டேயும் மியூச்சுவலா கிடையாது."

நேரமானதை உணர்ந்தான். அவளிடம் விடை பெறும் பொழுது பிரீதா மீண்டும் மாலையில் வரச் சொன்னாள். அங்கிருந்து வரும்போது அவன் மனசு ஏனோ பாரமாயிருந்தது.

## 14

தனது சொந்தப் பொறுப்பில் ஓர்க்ஷாப் வந்த முதலாவது நாளை அவன் வெகு இயல்பாக ஏற்றுக் கொண்டான். பிரீதாவிடம் பேசி விட்டு வந்ததில் ஒரு தெளிவு கிடைத்தது.

தாமு...அம்மா... வெற்றிவேல்... பிரீதா எல்லோரும் அக்கரையில் நின்ற நிழல் உருவங்கள் ஆயினர்.

ஓர்க்ஷாப் அவனைக் கம்பீரமாக ஸ்வீகரித்தது. அது என்னவோ பந்தயக் குதிரை போன்று, 'என்னை ஏற்று அடக்கு' என்று குரல்கொடுப்பது போன்று தென்பட்டது.

'நான் எழுத்தாளன் என்ற கர்வத்தை வெளியே இறக்கி விடுகிறேன்.'

'எனக்கு ஓர்க்ஷாப்பைப் பற்றி ஒன்றும் தெரியாத அச்சத்தை அகற்றி வைக்கிறேன்.'

'எனது வேலையும் எனது தொழிலும் இதுதான். இதை நான் வணங்குகிறேன்.'

மந்திரம் ஜபிப்பது போல் மனசிற்குள் சொல்லி விட்டு அவன் ஓர்க்ஷாப்பைத் திறந்தான்.

பத்து நிமிஷத்தில் ஆபீஸ் அறையைச் சுத்தம் செய்கிற வன் வந்து பெருக்கி குப்பை வாரிவிட்டுச் சென்றான்.

தாமு செய்வது மாதிரி ஒரு சுட்டு ஊதுவத்தியைக் கொளுத்தி அங்கிருந்த ஸ்டாண்டில் செருகினான்.

மேஜை டிராயரைத் திறந்தான்.

எடுத்த எடுப்பில் ஒரு பச்சை ஃபைல் தென்பட்டது. அதை எடுத்துத் திறந்தான். அதன் முதலாவது காகிதம். பவர் ஆஃப் அட்டர்னி சர்ட்டிபிகேட்டின் நகல். பாங்கில் ஒர்க்ஷாப் அக்கவுண்டில் பணம் எடுக்கவும் போடவும் முழு அதிகாரத்தை தாமுவுக்கு சிவா வழங்கியிருந்தான்.

அந்த சுதந்திரம் எப்படிப்பட்ட விலங்கு!

யோசித்தவாறே சிவா அடுத்த காகிதத்தைப் புரட்டினான்.

ஒர்க்ஷாப்பின் மாதாந்திர வரவு செலவு பட்ஜெட். முதல் வரியிலேயே அவனுக்கு உடம்பு சிலிர்த்தது.

கே. சிவா — மானேஜிங் பார்ட்னர் — மாதாந்திர சன்மானம் ரூபாய் நாலாயிரத்து ஐநூறு.

பிரீதாவின் சொற்கள் ஒரு மந்திரம் போன்று அவனுள் ஒரு கிளர்ச்சியை இப்போது உண்டாக்கின.

"யு ஆர் எ மேன். மனுஷ்யன்"

அவள் சொன்னாள். தாமு அவனை மனிதனாக்கி யிருந்தான்.

காலை எட்டு மணிக்கெல்லாம் அவனுக்கு வியர்த் தது. எழுந்து சென்று ஃபானைச் சுழல விட்டான். ஆனால் இதெல்லாம் எதற்கு? மாதா மாதம் நாலாயிரத்து ஐநூறு ரூபாய்க்கு தான் தாமுவினால் விலை கொடுத்து வாங்கப் பட்டிருக்கிறோமோ?



அவன் பைலின் ஒவ்வொரு காகிதத்தையும் புரட்டிப் பார்த்தான். ஒர்க்ஷாப்பின் பேரில் கரண்ட் அக்கவுண்ட் டில் லட்சத்து சொச்சம் ரூபாய் இருந்தது.

அவன் விரும்பினால் அந்த தொகை முழுவதையும் எடுத்தாள முழு அதிகாரமும் அவனுக்கு வழங்கப் பட்டிருந் தது. ஒர்க்ஷாப்பின் இண்டு இடுக்கு விவரங்களை யெல்லாம் பார்த்தவுடனே அவன் புரிந்து கொள்கின்ற மாதிரி குறித்து வைத்திருந்தான்.

இந்த விவரங்களை எழுதித் தயாரிக்க அவனுக்கு இரண்டு நாட்கள் பிடித்திருக்கும். ஏன் இப்படி மெனக் கெட்டான்?

எந்த நோக்கம்? ஒரு வேளை அப்படி எதுவும் இல்லையா?

எட்டே காலுக்கு சீனியர் மெக்கானிக் செங்குட்டுவன் வந்தான். ஒன்பது மணிக்குள் ஒவ்வொருவராகத் தொழிலாளர்கள் வந்தனர்.

தாமு இல்லை. அவனது ஆக்ஞை அரூபமாக அந்த ஒர்க்ஷாப்பில் பிரசன்னமாயிருந்தது. சிவா ஒர்க்ஷாப்பில் ஐக்கியமானான்.

திஷ்யா, ப்ரீதா, தாமு, அம்மா வேள்வித் தீயின் ஜ்வாலை முன் ஒளியும் சுடரும் தவிர்த்து வேறு யாவும் அர்த்தமிழப்பது போன்று எல்லோரும் மறைந்து விட்டனர்.

நீ மனிதன் என்ற வாக்கு மட்டும் இயங்கு சக்தியாக மிஞ்சிற்று. சொன்னவளை கூட மறந்து விட்டான். அம்பாஸிடர்... பென்ஸ்... டயோட்டா... போன் கால்கள்... கடிதங்கள்... ஹாரன் ஒலிகளை இயந்திரங்களில் புத்துயிர் பாய்ச்சும் பந்தயம் அப்படி ஒன்றும் சலிப்பாக இல்லை.

பத்து மணிக்கு திஷ்யாவின் தம்பி பிரேம் வந்தான்.

"அக்கா ஒங்களை வீட்டுக்கு வரச் சொன்னாங்க. அர்ஜெண்டாம்."

"என்ன விஷயம்? 'அந்த வண்டி அரை மணியிலே ரெடியாயிடும். வர்றேன் போ"

பதினோரு மணி ஆயிற்று. அவன் திஷ்யாவையும் பிரேம் வந்து போனதையும் மறந்து விட்டான். வண்டியின் டோர் ட்ரபின் அவனை ஈர்த்துப் பிடித்திருந்தது.

வேலை முடிந்து வண்டி 'ரிலீஸ்' ஆன போது கூட நின்று கவனிப்பதில் கால் மெக்கானிக்காக ஆகி இருந்தான்.

மீண்டும் பிரேம் வந்தான்.

"அடடா.. மறந்தே போய்ட்டேன். செங்கு.. பத்து நிமிஷம் வீடு வரைக்கும் போயிட்டு வந்துடறேன்!"

"சட்னு வாங்க சார்... இன்னிக்கு பாங்குக்கு போவணும். இன்னிக்கு ஸ்பேர்பார்ட்ஸ்காரன் பில்லை கிளியர் பண்ணிடணும்."

சிவா வழக்கப்படி கால் நடையாகப் புறப்பட்டான்.

"சார்.."

செங்கு கூப்பிட்டான்.

"என்ன?"

"ஐயாவுது வண்டி சும்மாதானே கெடக்குது. எடுத்துட்டுப் போங்க.. ஜல்தி வரவேணாம்?"

"எனக்கு டிரைவ் பண்ணத் தெரியாதே!"

செங்கு முகம் சப்பென்று போய் விட்டது.

கற்றுக்கொள்ள வேண்டும். மோட்டார் பைக் மட்டுமல்ல. கார்.. வேன்.. ட்ரக்.. லாரி.. எல்லாவற்றையும் ஓட்டக் கற்றுக் கொள்ளவேண்டும்.



"சைக்கிள் விடுவீங்களா?"

"ஓ"..

"நம்ப வண்டியை எடுத்துக்கினு போங்க"

சிவா செங்குவின் சைக்கிளை மிதித்து சாலையில் கலந்த பின்புதான் ஒர்க்ஷாப்பின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டான்.

திஷ்யா எதற்கு வரச் சொல்லி இருக்கிறாள்? ஆள் அனுப்பியது அசாதாரணமாகப் பட்டது.

இந்த அசாதாரணம் அவன் முதல் தடவை வந்த போது தனக்கு உறைக்காததை எண்ணினான். ஒர்க் ஷாப்பில் ஒரு வேலையின் போதையுள்ளதும் அது இரண்டு மணி நேரத்தில் தன்னைக் கவர்ந்ததும் புரிந்தது.

வீட்டில் யாரும் இல்லை. திஷ்யா மட்டும் தனியாக இருந்தாள். புண்ணியகோடி ஆஸ்பத்திரிக்குப் போய் விட்டார். குழந்தைகள் எல்லாம் ஸ்கூலுக்குப் போயிருந்தன.

நேராக அவள் வீட்டுப் போர்ஷனுக்குப் போய் சாயம் போய் கோடுகளும் பெயரும் கீறியிருந்த பச்சை ஸ்டீல் சேரில் உட்கார்ந்தான். அந்த அனுபவம் அவனுக்கு நூதன மாக இருந்தது. அவன் இதுவரை அவள் வீட்டுப் போர்ஷ னுக்குள் நுழைந்ததே இல்லை.

திஷ்யா அவன் வந்ததை லட்சியம் செய்யாத மாதிரி முகக் கண்ணாடியைத் துடைத்தவாறிருந்தாள்.

"வரச் சொன்னியாமே!"

அவள் அவனுக்குப் பதிலளிக்கவில்லை.

"பிரேம்.. டெய்லர் கிட்டே உன் பேண்ட் குடுத்தியே, அது ரெடியாண்ணு பார்த்துவிட்டு வா!"

"அது முந்தா நேத்திக்கு சாயங்காலமே ரெடியாயிடுச்சு... என்னாப்பா வரவில்லையேண்ணு கேட்பாயேன்னு நான் ஸ்கூல் விட்டு வர்றப்ப கடையைச் சுத்திக்கிட்டு வந்தேன்!"

"எவ்வளவு கூலி?"

"அறுபது."

அவள் பழைய மர பீரோவைத் திறந்து சின்ன பிளாஸ்டிக் பர்ஸை எடுத்தாள். ஆறு பத்து ரூபாய் நோட்டை நீட்டினாள்.

பிரேம் இருக்கட்டுமே, தைத்த பாண்ட்டை அப்புறம் வாங்கட்டும் என்று சிவாவுக்குத் தோன்றிற்று.

"அவ்வளவு தூரம் போகணும்!" என்று பொருமினான் பிரேம்.

"என் சைக்கிளை எடுத்துட்டுப் போறியா... எப்ப வருவே?" என்று சிவா கேட்டான்.

"வேண்டாம்.. அவன் பஸ்ஸில் போய் வரட்டும்" என்று உன் உதவி தேவையில்லை என்ற உதாசீனத்தோடு சொல்லிவிட்டு அவள் ஓர் ஐந்து ரூபாய் நோட்டைத் தந்தாள்.

அவன் போய்விட்டான்.

"அவனை ஏன் அனுப்பினே?"

திஷ்யாவின் பார்வை சிவாவினுள் குத்தூசி மாதிரி இறங்கிற்று.

"ஐயா.. ரொம்ப பிஸி ஆய்ட்டிங்க."

"மெய்தான். தாமு ஓர்க்ஷாப்பை ஹாண்ட்ஓவர் பண்ணிட்டு காலையே மதனபள்ளி போய்ட்டாரு."



"விஷயத்துக்கு வா. அப்புறம் இன்ஸல்ட் பண்ணலாம். இன்னிக்கு ஸ்க்ரீன் டெஸ்டாம். உடனே அக்ரிமெண்ட்லே சைன் பண்ணுவாங்களாம்."

ஒரு சினிமா ஸ்கிரீனில் அந்தக் கண்களையும் உதடுகளையும் மானசீகமாக ஒரு விஸ்வரூபத்தில் பார்த்தான்.

"நீ என்ன முடிவு பண்ணியிருக்கே."

"வெண்டைக்கா."

"பொறுமையாச் சொல்லு"

"செத்துப் போவேன்"

"அது ஒரு பெரிய நஷ்டமில்லேங்கறார், ஒங்க அப்பா."

"அவர் நஷ்டப்படட்டும்னு நான் சாகப் போறதில்லே. அவருக்கு லாபம் வரணும்னு வாழப் போறதுமில்லே."

"நீ ஏன் சினிமாவிலே நடிக்க மாட்டேங்கறே?"

"நெஜம்மா கேக்கறியா?"

"ரியலா"

"எனக்குப் வேஷம் போடப் பிடிக்கலே. நான் என்னவோ அது எனக்குப் போறும். என் ஒடம்பையும் மனசையும் நான் பஜார்லே விக்கத் தயாராயில்லே."

"ஒங்கப்பா 'கம்பல்' பண்றாரே?"

"அவர், எதுக்கு பண்ணணும்?"

"பைசா ரூபாய். சாதனை. அலைச்சல். பறப்பு. அதிருஷ்டம் எல்லா அங்கலாய்ப்புக்கும் அதானே முற்றுப் புள்ளி. சினிமாவிலே அது ஏராளமாக கெடைக்கும்."

"முற்றுப்புள்ளி அவருதா ஒன்னுதா?"

மீண்டும் ஒரு முறை அவள் நீ என்று தனக்கும் அவனுக்கும் ஒரு கொக்கி வைத்ததைக் கவனித்தான்.

"நான் உனக்கு யாரு திஷ்யா?"

அவள் உதடுகள் கோபத்தில் அழகாய்ச் சிவந்தன. அற்புதமாய்த் துடித்தன. ஒரு நிமிஷம் அவள் உதட்டைக் கடித்துத் தின்றாள்.

"ஸோ யூ வித்ட்ரா?"

"எதையும் நான் வித்ட்ரா பண்ணலே. எங்கயாவது கமிட் பண்ணியிருந்தாத்தானே வித்ட்ரா பண்ணிக்க"

திஷ்யாவின் முகம் சாம்பிற்று.

"ஸாரி திஷ்யா, ஒன்னை டீஸ் பண்ணணும்னு சொல்லலே. ஆனா ஒங்க வீட்டு விவகாரத்திலே குறுக்கிட எனக்கு என்ன ரைட் இருக்கு?"

அவளது கரிய இமைகள் அவன் மனசை அள்ளி தன் கூட்டில் தன் சிறகில் வைத்துப் பொத்திக் கொள்வது போன்று படபடத்தன.

"இது ஒரு ப்ளாக் மெய்ல் சிவா!"

"ப்ளாக் மெய்லா?"

"ஆமா, என் வாயாலே ஒரு வாக்கு மூலம் வர வைக்கணும்ங்கற ப்ளாக் மெய்ல்."

"இப்பதான் நீ மொதல் முறையா சொல்றே—அதுவும் ரொம்ப லேட்டா"

அவன் நாற்காலியிலிருந்து எழுந்தான். அவன் தன்னை நெருங்கப் போகிறான் போகிறான் என்ற கூச்சத்தில் அவள் பின் வாங்கினாள். அந்த விளக்கத்தின் அர்த்தத்தில் அவனுக்கு முகம் சிவந்தது.

"யூ ஆர் ஏ மேன்! மனுஷ்யன்" எங்கிருந்தோ பிரீதாவின் குரல் ஒலி.



"நீ பொய் சொல்றே சிவா!"

"நோ."

"ஒனக்கும் எனக்கும் என்னன்னு ஒனக்கு எப்பவோ, தெரியும். எப்ப ஒனக்குத் தெரிஞ்சதோ அப்பவே எனக்கும் தெரிஞ்சு போச்சு."

"இல்லே; அப்ப தெரிஞ்சது வேற. இப்ப தெரியறது வேற" அவன் பெருமூச்சு விட்டான்.

"ஐ டோண்ட் வாண்ட் டு ஆர்க்யூ" என்ன சொல்வது என்று புரியாமல் அவன் குழம்பினான்.

"எத்தனை மணிக்கு உனக்கு கேமரா டெஸ்ட்"

"பனிரெண்டு மணிக்கு கார் வருமாம்" அவன் கடிகாரத்தைப் பார்த்தான். இன்னும் அரைமணி நேரம்தான் இருந்தது.

"நான் கீழேயிறங்கி சைக்கிளைத் தள்ளிகிட்டு ரோடுக்குப் போறேன். அங்கே பஸ்ஸ்டாப் கிட்டே வா."

"என்னமாவது கொண்டு வரட்டுமா?"

அந்த குழந்தைத்தனமான கேள்வியைக் கண்டு அவன் சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறே?"

"நீ என்னோட ஓடிவந்துடறியா?"

"நான்சென்ஸ்" என்றாள் திஷ்யா.

"பின்னே ஏன் கேட்கறே?"

"அப்படி ஏதாவது ப்ளான் பண்றியோன்னு கேட்டேன்" என்று விளக்கினாள் திஷ்யா.

"நான்சென்ஸ்" என்று திருப்பிச் சொன்னான் சிவா. அவள் பதிலளிக்கவில்லை.

# 15

"எங்கே கூட்டிக்கிட்டுப் போறே?"

"பேசாம வாயேன்"

அவர்கள் ராயப்பேட்டையில் பஸ் ஏறி எலியட்ஸ் ரோட் ஸ்டாப்பிங்கில் இறங்கி ஆஸ்பத்திரியை நோக்கி நடந்தனர்.

குவார்ட்டர்ஸுக்குப் போய்ப் பார்த்தான் சிவா. பிரீதா இல்லை. கதவு பூட்டியிருந்தது. பக்கத்தில் கேட்டான்.

"டே ஷிப்ட்!"

"எப்ப முடியும்?"

"மாலை ஆறு மணி."

"அஞ்சு மணிக்குள்ளாரே கொழந்தைங்க எல்லாம் ஸ்கூல்லேருந்து திரும்பி வந்துடும்" என்று கவலையோடு சொன்னாள் திவ்யா.

இவள் தான் செத்துப் போவதாகச் சொன்னவள் என்று நினைத்தான் சிவா. அசந்தர்ப்பமாக அவனுக்குச் சிரிப்பு வந்தது. அதை திவ்யா பார்த்து விட்டாள்.

நர்ஸிங் ஹோமுக்குப் போகும் பாதையில் அவனை அவள் தொடர்ந்தவாறே கேட்டாள்.

"என்ன சிரிப்பு?"

"வீட்டைப் பூட்டினியா?" என்று பேச்சை மாற்றினான்.

"இந்த 'டெக்னிக்' வேண்டாம். நீ எதுக்கு சிரிச்சே?"

அவன் பதிலளிக்கவில்லை.

"இவதானே கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி சாகப்போறேன்னு சொன்னவண்ணு நெனச்சியாக்கும்?"

"அபாண்டம்"

"செத்துட்டா கவலையில்லே. உயிரோட உள்ள வரைக்கும் உண்டு. போகட்டும். அந்த நர்ஸ்கிட்டே நீ என்ன கேக்கப்போறே? ஐடியாவா?"

"எக்ஸாக்ட்லி"

"ஒனக்குன்னு ஒரு ஐடியாவும் தோணலியா?"

"நீ மேஜராயிட்டியா?"

"ஏன், திருநீர்மலையிலே கல்யாணம் பண்ணிக்கலாம்னு நெனைக்கறியா?"

"அதுக்கில்லே; ஒன்னை கடத்திக்கிட்டுப் போனதா ஒங்கப்பா போலீஸ் கம்ப்ளெயிண்ட் குடுத்திடப்போறாரு."

"கவலைப்படாதே. முந்தா நாளு எனக்கு பதினெட்டு முடிஞ்சு போச்சு. அந்த அளவுக்கு அவர் போகமாட்டார். ஒன் ஐடியா என்ன... அதைச் சொல்லு."

"அதான் யோசிக்கிறேன்."

"சிவா, நான் எனக்கு ஒரு பிரச்னையா இருந்தது போயி ஒனக்கு ஒரு பிரச்னையாயிட்டனா?"

சிவாவுக்கு அந்த நிராதரவில் மனசு விண்டு போயிற்று.

"இந்த மாதிரி பேசாதே!" என்று வருத்தமாய்ச் சொன்னான். திவ்யா மௌனமாய்விட்டாள்.

ரிசப்ஷனில் அவர்களை நிற்க வைத்தாள் ரிசப்ஷனிஸ்ட். ஃபோனை எடுத்து நர்ஸிங்ஹோமின் உள்ளே எங்கோ பேசினாள்.

"யார் வேணும்?"

"நர்ஸ் பிரீதா."

"ப்ளீஸ் வெய்ட் தேர்" எதிரிலிருந்த பெஞ்சை சுட்டிக்காட்டினாள்.

லாமினெட் வழவழப்பு மின்னிய அகலமான பெஞ்சில், மின் விசிறியும் சுற்றியிருந்த மர நிழலும் தந்த குளிர்ச்சியில் அவர்கள் உட்கார்ந்தபோது மனசு சற்று ஒய்ந்தது.

பத்து நிமிஷத்தில் பிரீதா வந்தாள். நர்ஸ் உடையில் தலைக்கு ஹுட் வைத்து மலர்ந்து சிரித்துவரும் அவளைக் கண்டதும் ஒரு தேவதையைக் கண்ட ஆஸ்வாசமாக இருந்தது.

"ப்ராப்ளமாணோ?"

காலையில்தானே சொல்லியனுப்பினேன் என்ற தொனியில் சிரித்துக்கொண்டே கேட்டாள்.

"தனியாப் பேசணும்" என்றான் சிவா.

பிரீதா ரிஸ்ட்வாட்சைப் பார்த்தாள்.

பெஞ்சில் உட்கார்ந்திருக்கப் பிடிக்காமல் திஷ்யா நெளிந்தாள்.

பிரீதா ரிஸப்ஷனிஸ்டை நெருங்கி "மேரி வந்நோ?" என்று கேட்டாள்.

"ஓ... ஷி கேம் ஜஸ்ட் ஹாஃப் அன் அவர் அகோ."

"கனெக்ஷன் தரு."

போனில் அந்த மேரி உடனே கிடைத்தாள்.

"ஞானாணு ப்ரீத. எனிக்கொரு அர்ஜண்ட் ஜோலி. கேட்டோ. ரிலீவ் மீ ஃபர் ஹாஃப் அன் அவர், ஐயே நாட்டி! கஸ்ட் வன்னதா! ஷ்யூர்... இன்ஃபார்ம் தி சீஃப் ஐ'ல் மேனேஜ்."



பிரீதா போனை வைத்தாள்.

"போகாம்."

அசோகமர நிழல் படர்ந்த சிமெண்ட் பெஞ்சு ஒன்று வெளியே காலியாக இருந்தது. மூவரும் அதில் போய் உட்கார்ந்தனர்.

"ஒய் திஷ்யா ஈஸ் டல்?" என்று பிரீதா ஆரம்பித்தாள். திஷ்யா சிரிக்க முயன்றாள். சிவா மளமளவென்று விஷயத்தைச் சொன்னான்.

"இவளுடைய அப்பா இவ சினிமாவிலே நடிக்கணும்னு கம்பெல் பண்றார். இவளுக்கு இஷ்டமில்லே. இன்னிக்கு ஸ்கிரீன்டெஸ்ட். வீட்டுக்கு வண்டி வர்றதா இருந்தது. இவ ஒர்க்ஷாப்புக்கு என்னை வரச்சொல்லி ஆள் அனுப்பினா. போனேன். அங்கிருந்து நேரா இங்கே வர்றோம்."

பிரீதா ஒவ்வொரு வார்த்தையையும் உன்னிப்பாகக் கேட்டாள்.

"சினிமாவிலே ஆக்ட் பண்ண இஷ்டமில்லே! வாட் எ குட் கர்ல்!" பிரீதா சிலாகித்தாள்.

"இதைச் சொல்ல ஈ காலத்திலே ஒரு மனோ திடம் வேணும்" என்று மலையாளத் தமிழில் சொன்னாள்.

"அப்பா ரொம்ப கம்பெல் பண்றார். ஹி ஈஸ் மேட் ஆஃப்டர் மனி."

பிரீதா பெருமூச்சு விட்டாள்.

"அவர்கிட்டே......" என்று அவள் பேச ஆரம்பிக்கும் முன் சிவா குறுக்கிட்டான்.

"பேசிப் பார்த்துட்டேன். ஷி வில் டைன்னு கூடச் சொன்னேன். அவர் அசையறதா தெரியலே!"

திஷ்யா உதட்டைக் கடித்துத் தலை குனிந்தாள்.

"நீ வீட்டை விட்டு வரான் தயாரோ?" என்று தடுமாறும் தமிழில் கேட்டாள். திஷ்யா இந்தக் கேள்வி தனக்கு என்று உணர்ந்து நிமிர்ந்தாள்.

"எப்படி?"

"என்னோட வந்து இரு."

"தெரியாமயா..... திருட்டுத் தனமாவா....."

"நோ. நீ வந்துடு. நான் அவர்கிட்டே போய்ப் பேசிக்கறேன்"

திஷ்யா தயங்கினாள்.

"நாட் ஃபர் எவர். அவருடைய தவறு அவருக்குப் புரியற வரை."

"கொழந்தைகளுக்கெல்லாம் யார் சமைப்பாங்க? வீட்டை யார் கவனிச்சுக்குவாங்க?" சிவா அவளுக்குப் பிரதிநிதியாகக் கேட்டான்.

"இவ சினிமாவிலே ஆக்ட் பண்ண சம்மதிச்சிருந்தா வீட்டை யார் கவனிச்சுக்குவாங்க?"

திஷ்யா அந்தக் கேள்வியில் இருந்த நியாயத்தை உணர்ந்தாள்.

"இவ இல்லேன்னா அந்த விடு என்னவாகும்னு அவருக்குத் தெரியணும். லெட்ஸ் டு ஒன் திங். இவங்க ரிலேடிவ்ஸ் யாரும் கிட்டே இல்லியா?"

"வியாசர்பாடியிலே சித்தி இருக்காங்க. அவங்க ரொம்ப கஷ்டப்படறாங்க. பெங்களூர்லே அத்தை இருக்காங்க. அங்கே வீடு சின்னது. எல்லாரும் அங்கே போக முடியாது" என்றாள் திஷ்யா.



"நான் சொல்ல வந்தது அது இல்லே. அவங்க எல்லோரும் என் க்வார்ட்டர்ஸுக்கு வரட்டுமே!"

சிவா திஷ்யாவைப் பார்த்தான்.

"இட்ஸ் டு மச் ஃபர் யூ" என்று திஷ்யா சொன்னாள். அப்படி வரட்டுமே என்று சொன்ன வார்த்தைக்கே அவள் மனசில் நன்றி நிரம்பிவிட்டது. பிரீதா மீது வைத்திருந்த ஓரிரு தப்பபிப்ராயங்களும் அதில் மூழ்கிப் போயின.

'பட் திஸ் ஈஸ் மோர் தான் டு மச் ஃபர் எ கர்ல்!"

சிவாவைப் பார்த்து சிரித்து கொண்டே பிரீதா தொடர்ந்தாள்.

"இந்த ஆண்களுக்கு விக்கிறதுக்கு பெண்ணைத் தவிர இப்ப வேற எதுவும் கெடைக்கலே."

"எல்லா ஆண்களுக்குமல்ல" என்று உஷ்ணமாக மறுத்தான் சிவா.

"ஆல் அஃப் யூ அட்மிட் இட்! ஒய் காண்ட் சம் ஒன் ஃபைட் இட்? ஏன் ஓர்த்தர் கூட இதுக்குப் போராடலே."

"அதான் வந்திருக்கேன்."

"இன்னிக்கு சாயங்காலமா நான் வீட்டுக்கு வர்றேன். நீயும் நானும் அவர்கிட்டே பேசுவோம். இப்ப இவ நம்ம க்வார்ட்டஸ்ல இருக்கட்டும். அவர் பிடிவாதம் பிடிச்சா கொழந்தைகளை இவ போயி அழைச்சிட்டு வரட்டும்."

திஷ்யா குறுக்கிட்டாள்.

"இல்லே. நான் வீட்டுக்குப் போறேன். நீங்க ரெண்டு பேரும் சாயங்காலம் வாங்க. பேசிப்பாருங்க. ஒத்துக்கலேன்னா கௌம்பி வர்றேன்" என்று நிறுத்தினாள் சிவாவைப் பார்த்து.

"நல்லது" என்றான் சிவா.

"ஐ அக்சப்ட். நானும் சிவாவும் சாயங்காலம் வர்றோம்."

சிவா எழுந்தான்.

"நானும் வர்றேன். லெட்ஸ் ஹாவ் எ கூல்டிரிங்க்" என்று அவர்களை வழியனுப்ப வந்தாள் பிரீதா.

பஸ்ஸில் வரும் போது திஷ்யா கேட்டாள்.

"ஏன் நீ இங்கே போகப் போறோம்னு மொதல்லே சொல்லலே?"

"சொல்லியிருந்தா ஒனக்குப் பிடிச்சிருக்காது. நீ அந்த பிரீதாவை அநாவசியமா வெறுத்தே!"

"சீச்சீ.. அவ நல்லவள்."

# 16

செம்மஞ்சளாகப் பிளந்திருந்த பப்பாளிப் பழத்துண்டங்களில் கருமுத்துகளாய் மின்னிய விதைகளை ஸ்பூனில் வழிக்கப் போனாள் பிரீதா.

நாற்காலியில் உட்கார்ந்திருந்த சிவா "வெய்ட்" என்று தடுத்தான்.

பீங்கான் கோப்பையில் அவள் அந்த எவர்சில்வர் ஸ்பூனை அப்படியே விட்டாள். 'ணங்'கென்று ஓர் இனிய ஒலி வந்தது.

"வாவ். ஹவ் லவ்லி" என்றான்.

பிரீதாவும் அந்த அழகில் லயித்தாள்.

"செம்மஞ்சள் மேகத்தில் மிதக்கும் கறுப்பு தேவதைகள்" என்றான்.



"பிரிந்த இதயத்தின் நிராசைக் கருமணிகள்" என்றாள் பிரீதா.

சிவா "வொண்டர் ஃபுல்" என்று அவள் உவமையைச் சிலாகித்தான். அவளைப் பார்த்தான். அந்தக் கண்களில் அந்த இனிய பிரீதா இல்லை. இவள் பிரச்னையை எதிர் கொள்பவள். குளிர்ச்சியான ஒளியூட்டுகின்ற பிரீதா இல்லை.

இவள் வேறு—விளக்கின் கீழே நிற்கும் கருநிழல் மாதிரி.

சிவா அவளிடம் அந்த அந்நியத்தைக் கண்டு அதைச் சந்திக்கப் பிரியமின்றி பார்வையை ஒதுக்கினான்.

"உனக்கு திஷ்யாகிட்டே என்ன அப்படி ஒரு அக்கறை?"

மெல்ல கடற்காற்று அசோக மரங்களை உயிர்ப்பித்தது.

சிவாவுக்கு அவள் இன்னும் சில அடிகள் முன்னேறி வருவது போல் ஓர் உணர்வு.

"இன்னிக்குக் காலையிலே அவள் ஒர்க்ஷாப்புக்கு தம்பியை அனுப்பி என்னைக் கூட்டி வரச் சொன்னா"

"அதுக்கு மேலே?" அவள் தூண்டினாள்.

"அதுக்கு மேலேயும் உண்டுண்ணு இன்னிக்குத் தான் வாய் விட்டுச் சொன்னாள்."

"ஓ"

பிரீதா இதை இயல்பாகச் சொன்னாளா என்று அவன் நிமிர்ந்து பார்த்தான். அவள் புன்னகை செய்ய முயன்றாள். அதில் வலி தென்பட்டது.

சிவாவின் கண்களில் அவள் எதையோ ஆழ்ந்து தேடினாள்.

"உனக்கும் உண்டா?"

"நேத்து வரைக்கும் இருந்தது."

"இப்ப..."

"யோசிக்கிறேன்"

"ஏன்?"

"தாமுவுக்கு அவள் பேரிலே என்ன இன்ட்ரஸ்ட் இருக்கும்னு தெரிஞ்சபிறகு யோசிக்காம என்ன பண்றது?"

"பப்பாளி விதையை எடுத்துடட்டுமா?"

"ஓ.. எஸ்!"

பிரீதா விதைகளை அகற்றினாள். இன்னொரு சாஸரில் இரண்டு துண்டங்களை எடுத்து வைத்தாள்.

"சாப்பிடு"

அவன் கீழ்ப்படிவது போல் பழத் துண்டங்களில் செருகியிருந்த ஸ்பூனில் வெட்டினான்.

அவன் பழத்தை அருந்தும் போது அவளும் கூட சாப்பிடத் தொடங்கினாள்.

"எதற்காக யோசிக்கிறே?"

"ம் ம்..." என்று அவள் கேள்வி புரியாது எங்கோ நினைவில் கரைந்திருந்த சிவா விழிப்பு வந்து கேட்டான்.

"தாமு என்னை மனிதனாக்கியிருக்கிறார்"

"நன்றி விசுவாசமா?"

"அது மட்டுமல்லே."

"பின்னே?"

"திஷ்யா தாமுகிட்டே இன்னும் மகிழ்ச்சியா இருக்கலாம்."



"உன்னை விரும்பின பிறகா?"

"விருப்பங்கள் நிலையானவையல்ல"

"வாட் டு யூ மீன்?"

"வசதிகளைத் தான் மனசு எப்பவும் தேடுது. இன்னும் ஒண்ணுமே ஆகாத என்னாலே என்ன வசதி செஞ்சுட முடியும்? இந்தச் சினிமா சான்சை விட்டுட்டதுக்கு அவளே பின்னால வருத்தப்படலாம்.

என்னை விரும்பியதுக்கும் சேர்த்து வருத்தப் படலாம். அவளே இல்லேண்ணாலும் அவங்க அப்பா, குடும்பம் எல்லாரும் அப்படி அவளை நெனைக்க வச்சுடலாம்"

"வாட் அபவ்ட் திஷ்யா? அவள் மனசு என்ன? தாமு யார் என்னண்ணு அவளுக்கு நல்லாத் தெரியும். அவ தாமுவை லைக் பண்ணுவாளா?"

"இல்லே"

"தென்?"

"தென் இட்ஸ் ஹெர் ஓன் ப்ராப்ளம்"

"இந்த ஒலகத்துக்கு நீ ஒரு மிஸ்ஃபிட் சிவா"

அவன் சிரித்தான்.

"இது நீ வாழ வேண்டிய காலமில்லே. நீ ஒரு நூற்றாண்டு பின்னாடி இருக்கே"

"ஆ, இருக்கட்டுமே. ஒலகம் ரொம்பப் பெரிசு. அதற்குப் பொருத்தமானவங்களே மெஜாரிட்டி ஆயிட்டாலும் மைனாரிடிக்கு ஒரு மூலை இருக்கு."

"இதான் டிஃபீடிஸம். தோல்வி மனப்பான்மை."

"இது ஒரு மனப்பான்மை. வெற்றியோ தோல்வியோ நாலு பேர் குத்தற முத்திரை. முத்திரைகளுக்கு வாழாம

மனசுக்காக வாழ்கிறவனுக்கு இது விஷயமில்லே. தேர் அர் ஸோ மெனி மிஸ்ஃபிட்ஸ். நல்ல யோசிச்சா மிஸ் ஃபிட்ஸ் தான் மெஜாரிடி."

சிவா ஸ்பூனில் மற்றொரு பப்பாளிப் பழத்துண்டை எடுத்தவாறே பேசினான்.

"நீயும் என்னைப் போலவே ஒரு கோழைதான் சிவா."

"ஆமா... நாம வாழ்க்கைக்கு வசதிகளுக்கு அது நமக்கோ பிறருக்கோ இல்லாமப் போறதுக்கு ரொம்பப் பயப்படறோம்."

"தென்... நீ ஏன் பேனா எடுத்து எழுதறே. தன்னை விரும்புகின்ற நம்புகின்ற ஒருத்தியை ஏத்துக்க முடியா தவன்—அந்த பிரச்னைகளுக்குப் பயப்படறவன் என்ன எழுத்தாளன்?"

அவன் அதிர்ச்சியுற்றான்.

"பின்னாலே இந்தத் தோல்வி மனப்பான்மைக்கு கோழைத்தனத்திற்கு அழகான ஜோடனைகள் செய்து கதை எழுதுவே, பெரிய காதல் தோல்வி மாதிரி நீ இதைப் போஸ் பண்ணுவே"

பிரீதாவிடம் இப்படி ஒரு பக்கத்தை அவன் எதிர் பார்க்கவில்லை.

"நான் அப்படியா பிரீதா"

"நீ மட்டுமில்லே. யூ மென், மோஸ்ட் ஆஃப்யூ ஆர் லைக் திஸ். ஒங்களுக்குப் பெண் வேணும்; பிரச்னைகள் இல்லாமே. லகுவா பொறுப்பு ஏத்துக்கனும்ணா ஒங்க ளுக்கு கசக்கும். எந்த சாக்கிலே கை கழுவலாம்னு யோசிப் பீங்க."

சிவாவுக்கு அவள் இன்னும் பேசட்டும் என்று ஒரு வெறி வந்தது.



அவளுடைய வார்த்தைகள் உளித்தாக்கு போல் இறங்கி அவனைச் செதுக்கின.

அவன் கொஞ்சம் கொஞ்சமாய் சிதைந்தான். வடி வமைப்பின் பரிணாமங்களில் உரிந்து உரிந்து வீழ்ந்தான்.

"ஒங்களுக்கெல்லாம் காதல் வேணும். காதல் பிடிக் கும். அதன் பிரச்னைகளுக்கு நீங்க துடி துடிப்பீங்க. ஆனா அது இன்னொருத்தருடையதா இருக்கணும். வென் இட் கம்ஸ்டு யூ. சமுதாயம்... தியாகம்... அது இதுண்ணு உங்க சுயநலத்துக்காக நீங்க போலிக் காரணங்களைத் தேடு வீங்க.."

சிவா ஸ்பூனைக் கீழே வைத்துவிட்டான்.

இவள் வேறு பிரீதா. கொதிப்புற்றவள். வெடிக் கின்றவள்.

மெய்மறந்து போய் அவன் கேட்டுக்கொண்டிருப்பது உறைத்த மாதிரி பிரீதா நிறுத்தினாள்.

"ஸாரி சிவா."

"ப்ரொஸீட்... மேலே சொல்லுங்க. எக்ஸ்ப்ளய்ன் யுவர் செல்ஃப்."

அவள் முகம் குப்பென்று சிவந்தது.

"ஐ டிட்ன்ட் மீன் யூ"

"நோ... இட்ஸ் ஆல் ரைட்... நானும் ஆண். அதே வர்க்கம், கேரி ஆன்."

அவள் உதட்டை மென்றுகொண்டே அவனை ஊடுருவுவது போன்று பார்த்தான். பிரீதாவின் கண்களி லிருந்து முத்து முத்தாக ஒரு மௌனத்தினிடையே நீர்த்துளிகள் உருண்டன.

"பிரீதா" என்று ஒன்றும் புரியாமல் முனகினான்.

அவள் சட்டென்று திரும்பி சமையலறைக்குப் போய் விட்டாள். பத்து நிமிஷம்... பதினைந்து நிமிஷம்... சிவா அங்கே ஒரு சம்பந்தமற்றவன் போன்று உட்கார்ந்திருந்தான்.

அங்கே உட்கார்ந்திருப்பதா... எழுந்து செல்வதா என்று புரியாமல் கொஞ்சம் குழம்பினான்.

சமையல் அறைக்கு உள்ளே போய் அவளை எந்த விதத்திலாவது தேற்றவேண்டுமா என்று யோசித்தான்.

பேசாமல் அங்கே உட்கார்ந்திருப்பதைத் தவிர தன்னால் எதுவும் செய்ய முடியாது என்று உணர்ந்து கொண்டவன் போன்று அமைதியாக சாஸரில் வைக்கப் பட்டிருந்த பப்பாளிக் கீற்றை ஸ்பூனில் கொஞ்சம் கொஞ்சமாக நறுக்கிக்கொண்டே அதை அருந்தாமல் வெறுமனே நறுக்கிக் கொண்டே அதன் சிதைவைக் கவனித்தான்.

பதினைந்து நிமிஷம் கழித்து டிரஸ் மாற்றிக் கொண்டு வந்தாள். பிரீதா.

பவுடர் டச்—அப் செய்திருந்தாள். அழுத முகமல்ல பழைய பிரீதா. இனிய, சுமுகமான, ஒளி பாய்ச்சுகின்ற பிரீதா.

"சரி... நாம கௌம்புவோமா?" என்று அப்படி எதுவும் நடக்கவில்லை போன்று புன்னகையுடன் கேட்டாள்.

"எங்கே?"

"திஷ்யா வீட்டுக்குத்தான்"

அவளை அழைத்துச் செல்லவே வந்திருக்கிறோம் என்பது சிவாவுக்கு அப்போதுதான் ஞாபகம் வந்தது.

அவனும் எழுந்தான்.

# 17

"என் குடும்ப விஷயத்திலே தலையிடறதுக்கு நீங்க யாரு?"

பிரீதாவையும் சிவாவையும் பார்த்து சீறி வெடித்தார். புண்ணியகோடி.

பனிரெண்டு மணிக்கு ஒரு காரில் வந்திருந்தார். வீடு பூட்டியிருப்பதைப் பார்த்த கொதிப்பும், வந்தவர்களிடம் பட்ட அவமானமும் அவரைக் கொதிப்பூட்டின.

"எம் பொண்ணை நான் சினிமாவுக்கு அனுப்புவேனோ. டிராமாவுக்கு அனுப்புவேனோ... அது என் இஷ்டம். அவ எம் பொண்ணு. அவ கேக்கறாளோ இல்லையோ... நான் அவளை வற்புறுத்துவேன்... அடிக்கக்கூட அடிப்பேன்... என் இஷ்டம்."

அவர் பார்வை பிரீதா மீது பாய்ந்தது.

"நீ யாரு... ஏம்மா நர்ஸம்மா, நீ இதைக் கேள். ஒங்க வழியிலே நான் குறுக்கே வந்தனா... நீங்க இன்னா எனக்கு ஜாதியா ஜனமா... சொந்த மனுஷாளா... எந்த தைரியத்திலே நீங்க என் வூடு ஏறி வந்தீங்க... ஏதோ பக்கத்திலே கொடக் கூலிக்கு இருக்கீங்கண்ணு மரியாதைக்கு நாலு வார்த்தை நல்லதனமா பேசியிருப்பேன்... அதுக்காக... என் வூட்டு விஷயத்திலே தலையிட ஒங்களுக்கு என்ன உரிமை?"

எல்லாவற்றையும் அவர்கள் எதிர்பார்த்தே வந்திருந்தனர். அதனால் வெறி தணியட்டும் என்று காத்திருந்தனர்.

திஷ்யா குழந்தைகளை அழைத்துக் கொண்டு உள்ளே ரூமிற்குப் போய்விட்டாள்.

புண்ணியகோடிக்கு மேல் மூச்சு வாங்கிற்று. இரைக்க இரைக்க நின்றார். இந்த வயசான தோற்றத்தில் இப்படிக்

கத்துகிற அவரைப் பார்த்து சிவாவுக்கு மிகவும் பரிதாபமாக இருந்தது.

வாழ்வில் கானலை விரட்டுவதையே ஒரு தொழிலாகக் கொண்டு வருந்தி அடிவாங்கியவர். சமுதாய நோய்களுக்கு பலியானவர்.

"சார்."

"நான் எதையும் கேக்கத் தயாரா இல்லே"

"நீங்க கேக்கலேண்ணாலும் நாங்க சொல்ல வந்திருக்கோம். ஒங்க பொண்ணுக்கு இதிலே இஷ்டமில்லே" என்று உறுதியோடு சொன்னான் சிவா.

"அதைச் சொல்ல நீ யாரு?"

"ஒங்க பொண்ணைக் கூப்பிட்டு நான் யாருன்னு கேளுங்க."

"ராஸ்கல்" என்று சிவாவை அடிப்பது போன்று கையை ஓங்கிக்கொண்டு ஓடிவந்தார் புண்ணியகோடி. அவர் நெருங்கியபோது அவன் எழுந்து நின்றான்.

அவர் முகம் திடீரென்று மாறிற்று.

எல்லாவற்றுக்கும் இவன்தான் காரணம் என்பது போல் ஒரு வெறுப்பு அவர் முகத்தில் திரண்டது. அந்த வெறுப்பில் ஒரு பயம்...

திஷ்யா கைவிட்டுப் போய்விடுவாளோ என்ற பயம் அவர் உயர்த்திய கையைக் கீழே விட்டார்.

"நீ மிரட்டறியா?" என்று மூச்சு வாங்கக் கேட்டார் அவர் குரல் தாழ்ந்து விட்டது.

"இல்லே, ஒங்க பெண்ணைக் கூப்பிட்டுக் கேளுங்க"

"நான் கேக்கமாட்டேன்! நீ வந்திருக்கறதிலே இருந்தே தெரியுது ஒன் துணிச்சலுக்கு என்ன காரணம்னு. சிவா... சிவா... நான் ஒனக்கு என்ன தீமை செஞ்சிருக்கேன்'



அவர் குரல் தாழ்ந்தது. பிச்சை கேட்பது போல் கெஞ்சத் தொடங்கியது. "வாண்டாய்யா... விட்டுடு... இது ரொம்ப நொடிஞ்ச குடும்பம். நான் ரொம்ப கஷ்டப்பட்டுட்டேன். ஒனக்கு என்ன... ஆயிரம் எடத்திலே பொண்ணு கெடைக்கும். நான் ஏழை. நீ பெரிய பொஸிஷனுக்கு வருவே... ஒனக்கு அருமையான பொண்ணு கெடைக்கும். வாண்டாய்யா... வாண்டாம். ஒன்னைக் கையெடுத்து கும்புடறேன். எம் பொண்ணை விட்டுடு ஐயா! அது லைஃபை கெடுத்துடாதய்யா"

"மிஸ்டர் புண்ணியகோடி" அவர் தேம்பி அழுவதைக் கேட்கச் சகிக்காமல் பிரீதா குறுக்கிட்டாள்.

"எம்மா... நர்ஸம்மா... ஒனக்குக் கோடிப் புண்ணியமுண்டு. இவனுக்கு புத்தி சொல்லு. எனக்கு இன்னும் மூணு பசங்க இருக்கு. இன்னும் எட்டு வருஷத்திலே நான் ரிட்டயராயிடுவேன். இதுங்களுக்கு இதுவரிக்கும் நான் ஒரு வழியும் பண்ணலே. எம் பொண்டாட்டி... எம் பொண்டாட்டி..." என்று அவர் மேலும் தேம்பித் தேம்பி அழத் தொடங்கிவிட்டார்.

"அப்பா" என்று கத்திக் கொண்டே வெளியே வந்தாள் திஷ்யா.

புண்ணியகோடி திரும்பிப் பார்த்தார்.

"இப்ப என்ன நடந்து போச்சுண்ணு இப்படி பொலம்பறீங்க"

"நீ உள்ளே போடி.. உள்ளே போ" என்று திடீரென்று வெறிபிடித்துக் கத்தினார்.

திஷ்யா உள்ளே போகவில்லை.

"போக மாட்டே, போக மாட்டே" என்று கத்திவிட்டு அவர் படார் படாரென்று தன் தலையில் அறைந்து கொண்டார்.

திஷ்யா அமைதியாக நின்றாள்.

"எல்லாம் ஒன்னாலதாண்டி குடி கேடி! இப்படி நாலு பேர்கிட்டே நான் பொலம்பற நிலைக்கு ஆளாக்கிட்டியே. எல்லாம் ஒன்னால தான்"

"இல்லே, நான் என்ன பண்ணணும்?"

"உள்ளே போ"

"இல்லே, நான் வெளியே போகப் போறேன்!"

"நீ போயிடுவியா? ஒனக்கு அவ்வளவு தைரியம் உண்டா?"

"நிச்சயமா. என்னை அழைச்சுட்டுப் போகத்தான் இவங்க வந்திருக்காங்க. நான் தன் தம்பி தங்கைகளை அழைச்சிகிட்டு வெளியே போகப் போறேன்"

"நீ எங்கே போவே?"

"இவங்களோடே"

"நான் போலீஸ்லே கம்ப்ளெயிண்ட் கொடுப்பேன்"

"நான் எதிர் பார்த்தேன். நான் மேஜராய்ட்டேன். எனக்கு என் பாதையை தீர்மானிக்கிற சுதந்திரம் உண்டு"

"இதுக்காடி நான் ஒன்னைப் பெத்தேன்"

திஷ்யா உறுதியோடு பேசினாள்.

"இது கௌரவமான துப்பா. சினிமா சினிமான்னு நீங்க அலையறீங்களே அதை விட இது உத்தமமானது. ஒண்ணு இவருக்கும் எனக்கும் நீங்க கல்யாணம் நடத்தி வச்சு நீங்களே கௌரவமா அனுப்புங்க. இல்லே இப்ப ஒங்க கண்ணெதிரே திருட்டுத்தனமா இல்லே பகிரங்கமா நான் போறேன். தனியா இல்லே, கொழந்தைகளோடே"

சிவா அந்த நிமிஷம் வரை அவள் சொன்ன திருமணம் என்ற வார்த்தைக்கு தயாராயில்லாமல் இருந்து அவள் வாயில் அது வந்ததும் அதை ஏற்கச் சித்தமானான்.



ஒரு தீர்மானத்துக்கு வருகிற வரை இருந்த மயக்கம் அப்படி வந்ததுமே பொழுது விடிந்த மாதிரி ஒரு தெளிவை அவனுக்கு வழங்கிற்று.

"ஆமா சார், இப்ப நாங்க பொண்ணு கேட்க வந்திருக்கோம்னு வச்சுக்கங்க. ஒங்களை மிரட்ட வரலே."

புண்ணியகோடி எல்லா அம்புகளும் பயனற்று விட்டது போல் குறுகிப் போய் நாற்காலியில் உட்கார்ந்தார். தலை மீது கை வைத்துக் கொண்டார்.

ஒரு நிமிஷம் அங்கே யாரும் பேசவில்லை.

எல்லா விதத்திலும் போராடித் தோற்று விழுந்தவனைச் சுற்றி நிலவும் ஒரு மௌனம் அங்கே சூழ்ந்தது.

சிவா பிரீதாவைப் பார்த்தான்.

புண்ணியகோடியின் தோல்விக்கு தாங்கள் ஒரு காரணமான பச்சாதாபம் இருவர் பார்வையிலும் பகிர்ந்து கொள்ளப்பட்டது.

"எம் பென்சிலை ஏந்தி எதுத்தே-குது-குதுதீ" என்று குழந்தை ஆனந்து ஓ வென்று கூப்பாடு போடுவது கேட்டது.

"ஏய் சீதா! பென்சிலைக் குடுத்துடு. அழவைக்காதே அவனை." என்று பிரேம் அதட்டினான்.

எதையோ படாரென்று வீசியெறியும் ஓசையும் கலகலவென்று பென்சில்கள் உருண்டோடும் ஒலியும் ஒன்றையொன்று தொடர்ந்தன.

பளாரென்று ஓர் அறை வைக்கும் சப்தம்.

ஏக காலத்தில் இரண்டு அழுகுரல்கள். தனது நிலை என்னவென்று உணர்ந்தது போல அந்தச் சிறு சச்சரவை ஏதும் செய்ய மாட்டாமல் வெறித்துப் பார்த்தார் புண்ணியகோடி.

"ஏய் சீதா, ஆனந்து, அழறதை நிறுத்துங்க" என்று அறைப் பக்கம் திரும்பி ஓர் உத்தரவு போட்டாள் திஷ்யா.

ஸ்விட்சை அணைத்த மாதிரி இரண்டு குரல்களும் அடங்கின.

பிரீதாவுக்கு ஒரு புன்னகை வந்தது.

"ஆல்ரைட் சிவா, எம் பொண்ணை ஒனக்குக் கொடுக்கறேன். கல்யாணத்தை எதாவது கோயில்லே தான் நடத்த எனக்கு சௌகரியப்படும். முகூர்த்தத் தேதியை பார்த்து வந்து நாளைக்கு சொல்றேன்" புண்யகோடி ஈன சுரத்தில் பேசினார்.

பிரீதாவின் முகத்தில் வீசிய ஒளி திஷ்யாவை விட அதிகமாய் இருந்தது.

"சீக்கிரமா நடக்கணும்" என்றான் சிவா.

"ரெண்டு மூணு நாள்ளே" என்று ஈனசுரத்தில் பதிலளித்தார் புண்ணியகோடி.

பிரீதாவின் குவார்ட்டர்ஸ் வரை உடன் சென்றான் சிவா. ஒன்றும் பேசாமல் வழியெல்லாம் யோசனையில் சென்றான்.

"என்ன சிவா. 'க்ளூமி' ஆய்ட்டே?"

'நான் மதனபள்ளி போகணும்."

"எதுக்கு, தாமுவோட பர்மிஷன் வாங்கவா?"

"இதுக்கு பேர் பர்மிஷனா?"

"வாட் எல்ஸ்?"

"அவர் என்னை மனுஷனாக்கினார், அவருக்கு இது தெரியணும். த ஹோல் ஸிச்சுவேஷன்."

"அப்போ நானும் ஒன் கூட வர்றேன். நான்தான் அதை அவருக்குப் புரியறா மாதிரி விளக்க முடியும்."



"தாங்யூ. ஆனா அவர் கிட்டே ஒரு ரெகமெண்டேஷனோட நான் போற மாதிரி எனக்கே தோணிடும். இட்ஸ் குட் ஆர் பேட். நானே அதைத் தனியா சந்திக்கப் பிரியப் படறேன்."

பிரீதாவுக்கு அவன் மீதிருந்த மதிப்பு உயர்ந்தது.

"போய் வா! ஆனா அதுக்கு முன்னாடி புண்ணிய கோடிகிட்டே முகூர்த்த தேதியைக் கன்பார்ம் பண்ணிக்க."

"எஸ், யூ ஆர் கரெக்ட்" என்றான் சிவா.

இரவு ஒன்பது மணிவரை பிரீதாவுடன் பேசிக் கொண்டிருந்து விட்டு ராயப்பேட்டைக்கு பஸ் ஏறினான் சிவா.

வீட்டு வாசலில் விளக்கெரிந்து கொண்டிருந்தது. கும்பலாக பெண்கள் உட்கார்ந்திருந்தனர். ஏதோ துர்ச்சம்பவம்.

கீழ்ப் போஷன்காரர் வாசலில் மார்புத் துண்டோடு நின்றார்.

"என்ன சார்" என்றான்.

"நீ எல்லாம் மனுஷனாய்யா? ஒன்னாலே அந்த கம்பவுண்டர் வெசம் குடிச்சு டேஞ்சரா ராயப்பேட்டை ஹாஸ்பிடல்லே அட்மிட் ஆயிட்டான்" என்று அவர் வெடித்தார்.

## 18

ராயப்பேட்டை ஹாஸ்பிடல் கேட்டை விட்டு சிவா இறங்கினான். சாலையில் விளக்குகள் ஒன்றிரண்டு எரியாததால் இருள் அங்கங்கே தேங்கியிருந்தது.

சென்னை இன்னும் உறங்கவில்லை.

அவ்வப்போது சாலையில் சென்ற கார்களும் லாரிகளும் அவனுக்கு அதை அறிவித்தன.

பால் வாங்கி வருவதற்காகக் கொண்டு வந்த பிளாஸ்க்கின் பிளாஸ்டிக் பெல்டை எடுத்து தோளில் மாட்டிக் கொண்டான்.

"மணி இன்னா சார்?" எதிரே வார்டிலிருந்து வந்தவர் எவரோ கேட்டனர்.

அவனிடம் கடிகாரம் இல்லை.

"தெரியலே" என்று சொல்லி விட்டு நகரும் போது கதவருகில் நின்றவர் ஒருவர் சொன்னார்.

"ரெண்டு அஞ்சு"

"தாங்க்ஸ்"

யாரோ யாருக்கோ சொன்னார்கள்.

அவன் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்து எவ்வளவு நேரமாகப் போகிறதென்று கணக்கிட்டான்.

ஐந்து மணி நேரம்.

புண்ணியகோடி மரணத்தோடு ஐந்து மணி நேரமாகப் போராடிக் கொண்டிருக்கிறார்.

சிவா சாலையில் நாற்சந்தி கடந்து திறந்திருந்த பால் கடை ஒன்றை நெருங்கினான்.

"ப்ளாஸ்கைக் கழுவி ரெண்டு பால், ரெண்டு பன் பார்சல்"

"இன்னா சார், கம்பவுண்டர் பொயச்சிக்கினாரா"

சிவா திரும்பிப் பார்த்தான்.

பால் கடைக்குப் பக்கத்திலிருந்த பங்க் கடைக்காரன் கேட்டான்.



"அபாய கட்டம் தாண்டிடுச்சி."

வாழைப்பழம் உரித்துத் தின்றுகொண்டிருந்த நபர் ஒருவர் வேலை தீர்ந்து தோலை வீசிவிட்டு அரைகுறை அக்கறையோடு கேட்டார்.

"யாரு?"

"கம்பவுண்டர் புண்ணியகோட்டி இல்லே, அதாம்பா... வாரம் தவறாமே ரேஸுக்குப் போவாரே... நெத்திலே துண்ணூறு வச்சிகினு எப்பவும் புல் ஷர்ட் போட்டுனு வருவாரே... நம்ம கடைலே அக்கவுண்ட் வச்சிகினு ரேஸ் டிப்ஸ் வாங்கமாட்டாரு? அவரு பாய்ஸன் சாப்டாரு"

"அடப் பாவமே...பூட்டாரா?"

"தப்பிச்சுக்கிட்டாரு"

"வயசான மன்சன். எத்தினி குடும்ப கஷ்டமோ?"

"அது எப்பவோ நடந்துருக்கணும்பா... கொய்ந்த குட்டிக்கார ஆளு. எதோ மானத்தை மடியிலே கட்டிக்கினு தம் புடிச்சாரு"

"சீக்கிரமா குடுங்க" என்று அந்த சூழ்நிலையின் இறுக்கம் தாளாமல் கடுகடுத்தான் சிவா.

"இப்பதானே சார் கொணாந்த... இதுக்குள்ள துடிச்சா... ப்ளாஸ்க் கயுவ வாணாம்." என்று யாந்திரீகமான அமைதியோடு பதிலளித்துவிட்டு வெந்நீரில் ப்ளாஸ்கைக் கழுவினான் கடைக்காரன்.

"அது இன்னா கத...?" வாழைப்பழம் வம்புப் பிரியத்தில் வாயைக் கிளறியது.

"பொண்டாட்டி ஒரு வைர வியாபாரிய இஸ்துக்கினு பூட்டா. அது நடந்து அஞ்சு வருஷமாவப் போவுது."

அவனை உதைக்கலாமா என்று சிவா யோசித்தான். ஒரு வாயை மூடும் முயற்சிக்காக விபரீதம் தான் விளையும்.

"இப்ப ஏன் பாய்ஸன் சாப்டாரு?"

"தெரிலே... பொண்ணு விஷயம் போல கீது"

பால் கடைக்காரன் பன்னை மடித்துக் கட்டப்போனான்.

"கட்ட வேணாம்" என்று காகித மடிப்பில் பன்களை வாங்கிக் கொண்டான். சில்லறையைக் கொடுத்து விட்டு வரும்போது சமூகத்திற்கு ஊர் வம்பில் இருக்கிற ருசி முள்ளாய் உறுத்திற்று.

எட்டுப் போர்ஷன்கள் கொண்ட அந்த வீடு... வீதி... அறிந்தவர்கள்... புண்ணியகோட்டியைத் தெரிந்தவர்கள்... அவர்கள் அனைவர் முன்பும் தான் குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட்டிருப்பதை பிரத்யட்சமாக அனுபவித்தான்.

பல கண்கள் அந்த ஐந்து மணி நேரத்துக்குள் அவனை விரோதித்தன. சிவாதான் அவருக்கு விஷத்தை ஊற்றிக் கொடுத்தவன் என்கிற மாதிரி பார்த்தன.

ஹாஸ்பிடலுக்குள், காத்திருக்கும் பெஞ்சில் கால் நீட்டிப் படுத்திருந்த பிரேம் கூட முதலில் அவனை அப்படித்தான் பார்த்தான்.

திஷ்யா மட்டும்தான் அந்த துவேஷம் மெல்லும் நிலையில் அவனிடம் வித்தியாசமாக நடந்து கொண்டாள்.

கையில் பன்களுடன் அவன் அந்தப் பெஞ்சுக்குப் போனான்.

வியர்வையில் மை கரைந்துபோய் கண்கள் இன்னும் பெரிதாய்த் தெரிய அவள் பரிதாபமாய்க் காணப்பட்டாள்.

"திஷ்யா... பன்னும் பாலும் வாங்கியாந்திருக்கேன். பிரேமை எழுப்பு."



"எனக்கு வேணாம்"

"நீ கூட ராத்திரி சாப்பிடலியே. மத்தியானம் கூட நீ சாப்பிடலேன்னு சீதா சொன்னாள்."

அவள் பிரேமை தட்டி உலுக்கினாள். அவன் கண்களை முழித்துப் பார்த்துவிட்டு மீண்டும் திரும்பிப் படுத்துக் கொண்டான்.

"இவனை தூக்கத்திலேருந்து எழுப்ப முடியாது"

"அப்ப நீ சாப்பிடு"

"எனக்கு இப்ப வேண்டாம். ப்ளீஸ்... தொந்தரவு பண்ணாதீங்க"

அவன் பெஞ்சு ஓரமாக மாட்டியிருந்த ப்ளாஸ்டிக் கைப்பையில் பன்களைப் போட்டான்.

பிரேம் நகர்ந்து படுத்ததில் தலைப்பக்கம் கொஞ்சம் இடம் காலியாயிருந்தது. அங்கே போய் உட்கார்ந்தான். திஷ்யா பிரேமின் கால்மாட்டில் உட்கார்ந்திருந்தாள்.

"டாக்டர் வந்தாரா?"

"யாரும் வரல்லே. ஒரு நர்ஸ் வந்து போச்சு."

"என்ன சொல்லுச்சு"

"பொழச்சுக்குவாராம்"

அவன் நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

"சிவா... ரொம்ப ரொம்ப ஸாரி"

அவன் ஒன்றும் பேசவில்லை. நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

"ஒங்களை நான் அநாவசியமா இதிலே இழுத்து விட்டுட்டேன்."

"சரி சரி... இதுக்கெல்லாம் அவசியமில்லே."

"அவசியம் வந்துடுச்சு."

"வேண்டாங்கறேனே.. இந்தப் பேச்சை விடு"

"இல்லே... நான் அப்பா இஷ்டப்படியே நடக்கறதுண்ணு முடிவு பண்ணிட்டேன்."

அவனுக்கு பளிச்சென்று அறைந்த மாதிரி இருந்தது.

"பயந்துட்டியா?"

"பயமா..." அவள் உதட்டிற்குள் வெறுமையாகச் சிரித்த ஓசை ஹுங்காரமாகக் கேட்டது.

"அதெல்லாம் எப்பவோ போயிடுச்சு. அம்மா போனாளே அப்பவே போய்டுச்சு."

"இப்ப எதுவும் பேச வேண்டாம்."

"இல்லே, இப்ப பேசிடணும்" அவள் குரலில் உறுதி உயர்ந்து தொனித்தது.

"இது என் பிரச்னைன்னு மட்டும் நெனச்சுட்டேன். அது மகா தப்பு. ஒங்க பிரச்னை. இந்தப் பையன்.. அந்த ரெண்டு கொழந்தைங்க.. பொறப்பட்டுப் போனாளே அந்த மகராசி... அவ குடும்பத்துக்கு வச்சிட்டுப் போன நல்ல பேரு.. அதுவும் பிரச்னை. வேண்டாம், என்னாலே என் பிடிவாதத்தாலே எதுவும் நடக்க வேண்டாம்."

"அதுக்காக சகதியிலே எறங்கிடறேண்ணு சொல்றியா?"

"ஒருத்தி எறங்கிட்டா இத்தனை பேரும் தப்பிச்சுக்கலாம்."

"திஷ்யா."

அவள் சேலைத் தலைப்பை வாயில் புதைத்துக் கொண்டாள். அவளது கறுத்து அடர்ந்த நீளமான கூந்தல் அவள் முகம் குனிந்தபோது மெதுவாக அதிர்ந்து குலுங்கிற்று.



அவள் விம்மல்களைக் கட்டுப் படுத்துகிறாள் என்று புரிந்து கொண்டான்.

அந் நேரத்தில் அவளை வாரியணைத்து அந்த முகத்தை தன்மார்புறத் தழுவிக் கொள்ள வேண்டும் போலிருந்தது.

அங்கு வழிந்த கண்ணீரையும் ஒலிக்கின்ற விம்மல் களையும் துளி விடாமல் முழுக்க முழுக்க அப்படியே தன் மார்பின் மீது வாங்கிச் சுமக்க வேண்டும் போன்று அவனுக்கு மனம் துடித்தது.

அது ஹாஸ்பிடல். அந்த நேரம் அதற்கு ஒவ்வாத அபாக்கியமான நேரம். அந்த வெண்ணிற முதுகின் மீது செழித்து அடர்ந்த கருங்கூந்தல் குலுங்குவதையே அவன் கவனித்தான்.

ஒரு வாரம் கம்பவுண்டர் புண்ணியகோடி ஆஸ்பத்திரியிலேயே இருந்தார். அங்கேயே கம்பவுண்டராக இருந்ததால் ஸ்பெஷல் சிகிச்சை.

சிவா தினசரி மூன்று முறை அவரைக் காண ஆஸ்பத்திரிக்கு வந்தான்.

ஒர்க்ஷாப் திறக்கும் முன் ஒரு வேளை காலையில் வருவான். மத்தியானம் ஹோட்டலில் சாப்பிட வரும் போது ஒரு முறை.

ஒர்க்ஷாப்பை மூடிவிட்டு இரவு எட்டரைக்கு ஒரு முறை வருவான். சில சமயங்களில் புண்ணியகோடியின் பக்கத்தில் இருக்கும் ஸ்டூலில் மௌனமாக திஷ்யா உட்கார்ந்திருப்பாள்.

சில சமயம் வேறு யார் யாரோ இருப்பார்கள். வியாசர்பாடியிலிருந்து திஷ்யாவின் சித்தி வந்து போனாள். பெங்களூரிலிருந்து அத்தை வந்து ஒரு நாள் தங்கி விட்டுப் போனாள்.

"ஓம் மனசை இவ்வளவு கெடுத்த மகாபாவிங்க அனுபவிப்பாங்கடா !" என்ற பெங்களூர் அத்தை ஒன்றுக்கு பல முறை சிவாவின் காதுபட புண்ணிய கோடியிடம் புலம்பினாள்.

வீடு விரோதமாகப் பார்த்தது. வீதியில் பல கண்களில் காலித்தனம் தென்பட்டது. ஓரிருவர் "ஷோக்கான குட்டி இருக்கிற வூடா பார்த்து கொடகூலிக்குப் போவணுண்டா" என்ற கோழைச் சாக்காகப் பேசினர்.

எல்லாவற்றையும் எதிர்கொள்ள சிவாவுக்கு ஓர் உரம் ஏறிற்று. வைராக்கியம் மிகுந்தது.

எதிர்த்து நின்று தட்டிக் கேட்கட்டும். உண்டான பதிலைச் சொல்லலாம் என்று நிமிர்ந்த தலையோடு அவன் வீட்டிற்குப் போனான். வீதியில் உலவினான்.

அப்படி எவரும் வரவில்லை. யாருக்குமே அந்தத் துணிச்சல் இல்லை.

ஆஸ்பத்திரியில் புண்ணியகோடி அவன் வந்து நின்றால் பார்வையைத் திருப்பிக் கொள்வார். ஓரிரு நிமிஷம் அங்கே நிற்பான்.

நர்ஸ்... டாக்டர் என்று எதிர்ப்படுகின்ற ஆஸ்பத்திரி ஊழியர்களிடம் அவருடைய உடல்நிலை குறித்து விசாரித்து அறிவான். பிறகு போய் விடுவான்.

தாமுவுக்கு இவற்றைத் தெரிவிக்க வேண்டும் என்று ஏனோ தோன்றியது. விவரமாக ஒரு கடிதம் எழுதிப் போட்டான்.

அவசியம் ஒரு பதில் போடவும் என்று ஒரு வரி எழுதியிருந்தான் – பதிலில் ஓர் அறிவுரை வரும் என்ற நம்பிக்கையில்.

பதில் வரவில்லை.



ஒரு வாரமாக பிரீதாவைக் காண வாய்ப்பில்லை. ரேடியம் தெரபி சம்பந்தமாக ஒரு விசேஷ பயிற்சிக்கு அந்த பிரைவேட் நர்ஸிங்ஹோம் அவளைத் தேர்ந்தெடுத்து வேலூர் சி.எம்.சி.க்கு அனுப்பியிருந்தது.

முகூர்த்தத் தேதி நிர்ணயமானதும் எழுதும்படி அவள் ஒரு கடிதம் போட்டிருந்தாள்.

அதற்கு அவன் பதில் போடவில்லை.

அந்த ஒரு வாரம் ஒரு புறக்கணிப்பின் கூண்டிலேற்றப் பட்ட உணர்வின் தனித்துவத் தன்மையை சிவா பூரணமாக அனுபவித்தான்.

அவனைச் சுற்றி இருக்கிறவர்கள் தன்னை எரிக்கட்டும் என்ற திடத் தன்மையோடு எல்லார் வெறுப்பையும் ஏற்றுக் கொண்டான்.

அந்த வேதனையில் ஒரு தனி சுகமிருந்தது. புடமிடப்படுவது போன்ற தகிக்கின்ற சுகம். மாசுகள் நீங்குவது போன்ற கொதித்துக் கரையும் சுகம்.

ஏழாவது நாள்.

காலையில் குளித்துக் கொண்டிருக்கும் போது கனத்த ஷூ ஒலி கேட்டது. பழக்கமானது. தாமுவுடையது.

"சிவா" என்று அடித் தொண்டையில் அவனுக்கே உரித்தான மெதுவான தொனியில் கூப்பிட்டான் தாமு.

"எஸ் ஸார்" என்று பதிலளித்தான்.

"குளிச்சுட்டு வா !"

ஷூவைக் கழற்றிவிட்டு அவன் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போகும் ஓசை.

குளித்துக் கொண்டிருந்த சிவாவுக்கு அவனை எப்படி ஏறிட்டுப் பார்ப்பது என்ற பிரச்னை தோன்றிற்று. தாமு

திஷ்யாவை விரும்புகிறான். திருமணம் செய்து கொள்கிற அளவு.

அவன் அவசரமாக துண்டை எடுத்துத் துவட்டியும் துவட்டிக் கொள்ளாமலும் போய் அவன் முன் நின்றான்.

ஏதோ ஃபைலைப் புரட்டிய தாமு நிமிர்ந்து அவனைப் பார்த்தான். வெள்ளையாகச் சிரித்தான்.

"ஸாரி, ஒடனே பதில் போட முடியலே" என்றான்.

சிவா கண்களைத் தாழ்த்தினான்.

"நேரிலே வரணும்தான். பதில் போடலே. நல்லா துடைச்சுக்கிட்டு வா. யூ ஆர் ஸ்டில் வெட்."

சிவா வெளியே வந்து உடம்பை நன்றாகத் துடைத்துக் கொண்டு துண்டை பிழிந்து கொடியில் போட்டான். காய்ந்துவிட்டிருந்த ஒரு பனியனை மாட்டிக் கொண்டு மீண்டும் உள்ளே வந்தான். நின்றான்.

"பீ ஸீடட்" என்று அருகிலிருந்த நாற்காலியைக் காட்டினான். சிவாவினால் உட்கார முடியவில்லை.

"பீ ஸீடட் ஐ ஸே"

சிவா கீழ்ப்படிந்தான்.

"யூ ஃபீல் கில்ட்டி!" என்று அவனைப் பார்த்து மீண்டும் சிரித்தான்.

"நானா எந்தத் தப்பும் பண்ணலே!"

"அதுதான் லெட்டர்லே எழுதியிருந்தயே. பட் கங்க்ராட்ஸ்."

"எதுக்கு?"

"யூ பிகம் சம்படி... அஞ்சு மாசத்துக்கு முன்னாடி நீ ஒரு ரைட்டர்தானே. நவ் யூ பிகம் எ மேன்"

சிவாவுக்கு அவன் பெருந்தன்மை சிலிர்த்தது.



"திஷ்யா பேர்லே எனக்கு ஒரு லைகிங் உண்டு. இட்ஸ் ஜஸ்ட் எ ஃபேன்ஸி. தெருவிலே போற பொண்ணுங்களைப் பார்க்கறப்ப இவளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா நல்லாயிருக்கும். அவளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா நல்லாயிருக்கும்னு தோணறாப்பிலே" என்று அவன் அலட்சியமாக தோள்களை உலுக்கிக் கொண்டான்.

"டோன்ட் திங்க் மீ ஸோ மீனர். தனக்கு கிடைக்காதது வேற யாருக்கோ கெடச்சுட்டா பொறாமைப் படற மாதிரி ஆள் இல்லே நான். யூ நோ மீ."

சிவா மெதுவாக தலையசைத்தான்.

"புண்ணியகோட்டி இன்னும் ஆஸ்பத்திரிலேதான் இருக்கறாரா?"

"ஆமா.."

"என்னிக்கு டிஸ்சார்ஜ் ஆவறாரு?"

"இன்னிக்கு சாயங்காலம்"

தாமு ஒரு சிகரெட்டை கேஸிலிருந்து உருவிப் பற்ற வைத்தான். ரசித்து உறிஞ்சுவிட்டுப் புகையை ஊதினான்.

"ஹி ஈஸ் எ ஃபூல்" என்றான்.

சற்று கழித்து "பேராசை பிடித்த முட்டாள்" என்றான். மீண்டும் ஒரு யோசனையோடு சிகரெட்டை ஊதினான்.

"அப்பா எப்படி இருக்காரு?"

"நல்லா இருக்கார். நான் போனவுடனே அவருக்குப் போற உசிரு திரும்பிடுச்சி. நான் ஒன்ஸ்ஃபார் ஆல் அங்கேயே தங்கிடப் போறேன்னு தெரிஞ்சதும் நாளுக்கு நாள் தேறிக்கிட்டு வர்றார். பட்... தேர் ஆர் சம் ப்ராப்ளம்ஸ்.." என்று கூறிவிட்டு பெருமூச்செறிந்தான்.

வழக்கப்படி தேவைப்பட்டால் தாமுவே சொல்வான் என்று காத்திருந்தான் சிவா.

"நான்... பொம்பளை விஷயத்திலே யோக்கியன் இல்லே. யூ நோ இட்... அப்பாவும் அப்படித்தான். ஜமீந்தார் இல்லியா?"

தாமுவின் முகத்தில் ஓர் இளக்காரப் புன்முறுவல். தொடர்ந்தான்.

"எத்தனை வைப்பாட்டி உண்டோ அந்த அளவு மதிப்பு. ஒரு மனுஷன் எத்தனை பொம்பிளையை வெச்சிருக்கான்றது அவருடைய சொஸைட்டியிலே ஒரு ஸ்டேடஸ் சிம்பல். அதிலே ரெண்டு பேருக்கு குழந்தைகள் உண்டாய்ப் போச்சு. லீகலா க்ளெய்ம் பண்ணப் பார்த்தாங்க. ஐ டோன்ட் வாண்ட் டு மேக் ஹிம் கிளைம். சுத்தமா பேசித் தீத்து கொஞ்சம் சொத்தைப் பிரிச்சுக் கொடுத்து விடுதலைப் பத்திரம் எழுதி வாங்கிட்டேன்."

சிவா கேட்டுக் கொண்டிருந்தான்.

"யுவர் லெட்டர் வாஸ் அன் இன்ஸ்பிரேஷன்... இதோ எழுதியிருக்கே பாரு..." சட்டைப் பையில் கையை விட்டு சிவா எழுதிய கவரை எடுத்தான்.

நான்காக மடித்து வைக்கப் பட்டிருந்த எட்டுப் பக்கங்களைப் புரட்டிப் புரட்டித் தள்ளிவிட்டு ஒரு பாராவை ஓரிரண்டு முறை படித்தான். பின்பு அதை மடித்து அவனிடம் நீட்டினான் தாமு.

சிவா தான் எழுதிய அந்தக் கடிதத்தை வாங்கித் தானே மௌனமாக வாசித்தான்.

"பெண்ணை விற்கிற, எந்த உருவத்திலாவது விற்கிற சமூகம் நசித்துவிடும். அங்கே வீரியம் இருக்காது. ஆண்மை இருக்காது. புண்ணியகோடி விற்கத் தயாராயிட்டார். ஒரு



வேளை மனைவி ஓடிப்போனது அவர் மனசிலே பெண்களைப் பற்றிய மதிப்பையே அழித்திருக்கலாம். நான்கு குழந்தைகளுக்குத் தாயான ஒருத்தியை – தன் மனைவியை உண்மையாக நேசித்திருந்தால் அவள் ஓடிப்போயிருக்க மாட்டாள். பெண்ணைப் போகப் பொருளாக நினைத்தால் அவளும் அந்த அளவுதான் நம்மை மதிப்பாள். அப்போது அவர் விதைத்த வினையின் அறுவடை இப்போது நடைபெறுகிறது..."

அவன் படித்துவிட்டுத் திருப்பிக் கொடுத்தான்.

"இட் ஷாக் மி. என்னை அது கம்ப்ளீட்டா அசைச்சிடுச்சு."

தாமு சிகரெட்டை உறிஞ்சி மீண்டும் புகையை ஊதினான்.

"போகட்டும். அதை அப்பறமா பேசுவோம். நீ டிரஸ் பண்ணிட்டு கௌம்பு. புண்ணியகோடியைப் போய்ப் பார்ப்போம்."

ஆஸ்பத்திரியில் புண்ணியகோடி மட்டும் இருந்தார். அவர் பார்வை சுழலுகின்ற மின்விசிறியை வெறித்துக் கொண்டிருந்தது.

சிவாவையும் தாமுவையும் பார்த்ததும் எழுந்து உட்கார முயன்றார்.

"நீங்க படுத்துக்குங்க" என்று தடுத்தான் தாமு. ஆனாலும், அவர் எழுந்து காலை பிடித்தவாறே உட்கார்ந்தார்.

"ரொம்ப ஸாரி மிஸ்டர் புண்ணியகோடி.. என்னென்னவோ நடந்துட்டிருக்கு. எதுவும் இன்டென்ஷனோட நடக்கலே. ஒங்களுக்கு சிவாவைத் தெரியும். ஹி ஈஸ் எ பர்ஃபெக்ட் ஜென்டில் மன். ஒங்க குடும்ப விஷயத்திலே

தலையிடணும்னு அவன் விரும்பலே. திஷ்யாவேதான் ஆள் விட்டு அவனைக் கூப்பிட்டிருக்கு..."

புண்ணியகோடி தலை நிமிர்ந்து தாமுவைப் பாக்கவில்லை.

"ஒங்க ப்ராப்ளம் என்னன்னு எங்களுக்குப் புரியறது.."

புண்ணியகோடி திடீரென்று குலுங்கினார்.

"நான் ஒரு முட்டாள் மிஸ்டர் தாமு."

கட்டிலின் மீது போட்டிருந்த துண்டை எடுத்து அவர் அதில் வாய் புதைத்துக் கொண்டார். தாமு திரும்பி சிவாவைப் பார்த்தான்.

அவர் உணர்ச்சிகள் வடிய அவர்கள் நேரம் வழங்கி நின்றனர். அவர் ஒரு நிமிஷம் கழித்து முகம் துடைத்துக் கொண்டார்.

"கொழந்தை இப்பதான் வந்து சினிமாவிலே நடிக்க வக்கிறியோ.. எங்க போகச் சொல்றியோ.. என்ன பண்ணச் சொல்றியோ பண்றேம்பான்னு கண்ணு வழிய சொல்லிட்டுப் போறா... மிஸ்டர் தாமு... நானும் மனுஷன்தான். தோத்தவன். நஷ்டப்பட்டவன். இருந்தாலும் நானும் மனுஷன்தான். ஐ ஆம் ஆல்ஸோ எமேன் ! எ ஃபாதர்."

தாமு ஸ்டூலை இழுத்துப் போட்டு அவர் அருகில் உட்கார்ந்தான். அவர் தோள்பட்டையை மெதுவாகத் தொட்டான்.

"தாமு சார்.. யூ ஆர்.. யூஆ.." அவருக்குத் தொண்டை அடைத்தது.

மீண்டும் துண்டை முகத்தில் ஒற்றிக் கொண்டார்.



"நீங்க பெரிய மனுஷன். நீங்களே இருந்து இவங்க கல்யாணத்தை நடத்தி வைங்கோ. நான் ஒண்ணும் பெரிசா செய்ய முடியாது. பெரிய குடும்பம்.."

"டோன்ட் ஒரி.. டோன்ட் ஒரி" என்று தாமு அவர் தோளைத் தட்டிக் கொடுத்தான்.

ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வரும்போது தாமுவின் கண்கள் கலங்கியிருந்தன. இதை சிவாவுக்குக் காட்டாமல் மறைத்துக் கொண்டே தாமு சொன்னான்.

"சிவா, நாம ரெண்டு பேரும் ஊருக்குப் போகணும். ஐ வான்ட் டு மீட் பிரீதா. அவளை மதனபள்ளிக்குக் கூட்டிப் போகப் போறேன்..."

"சரி."

"நீ அப்படியே திருப்பத்தூர் போய் அம்மாவைக் கூட்டி வந்துடு ! நாளை மறுநாள் முகூர்த்த தேதியை நிச்சயம் பண்ணிடலாம்" என்றான் தாமு.

## 19

"காரணீஸ்வரன் கோயில் தெருவுக்குப் போயிருக்கியா சிவா ?"

ஆஸ்பத்திரியில் புண்ணியகோட்டியைப் பார்த்து விட்டு ஒர்க்ஷாப் தபால் ஒன்றைச் சேர்க்க போஸ்டாபீஸுக்குப் போகும் போது திஷ்யா அவனைக் கேட்டாள்.

தபாலைப் பெட்டியில் போட்டுக் கொண்டே அவன் பதிலளித்தான். "போயிருக்கேன்... என்ன விஷயம் ?" என்றான்.

அவளிடமிருந்து பதில் இல்லை. சிவா திரும்பினான்.

அவள் நாக்கைக் கடித்துக் கொண்டு ஏதோ தப்பாகச் சொல்லிவிட்டவள் மாதிரி விழித்துக் கொண்டு நின்றாள்.

"ஏன் என்ன ஆச்சு ?"

"ஐ ஆம் சாரி"

"எதுக்கு?"

"ஒன்.. அடச் சட்.. ஒங்களெ ஒருமையிலே பேர் வச்சுக் கூப்பிட்டுட்டேன்."

"இனிமே மரியாதை தரப்போறியோ."

அவள் முகம் அபூர்வமான நாணத்தால் மிளிர்ந்தது.

"சரி.. ஒன் ஸாரியை ஏத்துக்கறேன்.. ஆனா திடீர்னு வாங்கோ போங்கோண்ணா எனக்கு அசிங்கமா இருக்கு."

"எனக்குக்கூட கஷ்டமாத்தான் இருக்கு"

"அப்ப எதுக்கு கஷ்டப்படுத்திக்கறே ?"

"நாம கல்யாணம் பண்ணிக்கப் போறோமே !"

"ஏய்.. கிண்டல் பண்றியா ?"

அவள் பளிச்சென்று சிரித்தாள்.

"என்ன இருந்தாலும் நீங்கள் கணவர்."

"இதானே வேணாம் !"

அவள் முகம் மலர்ந்திருந்தது கூம்பிற்று.

"என்ன திஷ்யா ? திடீர்னு சேஞ்ச் ஆயிட்டே ?"

"ம் ம்.." என்று நினைவுகளில் புதைந்தவள் வெளிப்படுவது போல் விழித்தாள்.

"என் ஃபிரண்டு ஒருத்திக்குக் கல்யாணம். இன்னிக்கு மாப்பிள்ளை அழைப்பு. அந்த ஞாபகம்.."



"அதான் காரணீஸ்வரன் கோயில் தெருவைக் கேட்டியா?"

"ஆமாம்" அப்போதும் அவள் நினைவுச் சுமையிலிருந்து முழுக்க விடுபடவில்லை.

"அங்கேதான் கல்யாணமா ?"

"ஆமாம்.."

"போய்ட்டு வாயேன்."

"துணைக்கு ? பிரேம் வரமாட்டேங்கறான்."

"நான் வரட்டுமா? அவள் தலையசைத்தாள்."

"என்ன அபாரமான ஐடியா.. இவ்வளவு கலாட்டா நடந்திருக்கு. இப்ப உன் சிநேகிதி கல்யாணத்துக்கு நான் துணை வரணும்ங்கிறே !"

"நீ தெரு முனையிலேயே நின்னுடு. உள்ளே வர வேண்டாம். நான் போய் அரை மணி நேரத்திலே திரும்பிடறேன்."

"அப்பா கிட்டே சொன்னியா ?"

"ம்ம்ம்"

"சரி பொறப்படு.. நான் நாளைக்குக் காலையிலே திருப்பத்தூர் போகணும்.. போனமா வந்தமாண்ணு தலையைக் காட்டிட்டு திரும்பிடு."

**மை**லாப்பூர் பீச் அருகில் அவர்கள் பஸ்ஸிலிருந்து இறங்கினர். காரணீஸ்வரன் கோவில் தெருவில் பந்தல் போட்டிருந்த ஒரு வீட்டுக்குச் சற்று முன்னே அவளிடமிருந்து விடைபெற்று தெருமுனைக்கு வந்து நின்றான் சிவா. சாலையை வேடிக்கை பார்த்தான்.

சரியாக அரை மணி நேரத்தில் திஷ்யா வந்து விட்டாள்.

—

"என்ன இவ்வளவு சீக்கிரம்?"

"சொன்னது அரை மணி. வார்த்தையைக் காப்பாத்தணுமோ இல்லியோ?"

"என்ன சொன்னா ஒன் சினேகிதி?"

"சிரிச்சா... பூரிச்சா... இருந்து நாளைக்குப் போகச் சொன்னா. ஒரு கல்யாணப் பொண்ணு வேற என்ன சொல்லுவா?..." அவள் பெருமூச்சு.

"என்ன திஷ்யா... ஒரு துயரம்!"

"பெண்... பாரதப் பெண், வேறென்ன சொல்றது? திடீர்னு ஒரு வசந்தம் கலைஞ்சிடுது. பெரிய டாக்டராகப் போகிறேன்... ஸயன்டிஸ்டாகப் போறேன்... லீடராகப் போகிறேன்னா... நாளைக்கு கல்யாணம் பண்ணிக்கப் போறா."

சற்று நிறுத்தி திஷ்யா மெலிதாகப் பெருமூச் செறிந்தாள்.

"அடுத்த வருஷம் குழந்தை... அப்புறம் இன்னொண்ணு. அதுக்கப்புறம் குழந்தைக்கு ஜுரம். சமையல் ஆகலே... அவருக்கு சீதனம் கம்மிண்ணு கோபம்... ஓடி ஓடி அவள் சக்கரம் சுத்தும். கெழவியாவா..."

சிவாவுக்கு சுறீர் சுறீரென்று ஊசியால் குத்துவது போலிருந்தது.

"நிறுத்து- இதென்ன இப்படி ஒப்பாரி?"

"எனக்கு ஒன்னோட பேசணும்! ரொம்ப ரொம்பப் பேசணும்"

"பேசிக்கிட்டுதானே இருக்கோம்"

"இல்லே தனியா!" அவள் குரலில் ஆழங் காண முடியாத அமைதி இருந்தது."



"மைலாப்பூர் பீச்சுக்குப் போவோமா?"

"சீச்சீ... வீட்டுக்குப் போவோம்"

"காதலர்கள்னா பீச்சுக்குப் போகணும்னு ஒரு சம்பிரதாயம் உண்டு. டோன்ட் ஃபோர்கோ இட்"

"ஸ்டாப் ஜோகிங் ப்ளீஸ்" அவள் நிஜமாகவே வருத்தத்தோடு சொன்னாள்.

"சரி... கட்டாயம் பீச்சுக்குப் போவோம். வீட்டில் ஒரு பட்டாளம் இருக்கு. நமக்கு எங்கே பேச டயம் கெடைக்கப் போவுது."

அவள் சம்மதித்தாள்.

நிரந்தரமாக அலைகள் சந்திக்கும் கடற்கரையில் இன்றோ நாளையோ கட்டுமரங்களில் நனைந்து விட்டு வரக் காத்திருக்கும் கயிற்றுச் சுருணைகளின் ஆளுயர மறைவில் அவர்கள் அமர்ந்திருந்தனர்.

கடலும் காத்திருந்தது – கறுத்து வரும் நீலப்பரப்பின் ஒரு முகூர்த்த வெளிச்சத்திற்கு.

"என்ன பேசப் போறே?"

திஷ்யா அலைகளின் சிலிர்த்தெழும் வெண் பிடரிகளில் லயித்தாள். ஏதோ ஓர் அமைதி அவளுக்குத் தேவைப் படுவது போல் சிவா உணர்ந்தான். மௌனமானான்.

அங்கங்கே பேச்சுக் குரல்கள் காற்றில் சருகுகளாக மிதந்து வந்தன. புதிய காதலர்களும் பழைய காதலர்களும் கடந்து சென்றனர். தழுவித்தழுவி முத்தமிட்டனர்.

ஒருவர் மடியில் இன்னொருவர் புதைந்தனர். சிரித்தனர். எல்லாம் அக்கரை ஒலிகள் போன்று அகன்றன.

திஷ்யாவும் சிவாவும் மௌனமாய், ஒலிகள் யாவும் மெதுவாய் அமிழும் நிசப்தம் ஒன்றின் சந்நிதியில் நிற்பது போல் அமர்ந்திருந்தனர்.

"சிவா"

"சொல்லு"

"என்ன உன் வாழ்க்கையின் நோக்கம்?"

சிவாவுக்குத் தெரியவில்லை.

"தெரியவே இல்லே!"

"ஆமா"

"டு யூ லவ் மீ?"

"எஸ்"

"கல்யாணம் பண்ணிக்கற அளவு நீ ஸீரியஸா என்னை நேசிக்கிறியா?"

"எஸ்"

திஷ்யா அவனைப் பார்த்துச் சிரித்தாள். இருளில் முகத்தின் உணர்ச்சிகள் தெரியவில்லை. பல்லின் ஒளி மட்டும் தெரிந்தது.

"நீ பொய் சொல்றே... அல்லது உன்னை முழுக்கத் தெரிஞ்சுக்காம சொல்றே!"

"என்ன திடீர்னு ஒரு மாற்றம் உங்கிட்டே?"

"இல்லே... அப்பாகிட்டே கடைசியிலே சினிமாவிலே நடிக்கறதா இருந்தா கூட சரிப்பான்னு சொன்னேனே! அது ஏண்ணு நீ என்னைக் கேட்டியா?"

"அதுக்கு என்ன இப்போ! நீ மனசு ஒடிஞ்ச் போன மூட்லே அதைச் சொல்லியிருக்கலாம்"

நிலா மெதுவாக எழுந்தது.

"உன்னை ஏன் நான் இதிலே இன்வால்வ் பண்ணணும். நீ ஒரு ரைட்டர். எவ்வளவோ சாதிக்க வேண்டியிருக்கு. இந்த மனுஷாளை... இந்த மண்ணை உன் எழுத்திலே ஏதாவது கொஞ்சம் புரட்டி எடுக்க வேண்டியிருக்கு." சற்று நிறுத்தித் தூரவரும் ஓர் ஆண் அலையைப் பார்த்தாள். "என் வீட்டிலே ஒரு பட்டாளம் இருக்கு. வறுமை இருக்கு. பிரச்னை இருக்கு. எல்லாத்தையும் நீ ஏன் தலையிலே சொமந்துக்கறே?"



"என்னை டெஸ்ட் பண்றியா?"

"இல்லே, என்னையே டெஸ்ட் பண்ணிக்கறேன். நம்ம சினேகிதத்திலே உனக்கும் எனக்கும் மத்தியிலே அந்த ஸோ கால்ட் அர்ப்பணம் இல்லே. சூழ்நிலைகளின் நிர்ப்பந்தம் தான் இருக்கு"

சிவாவுக்கு அவளது அறிவின் தெளிந்த கூர்மை அவனை வகிர்ந்து வரையறை செய்வது போலிருந்தது.

"இப்படி ஆபரேஷன் பண்ணினா எல்லா உறவுகளும் ஒரு கோணத்தில் வெற்றுக் கோடுகளாயிடும்."

அவள் அவனது விமர்சனத்தைப் பொருட்படுத்தாதவள் போல் "ம்ம்ஹற்ம்மா" என்று தனக்குள் சிரித்தாள். அது அவன் செவியில் விழுந்தது.

"சிவா, எல்லா உறவும் வேறே...இது வேறே! ஒனக்குத் தர எங்கிட்டே இந்த அழகும் என் பெண்மையும் இருக்கு. அது மட்டும் இருந்தா பரிபூரண சந்தோஷம் கெடைச்சுடும். ஆனா கூடவே ஒரு சொமை இருக்கு. எங்க அப்பா... கூட நாலு ஜீவன்கள். இதெல்லாம் என் சொமை. நீயும் நானும் அதோ அந்தக் கப்பல்லே ஏறி கண் காணாத சீமைக்கு ஓடிட்டாலும் கூட அந்த சொமை எனக்குள்ளே அழுத்திட்டே இருக்கும்!"

சிவா அவள் என்ன விரும்புகிறாள் என்று மனசிற்குள் அலசினான்.

"நீ கல்யாணத்துக்கு மானசீகமா தயாராயிட்டியா?" என்று திஷ்யா அவனைக் கேட்டாள்.

"எதுக்குக் கேக்கறே?"

"நான் தயாராகலே. எனக்குப் பிடிக்காத ஒரு ஏற்பாட்டிலிருந்து தப்பிச்சிக்க ஒன்னைப் பயன் படுத்திட்ட மாதிரி எனக்குத் தோணுது. இன்னும் விளக்கமாச் சொன்னா ஒன் அனுதாபத்தை எனக்கு சாதகமாக்கிக் கிட்ட மாதிரி இருக்கு."

அப்படியெல்லாம் அவன் சிந்தித்துப் பார்க்கவில்லை. ஆனால் இந்த திஷ்யா விவகாரத்தில் பிரீதா குறுக்கிட்டு தன்னை ஏதோ ஒரு போக்கிற்கு செதுக்கி உருவாக்கிய மாதிரி இப்போது தென்பட்டது.

"இன்னொண்ணு சொல்லட்டுமா?"

"சொல்லு"

"ஒரு நாள் இல்லாட்டி இன்னொரு நாள் இந்தச் சுமை உனக்கு பளுவாகும். தவிர்க்க நெனைப்பே. அப்ப இந்த பிரியம் போயிடும். நீ என்னை வெறுப்பே"

"இதெல்லாம் கற்பனை... யூகம். ஏதோ ஒரு முடிவுக்கு நீ வந்துட்டே! அதைச் சொல்லத் தயங்கறே... இப்படி சாக்கு போக்கு சொல்றே."

சந்திர வெளிச்சம் தனது ஆசியை அவள் மீது வீசிற்று.

அவள் இளமை... அதன் மனசைக் கிறக்கும் கவர்ச்சி... முத்தமிடத் தூண்டும் அவளது உதடுகளின் ஈரப் பளபளப்பு... மையெழுதிய விழிகளின் இமைகளின் துடிப்பு...

இவற்றை மீறி திஷ்யாவிடம் அவனுக்கு ஒரு மரியாதை எழுந்தது. இவள் சிந்திக்கிறாள்.



"இது கற்பனை இல்லே சிவா. எனக்கு கற்பனை பண்ணத் தெரியாது. நடைமுறை இதான். எதிர்த்த வீட்டிலே, பக்கத்து வீட்டிலே, அடுத்த தெருவிலே இதான் நடக்கிறது."

"நீ என்ன முடிவுக்கு வர்றே?"

"முடிவுக்கு நான் மட்டும் வரமுடியாது. நீயும் சேர்ந்து. இன்னும் சொல்லப் போனா இதுவரைக்கும் உங்க அம்மாவின் அபிப்பிராயம் என்னண்ணு நாம ரெண்டு பேரும் தெரிஞ்சுக்கலே..."

"திஷ்யா" என்று சிவா அவளது கவலைக்கு முற்றுப் புள்ளி வைப்பது போல அழைத்தான்.

"ம்ம்ம்" என்று அவள் பதிலளித்தாள்.

"என் மேலே உனக்கு நம்பிக்கை வரலே. நான் கடைசி வரைலே உறுதியா இருப்பேனாண்ணு சந்தேகப்படறே!"

திஷ்யா காற்றில் நெகிழ்ந்து போய் படபடத்த முந்தானையை இழுத்துப் போர்த்திக் கொண்டாள். அவள் வளையல்களின் ஒலி இனிமையாய்க் கேட்டது.

"சிவா... நான் முன்னாடியே சொன்னேன். நாம ரெண்டு பேரும் சேர்ந்து முடிவு பண்ணுவோம்ணு..."

அவளை விட்டு சற்றுத் தள்ளி ஒதுங்கி உட்கார்ந் திருந்த சிவா வேறொன்று நினைத்தான்.

அவர்கள் நட்பு தொட்டுப் பழகாதது. ஓர் உடல் இன்னோர் உடலுக்கு ஸ்பரிசங்களின் தந்தி மீட்டலில் வழங்கும் நம்பிக்கையை அறியாதது. வாய்ச் சொற்களின் வரம்புகளில் நின்று இடைவெளிகளை அழிக்காதது. ஒரு பெண் ஆணை நம்புவதற்கு அதுவும் தேவைப்படுமோ!

அவன் அவள் அருகில் நெருங்கினான்.

"சிவா... என்னது இது?" என்று அவள் துணுக் குற்றாள்.

சிவா அவள் இடையில் வழுவழுத்த வெற்று மேனியின் மீது ஒரு கை கொடுத்துத் தழுவி வலிமையும் உறுதியும் வெளிப்பட அவளைத் தன் அருகே இழுத்தான்.

ஒரு கணம் அதை எதிர்க்கப் போராடியவள் நெருக்கத்தில் வந்த அந்த முகத்தைப் பார்த்துச் செயலற்றுப் போனாள்.

அவன் கண்களிலும் உதட்டிலும் உறுதி மின்னிற்று. உண்மை ஒளி வீசியது.

சிவா அவளை உதட்டில் முத்தமிட்டான்.

கிளர்ச்சி... வெறி... இவை சம்பந்தப்படாத வாக்குறுதி போன்று ஒரு வலிமை அந்த முத்தத்தில் வெளிப்பட்டது. பின்பு நெற்றியில்... மூடிக் கொண்ட கண்ணிமைகளில் அவன் ஆழ்ந்து முத்தமிட்டான்.

அவள் கன்னத்தில் கழுத்தில் மோவாயில் மீண்டும் உதடுகளில் அவன் உதடுகள் சஞ்சரித்தன.

அவள் தன்னைத் தழுவியிருந்த கையை உதறித் தன்னை விடுவித்துக் கொண்டாள்.

அவன் எதிர்பார்த்த மாதிரியே பௌதீகமாக ஓர் ஆணின் காக்கும் கரத்தின் வலிமையை அவள் உணர்ந்தாள்.

"போதும்" என்று மூச்சுத் திணறிக் கொண்டே சொல்லி நகர்ந்து உட்கார்ந்தாள்.

சிறிது நேரம் இந்த ஆக்கிரமிப்பால் அவள் பேசும் சக்தியிழந்தாள். அவன் உணர்சிவசப் படாமல் தூரத்திலேயே உட்கார்ந்திருந்தான்.

"சிவா..." அவள் குரல் கலங்கியிருந்தது.

"ம்ம்ம்..."

அவள் தொண்டையைக் கனைத்துக் கொண்டாள்.



"இப்ப நம்ம கல்யாணத்துக்கு அவசரமில்லே."

"........"

"காத்திருப்போம்"

"எதுவரை?"

"எதுவரை முடியுமோ அது வரை."

"எதுக்கு?"

"நம்மை நாமே உறுதியாக்கிக்கிறதுக்கு."

அவன் கைகைய நீட்டினான்.

ஏதோ ஓர் ஒப்பந்தத்துக்கு நீட்டுவது போல அவள் தன் கையை அதன் மீது வைத்தாள்.

கடற் காற்றில் சில்லென்றிருந்த அந்தக் கை அவன் ஏந்திய சில நிமிஷங்களில் வெதுவெதுப்பாயிற்று.

"புறப்படு, போவோம்" என்று அந்தக் கையைப் பற்றி அவளைத் தூக்கினான் சிவா.

## 20

தாமுவிடம் என்ன பதில் சொல்வது?

இரண்டு நாட்களாக சிவாவுக்கு இந்த கேள்வி மனசை உளைத்தது.

தாமு வேலூருக்குப் போனவன் திரும்பவில்லை. தகவலுமில்லை. அவன் திரும்பி வந்து அம்மாவை அழைத்து வர ஊருக்குப் போகவில்லையா என்று கேட்டால், திஷ்யாவிற்கு கல்யாணத்தை ஒத்திவைக்க வேண்டுமாம் என்று எப்படிச் சொல்வது? இந்த உளைச்சலுக்கிடையில் வேறொரு பிரச்னை முளைத்தது.

கடற்கரையில் அவளோடு பேசிய மறுநாள் காலையில் புண்ணியகோடியை ஆஸ்பத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ்

செய்து விட்டார்கள். அரசாங்க ஆஸ்பத்திரியில் சிகிச்சை எடுத்து கொண்டதால் போலீஸில் ஒரு கேஸ் பதிவாகி யிருந்தது.

தற்கொலைக்கு முயற்சித்ததாக அந்த வழக்கு வளர்ந் தால், திவ்யா சினிமாவில் நடிக்க மறுத்தது, அவர் மன முடைந்து போனது, தனது தலையீடு—என்று பல குடும்ப விஷயங்கள் கோர்ட்டேறும். கிரிமினல் குற்றவாளி என்ற முறையில் அரசாங்க ஊழியரான அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

சிவா அவற்றைத் தவிர்க்க விரும்பினான்.

போலீஸ் ஸ்டேஷனுக்குப்போய் அந்த வழக்குப் பதிவை வாபஸ் பெற முடியுமா என்று விசாரித்து வர முடிவு செய்தான்.

ஸ்டேஷனில் எடுத்த எடுப்பிலேயே போலீஸ் இன்ஸ் பெக்டர் அவன் எதிர்பார்ப்பைத் தகர்த்தார்.

"நான் ஒண்ணும் செய்யறதுக்கில்லே மிஸ்டர்! அந்த ஆள் 'ஸூஸைட்' பண்ணிக்கிடத்தான் 'பாய்ஸன்' சாப் டார்ணு நம்ம ஏரியாவிலே எல்லாருக்கும் தெரிஞ்சிருக்கு. ட்ரீட்மெண்டும் கவர்ன்மெண்ட் ஹாஸ்பிடல்லே கொடுத் திருக்கீங்க. கேஸ் ரிஜிஸ்டராயிருக்கு."

சிவாவுக்கு அவர் நிலைமை புரிந்தது.

"இப்ப நான் விட்டுட்டேண்ணா, ஏதோ ஸம்திங் வாங்கிக்கினு வுட்டுட்டேன்னு எம்மேலே ரிமார்க் வரும்."

"ஸார்... இந்த கேஸ் ரொம்ப 'பிடியபிள்' பெரிய ஃபேமிலி. எல்லாமே படிச்சிக்கிட்டிருக்கற கொழந்தைங்க. இவர் ஒருத்தர் தான் சம்பாரிக்கிறவர். கேஸ்னு வந்தா வேலைக்கு ஆபத்து."



"ஐம் ஸாரி... நான் ஒண்ணும் பண்றதுக்கில்லே. இதென்ன மொஃபஷலா.. சிடி மிஸ்டர் சிடி. ஒவ்வொரு தற்றத்தையும் 'பப்ளிக்' பார்த்துக்கிட்டிருக்கு. ஒவ்வொருத் தருக்கும் வேண்டியவனும் வேண்டாதவனும் இருந்து கிட்டிருக்கான். நீங்க வேணும்னா ஐ.ஜி.யைப் போய் பாருங்க."

வழக்கு தவிர்க்க முடியாததாகிவிடுமோ என்ற கவலை முளைத்து சிவாவுக்குள் வேர் விட்டு விட்டது.

நகரத்தில் ஆயிரம் குற்றங்கள் நடக்கின்றன. ஆயிரம் அநீதிகள் இழைக்கப்படுகின்றன. அன்றாடம் நன்மையும் தீமையும், தீமையும் தீமையும் மோதி மனித உயிரும் உடைமையும் சேதமடைகின்றன.

வலிமை வாய்ந்தவை சட்டத்தின் பிடிப்பிலிருந்து தண்டனையின் சவுக்கிலிருந்தும் தப்பி விடுகின்றன. ஏன் வலிமை வாய்ந்தவற்றை சட்டம் கண்டு கொள்வதே இல்லை? ஏதாவது அப்பாவிகள் சிக்கினால் தான் சட்டம் தன் ஆதிக்கத்தை நிலை நாட்டத் துடிக்கிறது!

இது தான் சமூக நீதியா?

சிவா, தாமுவை இந்த நேரத்தில் மிகவும் எதிர் பார்த் தான். அவன் இருந்தால் இந்த விஷயத்தை மிகவும் அழகாக முடித்து வைப்பான்.. செல்வாக்கு மட்டும் காரணமில்லை. தாமுவுக்கு எங்கே எப்படித் தட்டினால் காரியம் நிறை வேறும் என்று நன்றாகத் தெரியும்.

காலையில் ஒர்க்ஷாப்பிற்கு கிளம்புமுன் புண்ணிய கோடியைச் சந்தித்தான்.

பத்து நாட்களாக அவர்கள் வீட்டுப் போர்ஷனின் ஒவ்வொரு அடியும் அங்கிருந்த பொருள்களும், நன்கு பரிச்சயமாயிருந்தன. வீட்டில் அரிசி எவ்வளவு இருக்கிறது? ஆனந்துக்கு 'மெடாஸின்' ப்ராக்ரஸ் கொடுக்கப்பட்டதா

இல்லையா? பிரேமின் ப்ராக்ரஸ் ரிபோர்ட் மிகவும் வீக்காக இருக்கிறது — என்ற சின்னச் சின்னத் தகவல்கள் கூட அவனுக்கு மனசில் பதிந்துவிட்டன.

ஆனால் புண்ணியகோடி டிஸ்சார்ஜாகி வந்ததும் பட்டென்று தன் வரம்புகளை உணர்ந்தவன் போன்று ஒதுங்கிவிட்டான். ஒரு நாள் முழுக்க வீட்டுக்குள்ளே காலடி வைக்கவில்லை.

வெளியே ஈஸிசேரில் படுத்திருந்த புண்யகோடியை ஆஸ்பத்திரியிலிருந்து வந்த பின்ப இப்போது தான் முதன் முறையாக சந்தித்தான்.

இரண்டு கை விரல்களையும் குறுக்காகக் கோர்த்து வாய் மீது வைத்து கண்மூடி யோசனையில் ஆழ்ந்திருந்தார் புண்யகோடி.

அவனுடைய 'ஷூ' ஒலி அவர் கண்களைத் திறக்க வைத்தது.

"வா சிவா" அவர் குரல் கம்மிற்று.

"பிரேம்.. அந்த சேரை எடுத்தா !"

அவர் தலைக்குப் பின்னால் திஷ்யா எட்டிப் பார்த்தாள். அவள் முகத்தில் ஒரு மலர்ச்சி தோன்றி மனசைக் குளிர்வித்தது.

அவனுக்கு அதிகாரபூர்வமாக அந்த வீட்டில் நுழைகிற உரிமை வந்துவிட்ட மாதிரியும் அதை ரசிக்கிற மாதிரியும் அவள் முகத்தில் ஒரு பூரிப்பு.

பிரேம் ஒரு மடக்கு நாற்காலியைக் கொண்டு வந்து ஈஸிசேருக்கு அருகில் போட்டான்.

சீதா ஏதோ ஒரு 'இங்கிலீஷ்—சம்மரியை' வாய்விட்டு உருப்போடும் ஓசை சற்று நின்று.. சரி நமக்கென்ன என்று தொடர்ந்தது.



"பிரேம், நீ போய்ப் படி" என்று புண்ணியகோடி அவனை விரட்டினார்.

எத்தனை விஷயங்களுக்கு இந்த பிரேம் சாட்சியாகி விட்டான்! இன்னும் மீசை முளைக்காத அவனது அனுபவ வரம்புகளில் என்னென்ன கோணல்கள் அறிமுகமாய் விட்டன!

"மெடிகல் லீவ் கண்டினியூ பண்றீங்களா சார்?"

"டூட்டிக்கு போயிடலாம்னு தான் பாக்கறேன்."

அவர் அவன் முகத்தைப் பார்க்காமல் பேசினார்.

"இன்னும் ஒரு வாரம் 'ரெஸ்ட்' எடுத்துக்குங்க."

"நேத்து ஒரு நாளே பைத்தியம் பிடிக்கறாப்பிலே இருந்தது."

"போலீஸ் ஸ்டேஷனுக்குப் போயிருந்தேன்."

புண்ணியகோட்டி சாய்ந்திருந்தவர் நிமிர்ந்து உட்கார்ந்தார். சாய்வு நாற்காலி கிறீச்சிட்டது.

"என்ன சொல்றாங்க?" என்று அவர் சிவா முகத்தைப் பார்த்தார்.

"கேஸை ரிஜிஸ்டர் பண்ணியது பண்ணியதுதான்னு சொல்றாங்க. நான் கேட்டதுக்கு ஐ. ஜி. யைப் போய்ப் பாருங்கண்ணு சொல்விட்டார் இன்ஸ்பெக்டர்."

புண்ணியகோடி கண்களை மூடிக்கொண்டார். மீண்டும் சாய்ந்து படுத்தார். ஒரு நிமிஷம் ஏதோ யோசித்து விட்டுக் கண்ணைத் திறந்தார்.

"ஆல் ரைட். நீ மேலே ஒண்ணும் ப்ரஸ் பண்ணாதே நான் எங்க சீஃப் கிட்டே சொல்லி ஏற்பாடு பண்ணிக்கறேன். அப்புறமா...வந்து..." என்று எதையோ சொல்ல வந்து எப்படிச் சொல்வது என்று தைரியம் சேகரிப்பதற்காகக் கொஞ்சம் தாமதித்தார்.

"சொல்லுங்க சார்..."

"ஒண்ணுமில்லே"

"பிரியமில்லேன்னா வேண்டாம்"

"வேற ஒண்ணுமில்லே சிவா. ராயப்பேட்டாவிலேயிருந்து ட்ரான்ஸ்ஃபர் கேக்கலாம்னு பார்கறேன்"

அந்த ஆஸ்பத்தியில் அவரால் ஏன் மீண்டும் வேலை செய்ய முடியாது என்பதை சட்டென்று சிவா உணர்ந்து கொண்டான்.

'எங்கே?"

"அப்படி பல்லாவரம் தாம்பரம்னு எங்கியாவது சப்—அர்பன்லே கெடைக்குமான்னு ட்ரை பண்ணணும்."

"கெடைக்குமா?"

"நான் மூச்சு விட்டா போதும். நீ நான்னு மியூச்சுவல் ட்ரான்ஸ்பருக்கு முயற்சிக்க போட்டு போடுவாங்க. ராயப்பேட்டா ஆச்சே—ஹார்ட் ஆஃப் தி சிடி!"

"குடும்பம்?"

"குடும்பத்தையும் 'ஷிஃப்ட்' பண்ண வேண்டியது தான்!"

"கொழந்தைகள் படிப்பு?"

"அந்தப் பக்கமா வேற ஸ்கூல்லே சேத்துர வேண்டியது தான்! நீ எப்ப ஊருக்குப் போறே?"

சட்டென்று அவருடைய மாறுதலுக்கு வேறு காரணமும் உண்டு என்பதை சிவா யூகித்தான். திஷ்யாவின் திருமணத்தை முடித்து விட்டு அவர்களுக்குத் தான் பாரமாகவோ இடையூறாகவோ இருக்க விரும்பாமல் தான் அவர் வேற ஆஸ்பத்திரிக்கு மாறுதல் வேண்டுகிறார்!

திஷ்யா உள்ளே போய் விட்டாள்..



"அடுத்த மாசத்தில் தான் முகூர்த்த தேதி இருக்கு. புரோகிதர் சொன்னார். இப்பவே பிடிச்சு ஏற்பாடு பண்ணினாத்தான் சௌகரியமா இருக்கும்"

திஷ்யா தன் தீர்மானத்தை அவரிடம் இன்னும் சொல்லவில்லை என்று புரிந்தது.

அதை அவளாகச் சொல்லட்டும் என்று விட்டு விடுவதா? தான் சொல்வதா? அவன் யோசித்தான். ஒரு வேளை தனக்கு இதில் இப்போது சம்மதமில்லை என்று அவர் தீர்மானித்து விட்டால்...?

அவளாக எப்படி வாய்விட்டுச் சொல்லப் போகிறாள்?

"கொஞ்சம் எங்க போர்ஷன் வரிக்கும் வரமுடியுமா சார்...?" சிவா அழைத்தான்.

"ஏன்... என்ன விஷயம்..."

"ஒண்ணுமில்லே, கொஞ்சம் பர்ஸனலா பேசணும்"

"அதுக்கென்ன..." என்று அவர் எழுந்தார்.

அதற்குள் பிரேம் காப்பி கொண்டு வந்தான்.

"காப்பி சாப்பிடு சிவா!" காப்பியை வாங்கிக் கொண்டான்.

அவன் எதிரில் அவரைத் தன் போர்ஷனுக்கு அழைத்துப்போய் அந்தரங்கமாகப் பேசுவது சிவாவுக்குக் கரித்தது. அவருக்கும் அது உறைத்திருக்க வேண்டும்.

அவன் காப்பி சாப்பிட்டானதும் "நீ ஓர்க் ஷாப்புக்குத் தானே போறே சிவா! எனக்கு பீட்டர்ஸ் ரோடு பக்கமா ஒரு வேலை இருக்கு. நானும் வர்றேனே"

"ஓ எஸ்... வாங்க"

புண்ணியகோடி சட்டை வேஷ்டியை மாற்றிக் கொண்டு கிளம்பினார்.

சிவா மணி பார்த்தான். ஏழு தான் ஆகியிருந்தது. எட்டு மணிக்குத்தான் ஒர்க்ஷாப் திறக்க வேண்டும். இன்னும் ஒரு மணி நேரமிருந்தது.

பலவீனமாயிருக்கிற இவரை இழுத்து அலைய வைத்துக் கொண்டு நடப்பதைவிட எங்கேயாவது உட்கார வைத்துப் பேசுவது நல்லது. அவன் எதிரில் அந்த ஆட்டோவைக் கை காட்டி நிறுத்தினான்.

"வேண்டாம் சிவா.. நடந்தே போகலாம்!"

"ஏறுங்க சார்"

புண்ணியகோடி அவன் குரலில் தொனித்த வற்புறுத்தலுக்குப் பணிந்து ஆட்டோவில் உட்கார்ந்தார்.

"நேப்பியர் பார்க்குக்குப் போப்பா"

காலையில் டிராபிக் குறைவாக இருந்ததால் ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் ஆட்டோ நேப்பியர் பார்க்குக்கு வந்துவிட்டது.

மந்தமாக மூடியிருந்த காலைப் பொழுதில் ஆங்காங்கே புல் தரையில் சிலர் தூங்கினர். ஓர் ஆங்கிலோ இந்திய ஜோடி காலையில் சிமெண்ட் பெஞ்சில் உட்கார்ந்து காதல் செய்து கொண்டிருந்தது.

மூலையில் காலியாக இருந்த ஆசனத்தில் இருவரும் அமர்ந்தனர்.

"என்ன சிவா?"

சட்டென்று சிவா விஷயத்துக்கு வந்தான்.

"திவ்யா கல்யாணம் இப்ப வேண்டாங்குது சார்"

"ஏனாம்?"

"குடும்பப் பொறுப்பை தான் மொதல்லே எடுத்துக் கணும்னு நெனைக்குது! நான் எடுத்துக்கறேண்ணா அது சம்மதிக்கலே.."



புண்ணியகோடி தூரத்துக் கட்டிடத்தை வெறித்துப் பார்த்தார். சிவா தொடர்ந்தான்.

"எனக்கு எந்தவிதமான 'அப்ஜெக்ஷனும்' இல்லே."

புண்ணியகோடி அந்த வார்த்தையில் சுயநிலைக்கு வந்தார். "சிவா, என் சுமை என்னோடது! அதை எம் பொண்ணு தலைலே கட்டிட்டு மருமகன் கஷ்டத்திலே நான் வாழறவன் இல்லே"

பேச்சு தவறான பாதையில் தான் யோசிக்கிறதாக, தப்பர்த்தம் தரும் பாதையில் திரும்பியதை சிவா உணர்ந்தான்.

"நான் அதைச் சொல்ல வரலே."

"நீ என்ன நெனைக்கறேங்கறது இருக்கட்டும். என் நிலைமையை நான் 'க்ளியர்' பண்ணிடறேன். பத்து நாளைக்கு முந்தி இருந்த புண்ணியகோடி இல்லே நான். அதைப் புரிஞ்சிகிட்டா சரி."

"அப்படியே இருக்கட்டும் சார்! திவ்யா விஷயம் ஒங்களுக்குத் தெரியும். பிடிவாதக்காரி. ஒண்ணைத் தீர்மானிச்சா மாறாது."

"நான் பேசிப் பாக்கறேன்."

"ஓ எஸ்.. ஆனா அப்பவும் முடியலேண்ணா"

"பேச வேண்டிய அவசியமே இல்லேங்கற தீர்மானத் திலே கேக்கற கேள்வி இது."

"......."

"அப்பவும் அவ ஒத்துக்கலேண்ணா நான் என்ன பண்ண முடியும்? எந்தத் தந்தை தான் என்ன செய்ய முடியும்? இந்தக் காலமே வேறே.."

அவர் பெருமூச்செறிந்தார்.

"நீங்க மனவருத்தப்பட வேண்டாம் ! எந்தக் காலத்திலேயும்-ஸ்டடியா இருக்கறவங்க உண்டு."

"நீ என்ன சொல்றே?"

"நீங்க என்னை நம்பலாம்."

"எதுக்கு இந்த வாக்குறுதி?"

"நான் காத்திருப்பேன்."

"அவளை வச்சுட்டு நான் காத்திருக்கணுமே சிவா!"

இவரிடம் என்னென்னவோ சொல்ல வேண்டியது பாக்கி உள்ளது.

இந்த புத்தி முதலில் எங்கே போயிற்று என்பது முதலாவது. நான் என்னை நிரூபித்துக் காட்ட வேண்டும் என்று திஷ்யா உள்ளூர எதிர்பார்க்கிறாள் என்பது இரண்டாவது; உங்கள் மனசில் விழுந்திருக்கும் விரிசல் மறைந்து ரணம் ஆறி ஒரு சகஜ நிலைக்கு வரவேண்டும் என்று மூன்றாவது.

இவற்றையெல்லாம் பேசிப் புரிய வைத்துவிடலாம். ஆனால் சொற்கள் வெறும் சமாதானம் தான் செய்யும். அல்லது துயரத்தை மிகுதிப்படுத்தும். கவலையைக் கிளறி தன்னைத் தானே நிந்தித்துக் கொள்ள வழி செய்யும். செயல்கள் பேசுவது போன்று சொல் பேச முடியாது.

"சார்" முதல் முறையாக புண்ணியகோடியின் கையைப் பிடித்தான்.

"என்ன சிவா?"

"தைரியமாக இருங்கள். என்னை நம்புங்கள்."

சிவாவின் கண்ணில் சுடர் வீசிற்று.

"நம்பறேம்பா... நம்பறேன்."



"திஷ்யாவை ஒண்ணும் வற்புறுத்தாதீங்க. சும்மா கேட்டுப் பாருங்க."

"சரி" அவர் குழந்தை மாதிரி தலையாட்டினார். அவனுக்கு ஐயோ பாவம் என்று வந்தது.

மீண்டும் ஆட்டோவில் அவரைக் கொண்டுவந்து விட்டுவிட்டு அவன் ஒர்க்ஷாப்பிற்கு வந்தபோது செங்குட்டுவன் எதிரில் ஓடி வந்தான்.

"சார்... ஓனர் சி.எம்.சி. ஹாஸ்பிடல்லே அட்மிட் ஆகியிருக்காராம். ஒடனே ஒங்கள வரச்சொல்லி பிரீதாம்மா போன் பண்ணுச்சி."

"ஹாஸ்பிடல்லியா...? என்ன விஷயம்."

"தெரியலே, ஆக்ஸிடெண்டா... வேற எதாவது ட்ரபிளாண்ணு தெரியலே. போனை எடுத்தாங்க. படபடப்பா பேசினாங்க. ஒங்க பேரைச் சொல்லி கேட்டாங்க. இல்லேண்ணதும் இம்மிடீயட்டா பொறப்பட்டு வரச் சொன்னாங்க"

"சரி, நான் பொறப்படறேன். நீ ஒர்க்ஷாப்பைப் பார்த்துக்க. அந்த அம்பாசிடரை இன்னிக்கு டிஸ்போஸ் பண்ணிடணும். சிந்தாதிரிப்பேட்டையிலேர்ந்து கலக்ஷனுக்கு வந்தா நாளைக்கு வரச்சொல்லி, தாமு ஹாஸ்பிடல்லே சேந்திருக்காருண்ணு விவரம் சொல்லு..." சிவா சரசரவென்று ஞாபகம் வந்த வரைக்கும் சில வேலைகளைச் சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

## 21

மனிதர்கள்!

ஆண்டாண்டு காலத்துக்குத் தாம் வாழப் போகிறோம் என்பதில் ஒவ்வொருவருக்கும் என்ன நிச்சயம்! எவ்வளவு நம்பிக்கை!

சாலையிலும் வீதியிலும் மரணம் அவர்களைச் சந்திக்கிறது.

ஹலோ சொல்லுகிறது. ஞாபகம் இருக்கிறதா என்று நமுட்டுச் சிரிப்பு சிரிக்கிறது. கடன் கொடுத்துவிட்டு வசூல் செய்யும் தமிழ் சினிமாப் பட்டாணியன் போல் மிரட்டு கிறது. விபத்துக்களின் கோரைப் பற்கள் இளிக்கின்றன.

ஆனால் மனிதர்கள் ?

கொஞ்சம் வெலவெலக்கிறார்கள். வியர்க்கிறார்கள். நான் அங்கிருந்தால்... என்று கற்பனை செய்கிறார்கள்.

இறந்து போனவர்களிடம் தங்கள் இடம் மாற்றிப் பார்க்கிறார்கள். அப்பாடா, நல்லவேளை. அது நானில்லை என்று நிம்மதி அடைகிறார்கள். நகர்கிறார்கள்.

மீண்டும் மீண்டும் மரணம் எதிர்கொள்கிறது. நம்பிக்கைகள் கொஞ்சம் நெளிந்து கொடுக்கின்றன. ஆனாலும் என்ன ? அவை மீண்டுவிடுகின்றன.

எல்லாம் ஒரு நாளைக்கு மாறிவிடும். இருந்த சுவடு தெரியாமல் அழிந்து விடும். அது அவர்களுக்கும் தெரியும்.

அந்த உண்மையை அவர்களுக்குச் சந்திக்கப் பிரிய மில்லை. கூடுமானவரை உண்மையைத் தள்ளிப்போடவே அவர்கள் விரும்புகிறார்கள்.

தன்நலம்... தன் சுகம்... தன் பாதுகாப்பு... தன் எச்சரிக்கை... தான்... தான்... தான். அதற்கு எங்கே குந்தகம் வந்தாலும் அவர்களுக்கு எரிச்சல் வருகிறது. வேறு வேலை இருப்பது, அவசரம் காத்திருப்பது கவனம் வருகிறது.

சாலையிலே ஒரு டூரிஸ்டு பஸ் கவிழ்ந்து விழுந் திருக்கிறது.

நொறுங்கிய கண்ணாடிச் சிதறல் ; இரத்தம் குட்டை யாய்த் தேங்கியிருக்கிறது. முனகல்கள்... ஊசலாடும் உயிர்களின் ஓலம்.



சாலையில் இரவு நேர லாங் ரூட் பஸ்கள் போகின்றன. நிற்பதில்லை. லாரிகள் போகின்றன. நிற்ப தில்லை. கார்கள் பறக்கின்றன. நிற்பதில்லை.

தான், தன் பாதுகாப்பு, தன் அவசரம், கடிகார முட்களில் கட்டப்பட்டுவிட்ட யந்திர வாழ்க்கையில் ஓடு ஓடு என்று நியமிக்கப்பட்ட ஒரு கற்பித ஓட்டப் பந்தயத் திற்கு குந்தகம் வந்து விடும்.

போலீஸ்... வழக்கு... கோர்ட்... சம்மன்...

"வண்டியை விடுப்பா"

ஓரிரண்டு வாகனங்கள் நிற்கின்றன. வேடிக்கை பார்க்க. பிரயாணிகளுக்கும் 'தான்' ஞாபகம் வந்து விடுகிறது.

"அடுத்த ஊர் போலீஸ் ஸ்டேஷன்லே போய் ரிப்போர்ட் பண்ணுவோம். வண்டியை எடுப்பா."

'விபத்தில் சில மனித உயிர்கள் போயிருக்கின்றன. போய்க்கொண்டிருக்கின்றன. ப்சப்... புவர் சாப்ஸ்... போலீஸ் இருக்கிறது. வந்து பார்த்துக் கொள்ளும்'

'அது போலீஸோட கடமை. புவர் சாப்ஸ்... வர வர டூரிஸ்ட் வண்டிக்காரனுங்க ராத்திரி தூக்கமில்லாம தண்ணி அடிச்சிட்டு வண்டியை விடறானுங்க.'

எல்லாருமே இப்படித்தானா ?

இதயம்... இரக்கம்... உணர்ச்சிகள்... எல்லாவற்றையும் எலக்ட்ரானிக் கடிகார எண்கள் சாப்பிட்டுவிட ஒரு நிமிஷத்தை விட்டு அடுத்த நிமிஷத்துக்கு ஓடுவதிலேயே மனித நாகரீகம் கண்ணும் கருத்துமாக இருக்கிறதா ?

இல்லை.

சாலையில் ஒரு ஜீப் வருகிறது.

அதில் ஓர் ஆணும் பெண்ணும். அவர்கள் வண்டியை நிறுத்துகிறார்கள். ரத்தக் குட்டையை, மரண ஓலங்களை, சிதைந்த அங்கங்களைப் பற்றிப் பயமில்லாமல் பஸ்ஸில் விழுந்திருப்பவர்களை ஒவ்வொருவராக இழுத்து வெளியேற்றுகிறார்கள்.

குழந்தைகளை, கிழவிகளை வெலவெலத்து உயிருடன் இருக்கும்போதே செத்து விட்டதாக விழுந்திருக்கும் நபர்களை இறக்குகிறார்கள்.

ஏழெட்டு பிணங்கள் விழுந்துவிட்டன. முன் ஸீட் பக்கமாக உட்கார்ந்திருந்தவர்கள் பத்துப் பதினைந்து... இல்லை இருபது பேருக்கு மேல் பலமான அடி.

"பிரீதா... நீ இங்கே தனியா நிக்கிறியா... நான் ஏழெட்டுப் பேரை அள்ளிப் போட்டுக்கிட்டுப் போயி கேஷுவாலிட்டிலே அட்மிட் பண்ணிட்டு வர்றேன் !"

"ஓ... எஸ்"

"வண்டி ஏதாவது வந்தா நிறுத்து... கை காட்டு... விஷயத்தைச் சொல்லு ! ஏ.பி. பார்டர் தானே இது - ஐ வில் கோ டு சித்தூர் ஹாஸ்பிடல்."

வண்டியில் அவள் அவன் காயமடைந்த உடல்களை ஏற்றுவதற்கு உதவி செய்கிறாள். வண்டி கிளம்புகிறது.

அவள் மட்டும் தனியாக ஒரு தீரமான உள்ளத்தோடு அடிபட்டவர்களுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டு நிற்கிறாள்.

முக்கால் மணி நேரத்தில் சாலையில் சென்ற பல லாரிகளை நிறுத்தும் முயற்சியில் தோற்றுப்போய் அவள் காத்திருக்கிறாள்.

இரண்டாவது 'சிங்கிள்' அடிக்க அவன் ஜீப்போடு வருகிறான்.



"ப்ளாகார்ட்ஸ்... ஹாஸ்பிடலா நடத்தறானுங்க. நோபடி கேர்ஸ்... டூட்டி முடிஞ்சு போச்சு ! டாக்டர் பர்மிஷன் வேணும்... இல்லாத ரூல்ஸ் பேசறானுங்க. போலீஸ் வான் எடுத்துட்டு வாங்கய்யான்னா கமிஷனர் கிட்டே போன்லே பரிமிஷன் வாங்கிட்டு வர்றோம்னு சொல்றானுங்க" அவன் வெறுப்போடு திட்டித் தீர்க்கிறான்.

"டோன்ட் வேஸ்ட் டைம்... இந்த சிங்கிள்ளே நானும் வர்றேன். மனுஷங்களை சபிச்சு திட்டி ஒரு புண்ணியமு மில்லே வேஸ்ட் ஆஃப் டைம்... வேஸ்ட் ஆஃப் எனர்ஜி"

ஹாஸ்பிடலுக்குப்போய் 'பிரயாணிகளை' இறக்கி விட்டு விட்டு நர்ஸுகளைச் சந்தித்து, டாக்டரைச் சந்தித்து என்னமோ படபடவென்று பேசுகிறாள்.

அவள் செம்மஞ்சள் நிறத்தில் கவர்ச்சியாக இருக்கிறாள். அவள் முகத்தில் சொட்டுச் சொட்டாகக் குறைந்து கொண்டு போகும் அந்த 'ஸோ-கால்ட்' மனிதாபிமானம் ஜுவாலை வீசுகிறது. அதன் உண்மை தகிக்கிறது.

அவ்வளவு அழகான, இளமையான, கவர்ச்சியான நர்ஸாக இருக்கின்ற ஒரு பெண் பேசும்போது தான் மனிதாபிமானம் என்ற சரக்குக்கு ஒரு விலை மதிப்பு வருகிறது.

ஒரு பட்டாளம் டாக்டர்கள் நர்ஸுகள் ஓடி வருகிறார்கள்... ஸ்ட்ரெச்சர்கள்... 'பெட்' கள்.

"இன்னும் ஒரு சிங்கிள் அடிச்சுடலாமா தாமு !"

"ஓ...எஸ்"

"பாவம், யூ அர் வெரி டயர்ட்."

"இல்லே... ஐம் வெரி ஹாப்பி... நமக்கு ஒரு சில

நிமிஷமாவது மனுஷனா வாழற ஒரு சான்ஸ் கிடைச்சுதே!"

அதுதான் அவன் பேசிய கடைசிப் பேச்சு.

மூன்றாவது சிங்கிளில் எக்கச் சக்கமாக சிக்கிக் கொண்டிருந்த ஒரு பிணத்தை இழுத்து வெளியேற்றும் போது நாலைந்து பேர் ஏறி தங்கள் உடமைகளை அவசரமாக இழுத்து வெளியேற்றுகிற கலவரத்தில், விழுகிற நிலைக்கு வந்திருந்த ஓர் இரும்புப் பெட்டி நச்சென்று அவன் தலையைக் குறிப்பார்த்த மாதிரி வந்து விழுந்தது.

தாமுவையும் கேஷுவாலிட்டிக்குக் கொண்டு போகிறார்கள். காப்பாற்ற வந்தவனுக்கு விபத்து நேர்ந்த பரிதாபம் எல்லோரையும் நெகிழ வைக்கிறது.

"ஸ்கல் ஃப்ராக்சர். இங்கே கருவிகள் கிடையாது. வேறே வசதிகள் கிடையாது. சி.எம்.சிக்கு எடுத்துட்டு போயிடுங்க. நிலைமை சீரியஸ்" என்று சித்தூர் கை விரிக்கிறது.

ஜீப்பில் இரண்டு பேர் துணையுடன் அவனை சி.எம். சி.க்குக் கொண்டு வருகிறார்கள்.

அடுத்த இருபத்தி நாலுமணி நேரம்.

அவளுக்கு நம்பிக்கையும் பயனும் அந்தரத்தில் தொங்கும் கம்பி ரயில் பயணமாக மாறி மாறி வருகின்றன.

உலகின் எந்த மூலையில், எந்த சிகரத்தில், எந்த சமுத்திரத்தில், எந்தக் கட்டிடத்தில், உயிரை மண்ணோடு கட்டிவைக்கிற மஹாசக்தி இருக்கிறது?

அவள் எல்லாவற்றையும் வேண்டுகிறாள்.

அவன் அவளைக் காதலித்ததில்லை.

அவளும் அவனைக் காதலித்ததில்லை.



இரவுகளிலும் பகல்களிலும் ஒருவர் உடம்பும் உள்ளமும் மற்றவருக்குத் தேவைப்பட்டன.

இதைத் தவிர வேறு பந்தம் இல்லை.

எனினும் அவள் பெண். கற் பாறையை ஊடுருவி உயிரின் வேர்களை பந்தம் கொண்டாட விடும் பூமி.

வானத்தில் பறந்துவிடத் துடிக்கும் உயிர்களை தன் கருணையின் ஈரத்தில், கனிவின் அமிர்தத்தில் கட்டிப் போடும் ஆகர்ஷணம்.

அவளுக்கு இறந்த காலம் ஒன்று இருந்தது. நேசித்தவை எல்லாம்– பிரியமானவை எல்லாம்– கையிலிருந்து பறிக்கப்பட்ட சபிக்கப்பட்டதொரு இறந்த காலம்.

அவன் எதிர் காலம் ஒன்றிற்கு வாக்குறுதி அளித்திருந்தான். அவள் அந்த இறந்த காலங்களின் குவிந்த சாம்பல் மேட்டின் முன் மண்டியிட்டாள்.

'எனிக்கு இத்ர மதி. பகவானே ரக்ஷிக்கு ரக்ஷிக்கு' பிரார்த்தித்தாள்...உருகினாள்.

ஆனால் பிரார்த்தனைகளின் சிறகுகளுக்கு உயரமான எல்லை விரைவில் தட்டுப்படுவதில்லை.

அவை முன்னும் பின்னுமற்ற, முடிவும் தொடக்கமுமற்ற ஆகாயத்தில் அனாதைகளாகப் பறக்கின்றன.

சில சமயம் தொடுவானம் ஆயிரமாயிரம் மைல்களுக்கு அப்புறம் வெறிச்சிட்டிருக்கிறது.

நீலமாய்... சாம்பலாய்... நித்தியத்துவம் என்ற நிற உருவற்ற சூன்யமாய், பிரார்த்தனைகள் பறந்து கொண்டே செல்கின்றன.

சிவா வரும்போது எல்லாம் முடிந்து விட்டிருந்தது. 'மார்ச்சுவரி'யில் பாண்டேஜ் போடப்பட்டு செலுத்த வேண்டிய பில் கட்டணத்தை எதிர்பார்த்து தாமுவின் உடம்பு டெலிவரி செய்யப்படுவதற்காகக் காத்திருந்தது.

அவன் போன பத்து நிமிஷத்தில் மதனபள்ளியி லிருந்து தர்மராஜ ரெட்டிகாருவின் உறவினர்கள் ஒரு மெடாடரில் வந்து இறங்கினர்.

பில் கட்டப்பட்டதும் ஸ்ட்ரெச்சரில் தாமுவின் உடல் லேசாகத் தூக்கித் தூக்கிப் போடப்பட வந்து சேர்ந்தது.

இது தான் தாமு.

விசாலமான இருதயம். வைராக்கியம், நேசம், தொழில் திறமை. தான் தான் என்று சுழலும் சுயநலச் சக்கர அச்சிலிருந்து சந்தர்ப்பம் வரும்போது துண்டித்துப் பிரிந்து வரும் துணிவு.

மிச்சம் எல்லாம் போர்வை போர்த்தப்பட்ட இந்த உடம்புதான். மீதியெல்லாம் இவ்வளவு தான்.

சிவா நொறுங்கிப் போனான்.

பிரீதா சில்லு சில்லாகச் சிதறியவள் போல் நின்றாள். அவள் சிவாவைப் பார்த்து தலையசைத்தாள். அழவில்லை. கதறவில்லை.

அவையெல்லாம் நேர்ந்துள்ள இழப்பின் முன்னே கொச்சையானவை. அந்த வெளியீடுகளில் நேர்ந்த நஷ்டத்தின் துக்கத்தை செலவிட முடியாது.

மதனபள்ளியில் கட்டிலின் மீது படுத்துக் கொண்டே தாமுவின் தந்தை அவன் தனக்கு செய்ய வேண்டிய ஈமச் சடங்குகளை பிறர் அவனுக்குச் செய்வதைப் பார்த்தார்.



செய்தி வேட்டைக்காரர்கள், புகைப்படம் பிடித்தார்கள். மறுநாள் கொட்டை எழுத்துக்களில் இயந்திரங்கள், இயந்திரமயமாய்விட்ட வாழ்வில் மனிதர்கள் மிச்சமிருக்கும் அதிசயத்தை அச்சடித்தன.

மயானத்திற்கு கூட்டங் கூட்டமாய் மனிதர்கள் வந்தார்கள். தாமுவின் அந்த அந்தஸ்திற்காக வந்தார்கள் சிலர்.

மனிதன் ஒருவன் மாண்ட வருத்தத்தைப் பகிர்ந்து கொண்டோர் பலர்.

செங்குட்டுவன் வந்தான்.

ராயப்பேட்டையிலிருந்து மலர் வளையங்கள் வந்தன.

புண்ணியகோட்டி வந்தார். திவ்யா வந்தாள்.

தந்திகள் வந்தன.

தபால்கள் வந்தன.

சிவாவுக்கு சுயநிலை மீள மூன்று நாளாயிற்று. கரை தெரியாமல் இருண்டு விட்ட சமுத்திரத்தில் மரணம் என்ற சூறாவளியின் ஆர்ப்பரிப்பும், உணர்ச்சிகள் சுழன்றடிக்கும் ஊர்த்துவ வேகமும் மட்டும் அவனுக்கு நினைவிருந்தன.

எப்படிப் போயின அந்த மூன்று நாட்கள் !

பிரீதா எங்கே இருந்தாள் ? என்னவானாள் ?

வந்தவர்கள் எப்படிப்போனார்கள் ?

போனவர்கள் எங்கே மறைந்தார்கள் ? எதையும் அவனால் சொல்ல முடியவில்லை.

அந்த மூன்று நாட்கள் அவன் எங்கே சாப்பிட்டான் ? எவ்வாறு விழித்தான் ? எதுவும் திருப்பிச் சொல்ல முடியாத அனிச்சை செயல்கள் மாதிரி நடந்தன.

நாலாவது நாள் கட்டிலில் படுத்திருந்த தர்மராஜ ரெட்டிகாரு முன்னிலையில் விவகாரம் பேசினார்கள். அன்று சிவா சிவாவானான்.

"ராயப்பேட்டா ஒர்க்ஷாப் கணக்கு வழக்கெல்லாம் ஒனக்கு நல்லாத் தெரியுமா?" தாமுவின் மாமா கேட்டார்.

"எல்லாம் கரெக்டா எழுதி அப்டுடேட்டா வச்சிருக் கேன்.."

"ஒர்க்ஷாப்பை மறுபடியும் நடத்தணுமா மாமா?" அவர் கட்டிலில் படுத்திருந்த தர்மராஜரெட்டிகாருவிடம் அபிப்பிராயம் கேட்டார் தெலுங்கில்.

கட்டிலின் மீது ஒரு மார்பு இரண்டு மூன்று முறை குலுங்கிற்று. ஒரு மேல் துண்டு வாய் ஓசை வெளிவராமல் தான் வாங்கிக் கொண்டது.

"இப்புடு தேனிகி அதந்தா அடுகுதாரு?"

அதை இப்போது கேட்கவேண்டாம் என்று யாரோ தடுத்தார்கள்.

தர்மராஜரெட்டிகாரு 'வேண்டாம்' என்று கையசைத்தார்.

"வொர்க்ஷாப் ஒத்து" என்று அவர் குழறிய குரலில் சொன்னதை எவரோ தெளிவாகத் திருத்திச் சொன்னரர்.

"ஒர்க்ஷாப்பை மூடிடலாம்னு சொல்றார்."

'இல்லை. ஒர்ஷாப் நடக்கவேண்டும்! அது தாமுவின் நினைவுச் சின்னம். வெறுங்கையுடன் சென்னைக்கு வந்தஇ ளைஞன் ஒருவனின் வெற்றிச் சின்னம். தயவு செய்து அதை மூடாதீர்கள்.'

சிவா எழுந்து கத்தப்போனான். ஏதோ ஒரு கை அவனைப் பிடித்தது. பிரீதா.



அவள் அவன் மனசிலிருந்ததைப் புரிந்து கொண்டவள் போன்று அவனை ஒரு கணம் உற்றுப் பார்த்தாள். பின்பு மெதுவாக அதைத் தடுப்பது போல் தலையாட்டினாள்.

தான் அதில் மானேஜர் என்பது அப்புறம் சிவாவுக்கு ஞாபகம் வந்தது. எழுந்து பேசினால் தன் உத்தியோகம் போய்விடும் என்று சொல்வதாக எடுத்துக் கொள்வார்கள்.

தாமு போனபின் நினைவுச் சின்னங்களைப் பராமரிக்கிற அக்கறை அவர்களுக்கு இருக்க வேண்டிய அவசியம் என்ன?

தன் தாமு வேறு.

அவர்கள் தாமு வேறு.

அவர்கள் தங்கள் தாமுவின் சொத்தைக் குறித்து விவகாரம் பேசுகிறார்கள். அதில் தலையிடுவதற்கு தனக்கோ பிரீதாவுக்கோ எவ்வித உரிமையுமில்லை.

அங்கே விவகாரம் பேசப்பட்ட பதினெட்டாவது நாளில் தாமு நிறுவிய ஒர்க்ஷாப் அதன் குட்வெல்லோடும் ஸ்தாவர ஜங்கம சொத்துக்களோடும் இருபது லட்ச ரூபாய்க்குக் கை மாறியது.

சிவாவின் கணக்கு வழக்குகள் அப்பழுக்கின்றி இருந்ததை மீடியேட்டராக இருந்த ஆடிட்டர் எல்லார் முன்னிலையிலும் பாராட்டினார்.

அவனது மாதச் சம்பளத்தோடு ஒரு தொகை சேர்த்துக் கணக்கிட்டு கவரில் வைத்து அவனிடம் நீட்டினார்கள்.

ஒர்க்ஷாப் நடுவில் சமீபத்தில் பிரேம் செய்து, பெரிதாக மாலை போட்டிருந்த தாமுவின் போட்டோவை சிவா திரும்பிப் பார்த்தான்.

'தட்ஸ் ஆல் சிவா..தாங்க்யூ. தாங்க்யூ ஃபார் எவ்ரிதிங்.'

போட்டோவில் திடமாக தீர்க்கமாக மரணத்தால் அழிக்க முடியாத உயிர்ச் சக்தியின் நினைவு போல் தாமு சிரித்தான்.

# 22

எங்கே போவாய் சிவா ? அந்தக் கேள்வி கூடவே அவனுடன் நடந்து வந்தது.

அதிகாலையில் சிவா மெரீனாவிற்குப் போனான். 'வாக்கிங்' பயிற்சிக்கும் ஓட்டப் பயிற்சிக்கும் ஆண்களும் பெண்களும் கடற்கரைச் சாலையில் சுறுசுறுப்பாக நடந்தார்கள். ஓடினார்கள்.

அவன் மைலாப்பூரில் நர்ஸிங் ஹோமிலிருந்து கால் நடையாகவே புறப்பட்டான்.

புறப்படும் போது பிரீதா கேட்டாள்.

"தெரியலே..எங்கேயோ போகணும் போலிருக்கு !"

"டிபன் சாப்பிட வந்துடு. எனக்கு காலைலே டூட்டி. புட்டு செஞ்சு வச்சுட்டுப் போறேன். வந்து சாப்பிடு. இந்தா டூப்ளிகேட் சாவி !"

பிரீதா நீட்டியபோது வாங்க மனமில்லை.

"எங்க போறேண்ணே தெரியலே. எப்ப வருவேண்ணும் தெரியாது."

"பரவால்லே. எங்கிட்டே வேறே 'கீ' இருக்கு"

"ஒருவேளை நான் ஊருக்குப் போய்ட்டா..?"

"நானும் ஊருக்கு வருவேன்"



அவன் பிரீதாவை நிமிர்ந்து பார்த்தான்.

"யூ நோ ! எனக்கு எப்படி இருக்கும்னு நீ யோசிச்சியா ?"

அவள் கண்கள் கலங்கின. தளும்பி நின்ற அந்த கறுப்பு ஊற்றுக்களின் கீழே சமுத்திரம் குமுறிக் கொண்டிருக்கிறது.

"என்னைப்பத்தி யோசிக்கவே மறந்துட்டே இல்லை ?"

மெய்தான். சிவா யாரைப் பற்றியும் யோசிக்க மறந்து விட்டான். விழுந்த அடி அவன் முதல் அனுபவம். வழங்கப்படுகிற எந்த பாதுகாப்பும் எந்த ஆறுதலும் எந்த உறவும் எப்போதும் எந்த வினாடியிலும் ரத்து செய்யப்படும் என்ற கொடூரமான உண்மை தான் எல்லாவற்றிற்கும் அஸ்திவாரமாக நிற்கிறது.

அது அவனைச் சந்தித்துப் போயிற்று. அந்த உண்மையைத் தெரிந்து கொண்ட பின்னால் அவனுக்கு யாரைப் பற்றியும் யோசிக்க முடியவில்லை.

"எங்கே போவாய் சிவா ?"

அதே கேள்வியை திஷ்யாவும் கேட்டாள்.

ராயப்பேட்டையில் உள்ள வீட்டில் தாமுவின் உடமைகளையெல்லாம் எடுத்துக் கொண்டு, தாமுவின் மாமா வீட்டைக் காலி செய்த பின்பு தனது சூட்கேஸை எடுத்துக் கொண்டு கிளம்பும் போது கேட்டாள்.

"இப்ப பிரீதா க்வார்ட்டர்ஸிலே தங்கப் போறேன். அப்புறம் எங்க போவேண்ணு தெரியலே"

"மறந்துடுவீங்களா ?"

சிரித்துக்கொண்டே தான் கேட்டாள். நெஞ்சைக் குத்தும் சிரிப்பு. கண்ணீரை ரஸவாதம் செய்து வாக்குறுதி களின் மெருகேற்றிக் கேட்ட சிரிப்பு.

"வேணும்னா சொல்லு ! ஐ வில் ட்ரை !

புண்ணியகோடியின் தற்கொலை முயற்சி பற்றிய வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு அவர் பல்லாவரத்திற்கு மாறுதல் வாங்கியிருந்தார்.

குடும்பத்தை அனகாபுத்தூருக்கு மாற்ற வீடு பார்த்துக் கொண்டிருந்தார். அதைச் சுட்டிக் காட்டி அவன் சொன்னான்.

"நினைப்பு இருந்தா சரி !" அவள் மீண்டும் இடக்கு பேசினாள்.

அவனுக்கு வேடிக்கை பேச மனசில் பசுமையில்லை.

"திஷ்யா.. இதை நீ உங்க அப்பாகிட்டே சொல்லு."

"ஏன் ?"

"இப்ப அவர் என்னைப் பார்க்கவே இஷ்டமில்லா தவர் போல போறார்.. வர்றார்"

தாமுவின் மரணத்திற்குப் பின்னர் புண்ணியகோட்டி விலகி விலகித்தான் நடந்தார். தாமு என்ற பின்னணி தகர்ந்து போனதும் அவன் தலையீடுகளெல்லாம் பெரும் பிழைகள் என்று அவருக்குத் தோன்றியிருக்குமோ !

ராயப்பேட்டை வாசம் அவரை மனக்கோட்டைகள் இடிந்த மைதான வாசம் மாதிரி மாற்றியிருக்கக் கூடும்.

பாவம்.. துரத்துகின்ற நிழலுக்குப் பயந்து எட்டாத கானலுக்கு ஓடித் தோற்றவர் ! அவர் மீது அவனுக்கு அனுதாபம்தான் வந்தது.

"கொஞ்சம் இரு சிவா !" திஷ்யா உள்ளே போய் ஒரு வெள்ளைத் தாளில் விலாசம் எழுதிக் கொண்டு வந்தாள்.



"வீடு கெடைச்சுட்டுது. இதான் புது அட்ரஸ். தபால் போடு"

"தபால் தானே... எழுதறேன். எனக்கு விலாசம் கெடைக்கற வரைக்கும் நீ பதில் எழுதவேண்டாம். நான் தபால் எழுதிக்கிட்டே இருப்பேன்"

"சரி" அவள் நம்பிக்கையோடு சிரித்தாள்.

"எங்கே போவாய் சிவா ?" அப்புறமும் கேட்டாள்.

அவன் கைகளை விரித்துக் காட்டி விட்டு வெளியேறினான்.

எங்கே போவாய் சிவா ?

அவன் தன்னையே கேட்டுக் கொண்டான்.

மெரீனாவிலிருந்து கரையோரமாக வெயிலை எதிர் பார்த்து விரிந்த வலைகளையும் கட்டுமரங்களையும் கடந்து நடந்தான்.

அலைகள் கரையை விட்டுக் கொஞ்சம் பின் வாங்கி யிருந்தன.

கிழக்கே உதயத்தின் முதலாவது முலாம் பூசப் பட்டிருந்தது. இன்னொரு நாள் விடிவதை எதிர்பார்த்துக் கொண்டு மீனவர்கள் சுறுசுறுப்பாக இயங்கினர்.

அவன் அலைகள் ஓயாத அந்த ஜீவ இயக்கத்தில் போக்கிடமற்ற ஒரு பயணி போன்று பார்வையாளனாக குறியற்று, நோக்கற்று நடந்தான்.

லைட் அவுஸுக்குப் பின்புறம் உயர உயரமாக நின்ற கயிற்றுக் சுருணைகள் வந்ததும் உட்கார் என்று யாரோ உத்திரவிட்ட மாதிரி உட்கார்ந்தான்.

உதயமாயிற்று.

மாணிக்கப் பசும்பொன் போன்று அந்த சிவப்பு வட்டம் கடல் விளிம்பிலிருந்து மெதுமெதுவே விடுதலையாகி சாண் உயர்ந்தது. முழம் உயர்ந்தது. மார் உயர்ந்தது.

இது நேற்றும் வந்தது. உண்டோம். உறங்கினோம். மீண்டும் உதயமாகியிருக்கிறது.

எல்லாம் யோசிக்கும் வேளையில் பசி தீர உண்பதும் உறங்குவதுமாக முடியும்...என்ற தாயுமானவர் பாடல் சரேலென்று நினைவுக்கு வந்தது.

அதே இடத்தில் அமர்ந்து ஒரு சந்திரோதயத்தைத் தரிசித்ததை எண்ணினான் சிவா. அப்போது நினைவில் ஒரு தோணி போல் மிதந்து வந்த வாசகம் ஞாபகமாயிற்று.

விடுதலை பெறுக !

அம்மா, திஷ்யா, பிரீதா.

பெண்களின் பந்தங்கள் தான் தன்னை இறுக்கியிருந்தன என்று நினைத்திருந்தான் அது வரை. தாமுவின் மரணம் ஒரே வீச்சில் அந்த நினைப்பை வெட்டி வீழ்த்தி விட்டது. உருவாக்கியது தெரியாமல் அவனை தாமு உருவாக்கியிருந்தான். அந்தக் கரம் வீழ்ந்ததும் தனக்குள் சுற்றிய சக்கரம் நின்று போனதை ஒரு சூன்ய உணர்வோடு அவன் உற்றுக் கவனித்தான்.

தூரத்தில் முதலாவது கட்டுமரம் அன்றைய தினத்தை வரவேற்க கரைக்கு வந்து கொண்டிருந்தது. மீனவப் பெண்களும் குழந்தைகளும் அலைகளுக்கு அஞ்சாமல் அதனருகே ஓடினர்.

இரவைக் கடலின் மடியில் கட்டுச் சோற்றுடன் கழித்து விட்டு மீனவர்கள் கரை திரும்பிக் கொண்டிருந்தனர்.

பசி தீர உண்பதுவும் உறங்குவதுமாக மட்டுமா வாழ்க்கை முடிகிறது ?



வேதாந்திகளுக்கும் வாழ்க்கையை உதறிய துறவிகளுக்கும் ஒரு வேளை யோசிக்கும் வேளையில் அப்படி முடியலாம்.

ஓர் அலை எதிரில் வந்த கட்டுமரத்தை உந்தி கரைக்குத் தள்ளிற்று.

அதோ பசி தீர உண்பதற்கும் உறங்குவதற்கும் கூட இயற்கையை எதிர்த்து, அலைகளோடும் சுறாக்களோடும் யுத்தம் செய்து நடக்கும் அந்த முயற்சியில் என்ன வேகம் ! என்ன விளையாட்டு !

கரையேறுவதற்குச் சாடி வந்த அலை ஒன்று சிலீரென்று அரைந்து தன் நுரைப் பாவாடையை விரித்துச் சிரித்தது. அதற்கு அது தோல்வியோ. அது மீண்டும் வரும். அதற்கு வெற்றியுமில்லே. தோல்வியுமில்லை.

விடுதலை பெறுக.

அவனுக்கு அந்த வாசகம் மீண்டும் ஞாபகம் வந்தது.

அதற்கு அவனுக்கு இப்போது புதுப் பொருள் புரிந்தது.

சார்பு நிலையிலிருந்து விடுதலை பெறுக..நீ எழுந்து உன் சொந்தக் கால்களில் நட... சிவாவுக்கு உடம்பு விறுவிறுத்தது.

தன்னைக் கவிந்திருந்த முட்டையின் கூடு நொறுங்கி வெப்பமும் கடினமும் வாய்ந்த நிலப்பரப்பில் வந்து விழுந்த ஒரு சிலிர்ப்பு தோன்றியது.

திஷ்யா, நான் விடுதலையாய் விட்டேன்.

பிரீதா நான் விடுதலையாகிறேன்.

அம்மா எனக்கு விடுதலை.

தாமு உங்களுக்கு நன்றி. அரவணைத்தீர்கள். ஆதரவளித்தீர்கள். மேலே ஏறு என்று பொறுப்பளித் தீர்கள்.

அப்பாலே போ என்று அகன்று போய்விட்டீர்கள். நன்றி. எல்லாவற்றிற்கும் நன்றி.

சிவா வெய்யில் உறைக்கவே எழுந்தான்.

கூழ் மாதிரி ஜெல்லி மீன் மாதிரி நெகிழ்ந்து குழைந்து வந்து அங்கே உட்கார்ந்திருந்துவிட்டு மீள எழுந்த போது எஃகு மாதிரி உறுதியோடு நிமிர்வதை நினைத்தான்.

பதினெட்டு நாட்கள் கழித்து அவனுக்குப் புன்னகை வந்தது.

தான் அப்படி இருந்ததை தாமு ரசித்திருப்பானா?

இல்லை. யார் ரசிக்கிறார்கள்... யார் ரசிக்கவில்லை என்பது இனி எனக்கு அளவு கோல் இல்லை. நான் அப்படி இருந்தது எனக்கு ஒரு தேவை. இந்த விடுதலைக்காக என்னை உதறி என் கட்டுகளை வெட்டியெறிவதற்கு ஒரு தேவை!

அவன் மணலில் வேகமாக நடந்தான்.

கயிற்றுச் சுருணை நின்ற அந்த கடற்கரை மூலையிலிருந்து நடக்க நடக்க ஒரு நதி மூலம் உதித்த மாதிரி யோசனைகள் வந்தன. திடமான, ஆண்மை பொருந்திய யோசனைகள் — தீர்மானங்கள்.

இப்போது அவனுக்குப் பசித்தது.

பிரீதா க்வார்ட்டர்ஸுக்குப் போக வேண்டும் போல் தோன்றியது. அவன் வேகமாக நடந்தான்.

அங்கிருந்து புறப்பட்ட சிவா வேறு சிவா. அவனுக்கு மரணம் வழங்கிய அதிர்ச்சி தீர்ந்து வாழ்க்கை வழங்கிய உத்வேகம் நிரம்பிய சிவா.

யோசிக்கும் வேளையில் உண்பதும் உறங்குவதுமாக முடிந்தாலும் இந்த நாடக அரங்கில் தன் பாத்திரம் என்ன என்று உணர்ந்த சிவா.



அம்மா...வெற்றிவேல்...தாமு...திஷ்யா...பிரீதா எல்லோருமே தனித்தனியாக இதைத்தான் அவனுக்கு உணர்த்திக்கொண்டிருந்தார்கள். உணர வேண்டுமென்று ஊதி ஊதி ஓதிக்கொண்டிருந்தார்கள்.

புரிந்து கொள்வதற்கு தாமதமாகிவிட்டது.

அவனுக்கு அந்த கடற்கரைக் காற்றைப் போல் மனசு பரிசுத்தமாயிருந்தது. லேசாயிருந்தது.

ஜனனத்தைத் தனியே சந்தித்தேன். மரணமே உன்னையும் தனியே சந்திக்க வேண்டும்! நல்லது; காத்திரு- இந்த இடைவேளையில் எனக்கு ஒரு வேலை இருக்கிறது.

இதோ உருவழிகிற இந்த காலடிச் சுவடுகள் போன்று என் வேலைக்கு எனக்கு அப்புறம் எந்த அடையாளமும் இல்லாமற் போகலாம்! நல்லது. வேலை-வேலை தான் அடையாளம் பதிந்தாலென்ன? அழிந்தாலென்ன?

ஆயிரம் மனப் பிரமைகளுக்கு நடுவில் நேர்கிறது இந்த ஜனனம் என்ற விபத்து. இதற்கு ஆளான கோடிக்கணக்கானவரிடம் எனக்கு ஒரு வேலை உண்டு. என்னிடம் ஒரு பேனா உண்டு.

இயற்கையாகவோ செயற்கையாகவோ இந்த மனிதர்கள் கலைத்துப் பிரித்து ஏற்படுத்தியிருக்கும் சிக்கலில் ஓர் இழையையாவது நேராக்குகிற வேலை கதை சொல்லும் வேலை. சிந்தித்து என் பிரார்த்தனைகளைப் பகிர்ந்து கொள்கிற வேலை.

அக்கரையில்—இல்லை—அடுத்த அசைவிலேயே மரணம் காத்திருக்கிறது. ஆல்ரைட்.

எப்போது வேண்டுமானாலும் அது வந்து என பந்தங்களில் எதை வேண்டுமானாலும் அது பறித்துச் செல்லட்டும். இந்த நிமிஷம்...இந்த வினாடி யெனினும் அதற்கு நானும் தயார்.

•

அது விட்டு வைக்கிற வரை நான் என் வேலையைச் செய்வேன். சிந்திப்பேன். எழுதுவேன். என்னை வெளிப் படுத்துவேன்.

பிரீதாவின் குவார்ட்டர்ஸுக்கு வெளியே ஒரு கார் நின்றிருந்தது.

யார் வந்திருப்பது ?

அவன் படியேறும் போதே கணீரென்ற ஒரு குரல் அவனை வரவேற்றது.

"வா சிவா"

வெற்றிவேல்.

பளபளவென்று கலையாத தலையோடு, இன் பண்ணிய உடையும் பாலீஷ் மின்னும் ஷூவுமாக மின்னிக் கொண்டு கையில் சிகரெட் புகைய அவன் வெளி வராந்தாவில் பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்திருந்தான்.

"எப்போ வந்தே ?"

"வழக்கப்படி ஐயாவுக்காக வெய்ட் பண்ணிகிட்டிருக்கேன். ஒரு மணி நேரம் ஆச்சு"

"இந்த அட்ரஸ் ?"

"திஷ்யா சொன்னா"

திஷ்யா என்ற பெயரையும் சொன்னாள் என்ற ஒருமையையும் ஒரு சுதந்திரத்தோடு பிரயோகித்ததை சிவா கவனித்தான்.

"நர்ஸம்மா வந்து இங்கே வெய்ட் பண்ணிகிட் டிருங்க. வந்துடுவார்னு சொல்லிட்டுப் போனாங்க"

"நீ சாப்பிட்டியா... எனக்குப் பசிக்குது" என்று வெறுமனே மூடியிருந்த கதவைத் திறந்து கொண்டே கேட்டான்.



"நான் சாப்பிடலலே. வா. ரெண்டுபேரும் ஒரு ஹோட்டலுக்குப் போவோம். ஒனக்காக வெய்ட் பண்ணிட்டிருக்கேன்"

"வெற்றி... எனக்கு ஹோட்டலுக்கு வர்ற அளவு பொறுமை இல்லே. பசி... உயிர் போவுது... உள்ள வா ! பிரீதா புட்டு பண்ணி வச்சிருப்பா. உள்ளே பிரெட் பிஸ்கெட் எதாவது இருக்கும். ஷேர் பண்ணிப்போம்."

"ஆல்ரைட்"

வெற்றிவேல் உள்ளே எழுந்து வந்தான்.

புட்டு வைத்திருந்த பாத்திர மூடியைத் தூக்கிப் பார்த்தான். இரண்டு பேருக்கும் காணாது. அரை லோஃப் ரொட்டி இருந்தது. தொட்டுக் கொள்ள ஜாமோ சாஸோ இல்லை. அது போன வாரமே தீர்ந்துவிட்டது.

புட்டு ஆறி வறவறவென்றிருக்கும். எங்கிருந்தோ தேடி வந்திருப்பவனுக்கு இந்தத் தண்டனை எதற்கு ?

சிவா சட்டென்று ஸ்டவ் ஸ்விச்சை "ப்ளக்"கில் செருகினான்.

"என்னடா செய்யப்போறே... சமையலா ?"

"பத்து நிமிஷம் உட்காரு. ஒரு டொமாடோ சூப் வச்சுடறேன்."

"ஹோட்டலுக்கே போயிருக்கலாம்."

"அங்கே புட்டும் டொமாட்டோ ஸூப்பும் சேந்து கெடைக்காது" என்று முட்டை வைத்திருக்கும் பெட்டி யைத் தூக்கிப் பார்த்தான். நல்லகாலம் நாலு முட்டைகள் இருந்தன. வெற்றிவேலுக்கு ஆம்லெட் பிடிக்கும்.

"எங்கிருந்து வந்தே ? ஏன் வந்தே ?"

"இதான் விருந்தாளிக்கிட்டே பேசற மானர்ஸா ?"

"நீ விருந்தாளியில்லே. ஒனக்கு மானர்ஸ் எதுக்கு ?"

"சிங்காரப் பேட்டையிலிருந்து புறப்பட்டு வர்றேன். ரிஷிகேஷிற்குப் போய்க்கிட்டிருக்கேன்...... ஐம் ஸாரி, போகப் போறோம்."

"ரிஷிகேஷ் ?" சிவா நெற்றியைச் சுருக்கியவாறே திரும்பிப் பார்த்தான்.

"எஸ்...ரிஷிகேஷ்" என்று மீண்டும் வெற்றிவேல் வலியுறுத்தினான்.

"நான் கூடவா ?"

"ஆமாம்; நீ கூட"

"அங்கே என்ன விசேஷம் ?"

"பாபா ஓம்கார்நாத் கைலாச யாத்திரை தொடங்கப் போறார். அங்கே நண்பன் ஒருவன் கடிதம் எழுதியிருந்தான்."

பாபா ஓம்கார்நாத் என்ற சொல் ஜிவ்வென்று ரத்த ஓட்டத்தில் ஒரு சிலிர்ப்பை உண்டாக்கிற்று. அடுத்த கணமே தன்னை சிவா சுதாரித்துக் கொண்டான்.

"பாபாக்கள் கிட்டேயிருந்தும் ஸ்வாமிஜிகள் கிட்டேயிருந்தும் ஒனக்கு இன்னும் விடுதலை கிடைக்கலியா ?"

"பாபாவுக்கு பந்தமில்லை. அவர் கடிதம் எழுதவில்லை. ஒரு ஜெர்மன் நண்பன் எழுதியிருந்தான்."

"கைலாசத்துக்குப் போறது அவர் பிஸினஸ். அங்கே ஒனக்கு என்ன பிஸினஸ் ?"

"ஒனக்குண்ணு சொல்லாதே. நமக்குண்ணு சொல்லு"

"ஆல்ரைட், நமக்கு என்ன பிஸினஸ்."

"ஒருவேளை அவர் திரும்பாமல் போயிடலாம்."



"கடவுள் சித்தம். நான் என்ன பண்ண முடியும் ? போய்த் தடுக்கலாம்கறியா ?"

"முட்டாள் ! கடைசியாக... ஐம் ஸாரி... வழியனுப்புவதற்கு ஒருமுறை போய்ட்டு வருவோம். நீ அவர் மகன்."

"அது பழைய கதை ! மகான்களுக்கு மகன்கள் இல்லை."

"மகன்களுக்கு தந்தை உண்டு."

தந்தைக்கும் மகனுக்குமிடையே இல்லாத உறவுக்கு, பொருளிழந்து போன பந்தத்திற்கு வெற்றிவேல் பாலம் போடுவது இது இரண்டாவது முறை. இதில் என்ன இவனுக்கு இப்படி ஒரு சிரத்தை ?

"வெற்றிவேல்..." என்று தட்டிய முட்டையை நிறுத்தி அவனை விளித்தான் சிவா.

"ஒனக்கு ஏண்டா இந்த வீண் வேலை ? என்ன கண்டுட்டே அந்த பாபா ஓம்கார்நாத்கிட்டே ?"

"விடுதலை. அவர் அதோ அந்தப் பறவை மாதிரி... இப்ப பறந்தது பாரு அந்த திக்கு மாதிரி விடுதலையடைந்தவர். ஹி லிபரேடட் மீ... அவர் என்னை விடுதலை செய்தார்."

"எதிலிருந்து ?"

"என் சிறையிலிருந்து..."

"இந்தப் பரிபாஷை வேண்டாம்... பீ பிளெய்ன்..."

"என்னோட அகந்தையிலிருந்து... என் அட்வென்சரிஸத்திலிருந்து...என் வேட்கைகளிலிருந்து"

"நீ விடுதலை ஆயிட்டதா நெனைக்கிறியா ?"

"எஸ்... பெருமளவு"

"மீதிக் கொஞ்சம் இருக்கு... இல்லையா ?"

"ஆமாம்"

"மை டியர் வெற்றி... இது ஒரு கற்பனை...உன் விடுதலையும் கற்பனை.. உன் தளைகளும் கற்பனை.. நீ இந்த வெளிநாட்டுப் பேர் வழிகளோடே பழகிப்பழகி அவர்கள் மாதிரி கற்பனையிலேயே காணாமற் போய் கற்பனை யிலேயே ஒன்னை மறுபடியும் கண்டுபிடிச்சுகிட்டிருக்கே. அதுக்கு ஒன்னை நீயே கட்டுப்பாடு பண்ணிகிட்டிருக்கே. நீ இழந்திருப்பது உன் சுதந்திரம்."

புத்திக் கூர்மையோடு சிவா அவனை மடக்குவதைப் புரிந்து கொண்ட மாதிரி வெற்றிவேல் சிரித்தான். சிவா மேலும் தொடர்ந்தான்.

"விடுதலைக்கு விலை சுதந்திரம் அல்ல"

"நீ 'இன்டெலச்சுவல்' மாதிரி பேசறே. நான் ஸாலிடா இருக்கேன்"

சூப் கொதிக்கும் ஓசை கேட்டது.

"சிவா.. நான் விடுபட்டது எதிலிருந்துண்ணு எனக்கு தெளிவாத் தெரியும். அந்த முட்டையிலேருந்து நீ வெளியே எடுத்த கரு மாதிரி எனக்குத் தெரியும். என் முட்டை ஓடு நொறுங்கியது என் காதில் விழுந்தது. டோன்ட் டாக் லைக் எ ப்ளடி மெடீரியலிஸ்ட்."

சிவா சட்டென்று அவனைத் திரும்பிப் பார்த்தான்.

வெற்றிவேல் கோபிக்கவில்லை. கண்கள் பளபளக்க அவனைக் கூர்மையாக, பொறுமையாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஆல் ரைட்... சூப் தயாராயிருக்கு. சாப்பிடுவோம். அப்பறமா பேசலாம்"

வெற்றிவேலுக்காகத் தயாரித்த ஆம்லெட்டைத் தட்டில் போட்டுக் கொண்டு மேஜைக்கு வந்தான் சிவா.

# 23

"ஞானும் வரும்" என்றாள் பிரீதா.

இருவரும் அதை எதிர்பார்க்கவில்லை. குறிப்பாக சிவா.

'நீங்க என்ன சொல்றீங்க ?" என்று பிரீதாவைக் கேட்டான்.

"ஞானும் ரிஷிகேஷ் வரும்."

அவர்கள் புட்டு சாப்பிட்டுக் கொண்டிருந்த நேரத்தில் உள்ளே வந்தாள் பிரீதா. இந்த நண்பர்களின் விவாதத்தைக் கேட்டாள். திடீரென்று எதிர்பாராவிதமாக தன் முடிவை அறிவித்தாள்.

"என்ன பிரீதா சொல்றீங்க ?"

"எனிக்கு எவிடேயோ போகணும் எவ்விடே யெங்கிலும்." என்று தட்டுத் தடுமாறி அவள் தமிழில் தொடர்ந்தாள்.

"நான் இருபது நாட்களாக மனுஷியாகவே இல்லை. எனக்கு ஒரு பிரயாணம் தேவை !"

சிவாவைச் சாட்டைபோல் அந்த வாசகம் தாக்கிற்று.

தாமுவின் மரணம் அவளை எவ்வளவு தாக்கியது என்பதை உணரவும் நேரமின்றித் தன் சொந்தத் துயரத்தில் மூழ்கிப் போனான்.

அது என்ன சுயநலம் !

"பதினைந்து நாளுக்கு மேலே ஆகுமே ! ஐ திங்க் யூ மே நாட் கெட் லீவ். தனியார் நர்ஸிங்ஹோம்லே லீவ் தர மாட்டாங்களே" என்று வெற்றிவேல் அவள் வருகையைத் தவிர்க்கும் விருப்பத்தோடு குறுக்கிட்டான்.

"எனக்கு லீவ் வேணும். கொடுக்கமாட்டேண்ணா நான் ரிஸைன் பண்ணுவேன்."

அவள் இவ்வளவு தீவிரமாகப் பேசுவாள் என்று வெற்றிவேல் எதிர்பார்க்கவில்லை. சிவாவைப் பார்த்தான்.

"வரட்டும் !" என்றான் சிவா.

சற்று நேரத்துக்கு முன் வரவே மாட்டானோ என்று தாமும் நினைத்த சிவா, அவளும் வரட்டும் என்று சொன்ன பதிலில் தான் வரவிரும்பவில்லை என்ற ஆட்சேபம் அடிபட்டுப் போனதை வெற்றிவேல் கவனித்தான்.

"தாங்யூ சிவா" என்று சிரித்தாள் பிரீதா. இருபது நாட்களுக்கு அப்புறம் அவள் முகத்தில் சிரிப்பு இப்போது தான் மலர்ந்திருந்தது.

நெடிய தொருக் கொடிய தீக்கானலில் மழையின்றிப் பட்டுப்போன ஒரு மரத்தில் மீண்டும் பெய்த மழையில் எங்கோ ஒரு சொட்டு போல் ஒட்டிக் கொண்டிருந்த உயிர்ப்பு மீண்டும் மலர்வது மாதிரி இருந்தது.

பிரீதா தான் வாங்கிவந்த ரொட்டியை எடுத்துவர உள்ளே போனாள்.

"பெண்கள் சக்தி வாய்ந்தவர்கள் !" என்று வெற்றி வேல் சொன்னான்.

தன் தீர்மானமும் விமர்சனமும் தகர்ந்து போனதை வெற்றிவேல் சுட்டிக்காட்டுகிறான் என்று சிவாவுக்கு புரிந்தது.

"உண்மைதான் ! நான் பிரீதாவுக்காக வருகிறேன்."

"உன் தந்தைக்காக" என்று அந்தக் கருத்து பாபா ஓம்கார்நாத்தை அவமரியாதை செய்துவிட்டது போல் துடிப்போடு குறுக்கிட்டான் வெற்றிவேல்.



"ஸாரி வெற்றிவேல் ! எனக்கு என் தந்தையின் மீது கோபமில்லை. பாபாவின் மீது உன் மாதிரி 'ஓர்ஷிப்'பும் இல்லை... நான் வருவது" என்று பிரீதாவைப் பார்த்து பேசியதை முடிக்காமல் தவிர்த்தான்.

ரொட்டியை இருவருக்கும் பரிமாறிவிட்டு... "நான் கிளம்பறேன் ! அரை மணி நேரம் பர்மிஷன் வாங்கி வந்தேன். நாம என்னிக்குப் புறப்படணும் ?" என்றாள் பிரீதா.

"பதினெட்டாந் தேதி பாபா ரிஷிகேஷ்லேருந்து கௌம்பறார். ரெண்டு நாள் முன்னாடி நாம அங்கே போயிடணும் !"

"இன்னிக்கு பதினொண்ணு... எதிலே போகப் போறோம்...?"

"தமிழ்நாடு எக்ஸ்பிரஸ்லே டில்லி போய்ட்டா அங்கிருந்து நெறைய டூரிஸ்ட்கோச் டெய்லி கௌம்பற தாம்"

"ஆ யு ஷ்யூர் ?" என்று வெற்றிவேலைக் கேட்டாள் பிரீதா.

"ஷ்யூர்."

"அப்ப டிக்கெட் புக் பண்ணிடுங்க. மூணு பேருக்கும்" என்றாள் பிரீதா. மீண்டும் அவளே யோசித்து விட்டுச் சொன்னாள்.

"டிக்கெட் கெடைக்கறது கஷ்டமாயிருக்கும். ஒரு ரயில்வே ஆபீசர் தன் மனைவி பிரசவத்துக்காக ரொம்ப கஷ்டப்பட்டுக்கிட்டிருக்கிறார். அது இங்கே அட்மிட் ஆயிருக்கு. ஐ'ல் போன் ஹிம். நீங்க பொறப்படறப்ப என்கொயரியிலே வந்து என்னைக் கூப்பிடுங்க"

"சரி"

பிரீதா புறப்பட்டுச் சென்றாள்.

"இது என்னடா சிவா திடீர்த் திருப்பம் ?"

"திருப்பம் தான்; திடீர்த் திருப்பம் அல்ல"

"வாட் டு யூ மீன் ?"

"நான் வர ஒப்புக்கிட்டது இவளுக்காக"

"யார் இவள் ? ஐ-மீன் ஒனக்கு இவள் யார் ?"

"ஓர் உண்மையான சிநேகிதி."

"அதுக்கு மேலே ?"

"தாமுவின் பார்ட்னர், நான் உருவாக வேண்டும் என்று அந்தரங்க விசுவாசத்தோடு விரும்புகிறவள். தாமு இவளைத் திருமணம் செய்து கொள்ள இருந்தான்" அவன் பெருமூச்செறிந்தான்.

"நீ அப்ஸெட் ஆயிட்டியா ? தாமு'டெத்'தை சொல்றேன்"

"இட் ஈஸ் பாஸ்ட்"

"அதுக்கு மேலே ஒண்ணுமில்லியா ?"

"வாட் எல்ஸ் ?"

"நீ... எழுத்தாளனா நீ ? ஆர் யூ...எ... ரைட்டர் ?" நம்பாதது மாதிரிக் கேட்டான் வெற்றி.

"ரைட்டர்... ஃபைட்டர் எல்லாம் அப்புறம். மனுஷன்! அதானே 'பேஸிக்'. தாமு எனக்கு அதைத்தான் உணர்த்தினார். அவர் போனதும் உலகம் இருண்டது"

அவனைப் பேச விடுவது போல் மார்பின் மீது கை கட்டிக் கொண்டு வெற்றிவேல் சிவாவைக் கவனித்தான்.

"அது ஒரு தவறு. போராடு: உன்னைக் கண்டுபிடி... இது தான் தாமு எனக்குத் தந்த செய்தி. மனிதன் மறைந்ததும் நான் உணர்ச்சி வசமானேன். அதிலே செய்தி மறந்து விட்டது."



"பலவீனம்... அது தானே மனிதன் !"

"இல்லை. விழுந்து விழுந்து எழுகிற பலம். அதுதான் மனிதன்."

"மறுபடியும் ஒரு கருத்து யுத்தமா ?"

"இல்லேடா வெற்றி... எப்பவும் நான் அஃபென்ஸ் ஆடறதில்லே. டிஃபென்ஸ் தான். உன் கருத்து தாக்கறப்போ நான் என்னைக் காப்பாத்திக்க வேண்டாமா ?"

"மேலே சொல்லு" என்று சொல்லிவிட்டு ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான் வெற்றிவேல்.

"செய்தி மறந்துதான் போச்சு. மறைஞ்சு போயிடலே. செய்திகள் மறக்கறதில்லை. மனுஷன் தான் மறைஞ்சு போயிடறான். உயிரோட இருக்கறவன் சொந்த சுக துக்கங்களே சுயநலத்தினாலே அதைத் தள்ளிப் போடறான். அவ்வளவுதான். இன்னிக்குக் காலையிலே மறந்தது என் நினைவுக்கு வந்தது... போகட்டும் ! எப்படி இருக்கு உன் விவசாயம் ?"

"நீ வந்து பார்"

"சொல்லமாட்டியா ?"

"சொல்வதற்கு அது செய்தி அல்ல"

"ஆல்ரைட்... நானே வர்றேன்"

"உங்க அம்மாவைப் பார்த்தேன் !"

"எப்ப ?"

"நேத்து ரிஷிகேஷ் போறேன். வாங்கண்ணு கூப்பிட்டேன்"

"என்ன சொன்னாங்க"

"சிரிச்சாங்க."

"அப்புறம்?"

"சும்ணு இருந்தாங்க. கொஞ்ச நேரம் கழிச்சு சிவாவைக் கூப்பிட்டுகிட்டுப் போப்பாண்ணாங்க!"

"அப்பிடியா சொன்னாங்க?"

"ஆமாம். நீ தாமு மரணத்தைப்பத்தி எழுதியிருந்த கடிதத்தைக் காட்டினாங்க. ரொம்ப மனசு கெட்டுப் போயிருக் காம்பா.. அவசியம் கூட்டிக்கிட்டுப் போண்ணு சொன் னாங்க சொன்னது மட்டுமில்லே" என்று ஒரு கவரை எடுத்து அவனிடம் நீட்டினான் வெற்றி.

"இதிலே என்ன இருக்கு?"

"பத்தா ஆயிரம் ரூபா இருக்கு நீ அனுப்பிய காசையெல்லாம் அவங்க செலவழிக்காம பாங்க்லே போட்டு வச்சிருக்காங்க. அதிலேருந்து பத்தாயிரம் ரூபா எடுத்து ஒங்கிட்டே வழிச் செலவுக்குக் கொடுக்கச் சொன்னாங்க."

கப்பென்று மார்பை எதுவோ பிடித்தது. மதகு வெள்ளம் திறந்த மாதிரி குபுகுபுவென்று மனசு நிறைந்தது.

"எங்கிட்டே எதுக்குக் கொடுக்கறே?"

"அம்மா கொடுக்கச் சொன்னாங்க."

சிவா கவரைத் தொட்டு விட்டு மீண்டும் விரல்களை எடுத்துக் கொண்டான்.

"சரி.. நான் வாங்கிட்டேன்! வச்சுக்கோ. வழியிலே நீயே செலவு பண்ணு."

"நீ என்னை அவமானம் பண்றே!" உனக்கு இசை வில்லாத ஒரு பிரயாணத்துக்கு உன்னை நான் கூப்பிட றேன். அதுக்கு நீ செலவு பண்ணணும்னு எதிர் பார்த்து வந்திருக்கேண்ணு நெனச்சியா?"



"நல்லது.. நீயே செலவு பண்ணு. அந்தப் பணத்தை நீயே வச்சிரு. கேக்கறப்ப—நான் எப்பவாவது கேட்டா கொடு!"

"ஒன்னை மாதிரி பிடிவாதம் பிடிச்ச முசுடுகிட்டே எவண்டா ஆர்க்யூ பண்ணுவான்" என்று மெய்யாகவே கோபித்துக் கொண்டான் வெற்றிவேல்.

"வெற்றிவேல்" என்று பளிச்சென்று ஒரு தெளி வோடு சிவா ஆரம்பித்தான்.

"சொல்லு"

"நான் ஆர்க்யூ பண்ணுவேன். ஆனா எப்பவும் நீ தான் ஜெயிக்கணும்னு விட்டுடுவேன்."

வெற்றிவேல் உணர்ச்சி வசப்பட்டான். அதைக் காட்டிக் கொள்ளாமல் கண்களைக் கவிழ்த்துக் கொண்டான்.

"சரி விடு. கெளம்புவோமா?" என்று எழுந்தான் வெற்றிவேல். அவர்கள் கிளம்பிய போது வானம் மெல்ல மூடிற்று.

திரும்பி வரும் போது மழை தொடங்கிற்று. அது இரண்டு நாள் நீடித்தது.

இரண்டு நாளாகப் பொழிந்து தீர்ந்தும் இன்றும் வானத்தை விட்டுப் பிரிய மனமின்றி மேகங்கள் மூடியிருந்தன.

தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் ட்ரெய்ன் கார்டின் சிக்னலுக் காகக் காத்துக் கொண்டிருந்தது.

"சூரியன் இல்லாமே நல்லாவே இல்லே..." என்று சொன்னாள் பிரீதா.

ஜன்னலோரத்து ஸீட்டை அவளுக்கு விட்டுக் கொடுத்து விட்டு எதிர் ஸீட்டில் வெற்றிவேலுக்குப்

பக்கத்தில் உட்கார்ந்திருந்த சிவாவுக்கு அந்த வெளியீடு மிகவும் அழகாகப் பட்டது.

"நாம சூரியனோட ரொம்ப பழக்கப்பட்டதாலே! விமிஸ் தி சன்" என்று வெற்றிவேல் குறுக்கிட்டான்.

"இட் ஈஸ் எ வெரிகுட் எக்ஸ்பிரஷன்! ஆனா எனக்கு வானம் மூடிக்கிட்டு மழை பெய்துகிட்டிருக்கப்ப அந்த ஊரை விட்டுட்டு கிளம்பறது ரொம்பப் பிடிக்கும்."

எதற்காகப் போகிறோம் என்பதை விட அந்த ரயில் பிரயாணத்தையே அவர்கள் மூவரும் விரும்பினர். அந்த மகிழ்ச்சியில் வெளியூர்ப் பயணங்களை ரசிக்கும் குழந்தைப் பருவத்தின் தூய்மையான ஆனந்தம் இருந்தது.

"சார்..!" என்று யாரோ வெளியே கூப்பிடும் ஓசை கேட்டது.

சிவா திரும்பிப் பார்ப்பதற்குள் பிரீதா முந்திக் கொண்டாள்.

"ஹலோ செங்குட்டுவன்... ஒனக்கு எப்படித் தெரியும்?"

சீனியர் மெக்கானிக் செங்குட்டுவன் ஜன்னல் அருகே வந்தான். அவன் முகம் மலர்ந்திருந்தது.

"நான் சொல்லியிருந்தேன்!" என்று சட்டென்று எழுந்தான் சிவா.

"நல்லா போய்ட்டு வாங்கம்மா!" என்று வாயெல்லாம் பல்லாக அவன் வழியனுப்புதல் சொன்னான்.

அப்புறம் கையிலிருந்து ஒரு ப்ளாஸ்டிக் பையை எடுத்து அவளிடம் நீட்டினான்.

"இதிலே என்ன இருக்கு?"

"ஒண்ணுமில்லேம்மா, கொஞ்சம் எலுமிச்சை சாதம் கொஞ்சம் புளி சாதம்."



வெற்றிவேலுக்கு சிரிப்பு வந்தது.

"ப்ளீஸ் டோன்ட் லாஃப்" என்று அவன் கையிலிருந்த பையை வாங்கிக் கொண்டே வெற்றிவேலுக்கு மட்டும் கேட்கும்படியாகச் சொன்னாள்.

"இதெல்லாம் எதுக்கு செங்குட்டுவன்?"

"வாங்கிக்கங்கம்மா. வழியிலே ஒருவேளை சாப்பிடுங்க. ஐயா வந்திருந்தா பிரியாணி வாங்கி வந்திருப்பேன்."

செங்குட்டுவன் தொண்டை தழுதழுத்தது.

"ஹூ ஈஸ் ஹி?" வெற்றிவேல்.

"தாமுவினுடைய ஓர்க்ஷாப்லே சீனியர் மெக்கானிக்"

தான் சிரித்ததற்காக நாக்கைக் கடித்துக் கொண்டான் வெற்றிவேல். தாமுவின் அன்பு எங்கெல்லாம் வேர் பாய்ந்திருந்தது என்பது அவனுக்கு மிகவும் உறைத்தது.

வெற்றிவேல் திரும்பி பிரீதாவைப் பார்த்தான். தளதளவென்று புஷ்பித்துக் குலுங்கியது போன்ற அவள் மகிழ்ச்சி சட்டென்று குறைந்து முகம் வாடிற்று.

"சந்தோசமா போயிட்டு வாங்கம்மா" என்று அந்த நேரத்தில் தாமுவை நினைவு படுத்திய பிழையை உணர்ந்து செங்குட்டுவன் சிரித்தான்.

"ஒன் மினிட்" என்று சிவா வெளியே போனான்.

"எங்கே போறே?"

"செங்குட்டுவன் கட்டுசாதம் கொண்டு வந்திருக்காரு. நம்மகிட்டே வாட்டர் ஜக் இல்லே. இங்கே ஒண்ணு வாங்கிட்டு வந்துடறேன்."

"டைம் இருக்கா ?"

"இருபது நிமிஷம் இருக்கு" சிவா செங்குட்டுவன் தோள் மீது கை வைத்துக் கொண்டே பிளாட்பாரத்தில் நடந்தான்.

சிவா அதற்காக மட்டும் போகவில்லை என்று வெற்றிவேலுக்குப் பட்டது.

வேறு ஏதோ ஓர் அந்தரங்கம் பேசவே போகிறான் என்று நினைத்தான்.

## 24

சாந்தினி சௌக்கும், செங்கோட்டையும், குதுப் மினாரும், பிர்லா மந்திரும், குருத்வாரா ஸிஸ்கன்ஜும், ஜும்மா மசூதியும், ராஜகட்டமும், சாந்தி கட்டமும், ஜந்தர் மந்தரும், கனாட்பிளேஸும் பிரீதாவுக்கு உணர்ச்சிகளின் கலைடாஸ்கோப்பில் புதுப்புதுச் சித்திரங்களைத் தீட்டிக் காட்டின. அவள் சிரிப்பதும் வியப்பதும் ரசிப்பதும் சிவாவை விட வெற்றிவேலுக்கு திருப்தியாக இருந்தது. அவள் வந்தது சரி !

ஆக்ரா, தாஜ்மஹால், பதேபூர் சிக்ரி, மதுரா.

கட்டிடங்கள்... காட்சிகள்... சரித்திரத்தின் மிஞ்சிய எலும்புக்கூடு போன்ற சாட்சிகள்.

ஓயாமல் ஒழியாமல் இறந்த காலத்தின் பாதுகாக்கப் பட்ட எலும்புக் கூடுகளைத் தரிசிக்கப் பறந்துவரும் டூரிஸ்டு பஸ்கள். பஸ்ஸில் ஏறி இறங்கி ஓடி ஓடிச் சுற்றிய அலுப்புகள்.

ஜல்தி ஆவோ... ஜல்தி ஆவோ.



அதோ அடுத்த ஊருக்குப் பறக்க ஒரு கூட்டம் அங்க லாய்த்துக் கொண்டு நகர்கிறது.

கடும் பனி வீசிய, கொடிய குளிர் நடுக்கிய ஓர் இரவுப் பயணத்தின் பின் தொங்குகின்ற லக்ஷ்மண் ஜூலா பாலத்தை மிதிக்கும் போது சிவா நினைத்தான்.

இது என்ன புதிர் ?

கீழே கங்கை ஓடிக் கொண்டிருந்தது. இமய மலையின் சடைபோல் தொங்கும் பனி விழுதுகளிலிருந்து உருகி இறங்கி உயிர் வளர்க்கும் பெருந்தவத்தில் உக்ர வேகத்தோடு வரும் கங்கை.

அவர்கள் மூவரும் அசைந்து அசைந்து நடக்க அந்த ஊஞ்சல் பாலம் மெல்ல மெல்லத் தவழ்ந்து உயர்ந்தது.

டெல்லியின் டூரிஸ்டு அவசரமும் இலையில் பரி மாறப்பட்ட எல்லாப் பதார்த்தங்களையும் ஒன்று விடாமல் ருசி பார்த்து விடவேண்டும் என்ற ஆவலாதியும் மிக்க கூட்டத்தைப் பார்த்து சிவா மீண்டும் நினைத்தான்.

இது என்ன புதிர் ?

கீழே கங்கை ஓடிக்கொண்டிருந்தது.

நுரை கொப்பளித்துக் கொண்டு பெரும் சீற்றத் துடன் ஓடும் கங்கை. கனலில் தெரியும் காளி போன்று புனலில் தெரியும் சக்தி

எங்கே ஓடுகிறாய் கங்கையே ?

'அன்னையே என்று கேள்.' அவனுக்குள்ளே யாரோ திருத்தினார்கள்.

'எங்கே ஓடுகிறாய் அன்னையே ?'

கங்கை அவனுடன் பேசினாள்.

'வெகுதூரம் மகனே... வெகுதூரம்.'

'மேடுகளைப் பிளந்து பள்ளத்தில் தாவி நீர் வீழ்ச்சிகளில் குதித்துக் கூத்தாடி கோடானு கோடி ஜீவன்களின் தலைவிதியைச் சுமந்து கொண்டு அவர்களை நீராட்டி அவர்கள் படகுகளைக் கரை சேர்த்து லட்சோப லட்சம் கதிர்மணிகளில் என் கருணையின் தீபங்களை ஏற்றிக் கொண்டு, என் உதரத்தில் கருக்கொண்ட உயிர்களுக்கு உருவளித்து, கற்பூரத்தோடு எரியும் பிணங்களைக் கரைசேர்த்து வெகுதூரம் மகனே... வெகுதூரம்.'

'ஏன் ஓடுகிறாய் அன்னையே?'

'விடுதலையை நாடி... அலை கடலின் ஆதரவை நாடி... பிறந்த இடத்திற்கு திரும்பிப் போகிறேன் மகனே.'

'தோன்றியும் மறைந்தும் உதித்தும் கலந்தும் பின்பு ஒரே சுழற்சியின் மறு சுற்றில் மீண்டும் மீண்டும் உன் பயணம் நடந்து கொண்டேயிருக்கிறது. இதில் விடுதலை எங்கே அன்னையே?'

'மகனே... விடுதலை என்பது அனுபவம். ஓய்வு ஒரு பந்தம். நிர்ச்சலனம் விடுதலையல்ல. நிஷ்டை ஒரு விடுதலையல்ல. இயக்கம்தான் விடுதலை.'

'நாங்கள் நிராகார நிர்வாணத்தை விடுதலை என்கிறோம். அசைவின்மையை – யாவும் அவிந்த பரிபூர்ண சாந்தியை விடுதலை என்கிறோம்.'

கங்கை கலகலவென்று சிரித்தாள்.

'மகனே... நீ சொல்லும் நிர்வாணத்திலிருந்தே நான் பிறந்தேன். பரிபூரண சாந்தியின் பனிச் சிகரங்களிலிருந்தே நான் உதயமானேன்.

நீ சொல்லும் விடுதலையில் நான் அழிந்தது, இருந்தது, அழிந்தும் அழிந்த நினைவுகளுடன் நான் இருந்தேன்.



என் நானின் கனம் தாளாது போய் இதோ என்னை கோடி கோடி ஜீவன்களுடன் பகிர்ந்து கொள்ளப் புறப்பட்டிருக்கிறேன்.

செல்வேன். மீண்டும் வருவேன். பகிர்ந்து கொள். உனக்கென்று உன்னை எடுத்துக் கொள்ளாதே. உதறிவிடு. எல்லோரோடும் கரைத்துக் கலந்து உன்னை உதிர்த்துத் துளிர்த்து விடு. மீண்டும் மீண்டும் செய். அதுதான் விடுதலை.

கங்கையின் சிரிப்பொலி, பனிக் குகைகளிலிருந்து மீண்டு வந்த அவளது எதிரொலி, மனோ மயமாகிய அவளது ஆனந்த தாண்டவத்தின் சலங்கை ஒலி, விதிக்கிசைய ஓடியும் விதியை வென்று பரிகசிக்கும் அவளது நகைப்பின் வெற்றி ஒலி...

எல்லாவற்றையும் தனித்தனியே சிவா கேட்டான்.

அவள் கொண்டு வந்த நூறு கோடி வெள்ளங்களின் மௌனக் கதையைக் கேட்டான்.

நாளழிந்து மாதமழிந்து வருடமழிந்தபோதும் ஓய்வு ஒழிவற்று தானழியாது ஓடுகின்ற அவள் உச்சரித்த மந்திரம் அவனுள் நிரம்பியது.

**கா**லி கம்பள்வாலா மகராஜின் தியான ஆச்ரமத்தில் வரிசை வரிசையாக நின்ற குடில்களைக் கடந்தனர். செஞ்சாந்து பூசிய சிமெண்ட் பெஞ்சுகள் அணிவகுத்து நிற்கும் சாலையினூடே கவிந்த மர நிழல்களில் சிதறிய சூரிய ஒளியில் நடக்கும்போது மூவருக்குமே வெறும் டூரிஸம் என்ற கிளர்ச்சி அழிந்தது.

காடும் கங்கையும் நிசப்தமும்.

அவர்களுக்கு சத்தியத்தின் பிராகார வெளியில் நடப்பது போன்று ஓர் உணர்வு வந்தது.

எங்குமே நடக்கும் வியாபாரம் அங்கும் நடந்தது. மணி மாலை விற்றனர்... வளையல் விற்றனர்... தங்குவதற்கு இருப்பிடம் விற்றனர்.

விற்று விற்று வயிறு பிழைக்கும் அந்த உபாதைகளை நீங்கி சத்தியம் அந்த வான வெளியிலும் வீசிய காற்றிலும் பரவி நின்றது.

ரொட்டிக்கு மாவு பிசைந்தோர், மூட்டைகளிலிருந்து பழைய ரொட்டியைப் பகிர்வோர்.

"யெ ஹை உன்கா. ஆஷ்ரம்!" வழிகாட்டி வந்தவர் ஒரு கட்டிடத்தைக் காட்டினார்.

"போலோ குரு மகராஜ் கீ ஜே"

"ஹரி போலோ பாயி ஹரி போலோ"

"ஹர ஹர ஷங்கர்... ஜெய ஜெய ஷங்கர்"

பாபா ஓம்கார்நாத்தின் இருப்பிடத்திலிருந்து ஓசைகள் வந்தன.

தோலுரித்த கோழிகள் போன்ற ஐரோப்பிய வெண்மை.

உழுத செம்மண் நிலம் போன்று, கரிசல் போன்று உவர் நிலம் போன்று, எத்தனை மனித நிறங்கள் சூழ மார்பை மறைக்கும் வெண்தாடியுடன் அந்த உருவம் உட்கார்ந்திருக்கிறது!

பாபா ஓம்கார்நாத் அவர்களைப் பார்த்ததும் பிரியமாகச் சிரித்தார்.

கனிந்த பழம் ஒன்று தன் கனிவின் இனிமையை எல்லோருக்குமாகப் பகிர்ந்தது போன்று ஓர் ஆனந்தம் அந்தச் சிரிப்பில் மிளிர்ந்தது.

அது வரவேற்றது. வாழ்த்தியது.



"பாபா, நான் மீண்டும் வந்திருக்கிறேன்."

"வா மகனே"

"சிவாவையும் பிரீதாவையும் அழைத்து வந்திருக் கிறேன்."

"வாருங்கள் குழந்தைகளே."

பிரீதாவுக்குள் எந்த மனித முகங்களைச் சந்தித்தும் ஏற்படாத அதிசயமானதொரு நெகிழ்ச்சி அவர் முகத்தைப் பார்க்கும் போது உண்டாயிற்று.

அவர்கள் வந்து உட்கார்ந்ததும் யாரோ ஜால்ராக் கட்டையும் மிருதங்கமுமாக ஹரிபஜன் செய்தார்கள். வலது கோடியில் இரண்டு ஐரோப்பியர்கள் (ஒரு வேளை அமெரிக்கர்களோ) அதற்கு முற்றிலும் தொடர்பற்றவர்கள் போன்று தியானத்தில் அமர்ந்திருந்தனர்.

நாலைந்து பேர் ஒன்று கூடி சிறு குழுவாகப் பேசிக் கொண்டிருந்தனர். அறை மூலையில் யாரோ இருவர் தலைக்கு ஒரே ஸூட்கேஸை வைத்துக் கொண்டு எதிரும் புதிருமாகப் படுத்திருந்தனர்.

அங்கிருந்த எவருக்கும் குருஜி என்று ஒருவர் உட்கார்ந்திருக்கிற மாதிரியே தோன்றியதாகத் தெரிய வில்லை. அத்தகைய இடங்கள் சிலவற்றை பிரீதா பார்த்திருக்கிறாள்.

அங்கே ஒரு மரியாதையும் சடங்கு மாதிரி ஓர் ஒழுங்குக் கட்டுப்பாடும் தெரியும்.

இங்கோ இயல்பாக ஏதோ ஒரு கல்யாண நிகழ்ச்சிக்கு வந்தவர்கள் போன்று கூடியிருந்தோர் சுதந்திரமாக இருந்தனர்.

எனினும் பாபா ஓம்கார்நாத் தான் இந்த முரண்பாடு போன்று தெரியும் சுதந்திரத்தின் மையமாக இருக்கிறார் என்று புரிந்தது.

"இவர்கள் உங்கள் ஆசிர்வாதத்தை வேண்டி வந்திருக்கிறார்கள் பாபா !" வெற்றிவேல் வந்த காரியத்தை விளக்குவது போல் அறிமுகம் செய்தான்.

"வழியனுப்பத்தானே மகனே !"

அந்த குழுவும், முற்றிலும் அன்னியர்களுக்கு மத்தியில் அவர்களுக்கு உரியவர் போன்று தன் தந்தை உட்கார்ந்திருப்பதும் சிவாவின் மனசில் ஓர் எதிர்ப்புணவைக் கிளப்பின.

தந்தையருக்கும் தனயருக்கும் மத்தியில் இருந்து வரும் ஓர் அடிப்படை எதிர்ப்புணர்வு அது.

ஒன்றிலிருந்து ஒன்று மாறுபட்டு நிற்க வேண்டும் என்ற வாழ்வியல் நெறியின் எதிர்ப்புணர்வு.

உன்னிலிருந்து நான் வந்தேன். ஆனால் நான் வெறும் நீயல்ல.

நீ கண்டது உனக்கு. நான் காண்பது எனக்கு. என்னை நான் உருவாக்கிக் கொண்டிருக்கிறேன் என்ற உயிரினத்தின் சுயேச்சையைக் குறிக்கும் போர்க் குரல் அது.

எல்லோரிடையிலும் அது எழுகிறது.

உயிர்த்துவத்தின் இடையறா ஓட்டம் தொடர அதுதான் அத்தியாவசியமாகிறது.

சிலர் அந்த எதிர்ப்புணர்வையை வென்று விடுகிறார்கள். சிலர் சமரசம் செய்து கொள்கிறார்கள். சிலர் இறுதி வரை அதனுடன் போராடிக் கொண்டிக்கிறார்கள்.

சிவா போராடிக் கொண்டிருந்தான்.



இதில் வேறொன்றும் கலந்திருந்தது. பொறுப்பை உதறிவிட்டு விடைபெற்றுக் கொண்டவர். இவர் விடுதலை பெற்றவர் என்று வெற்றிவேலால் வர்ணிக்கப்படுகிற இவர் என் தந்தை.

இவர் எதற்கு கைலாசம் போக வேண்டும். கைலாச சிகரத்தில் இவருக்கு என்ன காத்திருக்கிறது?

விடுதலையடைந்தவனுக்கு கைலாசமானால் என்ன கன்யாகுமரி ஆனால் என்ன? எல்லாம் சமம் தானே !

இவர் என்ன? விடுதலையடைந்தவரா? சாமியாரா? வேஷமா? ஒரு தொழில் முறை குரு மஹராஜா? யார் இவர்?

வெற்றிவேலுக்கு இவர் மீது ஏற்பட்டுள்ள விளக்க முடியாத கவர்ச்சியின் அடிநாதம் என்ன?

இந்தக் கேள்விகள் நீர்ப் பரப்பில் ஒரு பழம் விழுந்ததும் ஓடி வந்து கவ்வுகின்ற மீன் கூட்டம் போன்று அவனுள் எழுந்தன.

ஞானமும் உண்மை தேடுதலும் ஒற்றையடிப் பாதைகள். ஒருவன் முதலில் நடக்கிறான். பலர் பின்பற்றுகிறார்கள்.

பின்பற்ற விரும்பாதவன் முதல் பாதை தேய்ந்து சாலையாகி, சத்தியம் தேய்ந்து சாமான்யமானதால் தன் சொந்தப் பாதையை தானே சமைக்கிறான்.

அது அவன் விதி, அவன் வழி.

சிவா பாதை தேடியவன். பின்பற்றுகிறவன் அல்ல. சமைப்பவன். இன்னொரு பாதையில் முரண்பாடுகள் காண்பவன்.

எனவே பாபா ஓம்கார்நாத்தின் பாதை மீது அவனுக்கு சந்தேகம் வந்தது.

"நான் வழியனுப்ப வரவில்லை" என்று துணிந்து சொன்னான்.

சுறுக்கென்று அவன் இயல்பு மாறியதை மற்ற இருவரும் கவனித்தனர்.

"நல்லது" என்றார் பாபா.

அவர் முகம் பழையபடியே சாந்தமாயிருந்தது. அவர் கண்கள் ஆழ்ந்த கருணையோடு அவனது எதிர்ப் புணர்வையே தரிசிப்பவர் போன்று அவனைப் பார்த்தார்.

அவர்கள் மூவரும் தங்கள் பைகளையும் சூட்கேஸை யும் இறக்கி வைத்துவிட்டு சாவகாசமாக உட்காந்தனர்.

சற்று நேரத்தில் இரண்டு அன்பர்கள் அவர்களுக்கு சுடச்சுட மூன்று கோப்பைகளில் பால் கொண்டு வந்து கொடுத்தார்கள்.

"வழியனுப்புதல் ஒரு சம்பிரதாயம் தானே! மகனே, இவர்கள் ரிஷிகேஷிற்கு வருவது இது முதல்முறை இல்லையா?"

"ஆமாம் பாபா.." என்று பதிலளித்தான் வெற்றிவேல்.

"நல்லதே நடக்கும்" என்று வாழ்த்துவது போல் சொன்னார் பாபா.

வெற்றிவேல் தன் பையை அவிழ்த்து ஒரு எவர்சில்வர் தட்டை எடுத்தான். வழியில் வாங்கிய பூக்கள் செலபோன் உறையில் இன்னும் வாடாமல் காத்திருந்தன.

கொண்டு வந்திருந்த பழம், புஷ்பம், கற்கண்டு எல்லாவற்றையும் ஒரு சீடரிடம் கொடுத்தான். அவர்கள் வந்தது ஏன் என்று புரிந்து கொண்டவர் மாதிரி பாபா சிரித்தார், வெற்றிவேல் கேட்டான்.

"எப்போது புறப்படுகிறீர்கள்?"



"நாளை மறுநாள் உதயத்தின் போது"

"எப்போது திரும்புவீர்கள்?"

பாபா பற்கள் ஒளிவீசச் சிரித்தார்.

அவர்கள் பதிலுக்குக் காத்திருந்தனர்.

பிரியமாக ஒவ்வொரு மனசிலும் தேன் துளிர்ப்பது போன்று அவர்களை அவர் பார்த்தார்.

"ஆனந்தமாய் இருங்கள்" என்று இரு கைகளையும் நீட்டி அவர்களை வாழ்த்திவிட்டு மீண்டும் கை கூப்பிக் கும்பிட்டார்.

"எப்போது திரும்புவீர்கள் பாபா?"

மீண்டும் பாபா சிரித்தார்.

அந்த சிரிப்பில் ஒரு விடைபெறல் தொனித்தது.

"எதற்கு கைலாசம் போகிறீர்கள்?" சிவா குறுக் கிட்டான்.

"பிரயாணத்தில் அது ஒரு போக்கிடம்"

"அது ஏன் கைலாசமாக இருக்க வேண்டும்?" சிவா குதர்க்கமாகக் கேட்கிறான் என்று பிரீதாவுக்குப் பட்டது.

"ஷ்ஷ்... சிவா" என்று அவனை அவள் தடுக்க முயற்சித்தாள்.

"லீவ் ஹிம்" என்று வெற்றிவேல் அவளுக்குச் சொன்னான்.

சுற்றிருந்தவர்களை கைகளால் வரிசையாகச் சுட்டிக் காட்டி "இவர்கள் தீர்மானம்" என்றார்.

"நீங்கள் ஏன் அதை மறுக்கக் கூடாது?"

"மறுப்பில் பந்தமுண்டு. இசைவின் பந்தம். எதிர்ப் பின் பந்தம்"

"உயிர் உள்ளவரை பந்தமும் உண்டு."

"உண்மை... உயிர் உள்ளவரை பந்தமும் பந்தத்திலிருந்து அகலும் சுதந்திரமும் உண்டு."

திடீரென்று அங்கு நிலவிய எல்லா சந்தடிகளும் ஓய்ந்தன.

அவர் பேசுவதைக் கேட்கும் உண்மையான ஆர்வம் ஒருங்கிணைந்த வடிவமாய் அங்கு சூழ்ந்தது.

"எது சுதந்திரம்?"

"இயல்பு"

"இயல்பு தீமையானால்?"

"நன்மை தீமை என்பவை மதிப்பீடுகள். அவை மாறும்."

"இயல்பும் மாறுமா?"

"தன் இயல்பு எதுவென உணரும் ஒளி வரும் வரை எதுவும் மாறும்."

"அப்போது மாறாத இயல்புதான் சுதந்திரமா?" சிவா மடக்கினான்.

"மாறாத என்பது அடைமொழி. இயல்பின் மீது சுமத்தும் பளு. இயல்பு என்பது லகு. சுலபம்... சாந்தம்."

அவன் மேலும் மேலும் கேள்விகளால் பாபாவை வேட்டையாடுவது போன்று பிரீதாவுக்குத் தோன்றியது. அவள் அதைத் தவிர்க்க விரும்பினாள்.

"பாபாஜி... எனக்கு ஒரு செய்தி கொடுங்கள்."

சிவா அவள் குறுக்கீட்டத்தைக் கண்டு ஆச்சரியமுற்று அவளைப் பார்த்து விட்டுப் பின்பு பாபாவை நோக்கினான்.



பாபா அவர்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்தார். அவரது குளிர்ந்த பார்வை பிரீதாவின் மீது சென்று சிறிது நேரம் தங்கிற்று.

"சாந்தி வரும் குழந்தாய்."

அந்த சொற்களில் இருந்த ஆதுரம் தொட்ட குளுமையில் அவள் உடைந்து போனாள். விம்மி விம்மி விம்மி விம்மி பிரீதா அழத் தொடங்கினாள்.

அந்தச் சூழ்நிலையில் அவளது அழுகை ஒலி உலகின் ஒட்டு மொத்த துயர் போன்று கூர்மையுற்று ஒன்று குவிந்து எல்லோர் மனசையும் தாக்கிற்று.

அவள் எந்த இழப்பிற்கோ, எந்த வேதனைக்கோ அழாமல் தன் துயரப் பொதி முழுவதையும் அவிழ்த்து அதன் தாள முடியாப் பாரத்திலிருந்து அகன்று ஒதுங்கி விடுவது போன்று ஐந்து நிமிஷத்திற்கும் மேலாக வாய் விட்டு அழுதாள்.

எல்லோரும் சித்திரத்தில் எழுதிய உருவங்கள் போன்று அமர்ந்திருந்தனர்.

அவளிடம் இவ்வளவு துயரம் பொதிந்திருக்க முடியுமா என்பதை சிவாவே முதன் முறையாக அப்போது தான் உணர்ந்தான், அவன் நெஞ்சு கரைந்தது.

"மனிதப் பிறவி இவ்வளவு பெரிய துயரைத் தாங்கியிருக்க வேண்டிய அளவு என்ன சபிக்கப்பட்டதடா தெய்வமே" என்று அவன் நெக்குருகினான்.

மாறாத புன்னகையுடன் கனிவுடன் ஆசிர்வதிப்பது போன்ற பிரியத்துடன் அவள் அழுது முடிப்பது நல்லது என்ற சித்தத்துடன் பாபா அவளைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"பாபா... எப்போது சாந்தி வரும்?"

தான் இரண்டு ஆண்களுடன் கூட வந்தோம் என்ற உணர்வோ, பல ஆண்களின் மத்தியில் அமர்ந்திருக்கிறோம் என்ற கூச்சமோ இல்லாமல் வெகு இயல்பாக விம்மிக் கொண்டே கேட்டாள்.

"வரும் குழந்தாய்... விரைவில் வரும்"

"வருமா பாபாஜி?"

"நிச்சயம் வரும்"

ஐந்து நிமிஷம் கழித்து அவள் குளித்து முழுகிய மாதிரி புத்துணர்ச்சியுடன் தலை நிமிர்ந்தாள்.

# 25

இரண்டு அறைகள் கொண்ட ஒரு காட்டேஜில் அவர்கள் இரவு தங்கினார்கள். கம்பளியும் கொசு வலையும் தலையணையும் அங்கே தரப்பட்டன. பிரீதா மட்டும் தனியாக ஓர் அறையில் படுத்துக் கொண்டாள்.

தூரத்தில் கங்கை ஓடும் ஒலி இடைவிடாது கேட்டது. இரவு வெகு நேரம் வரை உறக்கம் வராமல் கங்கையின் ஒலியைக் கேட்டுக் கொண்டே படுத்திருந்தான் சிவா. வெற்றிவேல் ஒரு நேரமாக விழித்துக் கொண்டான்.

"என்ன சிவா, தூக்கம் வரலியா?

"இல்லே."

"ஏன்?"

"யோசனைகள்..."

வெற்றிவேலுக்கும் தூக்கம் கலைந்தது. கட்டிலில் எழுந்து உட்கார்ந்தான்.



"என்ன யோசிக்கறே?"

"ஓசை காதிலே விழுதா?"

வெற்றிவேல் உற்றுக் கேட்டான்.

"கங்கை ஓடுகிறது!"

"ஆமாம்- அந்த ஒலி தான் யோசனையைக் கிளப்பி விட்டது."

"ம்ம்ம்"

"அந்த மஹா யாத்திரையின் ஒலியில் நெடிய தவம் ஒன்று தென்படறது இல்லியா வெற்றி!"

"எக்ஸாக்ட்லி"

"நன்மை.... தீமை... பாவ புண்ணியம்.... ஜனன மரணம்னு எல்லாத்தையும் வாரிச் சுமந்து கொண்டு அது ஓடறாப்பிலே எனக்குப் பட்டது."

"சொல்லு"

"இது தான் வாழ்க்கை வெற்றிவேல்! இடைவிடாது தன்னை எல்லோருக்கும் அர்ப்பணித்துக் கொண்டு ஓடும் ஓட்டம்"

"வாழ்க்கைப் பற்றி இது இன்னொரு கருதுகோள். அனதர் டெஃபனிஷன்"

"கைலாசத்துக்கு ஓடுவது வாழ்க்கையல்ல"

அவன் எதிர்ப்புணர்ச்சி நடு இரவில் கத்தி போல தன்னைத் தாக்கியதை உணர்ந்தான் வெற்றிவேல்.

"கைலாசத்துக்கு ஓடுவது அல்ல, கைலாசத்திலிருந்து ஓடி வருவது."

"ஒனக்கு ஏன் பாபா பேரிலே இப்படி ஒரு வெறுப்பு?"

"ஒனக்கு ஏன் பாபா பேரிலே இப்படி ஒரு வியப்பு?"

"சொல்றேன்" என்று மெத்தைக்கடியில் வைத்திருந்த சிகரெட்டையும் தீப்பெட்டியையும் எடுத்தான் வெற்றி வேல். சிகரெட்டைப் பற்ற வைத்து அவன் உறிஞ்சி இழுத் தான். கனிந்த முனை செம்மையாய்ச் சுடர் விட்டது.

"போன வருஷம் ரிஷிகேஷுக்கு வந்து தங்கினேன். அப்ப ஆச்ரமம் இங்கே இல்லே. கங்கையின் அக்கரையில் இருந்தது. அப்போ சீடர்கள் கூட்டம் இவ்வளவு இல்லே. வரும்,போகும். பெர்மனெண்டா யாரும் நிக்க மாட்டாங்க."

"நீ ஏன் ரிஷிகெஷ் வந்தே?"

"ஆஸ் யூஷுவல்.. ஒரு மாறுதலுக்குத்தான். இந்திய னான என்னை ஒரு அமெரிக்க நண்பன் இங்கே அழைச் சுட்டு வந்தான். அவனை நான் கல்கத்தா ஹார்பர்லே மீட் பண்ணேன். பத்து நாள் நானும் அவனும் ஒண்ணா சுத்தினோம். அவன் இங்கே கூட்டி வந்தான்"

"பாபா கிட்டேயா?"

"ஆமா. அவர் இங்கிலீஷும் ஹிந்தியும் பேசினார். பார்த்தவுடனே எனக்கு அங்க அடையாளங்களை வச்சு இன்னது என்று தோன்ற முடியாத உள்ளுணர்வில் இவர் தான் உன் தந்தை என்று தோணிற்று."

"விசாரிச்சியா?"

"ஆமாம்; ஒப்புகிட்டார். நீ கேட்டியே அதைவிட அதிகமான கேள்விகளை நான் கேட்டேன்!"

"எப்படி? என்ன கேட்டே?"

"பெண்டாட்டி புள்ளைய விட்டுட்டு அந்த பொறுப்புக்கு பயந்துகிட்டு ஞானம் தேடி வந்தீங்களே.. அவங்க என்ன ஆனாங்கண்ணு ஒங்களுக்குத் தெரியுமாண்ணு கேட்டேன்"



"அவர் என்ன பதில் சொன்னார்?"

"ஈசுவராண்ணார்... அந்த ஈசுவரன் ஒங்க பெண்டாட்டிகிட்டேயும் பிள்ளை கிட்டேயும் தென்படலியாண்ணேன். அவர் மறுபடியும் ஈசுவராண்ணார்"

"இது ஞானமா..கல்லுளி மங்கத்தனமா?"

"அதையும் நான் கேட்டேன்! அவர் சொன்ன விவரங்கள் மயிர்க் கூச்செறிகிறது, இப்ப நெனச்சாக் கூட"

சிவா நிமிர்ந்து உட்கார்ந்தான். வெற்றிவேலுக்குத் தன் தந்தையின் தாம்பத்தியத்தைப் பற்றி, தனக்குத் தெரிந்ததை விட அதிகமாய் ஏதோ தெரிந்திருக்கிறது என்ற சிலிர்ப்பு எழுந்தது.

"அவரது இளமைப் பருவத்திலிருந்தே பாபாவுக்குள் ஏதோ ஒரு நூதன அவஸ்தை இருந்து வந்திருக்கிறது. அவருக்குள் ஏதோ ஒரு குரல் இடைவிடாமல் உண்மையைத் தேடு... உண்மையைத் தேடுண்ணு கேட்டுகிட்டே இருந்திருக்கு. ரொம்ப வயசான காலத்திலே உன்னுடைய தாத்தாவுக்கும் பாட்டிக்கும் கொழந்தையா பொறந்திருக்கிறார். அவருக்கு அறிவு உதயமான காலத்தில் உன் தாத்தாவுக்கு அறுபது முடிஞ்சிருக்கு"

சிவாவுக்கு மார்பு நடுங்கிற்று. இவன் இன்னும் திடுக்கிடக் கூடியதாக எதையோ சொல்லப் போகிறான். அதைக் கேட்க வேண்டாம். அது இவனுக்கும் பாபாவுக்கும் அம்மாவுக்கும் மத்தியிலேயே புதைந்து போகட்டும் என்று நடுக்கம் எழுந்தது.

சீ.. உண்மைக்கு நான் ஏன் நடுங்க வேண்டும்?

எதுவாயிருந்தாலும் அந்த உண்மையை நான் சந்திப்பேன் என்று தன்னை திடப்படுத்திக் கொண்டான்.

"ஆறு குழந்தைகள் பிறந்து பிறந்து இறந்த பின்னால் ஏழாவது குழந்தையாக உன் தந்தை பிறந்திருக்கிறார். ஆறு இறந்த அத்தனை சோகத்தையும் நம்பிக்கையாக மாற்றி இவர் தலை மேல் சுமத்தியிருக்கிறார்கள். 'மகனே, அதுதான் பந்தத்தின் மீது சுமத்தப்பட்ட பந்தமாக என் தலைமேல் விழுந்ததுண்'ணு சொன்னார்"

வெற்றிவேல் சிகரெட் சாம்பலை உதறிவிட்டு என்றோ நடந்து முடிந்த ஒரு கதையில் தான் ஒரு பாத்திரமானது போல் தூரத்தில் பார்வையை ஓடவிட்டான்.

"உள்ளத்தை வண்டு குடைவது மாதிரி உண்மையைத் தேடு.. உதறி விடு.. உதறிவிடுண்ணு ஓர் உத்திரவு குடைகிற வேளையில் வயதான பெற்றோர்களின் நம்பிக்கையை மோசம் செய்யாது அவர் வாழ்ந்திருக்கிறார். அவர் திருமணம் செய்து கொள்ள முடியவே முடியாது என்று தீவிரமாக மறுத்த வேளையில் உங்க தாத்தா தூக்குக் கயிற்றை மாட்டிக் கொண்டிருக்கிறார். உறவினர்கள் எல்லாம் வந்து திட்டி அந்த திருமணம் நிர்ப்பந்தத் திருமணமா நடந்திருக்கு"

வெற்றிவேல் சிகரெட்டைக் கீழே போட்டு நசுக்கினான். ஃஸ்ஸ்ஸ்... என்று வாயிலிருந்த புகை முழுவதையும் ஊதி விட்டு சற்று அமைதியாயிருந்தான்.

சிவா அவனது ஒவ்வோர் அசைவிலும் மனம் பதித்து கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

"அவர் சாந்தி முகூர்த்தத்தன்று என்ன செய்தார் தெரியுமா?"

சிவா தலை கவிழ்ந்து உட்கார்ந்தான்.



"நேரா போய் நின்னுகிட்டிருந்த ஒங்க அம்மா கால்லே விழுந்திருக்கார். அவங்க பயந்து போய் அழுதிருக்காங்க. 'பயப்படாதே, எனக்கு நீ போக வஸ்துவில்லே. புண்ணியம் செய்யவந்த தெய்வம்'ணு சொல்லியிருக்கார். மூணு வருஷம் அவங்க புருஷன் மனைவியா இல்லாமே ஏதோ ஒரு குடும்பத்து உறுப்பினர் மாதிரி வாழ்ந்திருக்காங்க. வம்ச விருத்தியில்லேண்ணு மனசு ஒடஞ்சு அதை வற்புறுத்தப் பயப்பட்டு சிறுகச் சிறுக வருந்தி ஒங்க தாத்தா செத்திருக்கார். அதுக்கப்புறம் 'இந்தக் குடும்பம் வெளங்க மடிப்பிடிச்சை போடுடா'ண்ணு ஒங்க பாட்டி கேட்டிருக்காங்க. 'நீ பெரிய மகானாக்கூட இருக்கலாம். பட்டினத்தாருக்கு அம்மா மேலே இருந்த பாசம் கூடவா ஒனக்கு இல்லே'ண்ணு தன் மருமகள் எதிரிலேயே வெளிப்படையா கேட்டிருக்காங்க"

"போதும் வெற்றிவேல்..."

"கேள். இன்னும் கொஞ்சம் தான் இருக்கு. ஒரே ஒரு முறை தன் அம்மாவுக்காக பாபா தன் மனைவியோட வாழ்ந்திருந்கிறார். ஒருமுறை-அது எதற்குண்ணு ரெண்டு பேருக்கும் தெரியும். ரெண்டு பேருக்கும் அது சம்மதம். ரெண்டு பேரும் சேர்ந்து பண்ணிக்கிட்ட இச்சையில்லாத வம்ச விருத்திக்கான ஒப்பந்தம் மாதிரி அது நடந்திருக்கிறது. விளைவு...நீ"

சிவாவுக்கு மார்பு பீறிட்டு வெள்ளம் வெள்ளமாக ஒரு துக்கம் மூண்டது. அம்மாவுக்காக...அப்பாவுக்கு ஆறு குழந்தைகளை இழந்த தாத்தாவுக்காக...பாட்டிக்கா... தனக்காக...விதிக்காக...

ஆனால் அழுது யாருக்கு என்ன லாபம்!

தன் ஆண்மை குன்றிவிடுகின்ற தன்னிரக்கத்தைத் தானே அனுபவிக்கிற இழிவு தவிர—கழிந்து போன எந்த

சரித்திரத்தின் ஏடுகளை இந்தக் கண்ணீர் அழிக்கப் போகிறது?

"வெற்றிவேல், நாம வெளியே போய்ட்டு வருவோமா?" என்றான்.

"எங்கே?"

"எனக்கு நடக்கணும் போலிருக்கு"

"இந்த ராத்திரியிலேயா."

"ஆர் யூ டயர்ட்?"

"நோ..நாட் அட் ஆல். வா போவோம்."

அவர்கள் இருவரும் வெளிக் கதவைப் பூட்டிக் கொண்டு கையில் ஒரு டார்ச்சுடன் நடந்தனர்.

கங்கை ஓடும் ஒலியின் பின்னணியில், காலி கம்பள் வாலா மகராஜின் தோட்டத்து மரங்களில் உதிர்த்த இலைச் சருகுகளை அவர்களது காலடி மிதிக்கும் சத்தம் சரசரத்தது.

"மேலே சொல்லு வெற்றிவேல்."

தூரத்தில் ஒரு கணப்புச் சட்டியருகில் நாலுபேர் உட்கார்ந்து குளிர் காய்ந்தனர். நந்தி மாதிரி செருக்குடன் மதர்த்து வளர்ந்திருந்த ஒரு நேர்த்திக் காளை மெதுவாக அவர்களைக் கடந்து சென்றது.

"உன் பாட்டி இறந்து அவர்களுக்கு ஈமக்கடன் முடித்த வேளையில் பாபா உன் தாயாரிடம் துறவுக்கு உத்தரவு கேட்டிருக்கிறார். உன்னை வளர்த்துப் பராமரிக்க நாலு ஏக்கர் நிலமும் ஒரு பம்பு ஷெட்டும் வைத்துவிட்டுக் கேட்டிருக்கிறார். தன்னுடன் வாழாமல் வெறுமனே உடனிருந்து அவர் கேட்ட உத்தரவைத் தானும் ஒரு சுமையாக இராமல் உன் அம்மா பெருந்தன்மையோடு வழங்கியிருக்கிறார்."



கம்பளி போர்த்துக் கொண்டு யாரோ ஒரு சாது கஞ்சாக் குழலுடன் உட்கார்ந்திருந்ததை இருவரும் கவனித்தனர்.

"கௌன் ஹோ?" என்று அவர் விசாரித்தார்.

"யாத்ரிக்! நீந்த் நஹி ஆதா. கூம்தா ஹைஹன்" என்று வெற்றிவேல் பதிலளித்தான்.

"ஹோஷியார் கீஜியே. சோர் ஹைஹன்."

"என்ன சொல்கிறார்" என்று விசாரித்தான் சிவா.

"திருடர்கள் இருக்கிறார்கள். ஜாக்கிரதை" என்கிறார்.

"அவருக்கு நன்றி சொல்."

"தன்ய வாத் மஹராஜ்."

"ஜீதே ரஹோ பேடா.. ராம் ராம்."

"ராம்.. ராம்."

அவர்கள் மேலே நடந்தனர்.

"அந்த நாலு ஏக்கர் நிலமும் பம்ப்ஷெட்டும் வெங்களாபுரத்தில் இருந்திருக்கிறது."

"தெரியும்" என்று அதைப் பற்றிய விவரம் தெரிந்த தால், தன் உறவினர்களால் வஞ்சித்து ஏமாற்றப்பட்ட தாய் அதைப் பறிகொடுத்த கதையை மீண்டும் ஒரு முறை கேளாமல் தவிர்த்தான் சிவா.

"பாபா உண்மையைத் தேடி இந்தியா முழுதையும் நடந்தும் அலைந்தும் சாமியார்களிடமும் குருஜிக்களிடமும் திரிந்திருக்கிறார். அவர் கால் படாத புண்ய ஸ்தலம் எதுவும் இந்தியாவில் இல்லை. அவர் நீராடாத தீர்த்தம் எதுவும் இல்லை. ஆனால் உண்மை,

அவரை மாநிலம் மாநிலமாக அலைக்கழித்திருக்கிறது. இறுதியில் இங்கே புலப்பட்டிருக்கிறது."

சிவா பெருமூச்சு விட்டான்.

"ஏன் களைப்பா இருக்கா... திரும்பிடுவோமா ?" என்றான் வெற்றிவேல்.

"இல்லை. அவர் தேடிய உண்மையில் அவர் கண்டது என்ன ?"

"கண்டவர் விண்டிலர். அதைப் பற்றி அவர் சொல்ல வில்லை. அவர் செய்கிறது உபதேசமே இல்லை. தன் மனசிலிருந்து அபூர்வமான ஒரு சாந்தியை அவர் 'ட்ரான்ஸ் மிட்' செய்கிறார். கம்பியில்லாத மின் அலை மாதிரி அது நம்மைத் தீண்டுகிறது. ஹாவ்ன்ட்யூ எக்ஸ்பீரியன்ஸ்ட் இட் ?

"ஆம்... நானும் அதை அனுபவித்தேன் !"

"பல நேரங்களில் அவர் கண்களை மூடி அமர்ந்திருக் கிறார். அது தியானமோ என்று தோன்றுகிறது ! எதைத் தியானிக்கிறீர்கள் பாபா என்று ஒரு முறை நான் கேட்டேன். 'லோக க்ஷேமத்தை லோக சாந்தியை'ன்னு புன்முறுவலோடு பதில் சொன்னார்."

சிவா நின்றான்.

"உலக சேவை என்பது பேசுவதிலும் எழுதுவதிலும் ஓடியாடி உழைப்பதிலும் கூட்டம் கூட்டிப் போரிட்டு ஒன்றை அழித்து இன்னொன்றை உருவாக்குவதிலும் மட்டும் தான் இருக்கிறது என்று நீயும் நம்புகிறாயா சிவா ?"

"இல்லை" என்று மறுதளித்தான்.

மனசிற்குள் ஒரு குரல் எழுந்தது.



"அது ஆயிரம் வடிவம் கொண்டது. கருமானின் சுத்தியலும், தச்சனின் இழைப்புளியும், செருப்புத் தொழிலாளியின் ஊசியும், உழவனின் ஏர் முனையும் கூட அதில் ஈடுபட்டிருக்கின்றன."

"அது தான் கர்மா" என்று வெற்றிவேல் மேலே போனான்.

"அவை எல்லாமும் பிரதிபலன் எதிர் பார்க்கின்றன. அதனால் அவை கட்டுண்டிருக்கின்றன. வெற்றி தோல்வி யுடனும், உழைப்பு கூலியுடனும், புகழ் ஆசையுடனும் கட்டுண்டிருக்கின்றன."

வெற்றிவேலின் வாக்கு மணிநாதம் போன்று ஒலித்தது.

"பாபா, லோக க்ஷேமத்தை தியானிக்கிறார். எந்த பிரதிபலனையும் அவர் யாரிடமும் எதிர்பார்க்கவில்லை. மழை மாதிரி, கங்கை மாதிரி தன் இயல்பு என்ற கர்மாவில் அவர் ஈடுபட்டுத் தியானிக்கிறார். ஞாபகமிருக்கிறதா அந்த திருக்குறள் ?"

பளிச்சென்று மின்னலடித்தது போன்று நினைவிலிருந்து அந்தக் குறள் ஓடி வந்தது, சிவாவுக்கு.

வெற்றிவேலே அதை வாய் விட்டுச் சொன்னான். "தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லார் அவஞ் செய்வார் ஆசையுட் பட்டு ! எல்லாக் காலத்திலும் எந்த யுகத்திலும் இப்படி ஒரு பாபா இருப்பதுண்டு சிவா !"

லக்ஷமண் ஜூலா பாலம் வரை சென்று அவர்கள் நின்றனர்.

"பாலத்தைக் கடக்கலாமா ?" என்று வெற்றிவேல் கேட்டான்.

"வேண்டாம். திரும்பிடுவோம்"

இருவரும் வந்த வழியே திரும்பினர்.

"மிஸ்டிக்கலா அவர் எந்த உயரத்தைத் தொட்டிருக்கிறார். அவர் சித்து விளையாடுவாரா? அவரிடம் அற்புத சக்திகள் உண்டா-ஐ'ம் நாட் இண்ட்ரஸ்டட்.

அதில் எனக்கு ஆர்வமும் இல்லை. அக்கறையும் இல்லை. எந்த பிரதி பலனையும் எதிர்பாராமல், இந்த உலகத்திலிருந்து ஒரு சல்லியையோ ஒரு பழத்தையோ கூட எதிர்பாராமல் இந்த உலக க்ஷேமத்தையும் சாந்தியையும் தியானிக்கிற மனிதன்..." அவன் மெதுவாகச் சொல்லிக் கொண்டே மெல்ல நடந்தான்.

சிவா கேட்டுக் கொண்டே வந்தான்.

"தியானம் ஒரு செயல் அல்ல என்று நீ மறுக்கலாம். அதை செயல் என்று—பரிபூரணமான செயல் என்று நான் நம்புகிறேன். அவர்கள் கைலாசத்திற்கு ஏன் போகிறார்கள் தெரியுமா?"

"சொல்"

"உலக க்ஷேமத்திற்காக தியானிக்கவே போகிறார்கள். சொந்த முக்தியைத் தேடி அல்ல.

"உயிர் உள்ளவரை இறுதி மூச்சு இருக்கும் வரை அவர்கள் அப்படியே தியானித்து கொண்டிருப்பார்கள். அவர்கள் திரும்ப மாட்டார்கள். இதை அவர்கள் விளம்பரம் செய்யவில்லை.

"வாய்விட்டு எவரிடமும் தெரிவிக்கவில்லை. பாபாவின் போக்கிலிருந்து நான் புரிந்து கொண்டேன்."

அவர்கள் இருவரும் அப்புறம் ஒன்றும் பேசாமல் கங்கையின் ஒலியைக் கேட்டுக் கொண்டே நடந்தனர்.



தங்கள் காட்டேஜை அடைந்து பூட்டைத் திறந்து உள்ளே நுழைந்தனர்.

"சிவா, நீ ஏன் அவரைப் பார்க்க வேண்டும் என்று நான் விரும்பினேன் தெரியுமா?"

சிவா பேசாமல் உட்கார்ந்திருந்தான்.

"நாட் பிகாஸ் ஹி ஈஸ் யுவர் ஃபாதர். அவர் உன் தந்தை என்பதற்கும் மேலாக உன் கருத்துப்படி ஏதோ மகான் என்பதற்கும் மேலாக அப்ஸல்யூட்லி டிஃபரன்ட் பெர்ஸனாடிலி என்பதினாலேயே அவரை நீ பார்க்க வேண்டும் என்று விரும்பினேன்"

சிவாவின் மார்பு ஒருமுறை விம்மி உயர்ந்தது பின்பு தாழ்ந்தது. அவன் எதையோ கட்டுப் படுத்துகிறான்.

"ஆஸ் எ ரைட்டர்... நீ நம்பிக்கையை விதைக்க விதிக்கப்பட்டவன். விதைகளைத் தூவுகிறவன். இப்படி ஒரு மனிதரை நீ சந்திக்கும் போது உன் விதைக்கூடை நிரம்பும். இதைத் தவிர எனக்கு வேறு நோக்கம் இல்லை. டு யூ பிலீவ் மீ?"

"நம்புகிறேன் வெற்றிவேல்"

அவர்கள் இருவரும் அதற்கப்புறம் படுத்துக் கொண்டனர். வெற்றிவேல் விழித்திருந்தான். சிவாவுக்கு சீக்கிரமே தூக்கம் வந்து விட்டது.

## 26

**யா**ரோ தொட்டு உலுப்புகிறார்கள்.

கங்கையோடு கங்கையாக வனாந்திரங்களில் பர்வதத்தாழ்வுகளில் பாறைகளில் சிக்கி ஆனால் அடிபடாமல் சிவா போய்க் கொண்டேயிருந்தான்.

ஏதோ நீந்துகிற மாதிரி.. தண்ணீரின் மீதே பறப்பது மாதிரி.. பறவைகள் பாடிய கரையோரங்களைப் பார்த்துக் கொண்டே போகிறான்.

யாரோ தொட்டு உலுப்புகிறார்கள்.

சட்டென்று கண் விழித்தான். வெற்றிவேல்.

"என்ன வெற்றி.. பொழுது விடிஞ்சாச்சா ?"

"இல்லை. இன்னும் நேரமிருக்கு. வெளியே பாபா காத்துகிட்டிருக்கார். கங்கையிலே குளிக்கப் போவோம், வர்றீங்களாண்ணு கூப்பிட்டார்."

"இந்தக் குளிர்லேயா ?"

"குளிர்லே குளிச்சா கங்கை சூடாயிருக்கும். அது தனி சுகம். குளிர் விட்ட பிறகு குளிச்சா அது ஜில்லுனு இருக்கும். எதையும் 'மிஸ்' பண்ணக் கூடாது."

"சரி..." சிவா சோம்பலை உதறிக் கொண்டு எழுந்தான்.

வெளியே பாபா ஒரு மேல் துண்டு கூட இல்லாமல் நின்றார்.

"போவோமா" என்று சிரித்தார்.

அவர்கள் மூவரும் பாதுகாப்புக் கம்பிகள் கட்டப் பட்டிருந்த ஒரு நீர்த்துறைக்குச் சென்றனர். வழியில் ஒன்றும் பேசாமல் நடந்தனர்.

கங்கை பேசிக் கொண்டிருந்தது. மனித மொழிகள் அடங்கியிருந்த அந்த அதிகாலையில் குளிர் மறந்து நடப்பது சிரமமாயிருந்தது. எனினும் அந்த நிசப்தத்தை, கங்கை ஓடும் ஒலி மட்டும் கேட்கும் மௌனத்தை மனம் தோய்த்து ரசித்தான்.

நீர்த்துறையில் சிறு கூட்டமிருந்தது.

மூவரும் மூழ்கி எழுந்தனர்.



மேற்புறத்தில் பனிக்கட்டி போன்று குளிர்ந்த கங்கை சற்று ஆழத்தில் வெதுவெதுப்பாக இருந்தது. மூன்று முழுக்கு போட்டு எழுந்த போது குளிர் சுத்தமாக விட்டுப் போயிற்று.

உடம்பில் ஜிவுஜிவுவென்று ஒரு புத்துணர்ச்சி பரவியதை சிவா உணர்ந்தான். தலையிலிருந்து பாரமெல்லாம் கழிந்து விட்ட நிம்மதி. மனசு மேகமில்லாத ஆகாயம் மாதிரி தெளிவாயிருந்தது.

பாபாவும் வெற்றிவேலும் கரையேறிய பின்னரும் கூட அவன் நீர்த் துறையை விட்டு எழுந்திருக்க மனமின்றி பத்து நிமிஷம் குளித்தான்.

அதற்கப்புறம் அவர்களைக் காத்திருக்க விடலாகாது என்ற எண்ணம் உதித்துக் கரையேறினான்.

"கங்கை அன்னையின் மடியிலிருந்து எழுந்து வர மனசு வராது !" பாபா சொன்னார்.

"மேலும் இவன்எழுத்தாளன்" என்று வெற்றிவேல் சொன்னான்.

அந்த அறிமுகம் அசந்தர்ப்பமானதாக சிவாவுக்குப் பட்டது.

"நல்லது" என்று ஆசிர்வதிப்பது போல பாபா சொன்னார்.

சிவா தலை துவட்டிக் கொண்டான்.

மூன்று பேரும் ஒரு பாறை மேல் நின்று கொண்டிருந்தனர்.

"உட்கார்ந்து போகலாமே !" என்று பாபா சொன்னார்.

இருவருக்கும் அங்கே இருப்பது சுகமாகத் தோன்றியது.

மூவரும் உட்கார்ந்தனர்.

"அம்மா எப்படி இருக்கிறாள் ?"

முதன் முறையாக அவன் தன் மகன் என்ற உரிமையை உணர்த்துவது போன்று பாபாவின் பேச்சு ஆதுரமாக ஒலித்தது.

அவருக்கும் தனக்கும் மத்தியில் நடந்த மௌனமான யுத்தம் முடிந்தது போன்று நினைத்தான் சிவா. அவன் மீது தன்னையறியாது ஒரு நேய உணர்வு தோன்றியதைக் கவனித்தான்.

"சௌக்கியமா இருக்காங்க"

"என்ன எழுதுகிறாய் ?"

சிவா தயங்கினான்.

"கதைகள்"

"ம்ம்ம்... நல்லது"

"குறுகிய காலத்தில் எல்லார் கவனத்தையும் கவருகிற மாதிரி எழுதியிருக்கிறான்" என்று வெற்றிவேல் விளக்கினான்.

"நல்லது... எதிலும் நலம் செய்ய முடியும். நன்மையை எதிலும் விநியோகிக்க முடியும். நோக்கம் மேன்மை யானால் நலமும் நன்மை நாடும். இயல்பும் வாய்க்கும்."

சிவா கேட்டுக் கொண்டான். பொதுப் படையானது போன்ற அந்தச் சொற்களில் பொருள் பொதிந்திருப்பதை அவன் கண்டான்

"உனக்கு இதன் மேல் வருத்தமில்லையே மகனே" என்று தன் மார்பைத் தொட்டுக் காட்டினார் பாபா.



அவர் நான்... என் என்ற சொற்களைத் தவிர்த்து விட்டதை அண்செட்டி சந்திப்பிலேயே புரிந்து கொண்டிருந்தான்.

"இல்லை பாபா"

அவர் முகம் பரம சாந்தத்தில் லயித்திருந்தது. பூ மலர்ந்தது போன்ற புன்னகை அந்த வெள்ளைத் தாடியி னூடே தென்பட்டது.

"நல்லது மகனே ! வருத்தம் ஒரு பந்தம். அது பந்தத்தின் மீதி. பிரியவேண்டிய நேரத்தில் மலர் உதிர்கிறது. இறக்கை முற்றுகிற தருணத்தில் பறவை பறந்து விடுகிறது. விடுபட்ட வேகத்தில் அதோ அன்னை ஓடிக் கொண்டிருக்கிறாள்."

சிவாவும் வெற்றிவேலும் கூர்ந்து கவனித்தனர்.

"மகனே" என்று சிவாவைப் பார்த்துத் தனியாக ஒரு வார்த்தை சொல்வது போல் தொடங்கி நிறுத்தினார்.

"இது வேதாந்தம் அல்ல. உலக இயல்பு. வருத்தமும் உலக இயல்பு தான். நேரம் வரும் போது அதுவும் தீர்ந்து போகிறது. உன் தாய்..." பாபா சற்று யோசித்து விட்டுத் தொடர்ந்தார்.

"மகா ஞானி. எதற்கு வருந்துவது.. எதற்குத் தடை செய்வது என்று நன்கு உணர்ந்தவள்."

சிவாவுக்கு மெய் சிலிர்த்தது.

"அவள் நலமாகவே இருப்பாள்"

பாபா இறுதி விடை பெறுகிறார் என்று சிவாவுக்குத் தோன்றியது.

"யாவும் நலமாகவே நடக்கும். மகனே, உன் பாதை தெளிவாகியிருக்கிறது!" என்று எதையோ சுட்டிக் காட்டி உணர்த்துவது போல் சொன்னார்.

தன் மனசுக்குள் நடந்தனவற்றை அவர் கூறுகிறாரா?

"நீ உன் பாதையில் பயணம் செய். உன் இயல்பு உன் பாதையைச் செப்பனிட்டுப் போகிறது. நல்லது."

அவர் சற்று நிறுத்தி நிசப்தமானார். பிறகு பாலத்தைப் பார்த்தவாறே தொடர்ந்தார்.

"எத்தனையோ பாதைகள் எத்தனையோ பாலங்கள்; எங்கும் தேங்கி நிற்காத பிரயாணம் தான் முக்கியம். பாதைகளும் பாலங்களும் சொந்தமானவ்வையாக இருக்க வேண்டும் என்பதில்கூட ஒரு நியாயம் உண்டு!"

சிவாவின் மனசில் நடந்த போராட்டம் யாவற்றையும் சுட்டிக் காட்டுவது போன்று அந்தப் பேச்சு விளங்கிற்று.

"கங்கைக்குப் பந்தமில்லை. ஆனால் துணை உண்டு."

பாபா அர்த்தபுஷ்டியோடு நிறுத்தினார்.

"அதே மாதிரி வாழ்க்கைக்கும் துணை உண்டு. சிலருக்கு அது தேவை. சிலருக்கு அது தேவை இல்லை."

வெற்றிவேல் அவர் இன்னும் வெளிப்படையாகச் சொன்னால் நலமாக இருக்கும் என்று எதிர்பார்த்தான்.

"நீங்கள் எதைச் சொல்கிறீர்கள் பாபா?"

அவர் மௌனமானார்.

சிவா ஒவ்வொரு வார்த்தையாக கிரகிப்பவன் போன்று அவரை கவனித்துக் கொண்டிருந்தான்.



"துணை அமைவது முக்கியம். ஒரு சமயம் துணை தானாகவும் அமையும்...அந்தக் குழந்தை...அவள் பெயர் என்ன?"

வெற்றிவேலுக்கு சட்டென்று விளங்கிற்று.

"பிரீதா" என்றான்.

"அவள் உத்தமமானவள். துன்பமும் துயரும் உலையில் உருக்கி உருக்கி அவளை பசும்பொன் மாதிரி சுடர வைத்திருக்கிறது. அத்தகைய துணை ஒருவருக்கு கிட்டுவது அபூர்வம்."

சிவா துணுக்குற்றான்.

அவளை ஏற்றுக்கொள் என்று சொல்ல வருகிறாரா...? அப்படிச் சொல்வது அவரது இயல்புக்கு முற்றிலும் விரோதமானது!

அவர் புன்னகை செய்தார்.

"உங்கள் இருவரில் எவரேனும் அவள் அருமையை அறிந்திருக்கிறீர்களா?"

சிவா நிம்மதிப் பெருமூச்சுவிட்டான்.

"உங்கள் இருவரில் எவரேனும் ஒருவர் சகோதரனாக இருந்து அவள் அருமையை அறிந்த ஒருவனிடத்தில் ஒப்படையுங்கள். அவன் ஆசிர்வதிக்கப்பட்டவன் ஆவான்."

அந்த ரிஷிகேஷ் பயணமும், அதிகாலையில் நீரில் குளிக்கச் சென்றதும் அவர்கள் இருவருக்கும் ஒவ்வொரு விதத்தில் பொருள் நிறைந்ததாக ஊர் திரும்பும் போது தோன்றின.

பாபாவுடன் அவர்கள் குளிக்கச் சென்ற போது என்ன பேசினர் என்று பிரீதாவிடம் எவரும் சொல்லவில்லை. அவள் கேட்கவுமில்லை.

அவளுக்கு பாபாவைப் பார்த்ததும் அவர் முன்னால் மனசையெல்லாம் திறந்து கொட்டி அழுது தீர்த்ததும் மட்டுமே போதுமானதாக இருந்தன.

கைலாச யாத்திரைக்குக் கால்நடையாக ஏழு பேர் கொண்ட பாபாவின் குழு புறப்பட ஆயத்தமான போது சிவாவோ வெற்றிவேலோ சற்றும் எதிர் பாராதது போன்று ஒரு காரியத்தை அவள் செய்தாள்.

அந்தக் குழுவின் முன்பு நெடுஞ்சாண் கிடையாக விழுந்து இரண்டு கைகளையும் பாபாவின் காலடிகளைத் தொட்டவாறு சிரம் கவிழ்த்து வணங்கினாள்.

"எழுந்திரு குழந்தாய்... உனக்கு செளபாக்கியம் ஆசிர்வதிக்கப்பட்டிருக்கிறது" என்று சொன்னார் பாபா.

"ஹர ஹர சங்கர்... ஜெய ஜெய சங்கர்" என்று எவரோ கூறினர்.

அதற்குள் கைலாச யாத்திரைக்கு பாபா புறப்பட்ட விஷயம் தெரிந்து கூடிய பெருங் கூட்டம் "ஹரஹர ஷங்கர், ஜெய ஜெய ஷங்கர்" என்று ஆயிரம் தொனிகள் இணைந்த ஐக்கியத்தோடு கூவிற்று.

'போலோ பசுபதி மகராஜ் கீ..."

கூட்டம் "ஜே" என்று கத்திற்று.

"போலோ கைலாஷ்நாத் கீ"

"ஜே"

லக்ஷ்மண் ஜூலா பாலத்தின் அக்கரையில் கூட்டம் நின்றுவிட அந்த ஏழு யாத்ரிகர்கள் மெல்ல மெல்ல அந்தப் பாலத்தின் மீது நடந்து செல்வது தூரப் புள்ளிகளாய் மறைந்தது. லக்ஷ்மண் ஜூலாவின் தொங்கும் பாலம் அசைந்து அசைந்து ஆடிற்று.



அவர்கள் பார்வைக்கு முற்றிலும் மறைந்து போயினர்.

தங்கள் உடமைகளை எடுத்துக் கொண்டு ஊர் திரும்பும் யோசனையில் பாபாவின் ஆசிரமத்திற்கு வந்தனர்.

ஆசிரமத்தின் சகல உடமைகளையும் சொத்துக்களையும் காளிகாம்பள் வாலா மகராஜின் நிர்வாக டிரஸ்டுக்கு எழுதி வைத்து விட்டு துண்டை சுத்தமாக உதறி எந்த தூசும் எடுத்துச் செல்லாமல் பாபா புறப்பட்டிருக்கிறார் என்று அங்கே பேசிக்கொண்டார்கள். சிவா தெளிவாயிருந்தான்.

அந்த ஏழு பேரும் திரும்புவதில்லை என்ற முடிவுடன் கிளம்பியிருக்கிறார்கள் என்பது விளங்கிற்று.

அந்தப் பயணத்தையும் அதற்குத் தான் மறுத்ததையும் நினைத்தான்.

மார்பு விம்மி உடம்பு ஆடிற்று. கண்கள் அடக்க முடியாது கண்ணீரில் தத்தளித்தன.

கையைத் தொட்டான் வெற்றிவேல்.

சிவாவின் உணர்ச்சியால் துடிக்கும் முகம் அவனுக்கு சட்டென்று விளங்கிற்று.

சிவாவின் கையை அவன் இறுகப் பற்றினான். பற்றிய கைக்கு பதிலளிப்பது போல் சிவா தன் அழுத்தத்தை அதற்கு வெளியிட்டான்.

"ஹரித்வார்... ஹரித்வார்" என்று ஒரு வேன்காரன் ஹாரன் அடித்துக் கொண்டே கூவினான். மூவரும் அதை நெருங்கினர்.

# 27

**கை**யிலிருந்த சூட்கேஸை கீழே வைத்து விட்டு, பிரீதாவிடமிருந்து சாவியை வாங்கி கதவைத் திறந்தான் சிவா. திறந்தவுடனே ஒரு கடிதம் எதிர்ப்பட்டது. எடுத்துப் பார்த்தான்.

திஷ்யாவிடமிருந்து தான் வந்திருந்தது.

கையெழுத்தைப் பார்த்ததுமே பளிச்சென்று புலப்பட்டது. திருப்பி தேதியைப் பார்த்தான்.

பத்து நாட்களுக்கு முன் வந்திருந்தது.

மடித்துச் சட்டையில் போட்டுக் கொண்டு சூட்கேஸ்களை உள்ளே எடுத்து வைத்தான்.

ஆட்டோவிற்குப் பணம் கொடுத்து விட்டுத் திரும்பி வந்தாள் பிரீதா.

"எத்ர கம்பெல் செய்தும் வெற்றிவேல் எந்தினாணு நிர்க்காம நாட்டினு போய்து?"

"அவன் இப்போ ஒரு பிஸி விவசாயி. பெண்டாட்டி பிள்ளையைக் கூட விட்டுட்டு ஒரு விவசாயி இருப்பான். ஆனா நெலத்தை விட்டுட்டு இத்தனை நாள் தங்கறது அவனுக்கு மகா பாவம்!"

"வாட் எ கிரேட் ஜெண்டில் மன் ஹி ஈஸ்!"

"மெய்தான்"

"இன்னு ஞான் லீவ் எக்ஸ்டெண்ட் செய்யும்."

"ரெஸ்ட் எடுக்கணுமில்லே. லீவ் போட்டுடுங்க."

"ஐ.. ரெஸ்ட்டோ மண்ணோ... எவ்வளவு குப்பை... லுக் ஹவ் டஸ்ட்டி.... எல்லாத்தையும் க்ளீனாக்கணும்" என்று வீட்டைச் சுட்டிக் காட்டினாள்.



"எனி லெட்டர்ஸ்."

"ஒண்ணு தான் வந்திருக்கு. எனக்கு"

"அம்மாவிடமிருந்தா"

"இல்லே. திஷ்யாவிடமிருந்து."

"என்ன விஷயம்?"

"இன்னும் படிக்கலே."

பிரீதா பாத்ரூமுக்குப் போனாள்.

அவன் அழுக்கடைந்திருந்த சட்டையையும் பாண்ட்டையும் உருவிப் போட்டு விட்டு ஒரு பனியனும் லுங்கியும் அணிந்து கொண்டு அந்த இன்லண்ட் கவரைப் பிரிந்தான். குண்டு குண்டான கையெழுத்து மணி கோர்த்தது மாதிரி ஓடியிருந்தது.

"அன்புள்ளவருக்கு வணக்கம். இங்கு அனகாபுத்தூரில் வசதியான தனி வீடு கிடைத்து விட்டது. ராயப் பேட்டை வாடகைதான். குழந்தைகளுக்கெல்லாம் டி.சி. வாங்கி இங்குள்ள அரசாங்கப் பள்ளியிலேயே சேர்த்து விட்டோம்.

படிக்கிறவர்கள் எங்கிருந்தாலும் படிப்பார்கள். அநாவசியமான பயணமும் ஆடம்பரச் செலவும் ஒழிந்தால் பணம் மிச்சமாகும். இது நகரமும் கிராமமும் கலந்த ஒரு விநோதக் கலவை. டெண்ட் சினிமா இருக்கிறது. வயல் இருக்கிறது. ஏரிக்கரை இருக்கிறது. ஒரு முறை வாருங்கள்.

ஓய்வாக வரலாமே என்று ஒத்திப் போடாதீர்கள், உடனே வாருங்கள். உங்களை ஒரு விஷயமாக யோசனை கேட்க விரும்புகிறேன். என்ன விஷயம் என்பதை நேரில் தான் சொல்லுவேன். அனைவரும் நலம். உடனே உங்களை எதிர் பார்க்கிறேன். அனகாபுத்தூர் அல்ல, அண்டார்டிகாவுக்குப் போய் விட்டாலும் உங்கள் திஷ்யா"

சிவாவின் உதட்டுச் சுழிப்பில் ஒரு குறு நகை தோன்றி ஒளிந்து கொண்டது.

மீண்டும் கடிதத்தின் தேதியைப் பார்த்தான். மறுபடியும் ஒரு முறை ஒவ்வொரு தேதியாகக் கூட்டி நாளை எண்ணினான்.

பத்து நாட்கள் அல்ல, ஒன்பது தான் ஆயிருந்தன. அவள் எழுதிய கடிதத்திற்குப் பத்து நாளாகப் போகாதிருந்ததைவிட ஒரு நாள் குறைந்ததில் ஒரு நிம்மதி ஏற்பட்டது.

பாத்ரூமிலிருந்து திரும்பி வந்தாள் பிரீதா.

"லெட்டர் என்ன சொல்லுது?"

"நான் ஒடனே வரணுமாம், ஏதோ அவசரமா யோசிக்கணுமாம்"

"குளிச்சிட்டுப் பொறப்படு.. தண்ணி நல்லா வந்துகிட்டிருக்கு."

சிவா அரை மணி நேரத்தில் குளித்து டிரஸ் செய்து கொண்டு தயாரானான்.

தன் அழுக்குச் சட்டை துணி மணிகளை எல்லாம் தன் பெரிய சூட்கேஸில் போட்டுத் திணித்துப் பெட்டியை மூடினான்.

திரும்பும் போது பிரீதா நின்று மௌனமாகக் கவனிப்பதைப் பார்த்தான்.

"என்ன எல்லாத்தையும் 'பாக்' பண்றே!"

அவளை நிமிர்ந்து பார்க்க விரும்பாமல் முகம் தாழ்த்தியவாறே சொன்னான்.

"நான் வேற ரூம் பார்க்கப் போறேன்."



பளிச்சென்று ஓர் அறை வாங்கிய மாதிரி பிரீதாவின் முகம் பின்னிட்டதை அவன் கவனிக்கவில்லை.

"ஏன்?" என்று கேட்ட பிரீதா சட்டென்று விழிப்புற்ற மாதிரி "உன் இஷ்டம்" என்றாள்.

அந்த உன் இஷ்டத்தில் திடீரென்று தன்னைவிட்டு விலகி அவன் அகலுகின்ற வேதனை தெரிந்தது.

"இங்கு தங்குவது சரியில்லை. எனக்கல்ல உனக்கு!"

முதன் முறையாக தன்னை அவன் ஒருமையில் அழைப்பதை பிரீதா மனசில் குறித்துக் கொண்டாள். ஒரு வேளை வாய் பிசகிச் சொல்கிறானோ?

"இட் வில் ஸ்பாய்ல் யுவர் நேம்."

கண்கள் மருள மருள அவனை விழித்துப் பார்த்தாள் பிரீதா.

மீண்டும் "உன் இஷ்டம்" என்றாள்.

"நான் அடிக்கடி வருவேன். உன்னை ஹாஸ்பிடல்லே வந்து பார்க்கிறேன்."

மீண்டும் அவள் "உன் இஷ்டம்" என்றாள்.

அவன் கையில் எடுத்த சூட்கேஸை மீண்டும் கீழே வைத்துவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தான்.

"ஒனக்கு டயம் ஆகலியா சிவா?"

"நீ அந்த 'உன் இஷ்டத்தை' வாபஸ் வாங்கிக்கிட்டா தான் கௌம்புவேன்."

"ஏன்?"

"இட் ஹர்ட்ஸ் மீ."

"நீ கௌம்பிப் போறது?"

"அஃப்கோர்ஸ் அது ஒன்னை ஹர்ட் பண்ணும். மனசளவிலே ஹர்ட் ஆகிறது வேற... நல்ல பெயருக்கும் செய்யற தொழிலுக்கும் கெடைக்கிற ஹர்ட் வேறே."

"சிவா... நான் குழந்தையல்ல..."

"ஸாரி..."

"இப்போ ஒனக்கு வேலை இல்லே. ஒன் கையிலே எவ்வளவு காசு இருக்கோ எனிக்குத் தெரியாது. இப்ப நீ பொறப்படறதே ப்யூர்லி ஒரு தன்மானத்தாலே தான்."

"......."

"ஒன்னை எனக்குத் தெரியாதா சிவா...?"

சிவா அமைதியாக இருந்தான்.

"தாமு இருந்தா நீ இப்படிப் போவியா ?"

அவள் கண்ணீர் சிந்துகிறாளோ என்று நிமிர்ந்து பிரீதாவின் விழிகளைப் பார்த்தான். அவள் அதைப் புரிந்து கொண்டாள்.

"நோ... இந்த ஜென்மத்திற்கு எவ்வளவு அழுகை இது நாள் வரை பாக்கியிருந்ததோ அவ்வளவும் பாபா முன்னாடி அழுதாச்சு. இனிமே நான் அழமாட்டேன்."

பிரீதா திடமான புன்முறுவலுடன் அவனை பார்வையால் அலசினாள்.

"நான் உன்னை 'கம்பல்' பண்ணலே; உன் இஷ்டம்."

"ஆல்ரைட்... நான் போகலே பிரீதா. ஆனா எனக்கு அம்மாவை இங்கே அழைச்சுட்டு வரணும்போல தோணுது."

"இந்த யோசனையை நானே உனக்குச் சொல்ல விரும்பினேன்."

"அப்புறம்... அப்புறம்"



"சொல்லு சிவா"

"ஊருக்குப் போயிட்டு வந்து சொல்றேன்."

"போய்ட்டு வா"

சிவா விடைபெற்றுக் கொண்டு ஒரு கைப்பையுடன் வெளியே நடந்தான்.

பதினைந்துநாள் ரயிலிலும் பஸ்ஸிலும் காட்டிலும் மலையிலும் கங்கையும் டில்லியுமாகச் சுற்றி விட்டு சாலையில் நடக்கும் போது சென்னை ரொம்ப சின்னது ஆகிவிட்டாற் போன்ற உணர்வு ஏற்பட்டது.

நேரே சிந்தாதிரிப்பேட்டைக்குப் போனான்.

சாமிநாய்க்கன் தெருவில் ஒரு வீட்டுக்குள் நுழைந்ததும் வயர் பின்னிய இரும்பு நாற்காலியில் லுங்கியோடு கைக்குழந்தையைக் கொஞ்சிக் கொண்டிருந்த செங்குட்டுவன் பதைப்போடு எழுந்தான்.

"சார்... வாங்க... வாங்க... எப்ப வந்தாப்பிலே... ஏ மரகதம், இந்தக் குழந்தையைப் பிடிம்மே" என்று கூப்பாடு போட்டு விட்டு உட்கார்ந்திருந்த நாற்காலியை அவனுக்கு ஒதுக்கியவாறு, கூப்பிட்டால் மரகதம் வரப்போவதில்லை என்ற ரீதியில், தானே குழந்தையை எடுத்துக் கொண்டு உள்ளே போனான்.

ஐந்து நிமிஷம் கழித்து ஒரு ஸ்டூலை எடுத்துச் கொண்டு வெளியே வந்தான்.

"சார்...டூர் எல்லாம் நல்லபடி இருந்ததுங்களா ?"

ஆக்ராவில் செங்குட்டுவனுக்காக வாங்கிய தாஜ்மஹால் பொம்மை அடங்கிய அட்டைப் பெட்டியை எடுத்து அவனிடம் நீட்டினான் சிவா.

"ஆக்ராவிலே வாங்கினேன். பத்திரமா உள்ளே கொண்டு போய் வை."

செங்குட்டுவனுக்கு முகம் மகிழ்ச்சியால் ஒளி வீசியது.

"இந்த கிலுகிலுப்பையை கொழந்தைகிட்டே கொடு. கரோல்பாக்லே வாங்கியது."

இன்னொரு முறை அவன் முகம் பிரகாசித்தது.

"டூர் நல்லபடியா இருந்ததா சார்?"

"அற்புதமா இருந்துது செங்கு. உங்க வீட்டு எலுமிச்சை சாதமும் புளியஞ் சாதமும் அமர்க்களம்."

"போங்க சார்.. கிண்டல் பண்றீங்க."

"இல்லேப்பா.: பிரீதாம்மா ரொம்ப விரும்பி சாப்பிட்டாங்க."

"அப்படியா..?"

"நான் சொன்ன விஷயம்."

"ரூம் தான் சார் தோதா கெடைக்கலே. ஒரு புரோக்கர் கிட்டே சொல்லி வச்சிருக்கேன். ரெண்டு நாள்டயம் கேட்டிருக்கான்."

"லைசன்ஸ்..?"

"நீங்க எப்ப வருவீங்கண்ணு காத்துகிட்டிருந்தேன். டிராபிக் சூபரிண்டண்ட் எங்க மச்சினச்சி புருஷனுக்கு ப்ரெண்ட். அவர்கிட்டே சொன்னேன். ஆல் ரைட் கூட்டியாண்ணு சொன்னாரு."

"நாளைக்குப் போவமா?"

"ஓ... என்ன சார். காப்பி சாப்பிடாமே கூடக் கௌம்பிட்டீங்க" என்று அவன் அங்கலாய்க்க சமாதானம் சொல்லி விடைபெற்றான் சிவா.

சிந்தாதிரிப்பேட்டை தபால் ஆபீஸீக்கு நடந்து வந்து அம்மாவுக்கு ஒரு கடிதம் எழுதினான்.



'அன்புள்ள அம்மா அவர்களுக்கு வணக்கம் ரிஷிகேசத்திலிருந்து இன்று காலை மூவரும் நலமாக வந்து சேர்ந்தோம். நாளை எனக்கு இங்கு ஒரு முக்கியமான வேலை இருக்கிறது. அதைப் பார்த்துக்கொண்டு, நாளை மறுநாள் ஊருக்கு வருகிறேன். அங்கிருந்து ஓரிரு தினங்களில் நாம் இருவரும் சென்னைக்கு வருகிறோம். ஆம், நிரந்தரமாக நீங்கள் சென்னையில் என்னுடன் இருக்கப் போகிறீர்கள்.

'என் சாப்பாட்டையும் ஹோட்டல் சாப்பாட்டையும் சாப்பிட்டு சாப்பிட்டு எனக்கு அலுத்து விட்டது. நிச்சயம் நாம் இங்கு ஒன்றாக வசிக்கப்போகிறோம். மற்றவை நேரில். தங்கள் அன்புள்ள மகன் சிவா.'

அந்தக் கடிதத்தை அஞ்சலில் சேர்த்தபோது சிவாவுக்கு நிம்மதியாயிருந்தது.

தைரியமும் எதையும் எதிர் கொள்ளத் தயாரான தன்னம்பிக்கையும் மனசிற்குள் சுரந்தன.

அவன் அண்ணாசாலைக்குப் போக ஒரு பஸ்ஸில் ஏறினான். அங்கே போய் இறங்கினால் தான் அனகாபுத்தூருக்கு பஸ் பிடிக்க முடியும்.

## 28

அனகாபுத்தூருக்குப் போய் விலாசம் தேடி வீட்டிற்குள் நுழைந்தான் சிவா.

கூடத்திலிருந்து ஒரு பெரிய நிலைக்கண்ணாடி முன்னால் மூக்குத்தி மாட்டிக்கொண்டு நின்றாள் திவ்யா.

"மார்வெலஸ்!" என்றான்.

அவன் வந்த ஓசை கேட்காமல் மூக்குத்தியில் லயித்திருந்த திஷ்யா சட்டென்று திரும்பினாள்.

கல் வைத்த மூக்குத்தியில் அவள் முகத்தில் ஒரு தனி சோபை கூடியிருந்தது. இத்தனை நாள் சிறு பெண்ணா யிருந்தவள் இன்றைக்குத் தான் முழுப் பெண்ணாக மாறிய மாதிரி ஒரு கம்பீரம்.

"அட..... எப்ப வந்தே.. வந்தீங்க ?"

அவள் மூக்குத்தி திருகாணியை மாட்டிக் கொண் டிருந்தாள். அவனைப் பார்த்த அவசரத்தில் அந்த வேலையை முழுக்க நிறைவேற்றுவாளோ இல்லை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்று விட்டு விடுவாளோ என்று தோன்றியது.

"திருகாணியை மாட்டிக்கிட்டே வா !"

அவள் சிரித்துக் கொண்டே அவசரமாக திரு காணியை மாட்டினாள். பின்பு உள்ளே போய் ஒரு மடக்கு நாற்காலியைக் கொண்டு வந்தாள்.

"பத்து நாள் கழிச்சு வர்ற மனுஷனுக்கு பத்து நிமிஷம் நிற்கிற தண்டனை தான் கொடுக்கணும் ! போனாப் போவுதுண்ணு நாற்காலி கொண்டுவந்தேன்."

"ஒன்பது நாள்தான் ஆகுது. வேணும்னா ஒன்பது நிமிஷம் நிண்ணுட்டு ஒக்கார்றேன் !"

அவன் நாற்காலியில் உட்காராமல் நின்றான்.

"உட்காருங்க... ஸிட்டவுன்" என்று சொன்னாள்.

"சரி டீச்சரம்மா ! இனிமே லேட்டா வரல்லே" என்று சிவா உட்கார்ந்தான்.

வீடு அமைதியாக இருந்தது.

"எங்கே எந்த வாண்டுகளையம் காணோம் !"



"எல்லாம் ஸ்கூலுக்குப் போயிருக்கு. சின்னக் குழந்தை தூங்குது.. அப்பா ஹாஸ்பிடலுக்குப் போயிருக் கார்."

வீட்டைச் சுற்றிப் பார்வையை ஓட்டினான்.

இரண்டு அறை.. ஒரு கூடம்.. ஒரு வாசல். கூடத்தில் நாற்பது பேர் படுக்கலாம் போல் அவ்வளவு விஸ்தாரம்.

"வெளியே பின்புறம் பாத்ரூம்.. டாய்லெட் பக்கத்தி லேயே கிணறு இருக்கு. கிணத்திலே தண்ணி இருக்கு. ஆனா உப்பு !"

"கச்சிதமா இருக்கு !"

"இன்னொரு பாராட்டு சொல்லணும்"

"என்னது ?"

"வீட்டுக்காரர் சிங்கப்பூர்லே இருக்கார். ரெண்டு வருஷத்துக்கு ஒரு முறைதான் வருவார். அந்தத் தொந்தரவு இல்லே."

"சபாஷ்.. சபாஷ்."

அவன் கையிலிருந்த பிளாஸ்டிக் பையைப் பார்த் தாள். சிவா அதை அப்படியே அவளிடம் நீட்டினான்.

"இது எதுக்கு... ஒன்பது நாள் கழிச்சு வரறதுக்க காம்பென்சேஷனா ? இல்லே பெனால்டியா ?"

"திஷ்யா, நான் வெற்றிவேல் பிரீதா மூணுபேரும் டில்லி... ஆக்ராண்ணு ஒரு ரவுண்டு போய் ரிஷிகேஷ் பார்த்துட்டு வந்தோம்."

"ஈஸிட்..." அவள் கண்கள் வியப்பால் விரிந்தன.

மை பூசிய அந்த விழிகளின் கருமைக்கும் கல் மூக்குத்தி யின் சுடருக்கும் ஏதோ ஒரு முரண்பாட்டின் கவர்ச்சி இருந்தது.

"எப்ப மூக்கு குத்திக்கிட்டே"

"நாலு நாளாச்சு. நல்லாருக்கா ?"

"நீ முழுமையுற்ற மாதிரி இருக்கு"

அவள் முகம் மின்னியது.

"காதிலேயும் மூக்கிலேயும் துவாரம் பண்ணி அங்கங்கே தங்கத்தை வச்சு அடைச்சாத்தான் ஆம்பிளைகளுக்கு பொம்பிளையின் முழுமை தெரியும் இல்லே ?"

"அப்ப ஏன் மாட்டிக்கிட்டே ? ஃபெமினிஸ்ட் மாதிரி பேசறவ எல்லாத்தையும் எதிர்த்து உடைச்சிருக்க வேண்டாமோ !"

"என்னமோ ஒரு கிறுக்கு..தோணிச்சு..இப்ப ஏண்டா குத்திக்கிட்டோம்னு தோணறது."

"அற்புதமா இருக்கு" என்று அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்... பருகிக் கொண்டிருந்தான்... விழுங்கிக் கொண்டிருந்தான்...

"சிவா...."

"ம்ம்ம்"

"பார்வை நல்லா இல்லியே !"

"எதிராளி மொகம் என்னத்தைத் தூண்டுமோ பார்வையும் அந்த மாதிரி மாறிப் போகும். ஆக்ஷன்... ரியாக்ஷன்."

"என்ன இப்படி ஒரு ஞானம் ரிஷிகேஷ்லே பிடிச்சுட்டு வந்தியா ?"

"ஒன்கிட்டே கூட அடக்க ஒடுக்கமா ஒழுங்கா சாதுவா இருந்து நல்லபேர் வேறு வாங்கணும் போலிருக்கு !"

திஷ்யா கலீரென்று சிரித்துவிட்டாள்.



கூடத்தின் நடுவிலிருந்த பெரிய மேஜை மீது பிளாஸ்டிக் பையை வைத்துவிட்டு "பேசிக்கிட்டே நிக்கிறேன்.. இரு போய் காப்பி கொண்டு வர்றேன் !" என்று சொல்லிவிட்டு எதிர்ப்புறமாக இருந்த சமையலறைக்குப் போனாள்.

கூடத்திலிருந்த மேஜை பெரிய மேஜை. காப்பிக் கொட்டை அளக்கிற மாதிரி ஒரு சின்ன எடை மெஷின் எவர்சில்வர் தட்டுடன் காணப்பட்டது.

ஒரு பக்கம் வரிசையாக சின்னச் சின்ன யுத்த வீரர்கள் மாதிரி விரல் நீளத்துக்கு ஏதோ பொட்டலங்கள் இருந்தன. எண்ணினால் நூறுக்கு மேல் போகும்.

ஒன்றை எடுத்துப் பார்த்தான்.

எப்ஸம் ஸால்ட்... பேதி உப்பு.

பேதி உப்பு தயார் செய்கிறாளா ?

அதற்குள் உள்ளேயிருந்து திஷ்யா ஒரு டம்ளரை ஆற்றிக் கொண்டே நடந்து வந்தாள்.

"நான் காப்பிண்ணு சொன்னேனே... நீ ஏன் வாயை மூடிக்கிட்டு இருந்ததே ?"

"பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க நனி நாகரிகர் !"

"நனி நாகரிகரே... இது நஞ்சு அல்ல, நல்ல மோர் !"

"உப்பு போட்டிருக்கியா ?"

"ஏன்... ஒனக்கு போடப்படாதோ ?"

"சாதா உப்புண்ணா பரவால்லே. எப்ஸம் ஸால்ட்னா தான் யோசிக்கணும். எப்பவோ சின்ன வயசிலே சாப்பிட்டது ?"

அவன் கண்டு பிடித்து நறுக்கென்று விஷயத்துக்கு வந்ததை மனசிற்குள் மெச்சிக் கொண்டாள்.

அவள் நீட்டிய மோரை வாங்கிக் கொண்டான்.

"ஒன்பது நாளைக்கு முன்னாலே இதுக்கு ஒரு ஐடியா கேக்கத்தான் வரச் சொன்னேன்?"

"இது என்ன ஐடியா? சொல்லு."

"நீ வரலே... சரி தயங்கித் தயங்கி குழம்பறதை விட தளத்திலே குதிச்சுடறதுண்ணு எறங்கிட்டேன். எப்ஸம் ஸால்ட்டை அப்பா மொத்தமா வாங்கிட்டு வந்து கொடுத்துடறார். நூறு கிராம் ஐம்பது கிராமா பொட்டலத்திலே பாக் பண்ணி வச்சுடறோம். பல்லாவரத்திலேருந்து ஒரு மருந்துக் கடைக்காரர் சைக்கிள்ளே பையனைவிட்டு அனுப்பிச்சிடறார். கொடுத்தனுப்பிடறோம்"

"என்ன பணம் கெடைக்கிறது?"

"அஞ்சு நாளா வேலை செஞ்சதிலே நூத்தம்பது ரூபா கெடைச்சுது. அதுலே தான் இது!" என்று மூக்குத்தியைத் தொட்டுக் காட்டினாள்.

"இதற்கு என் ஐடியா ஏன் கேக்கணும்னு நெனச்சே?"

"இதுக்கெல்லாம் வேற யாருகிட்டே ஐடியா கேக்கட்டும்?"

அப்படி ஒன்றும் உன்னை விட்டுவிடத் தயாரில்லை என்று தப்பிக்க விடாமல் பிடிக்கிற மாதிரி சிவாவைப் பார்த்தாள்.

அவன் அவளைப் பார்த்தான். அந்தப் பார்வை கொண்டாடுகிற உரிமையின் பிணைப்பில், இருமை அழிந்து ஒன்றுடன் ஒன்று சந்தித்து உண்டாகும் ஒரு



மின்சார ஓட்டத்தின் சக்திப் பிரவாகத்தில் அவன் சற்று நேரம் சஞ்சரித்தான்.

"மோரைக் குடிங்க!" என்று அவள் பார்வையை விலக்கிக் கொண்டாள்.

"ஆமாம்... மோர் கொடுத்தே இல்லே?"

அவன் மோரைக் குடித்துவிட்டு டம்ளரைக் கீழே வைத்தான்.

"நல்ல ஐடியா தான்! வீட்டிலே இருந்தபடியே ஒரு தொழில் செய்யறது நல்லது தான்"

"அது மட்டும் நோக்கமில்லே சிவா!"

"வேறே?"

"இந்தப் பசங்களுக்கு வீடு எப்படி நடந்துகிட்டிருக்கு. இங்கே அவங்களுக்கு என்ன ரோல்ணு தெரியணும். ஒழைக்கிற எண்ணம் உண்டாகணும். அவங்களை பிஸியா வச்சிருக்கணும். இதான் என் நோக்கம். இவங்கள்ளாம் அப்பா சம்பளத்தை நம்பியே யாரோ சம்பாதிச்சா நாம சௌக்கியமா இருந்துடலாம்ணு நம்பியே வளர்ந்துடுவாங்களோண்ணு எனக்கு ஒரு பயம் வந்துட்டது."

திஷ்யாவிடம் அந்தக் குடும்பத்தின் கண்ட்ரோல் இருப்பதற்கு அவன் உள்ளூர மகிழ்ந்தான்.

"இப்பதான் ஒரு வழி கெடைச்சது. ரொம்ப சின்ன வழி தான். இந்த லைன்லேயே போய்ப் பார்த்தா அப்புறமா வெளிச்சம் தெரியலாம்"

"ஆரம்பம் எளிமையா இருக்கறது நல்லது! கங்கை உற்பத்தியாகிற கங்கோத்ரி கூட சின்னது தான்"

"என்ன பேரு அது?"

"கங்கோத்ரி..."

"கங்கோத்ரி... கங்கோத்ரி... பேரு ரொம்ப நல்லா இருக்கு. அப்பா வெறும் பேப்பர்லே இதைப் பாக் பண்ண வேண்டாம். மேலே அச்சடிச்சு ஒரு மருந்து கம்பெனி பேரு வச்சு அடிக்கலாம்னு சொன்னார்"

"மறுபடியும் அவருடைய 'ஆம்பிஷன்' வேலை செய்ய ஆரம்பிச்சுடுச்சா?"

"ஆனா... இந்த ஆம்பிஷனுக்கு கால்கள் உண்டு. அது மெதுவா நடந்து தட்டுத் தடுமாறி புவியீர்ப்பை விட்டு விடாமத் தான் ஓடும்"

"குட்... அப்ப எனக்கு ராயல்டி கொடுக்கணும்!"

"எதுக்கு?"

"பேரு வச்சேனே அதுக்கு?"

"என்ன பேரு வச்சிட்டே.... என்ன ராயல்டி கேக்கிறே?"

"கங்கோத்ரி பார்மசூடிகல்ஸ்"

"கம்பீரமாத்தான் இருக்கு. ஆனா எதுவோ கொஞ்சம் பெரிய எடம்னு மிரட்டுது... இங்கே வந்து பார்த்தா பொசுக்குனு இருக்கும். நான் எப்ஸம் ஸால்ட்டை அளந்து அளந்து போட.... கொழந்தைகள் பொட்டலத்தை ஒட்டிக்கிட்டிருக்கும்."

"கங்கோத்ரி கூட அப்படித்தான் இருக்கு. ஆடு கூட தாண்டிடுமாம் அதை?"

"சரி... அதே பெயரை கன்பர்ம் பண்ணிக்கிட்டேன்."

"ராயல்டி?"

அவன் பார்வையையும் உதட்டையும் பார்த்துவிட்டு 'ஸ்ஸ்ஸு" என்று அதட்டினாள் திவ்யா.



"பிளாஸ்டிக் பையை வச்சுட்டு நிக்கிறயே... நான் ஒனக்காக என்ன வாங்கி வந்திருக்கேன்னு பார்க்க அக்கறையில்லே?"

"அதெல்லாம் பொருள்கள் தானே! ஆளே வந்திருக்கும் போது அது செகண்டரி."

அவன் மேலே உயரத்திற்குச் சென்றதை உணர்ந்தான் சிவா. எடுத்துப் பார்க்கச் சொல்லி வற்புறுத்தவில்லை.

"நாளைக்கு மறுநாள் நான் ஊருக்குப் போகப் போறேன். அம்மாவை அழைச்சுட்டு வந்துடலாம்னு நெனக்கிறேன்."

"வீடு பார்த்துட்டியா?"

"இல்லே"

"பின்னே?

"பிரீதா க்வார்ட்டர்ஸ். அவங்க ரொம்ப கட்டாயப் படுத்தறாங்க."

"எனக்குப் பிடிக்கலே"

"எனக்கும் தான். ஆனா பிரீதா ரொம்ப லோன்லியா ஃபீல் பண்ணுது!"

"உன் இஷ்டம்"

"நான் பொறப்படறேன்னு சொன்னப்பா பிரீதாவும் இதையே தான் சொல்லுச்சு!"

"பண்ணுது, சொல்லிச்சு... என்ன அஃறிணையிலே அவளை ரெபர் பண்றே?"

"அவள்னு சொல்லப் பிடிக்கலே. அவங்கண்ணா ஓவர் மரியாதையாத் தோணுது."

"ஜாக்ரதையாயிரு"

பளிச்சென்று அவன் மனசில் ஒரு சிவப்பு விளக்கு விழுந்தது. சிவா அவளை அலசுவது போலப் பார்த்தான்.

"இது சந்தேகமா– பொறாமையா ?"

"ரெண்டுமில்லே. நான் பெண். அவளும் பெண்."

"இது சுவாரஸ்யமான திருப்பம் ! ரொம்ப ரசிக்கும் படியா இருக்கு."

திஷ்யாவுக்கு முகம் புறுபுறுவென்று மாறி மூக்கு துடித்தது.

"ஆஹா ஓஹோன்னு பெஃமினிஸம் பேச வேண்டியது. இன்னொரு பெண் குறுக்கிட்டா சடக்னு சராசரிக்குக் கீழே போயிட வேண்டியதா ?"

"நான் ஃபெமினிஸ்ட்டுண்ணு ஒங்ககிட்டே கொடி தூக்கிட்டு வந்து நிக்கலே."

"பைத்தியம் ! இந்த சிவாவை இன்னும் நீ புரிஞ்சுக்கணும். இவன் பசிபிக் !"

"போதும்... ஒங்க சுய தம்பட்டம் ! எனக்குப் பிடிக்கலே"

"பிரீதா தாமுவுக்கு வாழ்க்கைப்பட இருந்தவள். வேறு சுய தம்பட்டமில்லேண்ணாலும் இந்த 'வால்யூ' ஒண்ணு போதும். நான் திடமானவனாய் நிற்க."

அவள் முகம் சகஜமாயிற்று.

"என்ன செய்யப் போறே ! பழைய வேலையா ?"

"எது ?"

"வேலை தேடற வேலை"

அவன் அலட்சியமாகச் சிரித்தான்.

"பொறுத்திருந்து பார்"



"ஒருத்தர் வீட்டிலே தங்கறப்போ..." என்று அவள் பேசு முன்பு குறுக்கிட்டான்.

"அங்கே ஒரு பாரம் மாதிரி ஒண்ணுக்கு ரெண்டு சுமையோட ஒக்காந்துக்குவேண்ணு நெனக்கிறியா ?"

"வேற..."

"எ?"

"எழுதுவே இல்லே ? ஆனா அது நிரந்தர வேலையில்லையே !"

"நான் அப்பறமா வர்றேன். வீட்டிலே எல்லாரும் இருக்கறப்ப அப்ப வந்து என் ராயல்டியை வாங்கிக்கறேன்"

அவள் முகம் சிவந்தது.

"அந்தக் கதையெல்லாம் வேண்டாம். என் கேள்விக்கு பதில் சொல்லு !"

"இப்ப வாங்கிகிட்டா ஏதோ சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கிற கோழைத்தனம் மாதிரி தோணுது. எல்லாரும் இருக்கறப்ப ஒரு சந்தர்ப்பத்தை கண்டு பிடிச்சா அதிலே ஒரு த்ரில் இருக்கும்"

அவள் மேஜை மீதிருந்த செய்தித் தாளை மடித்து அவன் தோளின் மீது செல்லமாக அடித்தாள்.

"நான் வர்றேன்" சிவா எழுந்தான்.

## 29

வெற்றிவேல் நேராக அம்மாவிடம் வந்து அவர்களையும் அழைத்துக் கொண்டு சிங்காரப்பேட்டை போயிருக்கிறான்.

திருப்பத்தூரில் வீடு பூட்டியிருந்தது. பக்கத்து வீட்டில் சொன்னார்கள். அம்மா தான் எழுதிய கடிதத்தையே பார்த்திருக்க முடியாது என்று புரிந்தது.

சிவா சிங்காரப்பேட்டைக்குப் பஸ் ஏறினான்.

இறங்கி ஐயர் ஹோட்டலில் பால் சாப்பிட்டு விட்டு அவர் எடுத்துக் கொடுத்த சைக்கிளில் புளியம்பட்டிக் காட்டு நிலத்துக்குப் போனான்.

தூரத்தில் நிலத்தை நெருங்கும் போதே வித்தியாசம் பளிச்சென்று தெரிந்தது.

ஆங்காங்கே நிலத்தின் நடுவிலிருந்த சிறு சிறு பாறைகள் காணப்படவில்லை.

என்ன செய்திருப்பான்? குழி தோண்டிப் புதைத்திருப்பானோ? கூழாங் கற்களும் சரளைக் கல்லும் சுத்தமாகப் பொறுக்கப்பட்டிருந்தன.

இருபது ஏக்கர் நிலமும் புல்டோஸரின் ராட்சஸ ஆதிக்கத்தில் மேடும் பள்ளமுமின்றி கதறி அடித்துக் கொண்டு சமமாயிருந்தது.

நாற்புறமும் முள் கம்பி கட்டிய கல் கம்பங்கள் வேலி வகுத்து நின்றன. நிலம் நெருங்கு முன் சாலையின் ஒரு சிறு மேட்டில் சைக்கிளில் காலை ஊன்றி சிவா நின்றான்.

வெற்றிவேலின் நிலம் அந்த முள் கம்பி வேலியில் ஒரு கட்டில் வடிவில் காட்சியளித்தது.

கரிசல் மண், கறுப்புக் கம்பளி விரித்த மாதிரி. அந்தபெரும் பரப்பு ஒரு சீராகச் சமமாக உதறி தூசு தும்பு தட்டப்பட்ட விரிப்பு போன்று தென்பட்டது.

சமீபத்திய மழையில் சிறிது சிறிதாக, குருத்துக் குழந்தைகள் போன்று பயிர்ப் பசுமை தலைகாட்டியிருந்தது.



கறுப்புக் கம்பளி விரித்த கட்டில்! உவமை மாறி விட்டது! அந்த மென்மையான பசுமை கட்டிலைத் தொட்டிலாக்கியிருந்தது.

வெற்றிவேல்! சிவாவுக்கு நெஞ்சு விம்மிப் பூரித்தது. அவன் தான் ஆண் மகன் என்று ஒரு சிலாகிப்பு அந்த பூரிப்பினிடையே பூத்தது.

கார்ப் பந்தயம் விட்டுக் கொண்டு, நாடு சுற்றிக் கொண்டு பரம்பரைப் பணக்கார மைனர் போன்று வேட்டைத் துப்பாக்கியோடு புதிய சாகசங்களைத் தேடிக் கொண்டு அலைந்த அந்த வெற்றிவேலா இவன்!

"ஹி லிபரேட் மீ" என்று பாபாவைப் பற்றி வெற்றிவேல் சொன்ன வாக்கியம் பளிச்சிட்டது.

பாபா எதிலிருந்து வெற்றிவேலை விடுதலை செய்திருக்கிறார்?

அலைச்சலிலிருந்தா...? அற்புதங்களைத் தேடும் முடிவே இல்லாத ஆர்வத்திலிருந்தா...?ரொமாண்டிஸிஸத்திலிருந்தா...?

சற்று தூரத்தில் கல் கம்பம் கட்டப்பட்ட முள்வேலியின் மத்தியில் வெற்றிவேலின் விடுதலை மௌன மொழியில் பேசிக் கொண்டிருந்தது.

சிவா சைக்கிளில் கட்கார்ந்தவாறே கால் ஊன்றி யோசித்தான்.

மண்ணை விடப் பெரிய பந்தம் எது?

இந்த நிலத்தை விட வலிமை மிக்க பந்தம் எது?

விடுதலை என்ற பெயரில் இவன் இந்த நிலத்தோடு பந்தப்பட்டு விட்டானோ?

கானகங்களில் புல் வெளிகளில் மலைத் தாழ்வாரங் களில் கட்டற்ற சுயேச்சையோடு திரிந்த குதிரை இந்த நிலம் என்ற லாயத்திற்குள் அடக்கிக் கட்டப்பட்டு விட்டதோ?

இது விடுதலையா..?

சுதந்திர மற்ற ஒரு விடுதலை.

சிவாவின் சிந்தனையில் அடுத்த அலை எழுந்தது. முன்பு வந்த எண்ணத்தை வாரி வழித்துத் தன்னோடு கரைத்துக் கொள்வது போன்ற பேரலை.

சுதந்திரம் என்பது என்ன?

என்ன சக்தி வாய்ந்த கேள்வி!

அதற்கு விடை தேடி ஹிமாசல சிகரங்களுக்கும் நதி தீரங்களுக்கும் நகரின் இரைச்சல்களுக்கும் ஓய்வு ஒழிவற்ற சமுத்திரக் கரைகளுக்கும் வருஷக் கணக்கில் திரிய வேண்டும் போல் வலிமை வாய்ந்த கேள்வி.

இதற்கு யார் விடை சொல்லப் போகிறார்கள்? அப்படிச் சொன்னாலும் அது ஒரு பதிலாகவா இருக்கப் போகிறது?

நூறு விடைகள்... ஆயிரம் லட்சம் கோடி பல கோடி விடைகள்.

வெற்றிவேலுக்கு விடை கிடைத்திருக்கலாம். பாபா அதை வழங்கியுமிருக்கலாம்.

இந்த இருபது ஏக்கரில் விளையும் பயிரில், சிருஷ்டி யின் சுவாசம் போன்று பூமி வெளியிடும் வெப்பப் பெரு மூச்சில், இதில் பாயும் நீரின் பரிசுத்த மகிழ்ச்சியில், மழை வராத போது ஏங்கும் தூய்மையான வருத்தத்தில் அந்த சுதந்திரம் இருக்கலாம்.

உழுது விதைத்து இந்த பூமியின் ஜீவன் மங்கிவிடாது போராடி இதன் மணி வயிறு திறந்து அதில் உயிர் வளர்க்கும் மாணிக்கங்கள் குலுங்கும் போது அந்த சுதந்திரம் தரிசிக்கப்படலாம்.



சிவா மேலும் யோசித்தான்.

உழவு, நடவு, அறுப்பு என்று ஓயாது சுழலும் பருவ காலங்களின் சுற்றில் இயங்கி வட்டமிடும் மனித உழைப்பில் அது பிரத்யட்சமாகலாம்.

அந்த உழைப்பின் இடை வெளிகளில் கேட்கும் ஓய்வின் உல்லாசத்தின் போதும் அது தோன்றலாம்.

சிவா தனக்குள் சிரித்துக் கொண்டான்.

இந்த சிந்தனைப் போக்குக்கு நவீன உலகம் ஒட்டியிருக்கும் லேபிள் என்னவென்று அவனுக்கு நினைவு வந்தது. பிரிமிடிவிஸம்... ஆதி மனித வாதம்.

வெற்றிவேல் ஆதி மனித வாதியாகி இருக்கிறானோ! யந்திர உலகம் தொழிற்சாலைகளையும் பிரம்மாண்டமான யந்திரக் கருவிகளையும் சிருஷ்டித்துச் சிருஷ்டித்து சந்தை தேடி அலையும் ஒரு நவீன யுகத்தில் ஆதி மனித வாதத்தில் விடுதலையையும் சுதந்திரத்தையும் கண்டு பிடித்திருக் கிறானோ!

என்ன நஷ்டம்?

இதில் யாருக்கு என்ன குடி முழுகி விட்டது?

வெற்றிவேல் தன் விடுதலையைத் தேடுகிறான்.

எல்லோரும் அப்படியே. மனித உயிரைக் காப்பாற்று வதற்கு பெரும் பெரும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் இதே நவீன உலகம் அதை பூண்டும் வேருமின்றிப் பொசுக்கி விடவும் அதை விடப் பெரிய முயற்சியில் இறங்கியிருப்பது ஞாபகம் வந்தது.

அது கூட விடுதலை தான் தேடுகிறது. ஆயுதங்களி லிருந்து விடுதலை. அச்சத்திலிருந்து விடுதலை.

உலகில் வெகு காலமாக ஒரு சந்தர்ப்பத்திற்காக எதிர் பார்த்து உயிர் தாகத்தோடு காத்துக் தவித்துக் கொண்டிருக் கும் யுத்தக் கருவிகளை எண்ணிப் பார்த்தான் சிவா.

நாளை என்பதற்கு எந்த நிச்சயமுமில்லாமற் போய் விட்டநாள் இன்று.

மனிதர்கள் சூறாவளி அச்சுறுத்தும் சமுத்திரக் கரையில் தமது கனவுகள் என்னும் மணல் வீடுகளை இன்னும் தைரியமாகக் கட்டிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

நாளை நிச்சயமில்லை தான்.

எனினும் இன்னும் ஆஸ்பத்திரிகள் திறக்கப்படு கின்றன. கல்வி நிலையங்கள் திறக்கப்படுகின்றன. பூமியின் முன்பு மண்டியிட்டது போய் அதைப் பலாத்காரம் செய்து பயிர்களை விளைவித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

அச்சுறுத்தல்களுக்கிடையே நம்பிக்கையின் பிஞ்சுப் பாதங்கள் கால் தண்டை குலுங்க ஓடியாடிக் கொண்டு தானிருக்கிறது.

இங்கு தான் சுதந்திரம்.

இது தான் சுதந்திரம்.

யுத்தமே... விதியே... நீ என்னை சர்வ நாசமாக்கி விடுவாயெனினும் நான் அஞ்ச மாட்டேன்.

என் விளையாட்டை நான் விளையாடியே தீர்ப்பேன். சூறாவளியின் சீற்றமே, நீ வேண்டுமானால் எனது மணல் வீடுகளை அழித்துக் கொள். அது தான் உன்னால் முடியும்.

என்னால் கட்ட முடியும்.

ஒரு வேளை நான் உயிர் பிழைத்திருந்தால் கட்ட முடியும்.

நீ அழி. நான் உருவாக்குவேன்.



நான் இல்லையெனில் என் வம்ச வித்தின் ஏதோ ஓர் ஈற்று அதை சாதிக்கும்.

பிரிமிடிவிஸம்.

அந்த லேபிளைக் குத்திய உலகம் ஆயிரக்கணக்கான மாறுதல்களுக்கு மார்தட்டிக் கொண்ட போதும் அடிப் படையில் இன்னும் அதே ஆதி மனித விதிகளில் நிற்பதை உணர்ந்தான்.

நல்லது வெற்றிவேல்... நீ பிரிமிடிவிஸ்டாகவே இரு நியூட்ரான் குண்டுகளைக் கண்டு பிடித்து அச்சத்திலிருந்து உலகம் விடுதலைக்கு அங்கலாய்க்கட்டும்.

நீ நிலக்கடலை பயிரிட்டு உன் விடுதலையைத் தேடு.

சிவா அங்கு தான் வெகு நேரம் நின்று விட்டதை உணர்ந்து சைக்கிள் மிதித்தான்.

"வா சிவா" என்று அம்மாதான் வரவேற்றாள்.

ஒரு கீற்றுக் கொட்டகையின் கீழே கயிற்றுக் கட்டிலில் ஒரு விரிப்பின் மீது பளிச் சென்று புதுப் புடவையும் நெற்றியில் குங்குமமும் நிறைவுமாக உட்கார்ந் திருக்கும் அம்மாவைப் பார்ப்பது அவனுக்கு புதுமையாக இருந்தது.

அம்மா எவ்வளவு லட்சுமீகரமாக இருக்கிறாள்?

பக்கத்தில் ஒரு ஈஸிசேரில் சாய்ந்து அம்மாவிடம் ஏதோ பேசிக்கொண்டிருந்த வெற்றிவேல் தலையைத் திருப்பினான்.

"டேய்.. லெட்டர் கூடப் போடலியே" என்று சட்டென்று எழுந்தான்.

"மடையா... இப்படித்தான் எனக்குத் தெரிவிக்காமே அம்மாவைக் கூட்டிட்டு வர்றதா?" என்று செல்லமாகத் திட்டிக் கொண்டே சிவா சைக்கிளை ஓரமாக நிறுத்தினான்.

"ஓஹோ... ஐயாவுக்கு லெட்டர் போட்டு பர்மிஷன் வாங்கிட்டு தான் அம்மாவைக் கூட்டிட்டு வரணுமோ !"

அம்மா உனக்கு மட்டும் சொந்தமில்லை என்ற பாந்தவ்யம் வெற்றிவேலின் குரலில் மௌனமாக ஒலித்தது.

"அதுக்கில்லே, நான் அம்மாவை மெட்ராஸுக்கே அழைச்சுட்டுப் போகணும்னு லெட்டர் போட்டிருந்தேன். அவங்க அதைப் பார்க்கிறதுக்கு முன்னாடியே நீ கூட்டிட்டு வந்திருக்கே !"

"எல்லாம் நல்ல விஷயம் பேசத்தான் இவன் என்னைக் கூட்டி வந்திருக்கான்டா."

"நல்ல விஷயமா ?" காலியாயிருந்த ஒரு மடக்கு நாற்காலியில் போய் உட்கார்ந்த சிவாவுக்கு மனசு துணுக்குற்றது.

"என்னடா அது?" என்று வெற்றிவேலைத் திரும்பிப் பார்த்தான்.

"அவன் சொல்லமாட்டான். நான் சொல்றேன். கல்யாண விஷயம் !"

"யாருக்கு ?"

"வெற்றிவேலுக்குத்தான்"

அப்பாடா... என்று ஒரு நிம்மதிப் பெருமூச்சு வந்தது.

"இதென்னம்மா இவன்... எங்கிட்டே சொல்லாமே ஒங்க கிட்டே மட்டும் சொல்லியிருக்கான்" என்று சண்டை பிடிப்பது போல் ஆரம்பித்தான்.

"ஒங்கிட்டே சொல்லி என்னடா புண்ணியம் ? நீ சின்னப் பையன்... அம்மா கிட்டே தான் சொல்லணும்."

"நல்ல விஷயம் பேசறதுக்கு முன்னாடி எனக்கு இளநீர் கொண்டு வரச்சொல் ! தாகமா இருக்கு."



"இளநீர் தானே... அஞ்சு வருஷம் கழிச்சு வா. அற்புதமான இளநீர் தர்றேன். இப்பதான் தென்னங் கண்ணு வச்சிருக்கேன் !"

சிவா நிலத்தின் மீது மீண்டும் பார்வையை ஓட்டினான்.

"யு ஹாவ் டன் எ மார்வல் !" என்றான்.

"என்னப்பா சொல்றான் வேலு ?"

"ஏய்... இங்கிலீஷ் என்னடா வாழுது. அம்மா இருக்காங்க இல்லே."

"ஐ ஆம் சாரி..." என்று சொல்லி நாக்கைக் கடித்து 'தப்புமா, இவன் நிலத்திலே ஒரு அதிசயத்தையே பண்ணி பிருக்கான்னு சொல்ல வந்தேன் !"

அம்மா பெருமிதத்தோடு அதை ஆமோதிப்பது போல் புன்னகை செய்தாள்.

அந்தப் புன்னகையை அம்மாவிடம் கண்டு எவ்வளவு நாளாகிறது ! அது வெற்றிவேலின் உழைப்பிற்கு வழங்கிய பதக்கம். இது அவனுக்குத் தெரியுமோ தெரியாதோ... சிவா அதைப் புரிந்து கொண்டான்.

"மோர் குடிக்கிறியா சிவா !"

"கொண்டு வரச் சொல்லு."

"டேய் காத்தாடி... செம்பகத்துட்டே சொல்லி ஒரு டம்ளர் மோர் வாங்கியா" என்று கூரை அருகில் சற்றுத் தூரத்தில் வீட்டின் கீழே நின்ற ஒரு அரை நிஜார் பையனிடம் குரல் கொடுத்தான்.

"தோ வர்றேன் மொதலாளி" பையன் ஓடினான்.

"டேய், நீ எப்படா முதலாளி ஆனே ?"

"அவங்க கூடவே வயல்லே எறங்கி வேலை செஞ்சு அவங்க குடிக்கிற கூழையே குடிச்சும் கூட இந்த மரி யாதையை விடமாட்டேண்றாங்க. எத்தனையோ தடவை சொல்லிப் பார்த்து விட்டுட்டேன். எனக்கு அது ஒரு புனை பெயர்னு சமாதானம் பண்ணிக் கிட்டேன் !"

"நல்லது முதலாளி.. எப்ப கல்யாணம் ?"

"ஏண்டா சிவா" என்று அம்மா குறுக்கிட்டாள். "நீ பொண்ணு யாருண்ணு கேக்கவே இல்லியே ?"

"அவன் சொல்லவே இல்லியே. கல்யாணத்தன்னிக்கு பாத்துக்கினா போவுது."

"எல்லாம் ஒனக்குத் தெரிஞ்ச பொண்ணுதான்" என்று அம்மா நிறுத்தினாள்.

யார் ?

அந்தக் கேள்வி திடீரென்று கேட்ட இடியொலி மாதிரி அவன் மனசை அதிர்வித்தது. யார் ? யார் ?

"நீயா சொல்லு பாப்போம்."

"அவன் சொல்லிடுவாம்மா. அவனுக்கும் தெரியும்" என்று வெற்றிவேல் சொன்னான்.

சிவாவை ஒரு பயம் மெதுவாக வந்து கவ்விற்று.

அப்படியிருக்குமா ? தன் மனசு என்னவென்று தெரி யாமல் வெற்றிவேலுக்கு அப்படி ஓர் ஆசை வந்திருக்குமா ? வந்திருந்தால் என்ன செய்வது ?

"தெரியலே" அவன் தலையசைத்தான்.

"பிரீதாவாமே"

சட்டென்று ஒரு நிம்மதி, சுகமான காற்று மாதிரி அவன் மனசில் பரவிற்று.



"ஈஸிட்... என்ன துணிச்சலான, பொருத்தமான அற்புதமான செலக்ஷன்டா வெற்றிவேல் !" என்று எழுந்து வந்து அவனுக்குக் கை கொடுத்தான்.

"அதுவும் சம்மதிக்கணுமே ! அதான் எனக்கு கவலையா இருக்கு. மெட்ராஸிலே இருக்கிற பொண்ணு மலையாளத்துப் பொண்ணு. ஒறவு ஜனசந்தடி. இதை யெல்லாம் விட்டுட்டு வருமாண்ணு எனக்கு யோசனையா இருக்கு !" என்றாள் அம்மா.

"சம்மதப்பட்டா பண்ணிக்குவோம். அது யோசிச்சா வேண்டாம். இவ்வளவு தானேம்மா !" என்று வெற்றிவேல் லகுவாக அம்மாவைக் கவலையிலிருந்து விடுவித்தான்.

"நாளைக்கு போய் மொதல்லே நான் பொண்ணை பார்க்கறேன். அப்பறமா பேசுவோம். மோரை வாங்கிக் குடிப்பா" என்று அம்மா முடித்தாள்.

## 30

வெற்றிவேல் வரவில்லை. அவன் திருப்பத்தூர் வரை வந்து இருவரையும் ரயில் ஏற்றினான்.

அம்மாவை சாமான்கள் எல்லாம் மூட்டை கட்டி ஒரேயடியாக எடுத்துப் போகலாம் என்று வற்புறுத்தினான் சிவா.

"இப்ப வேணாம் ! இப்ப வேற ஒரு விஷயத்துக்குப் போறோம். அது நல்லபடியா நடத்துட்டா நாம்பளே வேற வீடு பார்க்க வேண்டியதா இருக்கும். நீயும் நானுமா ஒரு வீட்டைத் தேடுவோம். கெடைச்சப்புறம் சாமான்களை எடுத்துட்டுப் போவோம்"

பளிச்சென்று பிசிறு அறுந்த மாதிரி இருந்தது சிவாவுக்கு.

ரயில்வே ஸ்டேஷனை விட்டு இறங்கியதுமே சென்னை அம்மாவுக்கு பிடிக்கப் போவதில்லை என்று பயந்து கொண்டே வந்தான் சிவா, அவளுக்கு எல்லாம் சகஜமாயிருந்தது.

"பெரிய ஊருண்ணா கூட்டம் ரொம்ப. நெரிசல் ரொம்ப. இப்படித்தான் இருக்கும்.. சுறுசுறுப்பா ஜனங்க ஓடறதும் நடக்கறதும் நல்லாத்தான் இருக்கு."

அம்மா அதையும் ரசித்தாள்.

ராயப்பேட்டையில் பஸ் இறங்கி நடந்தனர். பிரீதா க்வார்ட்டர்ஸில் இருந்தாள்.

ஒரு சூட்கேஸுடன் மட்டும் வந்து நிற்கும் சிவாவைப் பார்த்துவிட்டு "எவிடயாணு அம்ம?" என்று வெளியே வந்தாள்.

ஒரு நூல் சேலையில் நெற்றியில் குங்குமம் பளிச்சிட, சிவாவின் அம்மா நான் தான் என்று அச்சடித்து வைத்த மாதிரி ஒரு முகக் களையோடு புன்னகையோடு வந்து நிற்பவளைப் பார்த்ததுமே சட்டென்று ஒட்டிக் கொள்ள வேண்டும் போல் தோன்றியது.

அவள் அருகில் போய் சிரித்துக் கொண்டே நின்றாள். அம்மாவைத் தொட வேண்டும் போலிருந்தது.

அவள் கையைப் பிடித்து "அம்மா" என்றாள்.

பிடித்த கையை அம்மாவும் பற்றிக் கொண்டாள்.

"நீ தான் பிரீதாவா?"

அம்மாவுக்கு ஏனோ மனசு சுரந்தது.

இதென்ன இது! இவ்வளவு பெரிய ஆஸ்பத்திரியில் பெரிய நர்ஸ்.

யாரோ முன் பின் தெரியாதவள். பேச்சு வேறே. நாடு வேறே. ஜாதி வேறே!



ஏதோ தெருவில் நடந்து போகிற எவளோ ஒருத்தியைப் பார்த்து முகம் மலரச் சிரித்துக் கொண்டு ஓடி வந்து காலைக் கட்டிக் கொள்கிற குழந்தை மாதிரி வந்து கையைப் பிடித்துச் சிரிக்கிறாள்.

அம்மா சட்டென்று அவள் முகத்தை இரண்டு கைகளாலும் நீவி வழித்து திருஷ்டி முறித்தாள்.

"இது எந்தினாணு?"

"கண் திருஷ்டி படக்கூடாது" சிவா விளக்கினான்.

பிரீதாவுக்குப் புரிந்தது. சிரிப்பு வந்தது. குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள். அது அம்மாவைப் புண்படுத்த வில்லை. அவள் அப்படிச் செய்வதற்கு அப்படி என்ன நான் அவ்வளவு அழகா என்ற கேள்வி வந்து இப்படி யாரோ ஒருவர் திருஷ்டிமுறிக்கிற சொந்தத்திற்கு வந்து சேர்ந்த பூரிப்பு வந்தது.

ஏதோ வெகு நாட்களுக்கு முன் விட்டுப் போன— ஜென்மங்களுக்கு முன்னால் பிரிந்து போன உறவெல்லாம் இணைந்த குதூகலம் வந்து அவள் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள்.

அந்தச் சிரிப்பில் என்ன விடுதலை!

சிவா ரிஷிகேஷில் பிரீதா பாபா ஓம்கார்நாத்தின் முன்பு அழுததை நினைத்தான். அங்கே பிரீதா அழுது விடுதலையானாள். இன்று அம்மாவிடம் சிரித்து விடுதலை பாகிறாள்.

இரண்டு நாட்களாக பிரீதாவிற்குச் செய்வதற்கு வேலை இல்லாமல் போய் விட்டது.

எதற்கெடுத்தாலும் அம்மா ஓடி ஓடி முன் வந்தாள். கிராமீயமான எளிமையில் அவள் செய்யும் சிறு பிழைகள் கூட மகிழ்ச்சியாக இருந்தன.

வந்த முதல் நாளே சிவா அம்மா வந்திருக்கும் காரணத்தைச் சொன்னான். வெற்றிவேலின் உத்தேசத்தைச் சொன்னான்.

பிரீதா முகம் வாடாமல் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டாள். பதில் சொல்லவில்லை.

அன்று மாலை அம்மாவை அழைத்துக் கொண்டு பீச்சுக்குப் போவதாக பிளான். நாலு மணிக்கு உத்திரவு வாங்கிக் கொண்டு வருவதாகச் சொன்ன பிரீதா மூன்று மணிக்கெல்லாம் வந்தாள்.

"என்ன பிரீதா ?" என்று சட்டைக்கு அயர்ன் போட்டுக் கொண்டிருந்த சிவா கேட்டான்.

"ரேடியாலஜி டிபார்மெண்ட்டுக்கு புதிய கருவிகள் வந்திருக்கு. சி. எம். சிக்கு நான் டிரெய்னிங் போனேன் இல்லே ! அது சம்பந்தமான அபாரடஸ், இப்ப நம்ப ஹாஸ்பிடல்லே 'இன்ஸ்டல்' பண்ணப் போறாங்க. ராத்திரி பத்து பதினொண்ணு ஆயிடும். ஐ ஆம் சாரி சிவா. அம்மாவை நீ பீச்சுக்கு அழைச்சுட்டுப் போய்ட்டு வந்துடு."

"ஆல்ரைட்" சிவா ஒத்துக் கொண்டான்.

சொன்னபடியே பிரீதா வீடு திரும்ப பதினொன்று ஆகிவிட்டது. அவளுக்காக டிபன் செய்து பத்திரமாக மூடி வைத்து விட்டுத் தானும் சாப்பிடாமல் காத்திருந்தாள் அம்மா.

"அம்ம கழிக்கணும். எனிக்கு சமயம் கிட்டான் அல்பம் போகும்"

"கழிக்கணுமா ?"

"ஓ... சாப்பிடணும். முன்னாடி சாப்பிடணும். வெயிட் பண்ண வேண்டாம்"

"எனக்கு பசிக்கல்லே கொழந்தே !"



அம்மா பரிமாறிவிட்டு கூடச் சாப்பிட உட்கார்ந்தாள்.

அன்றிரவு அம்மா பக்கத்திலேயே கட்டிலை விட்டுக் கீழே தரையில் மெத்தை விரிப்பைப் போட்டுப் படுத்துக் கொண்டாள் பிரீதா.

இரவு அவள் ஒரு கனவு கண்டாள்.

அந்தக் கனவில் தாமு அவர்கள் ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆகியிருந்தான். ரேடியாலஜி டிபார்ட்மெண்டில் டாக்டருக்கு உதவியாக அவள் நின்றிருந்தாள்.

தாமுவை ரேடியால்ஜி டிபார்ட்மெண்டுக்குள் கொண்டு வந்தார்கள் ! படுக்க வைத்து டாக்டர் பரிசோதிக்கும் போது வெளியே இருந்து 'பிரீதா பிரீதா' என்று ஒரு குரல் அழைத்தது. அவள் அதைப் பொருட்படுத்தவில்லை.

ஒரு குரல் பல குரல்கள் ஆயிற்று. நூறு நூறு குரல்கள் கூப்பிட்டான். அவள் எதையும் பொருட்படுத்தாமல் நின்று கொண்டிருக்கும் போது கூச்சல்கள் அதிகரித்தன.

அவள் வெளியே ஓடிப் போய் கத்துவது யார் என்று கேட்பதற்காகப் போக நினைக்கிறாள். கால்கள் நகரவில்லை. நகர முடியவில்லையே. ஏன். ஏன் ?

பளிச்சென்று கனவு கலைந்து பிரீதா எழுந்து உட்கார்ந்தாள்.

"என்னம்மா கனவு கண்டியா ?" என்று சிவாவின் தாய் கேட்டபோது, அந்தப் பரிவிலும் பிரியத்திலும் அவளுக்கு வெட்கம் வந்து விட்டது.

"ஆமாம்மா.. ஏதோ கெட்ட கனவு"

அம்மா திருநீற்றுச் சம்புடம் கொண்டு வந்திருந்தாள் அதிலிருந்து கொஞ்சம் எடுத்து நெற்றியில் இட்டாள்.

அடுத்த நாள் அம்மாவும் அவளும் கபாலீஸ்வரர் கோயிலுக்குப் போய் வந்தனர். வெகு நேரம் வரை கோயிலுக்குள் நிறைந்து வழிந்த கூட்டத்தை அம்மா ரசித்தாள். அவள் ரசிப்பதை பிரீதா ரசித்தாள்.

பின்பு இருவரும் மயிலாப்பூர் குளக்கரைக்கு வந்தனர். வரிசை வரிசையாக இறங்கும் அந்த படிக்கட்டைப் பார்த்து, "இங்கே கொஞ்சம் உட்கார்ந்து போகலாமே பிரீதா என்றாள் அம்மா.

பிரீதாவுக்கு அந்தப் பகுதியில் தான் பலபேருக்கும் முகம் தெரிந்த நர்ஸ் என்று முதலில் ஒரு தயக்கம் வந்தது.

அவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்கள் என்பதை விட அம்மா என்ன நினைப்பாள் என்பது முக்கியமாகப் படவே அவளும் இசைந்தாள்.

சிவாவின் அம்மா என்பதற்கு மேலாக அவளிடம் ஏதோ ஒரு பாந்தப் பிடிப்புத் தன்னை அணைத்து ஆசுவாசப் படுவதை இந்த இரண்டு நாட்களில் அவள் நன்கு அனுபவித்திருந்தாள்.

மலையாளமும் தமிழும் கலந்த பிரீதாவின் கொச்சை மொழி அம்மாவுக்கு பிடித்துப் போயிற்று.

உட்கார்ந்து கொஞ்சநேரம் கழித்து அம்மா ஆரம்பித்தாள்.

"சிவா சொன்னானாம்மா ?"

"சொல்லுச்சு"

"நீ எங்கிட்டே சொல்லவே இல்லியே"

பிரீதா தன் நகப் பூச்சையே மௌனமாகத் திருப்பித் திருப்பிப் பார்த்தாள்.

"ஒன் மனசை தொறந்து சொல்லும்மா ?"

"........."



"சிவா மாதிரியே வெற்றிவேலும் நல்லபிள்ளை. எதைச் சொன்னாலும் மனசு வருத்தப்படாமே ஏத்துக்கு வான் !.."

பிரீதா கண்ணை உயர்த்தி உண்மைப் பாசமும் அக்கறையும் நெகிழ்ந்து பரவிய அம்மாவின் முகத்தைப் பார்த்தாள்.

"உனக்கு இஷ்டமில்லேண்ணா வேண்டாம்"

என்ன பதில் சொல்வது என்று பிரீதா யோசித்தாள்.

"வீட்டிலே பெரியவங்களைக் கேக்கணுமா ?"

நர்ஸ் டிரெயினிங்கில் அவளைச் சேர்த்து விட்டு டேராடூனுக்கு மனைவியை அழைத்துச் சென்ற அண்ணன் ஒருவன் தான் கேட்க உரிமையுள்ள பெரியவன்.

மற்றவர்கள், மாண்டது போக மீதியிருந்தவர்கள். அபிப்பிராயம் சொல்லி விட்டு வேலையைக் கவனிக்கும் பெரியவர்கள்தான். டேராடூனுக்குப் போனவன் என்னமோ பெரிய ஆபீசராகி பிரான்ஸிலிருந்து வருஷத் துக்கு ஒரு கடிதமும் ஓணத்தன்று ஒரு பரிசும் அனுப்புவ தோடு சரி.

"இப்பவே சொல்லணும்ணு ஒண்ணும் அவசர மில்லே. நாலு நாள்.. பத்து நாள். ஒரு மாசம்கூட யோசி.. அப்புறமா சொல்லு ! ரிஷிகேசத்திலே பாபா ஓம்கார்நாத் ஒன் பொறுப்பை இவனுங்க ரெண்டு பேரு கிட்டேயும் ஒப்படைச்சாராம்"

சட்டென்று பிரீதா அம்மாவின் முகத்தை வியப்போடு பார்த்தாள்.

"என்ன சொன்னாராம் ?"

"ஒங்க ரெண்டு பேர்லே யாராவது அவளை ஏத்துக் கறவன் ஆசிர்வதிக்கப்படுவாண்ணு சொன்னாராம்"

பிரீதாவுக்கு மார்பு திரண்டு உடைந்து விடும்போல் விம்மி தொண்டையில் ஒரு துக்கம் மோதியது.

ஒரு பார்வையில் அவள் மனசு முழுவதையும் புரிந்து கொண்ட பாபாவா இதைச் சொன்னார். அவர் எதை உத்தேசித்து அப்படிச் சொன்னார்?

அம்மா எதிரில் அழவேண்டாம் என்று அவள் தன் மனசைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

"சிவா கிட்டே எல்லாம் தெரிஞ்சுக் கிட்டீங்களா அம்மா?"

"எதைப் பத்தி?"

"என்னைப் பத்தி!"

"ஏன் அப்படிக் கேக்கறே?"

"சிவா எல்லாம் சொல்லிச்சா"

"சொன்னான்."

"தாமுவுக்கும் எனக்கும் இருந்த ஸ்நேஹம்... அதுக்கு முன்னாடி சின்ன வயசிலே பிரபாகர வர்மாவோட இருந்த ஸ்நேஹம்..."

"எல்லாம் சொன்னான். எனக்கு மட்டுமில்லே. வெற்றிவேலுக்கும் சொன்னான்."

"அதுக்கு அப்புறமும் வெற்றிவேலுக்கு என்னைக் கல்யாணம் பண்ணிக்கத் தோணுதாம்மா?"

"அவனுக்கு மட்டுமில்லேம்மா, எனக்கும் கூடத்தான் ஒன்னைப் பாத்தப்புறம் ரொம்ப பிடிச்சிருக்கு. ஒரு பொம்பளைக்கு இன்னொரு பொண்ணு என்னண்ணு சட்டுனு தெரிஞ்சிடும். எது உத்தமம் எது நீசம்னு பளிச் சுணு புரிஞ்சிடும்... நா என்ன பண்ணுவேன்? வெற்றிவேல் தான் மொதல்லே ஆசைப்பட்டு சொன்னான்?"



அவள் புகழுவதைத் கேட்டு பிரீதாவுக்கு நாண மாயிருந்து. அந்த புகழ்ச்சி வஞ்சனையில்லாத வெள்ளை மனசிலிருந்து வருவதால் பால் மாதிரி பிரீதாவின் நெஞ்சை நனைத்தது.

"அம்மா... சிவா எனக்கு சகோதரன். நீ என்டெ அம்மா"

பிரீதாவுக்கு அம்மா மடியில் படுத்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது.

ஓர் அன்னையின் மடி எப்படியிருக்கும்?

அது குழந்தைப் பருவத்திலேயே தாயை இழந்த பிரீதாவுக்குத் தெரியாது. மடி மீது படுத்துக் கொண்டாள்.

"எனக்கு வெற்றிவேலைப் பிடிக்காம இல்லேம்மா... அவர் ஒரு ஜெண்டில்மேன்"

"அப்புறம் என்ன..."

"எனிக்குச் சொல்லத் தெரியலேம்மா..."

"எப்பவும் தொணை ஒண்ணு தேவை பிரீதா... அது இப்ப தெரியாது... வயது ஆக ஆகத் தெரியும்."

"நீ எனிக்குத் துணையில்லையாம்மா"

பிரீதாவின் தலைமீது அம்மா கை வைத்தாள். அதை மெதுவாகப் பிடித்து விடுவது போல் நீவிக் கொடுத்தாள்.

"நான் இருக்கற வரைக்கும் ஒனக்குத் துணை உண்டு. போனப்பறம்?"

"நீ போகாதேம்மா... சிவா கல்யாணமாய்ப் போகட்டும். நீ வேண்டாம். நீ என்னோட இரும்மா"

"இருக்கேம்மா... நான் ஒன்னோடவே இருக்கேன்" அம்மா நெடுமூச்செறிந்தாள்.

பெண் மனசு அவளுக்குப் புரிந்தது.

அது சீக்கிரம் மாறாது. அங்கே காயங்கள் லேசில் ஆறாது.

மரம் சாய்ந்து வேரற்றுப் போன பள்ளத்தில் விதை விழுந்து மீண்டும் மழை பொழிந்து ஈரம் இறங்கி செடி எழுப்பும். 'ஒரு வேளை எழும்பாமலும் போகும்.'

காத்திருக்க வேண்டியது தான்.

காத்திருப்பது யார்?

வெற்றிவேலா?

அம்மாவின் முகத்தில் படர்ந்த வினாக் குறையைக் கண்டு பிரீதா தொடர்ந்தாள்.

"நான் என்னம்மா சொல்லட்டும்?"

"ஒண்ணும் சொல்லாதே. எனக்குப் புரியுது... வெற்றிவேலுக்குப் புரியறாப்பிலே நான் சொல்லிக்கறேன்."

அவர்கள் இருவரும் எழுந்தனர்.

வேடிக்கை பார்த்தவாறே நடந்தே க்வார்ட்டர்ஸுக்கு போய்விடலாம் என்று அம்மா வற்புறுத்தினாள்.

"அம்மாவுக்கு திஷ்யா தெரியுமா?"

"திஷ்யாவா... அது யாரு"

"சிவா ஸ்நேஹிக்கிறவள்."

திஷ்யாவைப் பற்றி மெதுவாக சொல்லிக் கொண்டே வந்தாள் பிரீதா. சினிமாவில் நடிக்க மறுத்தவள் என்று சொன்னதுமே அம்மாவுக்கு அவளைப் பளிச் சென்று பிடித்து விட்டது.

தன் சிவா தப்பு செய்ய மாட்டான் என்ற நம்பிக்கை அவளுக்கு எப்போதும் உண்டு.



இதெல்லாம் ஏன் இன்னும் என்னிடம் சொல்லவில்லை?

நேரம் வரும் என்று காத்திருக்கிறானோ? ஒரு வேளை நான் சம்மதிக்க மாட்டேன் என்று தயங்குகிறானோ?

அவள் மனசில் முழுச் சம்மதம் உதயமாகி விட்டது.

# 31

ஒரு மாதம் கழித்து ஒரு ஞாயிற்றுக் கிழமை.

அனகாபுத்தூரில் திஷ்யா வீட்டுக்கு எதிரில் ஒரு டாக்ஸி நின்றிருந்தது. தெரு வாசற்படியில் ஏகப்பட்ட செருப்புகள் காணப்பட்டன. வீட்டுக்கு வெளியே ஒரு பெயர்ப் பலகை ஆக்கிலத்தில் கொட்டை எழுத்துக்களில் "கங்கோத்ரி பார்ம சூடிகல்ஸ்' என்று எழுதியிருந்தது.

அனகாபுத்தூர் வாண்டுப் பையன்கள் குழாம் ஒன்று அந்த டாக்ஸியைச் சுற்றிக் கூடியிருந்தது. ஒரு அம்பாஸிடர் வண்டி.

திறந்திருந்த கண்ணாடித் கதவின் வழியாக ஒரு பையன் கையை நீட்டி ஸ்டேரிங் நடுவில் கை விட்டு ஹாரனை அழுத்த முயற்சித்தான். கொஞ்சம் பயம்; கையில் வலு இல்லாமல் அதை அழுத்தினான். ஓசை வரவில்லை.

"டேய்... நீ நவுர்றா... சொண்டி..." என்று இன்னொரு சிறுவன் அவன் திறமையின்மைக்காக அதட்டினான்.

"நீ அடிச்சிடுவியா?"

"அவன் அடிக்கிறானோ... இல்லையோ, நீ நவுரேன்."

"இவனாலயும் அடிக்க முடியாது..."

"அடிச்சுட்டா..இன்னா பெட் கட்டறே?"

"பெட் கட்டற மூஞ்சியைப் பாரு.. எடறா அம்பது பைசா."

"பசுபதி... வாங்கிவைடா அந்த அம்பது பைசாவை. நவுருடா நீ" என்று பந்தயத்திற்கு அழைக்கப் பட்டவன் ஹீரோ மாதிரி முன் வந்தான். அம்பாஸிடருக்குள் கை விட்டு ஹார்னை அழுத்தினான். ஒரு முறை இரு முறை மும் முறை விட்டுவிட்டு ஹார்னை அழுத்தினான்.

"பாய்ங்.. பாய்ங் ..பாய்ங்"

'ஹை ஹை' என்று கூட்டம் கும்மாளமிட்டது.

உள்ளேயிருந்து கையில் ஒரு மாதப் பத்திரிகை பிரதியோடு ஓடி வந்தான் சிவா.

"அஞ்சு நிமிஷம் வண்டியை தன்னை மறந்து விட்டுட்டா போதும்! ஓடி வந்திடுவிங்கடா... யார்ரா அவன் இப்ப ஹார்ன் அடிச்சவன்?" என்று சிவா கேட்டுக் கொண்டே தெருவில் இறங்கினான்.

அதற்குள் சிறுவர்களின் கூட்டம் மூலைக்கு ஒன்றாகப் பறந்து விட்டிருந்தது.

பாக்கெட்டில் கையை விட்டு சிவா சாவியைத் தேடினான்.

கையிலிருந்த மாதப் பத்திரிகையில் பக்க அடையாள மாக வைத்த விரலை எடுத்தான். காரின் பானெட்டின் மீது அந்த மாதப் பத்திரிகையை வைத்து விட்டு கார்க் கதவைத் திறந்தான்.

கண்ணாடிக் கதவை உயர்த்துவதற்கு வைத்த 'நாப்' ஐ நன்றாகச் சுழற்றி அதை முழுக்க மூடினான். கதவைப் பூட்டிக் கொண்டிருக்கும் போது எவனோ ஒரு சிறுவன்



மாதப் பத்திரிகையின் பெயரை எழுத்துக் கூட்டி தன் படிப்பறிவைச் சோதித்து கொண்டிருந்தான்.

"மோ..தி..ர..ம்... மோதிரம்."

"டேய்.. நீ தானே ஹார்ன் அடிச்சவன்?"

"சார்... நான் இல்லே சார்! நான் பக்கத்து வீடு! அதோ டில்லி கீறான் பாரு சார்.. அடுத்த தெருவு பையன்.. அவன் தான்.. அவன்படா வால் சார்."

இவன் என்னமோ மகா உத்தமன் மாதிரி பேசுகிறான் என்று அந்த வயசின் விஷமத்தையெல்லாம் ரசித்துக் கொண்டே "மோதிரம்" பிரதியை எடுத்துக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்தான்.

அந்த இதழில் அவன் எழுதிய குறுநாவலும் அவன் பேட்டியும் பிரசுரமாகியிருந்தன. கூடம் முழுவதும் கூட்டம்.

வெற்றிவேல் ஒரு நாற்காலியில்; பிரீதா ஒரு நாற்காலியில்; புண்ணியகோட்டி பெஞ்சின் மீது; குழந்தை கள் எல்லாம் தரையில். பிரேம் மட்டும் சைக்கிள் சக்கரத் தைச் சுற்றிக் கொண்டிருந்தான்.

சமையல் அறைக்குள் சிவாவின் அம்மா பஜ்ஜி போட்டுக் கொண்டிருந்தாள். அங்கே ஒரு முறை எட்டிப் பார்ப்பது.. ஒரு நடை கூடத்திற்கு வருவது என்று திஷ்யா சுற்றிச் சுற்றித் திரிந்து கொண்டிருந்தாள்.

"எப்பவோ ஒரு தடவை வர்றீங்க! அதுக்குள்ளே ஒங்களை நல்லா வேலை வாங்கிடறேன் அம்மா" என்று சிவாவின் அம்மாவைப் பார்த்து சொல்லிக் கொண்டிருந்த திஷ்யா, சிவா தெருவிலிருந்து வந்ததைப் பார்த்து மீண்டும் கூடத்திற்கு வந்தாள்.

அவன் எழுந்து போன நாற்காலி காலியாக இருந்தது. ஆனந்து அந்த நாற்காலியைப் பிடித்து ஏறி உட்கார முயன்றான். சிவா நாற்காலி காலியாகட்டும் என்று நின்றான்.

"ஆனி- ஆனி" என்று கூப்பிட்டார் புண்ணியகோடி-

திஷ்யா அதைப் பார்த்து விட்டாள்.

"ஆனந்து- இந்தா அப்பிச்சி" என்று ஒரு பஜ்ஜியை எடுத்துக் காட்டினாள். ஆனந்து அவளிடம் ஓடினான்.

சிவா நாற்காலியில் உட்கார்ந்தான்.

"ம்ம்... நீ அந்த பேட்டியை வாசிப்பா"

மோதிரம் இலக்கிய மாத இதழுக்குத் தான் அளித்த பேட்டியைத் தானே படித்துக் காட்டத் தொடங்கினான் சிவா.

கேள்வியை ஒரு தினுசாகவும் அதற்கு நான் அளித்த பதிலை ஒரு தினுசாகவும் மாற்றி மாற்றி தானே இரண்டு நபர்கள் போன்று நாடக பாணியில் படித்துக் காட்டினான் சிவா.

"இந்தியாவிலேயே பி.டி டாக்ஸி டிரைவரா இருக்கிற எழுத்தாளர் நீங்க ஒருத்தரா தான் இருக்க முடியும்னு நெனைக்கிறோம்"

"அதெப்படி சொல்றது, இந்தியா ரொம்பப் பெரிசு... ஒரு வேளை மெட்ராஸிலேயே நான் ஒருத்தன் தாண்ணு சொல்லலாம்."

"நீங்க அனுபவங்களை அதிகம் சம்பாதிக்கலாம்னு தான் டாக்ஸி ஓட்டறிங்களா ?"

"இல்லே. தமிழ்நாட்டிலே எழுத்தை மட்டும் நம்பி வாழ முடியாது. நான் சுதந்திரமா எழுத ஆசைப்படறேன். எழுத்தையே முழுக்க நம்பினா வியாபார ரீதியிலே ஏதாவது சீப்பா எழுத நேரிடும், ஸோ... எனக்கு ஜீவனோபயத்துக்கு வசதியா இல்லேண்ணாலும் அடிப்படைத் தேவைகளுக்காவது எனக்கு ஒரு தொழில் வேணும். எனக்கு கார் ஓட்டத் தெரியும் ! ஸோ...நான் ஒரு பி.டி. டிரைவர் ஆனேன்"



"சுதந்திரமா எழுதறதுண்ணு எதைச் சொல்றீங்க ?"

"சமூகத்திலே நடக்கிற நிகழ்ச்சியைப் பத்தி எனக்குத் தோணியதை நான் சொல்ல விரும்பறேன். அதற்கு எந்த கட்டுப்பாடாவது இருந்தா எனக்குப் பிடிக்கலே. எந்தக் கட்டுப்பாடும் இல்லாமே இந்த சமூகம் இயங்குகிற விதத்தைப் பத்தி ஒரு எழுத்தாளனாக இந்த சமூகத்தின் நலத்தை விரும்பி எழுதுவதைத்தான் என் அளவில் சுதந்திரம்னு நான் நெனைக்கிறேன்."

"வேற ஏதாவது நல்ல வேலை கெடைச்சா டாக்ஸி ஓட்டறதை விட்டுடுவீங்களா ?"

"ஏன்... வேற எதாவது வேலை வச்சிருக்கீங்களா ?"

கூட்டத்தில் உட்கார்ந்திருந்தவர்களில் நாலைந்து பேர் சிரித்தனர். சிவா மட்டும் படித்துக் கொண்டிருந்த 'மௌனாடனி' அகன்று கூடத்தில் உயிர்க் களை பரவிற்று.

"டேய்... கிண்டலா பண்றே ?" என்று பேட்டியில் சிவா கூறியதில் வெற்றிவேல் குறுக்கிட்டான்"

"மீதியைக் கேட்டுட்டு சொல்லேண்டா" என்று சிவா தொடர்ந்தான்.

"நீங்க ஒரு பி.டி. ஓட்டறதை விட்டுட விரும்புவீர்களாண்ணு கேக்கறோம் !"

"இல்லை பி.டி. ஓட்டறது நல்ல வேலை இல்லைன்னு யார் சொன்னது ?"

"ஒரு பி.டி. டிரைவருக்கு சமூகத்திலே இருக்கிற அந்தஸ்து வேறே; ஒரு எழுத்தாளருக்கு சமூகத்திலே இருக்கிற மதிப்பு வேறே இல்லையா ?"

"இருக்கலாம்...எனக்குத் தெரியாது ! அந்த அளவு அந்தஸ்து பேதம் பார்க்கிற மாதிரி என்னை நான் வேறு படுத்திக்கலே."

"உங்கள் அபிப்பிராயத்தை நீங்கள் விளக்க முடியுமா ?"

"நான் இந்த சமூகத்திலே வசிக்கிறேன். என் தொழில் இந்த சமூக நலனை விரும்புவது. இதன் மேம்பாட்டுக்காக என்னால் என்ன முடியுமோ அதை வஞ்சனையில்லாம செய்யறது. நீங்க முன்னே ஒரு கேள்வி கேட்டீங்களே—வேற வேலை இல்லாதலே பி.டி. ஓட்ட வந்தீங்களாண்ணு. அதுக்கு இப்ப விளக்கமா பதில் சொல்றேன். வேலையை ஐ மீன் வைட் காலர்ட் ஜாப்ஐ தேடிக்கிட்டு நானும் கொஞ்ச நாள் அலைஞ்சேன். எனக்கு ரொம்ப அவமானமா இருந்தது..."

"வேலை தேடி அலையறது அவமானம்கறீங்களா ?"

"இல்லியா பின்னே ?"

"வேலை இல்லாதவர்கள் வேலை தேட வேண்டியது தானே, அதிலே என்ன அவமானம் இருக்கு ?"

"எதுக்குமே அலைஞ்சா அவமானமா இருக்கு. நான் மனிதன். இந்த கர்வம் இருக்கே, இந்த பெருமிதம் இருக்கே, இந்த விசாலமான இருதய வலிமை இருக்கே இதை, எதைத் தேடி அலைந்தும் நான் இழந்துடத் தயாராயில்லை."

"நீங்க ஒரு 'எக்ஸ்க்ளூஸிவ்' ஆக இருக்கலாம்."

"நான் ஒரு 'எக்ஸ்க்ளூஸிவ்' இல்லே. சாதாரண மனிதன்தான். வெள்ளைக் காலர் வேலைதான் வேலை



என்று கருதாத தொழிலாளி. இந்தத் தொழில்லே எனக்கு சமூகத்தின் சகல விதமான நாடி ஓட்டங்களும் தெரியுது. நான் பலதரப்பட்டவங்களை சந்திக்கிறேன். பல்வேறு மக்களோட பழகறேன். எனக்கு இந்த சமூகம் எப்படி இயங்குகிறதுண்ணு தெரியுது. அதனால் இந்தத் தொழில் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு !"

"நீங்க ஒங்க சொந்த வண்டியை ஓட்டறீங்களா... அல்லது டாக்ஸி கம்பெனியிலே ஒரு நாளைக்கு இவ்வளவு ரூபா கொடுத்துடணும்னு ஒரு கட்டுப்பாட்டின் கீழே வேலை செய்யறீங்களா ?"

"நான் ஒரு டாக்ஸி கம்பெனியிலே தான் இருக்கேன்."

"அப்போ ஒங்களுக்கு எழுத நேரம் கெடைக்காதே !"

"டாக்ஸி ஓட்டி நெறய சம்பாதிக்கணும்னு ஆசைப் பட்டா எனக்கு நேரம் கெடைக்காது. எனக்கு அதிக தேவைகள் இல்லே. நான் கல்யாணமாகாதவன். எனக்கு அம்மா மட்டும் தான் இருக்காங்க. எழுதறதுக்கு எப்ப தோணுமோ அப்ப நான் டாக்ஸி ஓட்டமாட்டேன். நிறுத்திட்டு எழுத ஆரம்பிச்சுடுவேன்... சில சமயங்கள்ளே அவசரமான சந்தர்ப்பங்கள் வரும்... பிரசவ கேஸ், ஆக்ஸி டெண்ட் ஆனவங்களை தூக்கிட்டுப் போறதுன்னு சிக்கல் வரும். அப்ப எழுத்தை கொஞ்சம் ஒத்தி வச்சுட்டு சவாரி போவேன். எனக்கு மானத்தோடு உயிர் வாழப் போதுமானது இதுலே கெடைக்குது."

"இந்த வேலையை எக்காரணத்தைக் கொண்டும் நீங்க விட விரும்பலியா ?"

"இந்த வேலை எனக்குப் பிடிச்சிருக்கு ! இதை விடப் பிடிக்கற வேலை ஏதாவது என் முன் எதிர்ப்பட்டா ஒருக் கால் விட்டுடலாம். வாழ்க்கையில் எது நிரந்தரம் ? எந்த வேலையும் நல்ல வேலை தான். ஒரு வக்கீலின் வேலைக்கு,

நல்ல முறையில் செருப்புத் தைக்கும் ஒரு செருப்புத் தொழிலாளியின் வேலை இளைத்தது அல்ல என்று நமது தேச பிதா காந்திஜி சொல்லியிருக்காரே ! எனக்குத் தெரிஞ்ச வேலை கார் ஓட்டறது. ஓட்டிகிட்டிருகேன். எழுதறது; எழுதிட்டிருக்கேன். தட்ஸ் ஆல்."

"நன்றி"

"வணக்கம். நன்றி"

"அற்புதமான பேட்டிதாம்பா" என்று புண்ணியகோடி ஒப்புக் கொண்டார்.

"பிரேம்... சீதா... கொஞ்சம் இப்படி வர்றீங்களா ?" என்று திஷ்யா சமையல் அறையிலிருந்து அழைத்தாள்.

"எதுக்கு அக்கா ?"

"இந்த பஜ்ஜி பிளேட்களை எல்லாம் எல்லாருக்கும் கொண்டு போய் வைங்க."

பஜ்ஜி தட்டுகள் ஒவ்வொன்றாக கூடத்திற்கு வந்தன. எல்லோரும் சாப்பிடத் தொடங்கும் போது சிவா எழுந்தான்.

"என்ன சிவா !" என்று புண்ணியகோடி கேட்டார்."

"கொஞ்சம் மொகம் அலம்பணும் போலேருக்கு !"

"பொழக்கடையிலே சிமிட்டித் தொட்டிலே தண்ணி இருக்குமே... திஷ்யா" என்று கூப்பிட்டார்.

"இதோ வந்துட்டேம்பா. தொட்டியிலே தண்ணி ஆய்ட்டிருக்கும்."

"சிவா மொகம் அலம்பணுமாம்மா ! சோப்... டவல் எல்லாம் கொண்டு போ. தண்ணியை சேந்தி ஊத்திவிட்டு வா !"



தான் வருவதற்காகக் காத்திருப்பது போல அவர்கள் பஜ்ஜியைத் தொடாமலிருந்தனர்.

"நீங்க சாப்பிடுங்க !"

அவன் புழக்கடைக்குப் போனான்.

சோப்பும் டவலுமாக திஷ்யா பின் தொடர்ந்தாள்.

டவலை பாத்ரூம் கம்பியின் மீது போட்டு விட்டு அவள் திரும்பும் போது சிவா கையைப் பிடித்தான்.

"மொகமா அலம்பணும் ?... என்று குறும்பாகக் கேட்டாள் திஷ்யா.

"ராயல்டி ?... கங்கோத்ரி பார்மசூட்டிகல்ஸுன்னு பேர் வச்சதுக்கு !"

அவளை இழுத்து அணைத்துக் கொண்டான் சிவா. அந்த இடுப்பும் தோளும் மார்பும் விறு விறுவென்று துடிப்பதை அவன் உணர்ந்தான்.

சட்டென்று அவள் உதடுகளை நோக்கிக் குனிந்தான். ஒரு நிமிஷத்திலே வாயைத் துடைத்துக் கொண்டு அவனிடமிருந்து விடுபட்டு வாளியை கிணற்றில் இறக்கினாள் திஷ்யா.

ராட்டினம் கிறீச்சிட்டுக் கொண்டு உருண்டது. தண்ணீர் மட்டத்தை அது தொட்ட ஒலி வந்தது. அப்போது திஷ்யா கேட்டாள்.

"வெற்றிவேல் எதுக்கு வந்திருக்காரு ?"

"அக்ரிகல்சர் ஆபீஸ்லே ஏதோ தகவல் தேவையாம் ! அதுக்கு வந்திருக்கான்"

"இன்னும் ரெண்டு நாள் இருப்பாரா ?..."

"இல்லே, இன்னிக்கு நைட் மெய்லே பொறப்பட்டுடுவான். ஹி ஈஸ் வெரி பிஸி"

"ஆமா... பேட்டியிலே தேவைகள் ரொம்பக் குறைவுண்ணு சொல்லியிருந்தீங்களே... கல்யாணமாய்ட்டா என்ன பண்ணுவீங்க ?"

"கல்யாணமானா என்ன பண்றது ? ஹனிமூன் போகணும். அப்புறம் கொழந்தை பெத்துக்கணும்"

"இந்த கிண்டல் தானே வேண்டாங்கிறது ! இது பேட்டியில்லே. நெஜம்மா கேக்கிறேன்"

"ஆகட்டும்... அப்புறம் பார்ப்போம். அன்றன்றைய பாடும் கவலையும் அன்றன்றைக்குப் போதுமானது. மொதல்லே அம்மாவுக்குக் கூட டாக்ஸி ஓட்டறது பிடிக்கலே. பிரீதா வீட்டிலே சௌமையா தங்கியிருக்க வேண்டாமேண்ணு சொன்னதும் ஒப்புக்கிட்டாங்க..."

"பிரீதா வெற்றிவேலைத் திருமணம் செஞ்சுகிட்டிருந்தா நல்லா இருந்திருக்கும் !"

"யார் இல்லேண்ணாங்க... ஆனா பிரீதா தயங்குறா ! பார்ப்போம்... ஒரு வேளை அவளுக்கும் தாமு ஞாபகம் மாறலாம்."

அவள் தண்ணீரை இழுக்கத் தொடங்கினாள்.

"திஷ்யா... நந்தவனத்திலே என்னை ஒரு தொடர் கதை கேட்டிருக்காங்க ?"

"அப்படியா... சபாஷ்... கங்க்ராசுலேஷன்ஸ்... இதை ஏன் மொதல்லேயே சொல்லலே ?"

"தொடர் கதைக்கு ஒரு தலைப்பு தேடிக்கிட்டிருந்தேன் கெடைச்சப்புறம் சொல்லலாம்ணு. ஜஸ்ட்... இதோ இப்ப தான் ஒன்னை... ஒன்னை பாத்ருமிலே தொட்டப்போ தான் தலைப்பு கொடைச்சுது !"

"என்ன தலைப்பு ?"



"இது உதயம் இல்லையோ ?"

"ஆமாம்... இப்பொழுது உதயமில்லைதான் !"

"இப்பொழுதுண்ணா... இந்தப் பொழுதுண்ணு சொல்லலாம். எந்தப் பொழுதுக்கும் ஓர் உதயம் உண்டு இல்லியா ?"

"கரெக்ட்"

வாளிக்கு மாட்டியிருந்த கயிற்றை நீளமாக இழுத்து வந்து சிமிட்டித் தொட்டியில் தண்ணீரை நிரப்பினாள் திஷ்யா.

அவன் அவள் தண்ணீர்த் தொட்டியிலிருந்து நிமிர்வதை குறு குறுவென்று பார்த்தான்.

"ஏய்... என்ன பார்க்கிறே ?"

"இது உதயம் இல்லையோ ?"

"எது ?"

"இது கூடத்தான். அது ?"

"அது அப்புறம் !"

"எப்புறம் ?" என்று கேட்டான்.

"சீக்கிரமா மொகத்தை அலம்பிட்டு உள்ளே வா." என்று அவள் கூடத்திற்குள் நுழைந்தாள்.

***